# ஹென்றி போர்டு



ஹென்றி போர்டு


"தமிழ்நாடு" லிமிடெட்,

சேலம் & சென்னை.

விலை ] 1929 [ ரூ. 1-8-0.

'TAMIL NADU'
PRESS
MADRAS

# முகவுரை

நிமிஷத்தில் லட்சக் கணக்கான மக்கள் பிறக்கின்றார்கள்; நிமிஷத்தில் லட்சக் கணக்கானவர்கள் ஈசல்களைப்போல் மடிகின்றார்கள். அவர்களுடைய பிறப்பு, வளர்ப்புகளைக் குறித்து தெரிந்து கொள்ள உலகம் அவாக் கொள்வதைக் காணோம். "வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்" என்று கூறி விடுகின்றார்கள். ஆயிரம் பேர் அடிபட்டு மாண்டாலும் அசையாத உலகம், அறிவாளி ஒருவன் இறந்தால், துக்கத்தில் மூழ்கிவிடுகின்றது. சி. ஆர். தாஸ், லஜபதிராய் இவர்கள் இறந்ததற்கு இந்தியர் அழுது புரண்டார்கள். லெனின் மாண்டதற்கு மண்டலமெங்கும் துக்கம் குடிகொண்டிருந்தது. அமீர் அமானுல்லா, முஸ்தபா கமால் பாட்சா போன்ற வீரர்களைக் குறித்து அடிமைப்பட்ட நாட்டினர் சதா பேசிக்கொண்டிருக்கின்றனர். "போர்ட்" மோட்டாரைப்பற்றி யறியாதவர்களே இல்லையெனினும், அதைச் சிருஷ்டித்த "ஹென்றி போர்டு" என்பவருடைய சரித்திர வரலாற்றை அநேகர் அறியார்கள். குடிசையில் பிறந்து, குபேரனான ஹென்றி போர்டின் சரித்திரம், அறிவுள்ள மக்கள் யாவரும் அறியவேண்டியது அவசியமாகும். இவ் வுலகத்தில், இன்றைய புள்ளி விவரப்படி, ஹென்றி போர்டுக்கு மீறிய பணக்காரர் இல்லை பள்ளிக்கூடம் கண்டறியாத, கையில் ஒரு தம்பிடி யில்லாமல் வாழ்க்கையை ஆரம்பித்த இவர், உலகம் போற்றும் உத்தமரான விதம் இச் சரித்திரத்தில் நன்கு கூறப்பட்டிருக்கின்றது. ஏழையை உலகம் மதிப்பதில்லை; பணக்காரனைக் கண்டால் பொறாமை உண்டாகிறது. உயிர் வாழ்க்கைக்குத் துணை புரிவோர் வெகு சொற்பமானவர்களேயாகும். தமது விடாமுயற்சியால் முன்னேறிச் செல்வோருக்கு, முட்டுக்கட்டை போடுவது, பாழும் இவ் வுலகத்தின் குணமாகும். உண்மையற்றவன் உயர முடியாது; நீதியற்றவன் தலைநிமிர்ந்து நிற்க முடியாது; நெறி தவறியவன் தலைவனாக முடியாது. தன் சொந்த வலிமையாலும், ஆண்டவன் அருளாலும், உயர்வடைந்த உத்தமர்களை தாழ்த்திவிட அல்லும் பகலும் ஒரு சிலர் உழைத்து வருவதை யாவரும் அறிவார்கள். எனினும், முடிவில் சத்தியமே வெற்றி பெற்று வருவது சரித்திர சம்மதமான விஷயமாகும். சத்துரு நாசம், சன்மார்க்க வெற்றி, ஆண்டவன் அருள், தொழில் அமைப்பின் மேன்மை போன்ற அரிய பெரிய விஷயங்கள், ஸ்ரீ. ஹென்றி போர்டு தம் கைப்பட எழுதிய இந் நூலில் பொதிந்து கிடக்கின்றன. லட்சுமி கடாட்சத்திற்கு ஸ்ரீ. போர்டின் வாழ்க்கை ஒரு திறவுகோலாகும்.

பி. வரதராஜுலு.

# ஹென்றி போர்டு.

## அத்தியாயம் 1.

## நமது கருத்தென்ன?

பணம் சம்பாதிப்பது பாவமா?—சீர்திருத்தம் என்றால் என்ன?—ருஷியாவில் நடக்கும் உண்மை—மூளை பலமும், புஜபலமும்—மூளை பலத்தால் உலகிற்கு ஏற்படும் நன்மைகள்:—மனிதரில் உயர்வு தாழ்வு உண்டா-ஏன்?-இரண்டு மோட்டார்கள் ஒரே மாதிரி யிருக்கின்றனவா? —பணம் அவசியமா? — சிக்கனம் என்றால் என்ன? அபிவிருத்தி செய்யும் முறை—சில முக்கிய உபதேசங்கள்.

நாம் முன்னேற்றம் அடைந்து விட்டதாகச் சொல்லிக் கொள்ளுகிறோமே யொழிய உண்மையில் முதற் படி கூட தாண்டவில்லை. தீவிரமாக மேலடைந்து வருகிறோம் என்பது உண்மைதான்; ஆயினும் நாம் இன்னும் செய்யவேண்டியவைகளை, இதுவரையில் சாதித்துள்ளவையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போதுதான், இதுகாறும் அடைந்திருக்கும் முன்னேற்றம் எவ்வளவு குறைவானது, உண்மையில் ஒன்றுமேயில்லை என்பது விளங்கும். தொழிற்சாலைகள் எல்லாவற்றிலும் உபயோகிக்கப்படும் சக்தியைவிட நிலத்தை உழுவதில் மட்டும் அதிகமான சக்தி பிரயோகிக்கப்படுகிறது என்பதை யோசிக்குமிடத்து இன்னும் எவ்வளவு தூரம் வேலை செய்ய இடமிருக்கிறது என்பது விளங்கும். தற்போது உலகிலுள்ள நாடுகளிலெல்லாம் பற்பல இயக்கங்களால் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கும் சமயத்தில், இதுவரையில் நாம் சாதித்திருப்பதை மனதி லிருத்தி இன்னும் என்னென்ன செய்யலாம் என்று விசாரணை செய்ய ஏற்ற தருணமாயிருக்கிறது.

நாம் இயந்திரங்களையும், அவற்றின் உதவியைக்கொண்டு தொழிற்சாலைகளை நடத்துவதென்பதையும் பற்றி சிந்திக்கும் பொழுது, பெரிய தொழிற்சாலைகள் நாடெங்கும் ஏற்பட்டு மரம் பூண்டுகள், செடிகொடிகள், புஷ்பவர்க்கங்கள், புள்ளினங்கள், பசுமை நிலங்கள் இவைகளெல்லாம் அழிந்துபோய்விடும் என்ற அச்சம் சிலருக்கு உண்டாகலாம். உலகமெல்லாம் இயந்திரமயமாய்ப்போய், மனிதர்களே இயந்திரங்களைப் போலாய் விடுவார்கள் என்று நினைக்கலாம். ஆனால் அதையெல்லாம் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். உலக வாழ்க்கையில் இயந்திரங்களின் பிரயோகத்தை சரிவர உணர்ந்தாலன்றி இயற்கை இன்பங்களாகிய மரங்களையும், புஷ்பங்களையும், புல் பூண்டுகளையும், பட்சிகளையும் நாம் அனுபவிக்க அவகாசம் உண்டாகாது என்று நான் கருதுகிறேன்.

நாம் வீணாய் நமது காலத்தையும், திறமையையும் செலவழிப்பதால், இன்பவாழ்க்கை எய்தவே நேரமில்லாமல் போய்விடுகிறது. வாழ்க்கைக்கும், வாழ்க்கையை நடத்தவேண்டிய சாதனங்களை சம்பாதிப்பதற்கும் விரோதமிருப்பதாக நினைத்துக்கொண்டு, வாழ்வில் நல்லவையாயுள்ளவற்றை நாம் நிராகரித்து வருகிறோம். பணமும், பொருளும், இயந்திரங்களும், இதர சக்தியும் நமது வாழ்க்கையை இன்பமயமாக்க ஹேதுவாயிருக்கின்றமையால்தான் உபயோகமானவையென்று கருதவேண்டும். வாழ்க்கையை சுகமாய்த் தள்ள அவை சாதனங்களேயன்றி, அவைகளே நமது வாழ்க்கை இலட்சியங்களாக மாட்டா. என் பெயரால் ஏற்பட்டிருக்கும் இயந்திரங்களையெல்லாம் இத்தகைய சாதனங்களாய்த்தான் நான் கருதுகிறேன். இவ்வுலக வாழ்க்கையைச் சீர்படுத்தி, சௌக்கியமாய் எல்லோரும் வாழ்வதற்கு ஏற்றதாக இவ் வுலகத்தை செய்யவேண்டும் என்ற ஒரு இலட்சியத்தைக் கடைப்பிடித்தே நான் வேலை செய்து வருகிறேன். இத்துறையிலிருந்தே நான் தற்போது நடைமுறையிலிருந்துவரும் தொழில் முறைகளையும், பண முறைகளையும், சமூக முறைகளையும் விசாரிக்கப் புக எனக்கு உரிமையுண்டு ; இவைகளால் நான் தளர்ச்சியுறாமல் இவைகளை எதிர்த்து வெற்றியடைந்தவன்.

நான் மட்டும் சுயநலப்பிரியனாயிருப்பின், தற்போதுள்ள முறைகள் மாறாமல் நீடித்திருப்பதே சௌகரியமென்று கூறுவேன். பணம் சம்பாதிப்பது மட்டும் எனது நோக்கமாகில் தற்கால ரீதியே மிகவும் ஏற்றதாகும் ; எனக்கு ஏராளமாய் பணம் கிடைக்கிறது. ஆனால் நான் சமூக சேவையே பிரதானமாய்க் கொண்டுள்ளேன். தற்போதைய முறையில் சேவைக்கு அதிகமாய் இடமில்லை. பெரும்பாலான ஜனங்களுக்கு சேவையின் பலன் முழுதும் கிடைக்காமல் ஏராளமாய் வீண்வேலை நடக்கின்றது. ஒருவருக்

கும் அது பிரயோஜனமுமில்லாமல் போகிறது. இதை யெல்லாம் நோக்கிச் சீர்திருத்தவேண்டி யிருக்கிறது.

புதிய கருத்துக்களைக் கண்டு பரிகசிப்பதை நான் கண்டிக்கவில்லை. புதிய யோசனைகளைப் பார்த்து சந்தேகங்கொண்டு உண்மையை யறிந்தா லன்றி அவைகளை ஏற்றுக்கொள்ள மறுப்பது நல்லதுதான். இங்ஙனம் ஜாக்கிரதையா யிருப்பது, நாகரிகத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தும். தற்போது உலகில் ஏற்படும் சங்கடங்களுக் கெல்லாம் காரணம், புதிய புதிய கருத்துக்களை அவை நேர்மையானவை தானா என்று விசாரிக்காமல் ஏற்றுக் கொண்டதுதான். பழைய சம்பிரதாய மென்பதால் ஒரு வழக்கம் நேர்மையா யிருக்க வேண்டு மென்பது மில்லை. பழையது நடைமுறைக்கு ஏற்றதாயிருப்பின், அது நேர்மையானது என்று அனுபவத்தில் விளங்குகிறது. கருத்துக்களும், யோசனைகளும் மிகவும் உயர்ந்தவைதான்; ஆயினும் அவை நடைமுறையில் பயன்படத் தக்கவையாகச் செய்வதுதான் முக்கியம். சாதாரணமாய் எவருக்கும் யோசனைகள் தோன்றுவது சகஜம்.

இப்பொழுது நான் நடைமுறையில் அவலம்பித்து வரும் யோசனைகள் மோட்டார் வண்டிகளுக்கு மட்டும் பொருத்தமானவை யென்று நினைக்கவேண்டாம். சாதாரணமாய் எல்லாவற்றிற்கும் பிரயோஜனப்படுமாறுதான் நான் ஏற்பாடு செய்திருக்கிறேன். அதுதான் இயற்கையாகவே அனுசரிக்க வேண்டிய முறை. அதை நிரூபித்து இது ஒரு புதிய யோசனை யல்ல வென்றும், இயற்கை தர்மமே அது வென்று எல்லோரும் ஏற்கும்படி செய்யவேண்டு மென்பது என் இச்சை.

உழைப்பினாலேயே சுபிக்ஷமும், இன்பமும் ஏற்படு மென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். இதை அனுசரிக்காததால்தான் மனிதருக்கு ஏற்படும் துன்பங்களெல்லாம். நாம் உழைக்க வேண்டு மென்பது அடிப்படையான கொள்கையாகும். நாம் உழைத்தாக வேண்டியிருப்பதால் யுக்தியுடனும், திறமையுடனும் அவ்வேலையை செய்து முடிப்பது நலமாகும். நமது வேலையை எவ்வளவுக் கெவ்வளவு நன்றாக செய்து முடிக்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நாம் சுகமாய் வாழலாம். இது மிக சாதாரணமாய் எவருக்கும் தோன்றக் கூடியதுதான்.

நான் சீர்திருத்தக்கார னல்ல. தற்போது உலகில் சீர்திருத்தஞ் செய்வதிலும், சீர்திருத்தக்காரர்களின் வேலையிலும் அதிக கவனஞ் செலுத்தப்பட்டு வருகிறது. சீர்திருத்தக்காரரில் இரு

வகை வர்க்கம் இருக்கிறது. இரண்டு பேரும் பெரிய உபத்திரவம் தான். சீர்திருத்தஞ் செய்வதாக வெளிக்கிளம்புகிறவர்கள் எல்லாவற்றையும் தகர்க்க வேண்டுமென்கிறார்கள். வீட்டின் படி சிறிதாயிருக்கிறதென்று வீட்டையே இடித்துத் தள்ள வேண்டுமென்று இவர்கள் சொல்லுவார்கள். படியை மட்டும் பெரிதாகச் செய்யலாமென்கிற யோசனையே இவர்கள் மூளைக்கு எட்டாது. இவர்களுக்குத் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதே புலப்படுகிறதில்லை. அனுபவம் என்பதே இவர்களுக்குக் கிடையாது. அனுபவத்தில் தென்படும் உண்மைகள் இவர்களுடைய கண்ணுக்குத் தெரியாது.

1914-ம் ஆண்டிற்குப் பிறகுதான் பலர் யோசனை செய்யவே ஆரம்பித்திருக்கிறார்கள். அப்பொழுதுதான் அவர்கள் தாங்களும் இவ்வுலகில் இருக்கிறதாக உணர்ந்தார்கள். அதுவரையில் கண்மூடிகளாய் இருந்த அவர்களுக்குக் கண் திறந்தது. உடனே அவர்கள் உலகின் நிலையை ஆராய ஆரம்பித்தார்கள். உலகம் தாறுமாறாயிருப்பதாகக் கண்டார்கள். உலகின் சமூக அமைப்பைப் பற்றிக் குற்றங் கூற ஆரம்பித்தால் தலைகால் தெரியாது. அதுவும் முதலில் இவ் வேலையில் இறங்குகிறவர்களுக்கு மயக்கமாயிருக்கும். பழைய அமைப்பையே அழித்துவிட்டு புதியதாக ஸ்தாபிக்க வேண்டுமென்று வற்புறுத்துவார்கள். ருஷியாவில் புதிய உலகமொன்றை நிலைநாட்ட யத்தனித்தார்கள். ஆங்குதான் இந்த சீர்திருத்தக்காரர்களின் வேலையின் பயனைக் கண்கூடாகக் காணலாம். ஆங்கு சிறுபான்மையோர்தான் நாசவேலையை நிர்மாணிக்கிறார்களென்று தெரியவருகிறது. ஆனால் மனிதர் இயற்கைக்கு விரோதமாய் சமூகச் சட்டங்களை நிர்மாணித்துக்கொண்டாலும், இயற்கையானது அவைகளுக்கு இடங் கொடாது. அதனால்தான் சோவியத் அரசாங்கத்தை இயற்கை ஏற்கவில்லை. சோவியத்தின் திட்டங்கள் இயற்கைக்கு விரோதமாயிருந்ததால் இந்த கதி அதற்கு நேர்ந்தது. உழைப்பின் பலனை அனுபவிக்கும் சுதந்தரம் மனிதருக்கு இல்லையென்று அது மறுக்கிறது. ருஷியாவில் ஜனங்கள் உழைப்பினும், உழைப்பிற்கு ஏற்ற பலன் கிடைப்பதில்லை. அமெரிக்காவில் ஒரு தொழிலாளி நாளைக்கு எட்டு மணி நேரம் வேலை செய்தால் போதும். ருஷியாவிலோ 12 மணியிலிருந்து 14 மணி வரையில் உழைக்கவேண்டியிருக்கிறது. அமெரிக்காவில தொழிலாளிகள் ரஜா எடுத்துக்கொள்ளலாம். ருஷியாவில் சோவியத் அரசாங்கத்தில், தொழிலாளிகள் விரும்பினாலும் இல்லாவிட்டாலும் வேலைசெய்து தானாகவேண்டும். குடிமக்களுக்குள்ள சுதந்தரங்கள் ருஷியாவில் கிடையாது. சிறைச்சாலை சட்டதிட்டங்களைப்போல் எல்லோருக்கும் ஒரேவித முறை அனுஷ்டிக்கப்படுகிறது. இது அடிமை வாழ்வு இல்லாமல வேறென்ன? குறிப்

பிட்ட கொஞ்ச காலம் வேலை செய்துவிட்டு அதற்குத் தகுந்த கூலியைப் பெற்று சுகமாக காலந்தள்ளுவதுதான் சுயேச்சை வாழ்வாகும். அவரவர்கள் வாழ்க்கையின் சில்லரை அம்சங்களைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்வதே சுதந்தர மாகும். இதனால்தான் தினசரி வாழ்க்கை சீராக நடைபெற முடியும்.

யுக்தியும், அனுபவமுமில்லாமல் ருஷியா முன்னேறமுடியாது. அதன் தொழிற்சாலைகளைக் கமிட்டிகள் நிர்வகிக்க ஆரம்பித்த பின் தான் அவை சீரழிந்து போய்விட்டன. தொழிற்சாலையில் வேலை நடப்பதற்குப் பதிலாக, கமிட்டி அங்கத்தினர்களுக்குள் விவாதம் அதிகரித்தது. நல்ல தேர்ச்சி பெற்ற வேலைக்காரர்களை நீக்கியதால் ஏராளமாய் சாமான்கள் விரயமாயின. இந்த சீர்திருத்தக்காரர்கள் பேசிக் காலந்தள்ளவே, ஜனங்கள் பட்டினியால் மடிந்தனர். தாங்கள் வெருட்டியடித்த இஞ்சினியர்களுக்கும், மேஸ்திரிகளுக்கும், நிர்வாகிகளுக்கும் இப்பொழுது ஏராளமாய்ப் பணம் தருவதாகக் கூலி சோவியத்தார் அழைக்கிறார்கள். ஆரம்பத்தில் ஈவு இரக்கமின்றி இண்டாட விட்டவர்களை இப்பொழுது திரும்ப வரும்படி போல்ஷ்விக்கர்கள் கூப்பிடுகிறார்கள். மூளையும், அனுபவமும்தான் வேண்டுமென்று இப்பொழுது கண்டுகொண்டிருக்கிறார்கள். சீர்திருத்தக்காரர்களினால் ஏற்பட்டதெல்லாம் தொழில்கள் நடைபெறாமல், சாமான்கள் செய்யப்படாமல் தடைப்பட்டது தான்.

இப்பொழுது அமெரிக்காவில் ஒருவித துர் இயக்கம் கிளம்பியிருக்கிறது. மூளையினால் உலகம் மேலடைய வேலை செய்கிறவர்களுக்கும், கைபலத்தினால், புஜபலத்தினால் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் இடையில் புகுந்து சச்சரவு கிளப்புவது தான் அதன் நோக்கம். கையினால் வேலை செய்பவர்களுக்குப் பரிந்து இவ்வியக்கம் தோன்றியிருக்கிறது. ருஷியாவில் மூளை பலத்தையும், அனுபவத்தையும், திறமையையும் நிராகரித்த இயக்கம்தான் இங்கும் இந்த குரோதத்தை மூட்டப்பார்க்கிறது. இந்த நாச வேலைக்கு, மானிட வாழ்க்கையின் இன்பத்தைக் கெடுக்கும் இந்தக் கெட்ட இயக்கத்திற்கு இடங்கொடுத்து நாம் பிளவுபடக் கூடாது. சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமையாகும்.

மற்றொரு வகையான சீர்திருத்தக்காரர்கள் தங்களை சீர்திருத்தக்காரர்களென்று சொல்லிக் கொள்ளாவிடினும், முதலில் கூறியவர்களுக்கும் இவர்களுக்கும் வித்தியாசமில்லை. முதல் வர்க்கத்தவருக்கு அனுபவங்கிடையாது; அது தேவையென்றும் அவர்கள் கருதுகிறதில்லை. இவர்களுக்கோ ஏராளமான அனுபவமுண்டு. ஆனால் அதனால் இவர்கள் எத்தகைய பலனையும் அடைகிறதில்லை. இவர்கள்தான் பிற்போக்கான கொள்கை யுடையவர்கள். இவர்

களையும் போல்ஷ்விக்கர்களையும் ஒரே இனமாகக் கருதுவது ஆச்சரியமா யிருக்கும். ஒரு கூட்டத்தார் உலகத்தையே அழித்துச் சீர்திருத்த வேண்டுமென்கின்றனர்; மற்றொரு கூட்டம் உலகத்தின் தற்போதய நிலைமையே மிகவும் நேர்மையா யிருக்கிறதெனவும், இதை இப்படியே விட்டுவைத்து நாளடைவில் அழியுமாறு விட்டு விடுவதே சரியென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இவ் விரு வர்க்கத்தாரும் தங்கள் கண்களை சரியாக உபயோகித்து உலகின் உண்மையைக் கண்டு கொள்ளாததால் இத்தகைய விபரீத நோக்கங்கள் உள்ளவர்களா யிருக்கிறார்கள். உலகம் முன்னேற்ற மடையாமல் தடுப்பது சுலபம்; ஆனால் அது பின்சென்று அழிவதானால் அதைத் தடுப்பது சுலப மல்ல. எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிட்டால், உலகில் எல்லோருக்கும் மூன்று வேளை சாப்பாடு கிடைக்குமென்று எதிர்பார்ப்பது மடைமை யாகும். சீர்திருத்தம் செய்யக் கிளம்புகிறவர்களும் சரியே, பிற்போக்கானவர்களும் சரியே உண்மையான நிலைமையைக் கண்டுகொள்ளாமல் வாதிப்பதுதான் இவ்வளவு சங்கடத்திற்கும் காரணம்.

பிற்போக்கான போக்கைக் கண்டு நல்ல புத்தி திரும்பிவிட்டதாக குதூகலிக்கக் கூடாது. எவ்வளவோ வித திருவிளையாடல்கள் கொஞ்சகாலமாய் நடைபெற்றன. அழகான வாய்ப்பந்தல்கள் போட்டார்கள். முடிவில் ஒன்றும் நடக்க வில்லை. எனவே, பிற்போக்கானவர்கள் இதுதான் சமயமென்று பார்த்துக்கொண்டிருந்து பழைய ஒழுக்க பழக்கங்களை அனுசரிக்கப்புகலாம் என்று போதிக்க ஆரம்பிக்கிறார்கள். இவர்கள் இப்படிச் சொல்வதைக் கண்டு நல்ல புத்தி திரும்பிவிட்டதாக சந்தோஷப்படுகிறார்கள்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை விவசாயம், கைத்தொழில், போக்குவரத்து சாதனங்கள் இவை மூன்றும்தான். இவை யன்றி சமூக வாழ்க்கையை நடத்துவது சாத்திய மில்லை. உலகம் தோன்றிய நாள்முதல் நாளது தேதிவரையில் மனிதனுக்கு இவை மிக்க ஆவசியகமா யிருந்து வருகின்றன. இவை இல்லாமற் போனால் வாழ்க்கையும் இல்லை தற்போதுள்ள முறையில் எவ்வளவோ தீமைகளிருக்கின்றன. ஆனால் அடிப்படையான அஸ்திவாரம் ஒழுங்காயிருக்கும் வரையில் அவைகளைத் திருத்தி சீர்படுத்தி விடலாமென்று நம்ப இடமுண்டு. ஆனால் சிலர் அஸ்திவாரத்தையே மாற்றிவிடலாம் என்று கனவு காணுகிறார்கள். சமூகத்தின் அஸ்திவாரமா யிருப்பவை மனித வர்க்கம், விவசாயம், கைத்தொழில், போக்குவரவு இவைகள்தான். இவை நேர்மையா யிருக்கும் வரையில் உலகத்தில் எத்தகைய பொருளாதார மாறுதல்களும், சமூக மாறுதல்களும் ஏற்படினும் பாதக மில்லை. நமது

வேலைகளை ஒழுங்காய்ச் செய்தால் அதுவே உலகிற்கு நாம் செய்யும் சேவையாகும்.

எவ்வளவோ வேலை செய்ய இருக்கிறது. எல்லாத் தொழிலும் உழைப்பின் பயனாகத்தான் நடத்தமுடியும். ஏற்கெனவே செய்யப் பட்டிருக்கும் சாமான்களை செய்யப் புகுவது சரியான தொழில் முறையாகாது. ஆனால் அதைத் தடுக்க முடியாது. சட்ட திட்டங் களினால் இவ் விஷயத்தில் ஒரு பயனும் உண்டாகாது. சட்டங் களினால் ஒருவிதமான உருவான வேலையும் செய்வது சாத்திய மில்லை. சட்டத்தின் மூலம் வறுமையைப் போக்கவோ, பிரத்தி யேக உரிமைகளைத் தடுக்கவோ முயலுவது பிரயோஜன மில்லை. சட்டத்தின் உதவியைக் கொண்டு இவைகளுக்கு விமோசனந் தேட உத்தேசித்தால், இவை இன்னும் வளருமே யல்லாமல் குறையப் போகிற தில்லை. சட்டங்களினு லாகாதவற்றை யெல்லாம் சாதித்து விடப் போகிறதாய் வாய்ப்பந்தல் போடும் சட்டசபை அங்கத் தினர்கள் நம் நாட்டிலும், இதர நாடுகளிலும் ஏராளமாய் நாம் பார்த்தாய் விட்டது

நமது அரசாங்கத்தின் தலை நகராகிய வாஷிங்டனில் உள்ள அரசாங்க நிர்வாகிகள் ஏதோ தெய்வீகம் படைத்தவர்க ளென்றும், அவர்களால் ஆகமாட்டாத காரியம் ஒன்றுமில்லை யென்றும் நமது ஜனங்கள் நினைக்கிற வரையில், அவர்களுக்கு அடிமை மனப்பான் மைதான் வளர்கிறது. அது பிற்காலத்திற்கு மிகவும் கெடுதியைப் பயக்கும். நம் கையேதான் நமக்கு உதவி. நாம் சர்க்காருக்கு உதவிசெய்ய முடியுமே யல்லாது, சர்க்கார் நமக்கு ஒரு உதவியும் செய்ய முடியாது.

சர்க்காரும், வியாபார முறையும், ஜனங்களின் வாழ்க்கையை இன்பமயமாக்கவே யிருக்கின்றன. சர்க்கார், ஜனங்களின் ஊழிய ராக இருக்கவேண்டும்; அதற்கு மேல் எவ்வித அந்தஸ்தும் அதற் குக் கிடையாது. ஜனங்கள் சர்க்காருக்குத் துணைக் கருவிகளாகி விடில் உடனே அவர்களுடைய தீவினை அவர்களைப் பின்பற்றிவிடும். அத்தகைய உறவு தகாதது; அதர்மமானது; மனித இயற்கைக்கு விரோதமானது. வியாபாரமும் சர்க்காரும் இல்லாமல் நாம் வாழ முடியாது; ஆனால் இரண்டும் நமக்கு ஊழியமாகவே இருக்கவேண் டும். அவைகளுக்குக் கட்டுப்பட்டு நாம் நடப்பதானால் அவை நம்மை மிஞ்சிவிடும்.

நாட்டின் நலன் பொது ஜனங்களைப் பொறுத்திருக்கிறது. சர்க்கார் ஏராளமான வாக்குறுதிகள் செய்யலாமே யன்றி காரியத்

தில் ஒன்றும் செய்யமுடியாது. நாட்டின் செலாவணியில் ஜால வித்தைகள் செய்யலாம். ஆனால், அதனால் ஜனங்களுக்கு நன்மை யுண்டாகாது. உழைப்பினால் தான் உலகம் விருத்தியடையும். அது எல்லா மனிதரும் அறிந்ததுதான்.

ஒன்றும் செய்யாமல் இனமாக எதையும் எவரும் சம்பாதிக்க முடியாது என்பது ஒரு அடிப்படையான பொருளாதாரக் கொள்கை. இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். பெரும்பான்மை யோருக்கும் பணம்தான் செல்வமாகாது என்பது தெரிந்திருக்கிறது. எல்லாருக்கும் எதுவும் கிடைக்கலாமென்றும், ஒருவரும் ஒன்றுஞ் செய்ய வேண்டாமென்றும் சொல்லித் திரிவதெல்லாம் வெறுங்கதை தான். இது உள்ளூர ஒவ்வொருவருக்கும் தெரியும்; அது தவறானது என்றும் தெரியும். தற்போதைய முறையில் எவ்வளவோ தவறுகளிருக்கலாம்; ஆனால் ஒன்றுமட்டும் கூறவேண்டும். தப்போ தவறோ அது நடைமுறையில் நடக்கிறது என்பதைக் காண்கிறோம். போல்ஷிவிக் கொள்கைகள் நடைமுறையில் அனுசரிக்கப்படாததற்குக் காரணம் அவை இயற்கைக்கு விரோதமாயும், நெறி முறைகளுக்கு மாறாகவுமிருந்ததால் தான். கைத்தொழில்கள் தனி நபர்களால் நிர்வகிக்கப்படுகிறதாலும், சமூகத்தால் நிர்வகிக்கப்படுகிறதாலும் ஒரு வித்தியாசமும் ஏற்பட்டுவிடாது. தொழிலாளர் ஊதியத்தை “கூலி” யென்றும், “பங்கு” என்றும் சொல்வதால் ஒரு வேற்றுமையும் வந்து விடாது. அவர்களுடைய உணவு, உடை, இருப்பிடம் இவைகளை ஒரே சீராக நிர்மாணிப்பதாலோ, அல்லது அவரவர்கள் இஷ்டப்படி நிர்ணயித்துக் கொள்ள விட்டு விடுவதாலோ ஒரு பேதமும் உண்டாகாது. இவையெல்லாம் சில்லரை விஷயங்கள். ஆனால் நமது முறை நீடித்திருப்பதற்குக் காரணமென்ன? சில பொருளாதார, நெறிமுறைக் கொள்கைகளை அடிப்படையாக அது கொண்டுளது.

முதலாவதாக உழைப்பு அதற்கு மூலாதாரமாய் விளங்குகிறது. உழைப்பினால்தான் நிலத்தை சாகுபடி செய்ய முடிகிறது. பொருளாதார முறையில் இதுதான் அடிப்படையானது. நமக்கு இயற்கையினால் அளிக்கப்பட்டவற்றைக் கொண்டு நாம் உழைத்துப் பலனடைகிறோம்.

இரண்டாவதாக அவரவர்கள் உழைப்பின் பலனைச் சம்பாதிப்பதற்கு அவரவர்களே உரித்தானவர்கள் என்கிற கொள்கை. நெறி முறைத் துறையில் இதுதான் ஜனசமூகத்திற்கு அடிப்படையானது. உழைத்து சம்பாதிக்காமல் பிறருடைய உழைப்பினால் ஜீவிப்பது அவர்களுடைய சொத்தைக் களவாடி அபகரிப்பதாகும்.

நமது உழைப்பின் பலனை முதலாளிகள்தான் அனுபவிக்கிறார்கள் என்று சிலர் ஆட்சேபிக்கிறார்கள். தொழில்கள் நடைபெற சாதனங்கள் அளிப்பதால் முதலாளிகள் என்று கருதப்படுவோர் சமூகத்திற்கு இன்றியமையாதவர்கள். அவர்களுடைய சொந்தப் பிரயோஜனத்திற்காக அவர்கள் ஒன்றும் செய்துகொள்ளவில்லை. மற்றவர்களுடைய நன்மைக்காகவே அவர்கள் தொழில்களை நிர்வகிக்கிறார்கள். ஆனால் லேவாதேவி செய்து பணத்தை அதிகரிக்க முயலுகிறவர்கள் சமூகத்திற்கு பெருந் தீமைதான். அவர்களுடைய பணத்தினால் தொழில்கள் அபிவிருத்தி யடைவதானால் நல்லது; இல்லாவிடில் அவர்கள் நாளடைவில் அழிந்து விடுவார்கள். பணம் நல்லவழியில் செலவிடப்படவேண்டும். உழைப்பினாலேயே தேகாரோக்கியமும், செல்வமும், இன்பமும் கிடைக்கும் என்பதை உணர்ந்துவிட்டால் தானாக பணமும் நேர்மையான முறையில் செலவாகும்.

வேலைசெய்ய ஆஸ்தையுள்ள எவரும் ஏன் வேலைசெய்து, அதற்கு ஏற்ற கூலியைப் பெறக்கூடாது என்று புரியவில்லை. எந்த மனிதரும் சமூகத்திற்காக எவ்வளவு உழைக்கிறார்களோ அதற்கேற்ற பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பார்க்கலாம். சமூகத்திற்காக ஒன்றும் செய்யாதவர்கள் சமூகத்தினிடமிருந்து ஒன்றையும் அடைய உரிமையுடையவர்களல்லர். ஏதோ சிலருக்கு, அவர்கள் எவ்வளவுக்கு அருகரோ அதைவிட அதிகமான சௌகரியம் கிடைப்பதால் எல்லோரும் அதேமாதிரி பலனை அடைய எதிர்பார்ப்பது சரியல்ல.

எல்லா மனிதர்களும் சரிசமானமானவர்கள் என்று கூறுவதைவிட விபரீதம் வேறொன்று மில்லை. மனிதர்கள் எல்லோரும் ஒரே மாதிரியானவர்களல்லர். அது சாத்தியமில்லை. ஒரேவிதமாயிருத்தல் கஷ்டம். அதிக திறமை வாய்ந்தவர்கள் சாதாரணமாய் சிறுபான்மை தான். பெரும் பான்மையோரான திறமை குறைந்தவர்கள், தங்கள் ஆள் கூட்ட பலத்தைக்கொண்டு திறமை வாய்ந்தவர்களாகிய மேல் அந்தஸ்திலுள்ளவர்களைக் கீழே தள்ள யத்தனிக்கலாம். ஆனால் அப்படிச் செய்வதால் அவர்கள் தங்கள் தலையில் தாங்களே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டு கேட்டைத் தேடிக்கொள்ளுகிறார்கள். திறமை வாய்ந்தவர்கள் தான் சமூகத்தின் தலைவர்களாய் நின்று அதற்கு வழிகாட்டி, திறமைபற்றவர்கள் சிரமமில்லாமல் வாழ சௌகரியஞ் செய்து கொடுக்கிறார்கள்.

திறமையுள்ளவர்களைத் தாழ்த்தி எல்லோரையும் ஒன்றாகச் செய்துவிட வேண்டுமென்ற ஜனநாயக தத்துவத்தால் வீண்

கஷ்டம்தான் உண்டாகும். உலக இயற்கையில் எந்த பொருளும் ஒரே மாதிரியாக யிருப்பதில்லை. நாங்கள் எங்கள் தொழிற்சாலையில் செய்யும் "போர்ட்" மோட்டார்கள் எல்லாம் ஒரே அச்சாகத்தான் செய்கிறோம். ஒன்றிலுள்ள பாகங்களைக் கழற்றி இன்னொன்றில் மாட்டிக்கொள்ளலாம். நல்ல நிபுணர்களைக்கொண்டு உயர்ந்த இயந்திரங்களில் எல்லாவற்றையும் ஒரேமாதிரி யிருக்கும் படி செய்கிறோம். இரண்டு "போர்ட்" மோட்டார்களை ஒன்றோடொன்று நிறுத்திவைத்தால் அடையாளங் கண்டு பிடிப்பதே கஷ்டம். ஆனால் உண்மையில் ஒன்றுக்கொன்று வித்தியாசங்களிருக்கின்றன. ஆயிரக்கணக்கான மோட்டார்களை ஓட்டியவர்களிருக்கிறார்கள். ஆனால் ஒன்றுக்கொன்று முற்றும் பொருத்தமில்லை யென்றும், ஏதாவது கொஞ்சமேனும் மாறுதல் இருப்பதாயும் அவர்கள் கூறுகிறார்கள். வெவ்வேறு வண்டிகளுக்கு வெவ்வேறு சுபாவங்களிருக்கின்றன. ஒரு வண்டியை ஒரு மணி நேரம் மட்டும் ஓட்டிவிட்டு, அதேமாதிரி ஒரே மணிநேரம் ஓடிய இதர வண்டிகளுடன் அதைச் சேர்த்துவைத்து விட்டால், பார்வையிலிருந்து அதை அடையாளங் கண்டுபிடிக்கக் கூடாமற்போனாலும், ஓட்டிப்பார்த்து இன்ன வண்டி தான் என்று பொறுக்கியெடுத்து விடலாமென்று உறுதியாய்க் கூறலாம்.

பொதுப்படையாக இவ்வளவு நேரம் பேசிக்கொண்டு வந்தோம். குறிப்பாகப் பேசப்புகின், எந்த மனிதனும் தான் செய்யும் ஊழியத்திற்குத் தகுந்த முறையில்தான் ஜீவனஞ்செய்ய முடியும். இதைப்பற்றி இப்பொழுது வற்புறுத்த வேண்டி யிருக்கிறது. கொஞ்ச காலமாய் சேவை புரிவதைப் பற்றி ஜனங்கள் அலக்ஷியஞ் செய்து வருகிறார்கள். முன்னர் வியாபாரிகளிடம் சரக்குகள் வாங்கி அவர்களுக்கு மற்றவர்கள் நன்மை செய்துவந்தது போக, இப்பொழுது வாங்குபவர்களுக்குப் பண்டங்கள் விற்பதால் வியாபாரிகள் ஏதோ அவர்களுக்குப் பெரிய அனுகூலஞ் செய்து விட்டதாகக் கருதப்படுகிறது. இது வியாபார தோரணைக்கே மிகவும் கேட்டை விளைவிக்கும். தொழில்களில் பிரதிநிதியக உரிமை எவருக்கும் ஏற்படக்கூடாது. லாபத்தையே கோரி வியாபாரம் நடத்துவதும் தவறு. சாமான்களின் தராதரத்திற்குத் தகுந்தபடி விலைகள் இருக்க வேண்டுமென்றதையும் கவனிக்கவில்லை. இதுவெல்லாம் வியாபாரத்திற்கே தீமையாகும். சிலர் இதைத்தான் "சுபிக்ஷம்" என்று சொல்லிவந்தார்கள். இது சுபிக்ஷமாகாது; வெறும் பண வேட்டை தான். பணவேட்டை வியாபாரமாகாது.

பணம் திரட்டும் நோக்கத்துடன் வியாபாரத்தை நடத்துவது சங்கட நிலைமைக்குக் கொண்டுவந்துவிடும். ஜனங்களின் தேவைக்கு

ஏற்றபடி சாமான்களைச் செய்யவேண்டியதே தொழில்களுடைய முறைமை. பணத்திற்காகவும், போட்டா போட்டி போடுவதற்காகவுமல்ல. எனவே, சாமான்கள் நேர்மையாயிருக்க வேண்டுமென்பதும், விலை சரசமாயிருக்க வேண்டுமென்பதும் சொல்லாமலே விளங்கும்.

வியாபாரி சுபிக்ஷமா யிருக்க வேண்டுமானால் பொது ஜனங்களின் சௌகரியத்திற்காக உழைக்கவேண்டும். கொஞ்ச நாள் தன் சுயநலத்திற்காக வேலை செய்யலாம். ஆனால் ஜனங்கள் அதைக் கண்டு கொண்டபின் அவனுடைய முடிவுகாலம் அணுகிவிட்டது என்னலாம். பண ஆசை பிடித்தலைந்தால் தான் பணம் கிடைப்பதில்லை. பொது ஜனங்களின் நன்மைக்காக, எது சரியோ அதையே கடைப்பிடித்து உழைத்தால், தானே ஏராளமானபணம் கிடைக்கும். உழைப்பின் பலனாக தானாகவே பணம் வரும். பணம் சம்பாதிப்பது மிகவும் அவசியமானது. ஆனால் பணம் சுக ஜீவனம் செய்வதற்காக சம்பாதிக்கக்கூடாது. பொதுஜன சேவை அதிகமாய்ச் செய்வதற்கு அதன்மூலம் இலகுவாக விருக்கும். சுகஜீவனம் செய்வதைப்போல் கேவலமான வாழ்க்கை கிடையாது. நம்மில் எவருக்கும் சுக ஜீவனஞ்செய்ய உரிமையில்லை. நாகரிக வாழ்க்கையில் சோம்பேறிகளுக்கு இடமில்லை.

என்னுடைய இலக்ஷியமெல்லாம் எதுவும் மிகச் சாதாரணமானதாயிருக்க வேண்டுமென்பதே. பொதுவாக ஜனங்கள் ஏழைகளாகவே யிருக்கிறார்கள். தினசரி காலக்ஷேபத்திற்குத் தேவையான அத்தியாவசியமான சாமான்கள் வாங்குவதற்கே எவ்வளவோ செலவாகிறது. இது தவிர, எவருக்கும் சில சௌகரியங்கள் செய்து கொண்டு போகங்கள் அனுபவிக்கவும் உரிமையுண்டு என்பது என் கொள்கை. அத்தியாவசியமான பொருள்களுக்கே கஷ்டப்பட வேண்டியிருக்கையில் சௌகரியங்கள் என்ன செய்துகொள்ள முடியப்போகிறது? இதற்கெல்லாம் காரணம், நாம செய்கிற சாமான்கள் சாதாரணமா யில்லாமல் அனுவசியமாய் டாம்பீகமா யிருப்பதே. நமது உடையும், உணவும், இல்லற வாழ்க்கைக்கு உரித்தான சாமான்களும் இன்னும் எவ்வளவோ எளிதாயும், அழகாயுமிருக்கலாம். முன்காலத்தில் சாமான்கள் செய்யப்பட்ட வகையிலேயே பின்னர் வந்தவர்களும் செய்து வருகிறார்கள்.

இதற்காக குயுக்தியான நடையுடை பாவனைகளை அனுசரிக்க வேண்டு மென்பதில்லை. உண்மையில் எளிய வாழ்வு என்னவெனில், மிக்க சௌகரியமா யிருப்பதுடன், அதிக பயனுள்ளதாகவு மிருக்கும் வகையில் நமது சாமான்களை செய்து கொள்ளுவது தான்.

அனாவசியமானவற்றை நீக்கி, அவசியமானவற்றைச் சுருக்கி அமைத்துக் கொள்ளக் கொள்ள, செலவும் மட்டாகும். இது எவருக்கும் புரியக்கூடிய விஷயம். ஆனால் சாதாரணமாய் செலவை மட்டுக்கட்டி சாமானை எளிதாகச் செய்யாமல் தலைகீழாக அனுசரிக்கிறார்கள். முதலாவதாக, குறிப்பிட்ட பயனை அளிக்கத் தகுந்தபடி சாமான் செய்யப்பட்டிருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். பிறகு அதற்காக உபயோகித்திருக்கும் பொருள்கள் முதல்தரமானவையா அல்லது சும்மா விலைமட்டும் அதிகமானவையா என்று கவனிக்கவேண்டும். பின்னர் அதன் டாம்பீக அமைப்பை மாற்றி சுருக்கமாய்ச் செய்து நிறையையும் குறைக்கமுடியுமா என்று பார்க்க வேண்டும். இதேபோல் பிறவும். நிறையை அதிகரிப்பதால் அதிக வலிமை ஏற்படுமென்று நினைப்பது தவறு. அதுவும் போக்குவரத்துக்கு ஏற்பட்ட வண்டியில் எதற்காக அதிக பாரத்தை வைக்க வேண்டும்? அதற்கு பதிலாக அந்த வண்டியில் ஏற்றிச் செல்லக் கூடிய சுமையின் அளவை அதிகரிப்பது நல்லதல்லவா? பளுவான சரீரமுள்ளவர்கள், இலேசானவர்களைப்போல் ஓடமுடியாது; அதே மாதிரிதான் வண்டிகளைப் பற்றிய உரையிலும். அனாவசியமாய் வேண்டாத இடங்களிலெல்லாம் சாமான்களை வீணாய் உபயோகித்து பளுவை அதிகரிப்பதால் சுமை அதிகரிக்கிறது. இந்த மாதிரி பளுவை அதிகமாக்காமல் தடுத்து, இன்னும் எவ்வளவு தூரம் குறைக்கக்கூடுமென்பதை கவனிக்கவேண்டும். தற்போது 'போர்ட்' மோட்டாரில் உபயோகப்படுத்தும் மரத்தில் நீர் மட்டும் 30 பவுனிருக்கிறது. வண்டியின் வலிமையையும் தரத்தையும் குறைக்காமல் இந்த கனத்தை மட்டும் குறைக்க ஏதாவது வழி கண்டுபிடிக்கவேண்டும். இதேமாதிரி இன்னும் ஆயிரக்கணக்கான உதாரணங்கள் கூறலாம்.

சாதாரணமாய்க் குடியானவர்கள் தினசரி செய்கிற வேலையில் வீண்வேலை எவ்வளவு என்பதை கவனிப்போம். அவனுடைய உழைப்பில் 20-ல் ஒரு பங்குதான் உண்மையில் பயன் தரத்தக்க வழியில் செலவாகிறது. ஒரு பண்ணையில் வேலை நடத்துவதைப் போல் தொழிற்சாலைகளை நடத்துவதானால் தொழிற்சாலை முழுதும் ஆள்கூட்டம்தான் அதிகரிக்கும். ஐரோப்பாவிலிருக்கும் மிகக் கேவலமாய் நிர்வகிக்கப்படும் தொழிற்சாலைகூட, சாதாரணமாய் நடத்தப்படும் பண்ணையைவிட எவ்வளவோ செவ்வையாக விருக்கிறது என்று சொல்லவேண்டும். பண்ணைகளில் வியர்த்தமாகும் சக்திக்கு அளவில்லை; எல்லாம் கையாலேயே செய்யப்படுகிறது. கொஞ்சமாவது ஒழுங்காய் வரிசைக்கிரமமாய் வேலைசெய்வதைப் பற்றிச் சிந்திப்பதேயில்லை. பண்ணையாள் ஒரு சிறிய வேலைசெய்து முடிப்பதற்குள் பனிரண்டு தரம் ஒரு ஒடிந்த ஏணியில் மேலுங்

கீழுமாக ஏறியிறங்கி தடபுடலாய் வேலை நடத்துவதாக ஆடம்பரஞ் செய்வான். ஆனால் இதில் பட்ட சிரமத்தில் 10-ல் ஒரு பங்குகூட உண்மையில் அந்த வேலைக்குத் தேவையாயிராது. இரண்டு குழாயை வைத்து ஜலங்கொண்டு வருவதற்கு பதிலாக ஏராளமான ஆட்களைக் கொண்டு ஜலம் சுமந்துவர ஏற்பாடு செய்வான். அதிக வேலை செய்யவேண்டியிருப்பின் உடனே அதிக ஆட்களை நியமிக்க வேண்டுமென்று தோன்றுமே யல்லாது, எங்ஙனம் சுலபமாயும்,எளிதாயும் அதை முடிக்கலாம் என்ற யோசனையே படுகிறதில்லை. குழாய் வைப்பது, இவைபோன்ற பிரயோஜனமுள்ள சீர்திருத்தங்களைச் செய்கிறதென்றால் அது வீண் செலவு என்று பண்ணைக்காரர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் ஆட்களை வேலைக்கு அமர்த்தி, கூலி கொடுப்பதற்கு அஞ்சுவதில்லை. இதனால்தான் பண்ணைகளில் விளையும் சாமான்களின் விலை, சாதாரணமாய் மிகக் குறைவாக விற்கும்போது கூட, கிராக்கியாகவே யிருக்கின்றது. மிக அதிகமான லாபம் கிடைக்கிறபோதும், உழைப்புக்குத் தகுந்தபடி கிடைக்க வேண்டிய லாபத்தைவிட மிகவும் குறைந்த லாபமே பண்ணைக்காரர்கள் அடைகிறார்கள். உழைப்பை வியர்த்தமாக்கி அனாவசியமாய் வேலை செய்வதால்தான் பண்ணைகளில் விலை அதிகமாயிருந்தும், லாபம் குறைவாக விருக்கிறது.

'டியர்பார்ன்' என்ற இடத்திலுள்ள என்னுடைய பண்ணையில் எல்லா வேலைகளையும் இயந்திர சக்தியைக்கொண்டே செய்கிறோம். எவ்வளவோ வியர்த்தங்களை யெல்லாம் அகற்றியபோதிலும் உண்மையான சிக்கனம் இங்குகூட இன்னும் ஏற்படவில்லை. இதற்கு என்ன செய்யவேண்டுமென்று கண்டுபிடிக்க அவகாச மேற்படவில்லை. உண்மையில் சாதித்திருப்பதைவிட சாதிக்காமல் விட்டிருப்பது எவ்வளவோ அதிகமாயிருக்கிறது. எனினும் வருஷா வருஷம் முதல்தரமான லாபம் கிடைக்கிறது. நாங்கள் பரம்பரையாய் குடியானவர்களல்ல. பண்ணையில் தொழில் முறைகளை அனுசரித்து வேலை செய்கிறோம். குடியானவர்கள் தொழில் முறையை அனுசரித்து, வீண் செலவுகளை ஒடுக்கி, அதிக ஆட்களை நியமிப்பதை விடுத்து, பண்ணைகளை சீர்படுத்த முற்படின், பண்ணைகளில் விளையும் பொருள்கள் விலை இறங்கி, எல்லோருக்கும் வேண்டிய உணவுப்பொருள்கள் சரசமாய்க் கிடைப்பதுடன், குடியானவர்களுக்கும் நல்ல லாபம் உண்டாகும். பண்ணைத் தொழிலும் மிகவும் சுலபமானதாயும் லாபகரமாயு மிருக்கும்.

வேலையை எங்ஙனம் செய்யவேண்டும், அது எவ்வகைப் பட்டது, லாபகரமாயும், எளிதாயும் அதை எப்படிச் செய்து முடிக்கலாம் என்கிற விஷயங்களைப்பற்றி சரியான ஞானமில்லாததால்தான் பண்ணை வேலையில் தகுந்தபடி சம்பாத்திய மில்லாம லிருக்கிறது.

பண்ணைவேலை தற்போது நடக்கிற மாதிரி நடைபெற்றால் ஒரு போதும் அதன் மூலம் பணம் சம்பாதிப்பது சாத்தியமில்லை. குடியானவர்கள் தங்கள் மூதாதையர்கள் அனுசரித்த முறைகளையே அனுஷ்டிக்கிறார்கள்; அதிர்ஷ்டமிருந்தால் லாபம் கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருந்து விடுகிறார்கள். சிக்கனமாக சாகுபடி செய்து பலனை யடைந்து, அந்த விளை பொருள்களை, தகுந்த வியாபாரமாகக்கூடிய சந்தைகளில் கொண்டுபோய் விற்க சிரமம் எடுத்துக்கொள்ளுகிற தில்லை. சாமான்களை சிக்கனமான முறைகளில் தயாரித்து, சந்தைகளில் விற்பனைக்கு ஏற்ற ஏற்பாடு செய்யாத எந்தத் தொழிலும் விருத்திக்கு வராது. ஆனால் பண்ணைத்தொழில் மட்டும் எங்ஙனமாகிலும் நடைபெற்று வருகிறதை உத்தேசித்தால் எவ்வளவு லாபகரமான தொழிலாக அதை நடத்தலாம் என்று நிதரிசனமாய் விளங்குகிறது.

குறைந்த விலையில் அதிகமான விளைவு ஏற்படுமாறு செய்வது தான் எந்தத் தொழிலினுடைய நோக்கமாகவும் இருக்கவேண்டும். அப்படிச் செய்தால்தான் எல்லோருக்கும் தாராளமாய் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் கிடைக்கும். இங்ஙனம் செய்வது மிகவும் சுலபம்தான். ஆனால் உண்மையில் ஏற்படும் சங்கடங்களெல்லாம், சுலபமாய்ச் செய்து முடிக்கக்கூடிய வேலைகளையெல்லாம் மிகச் சிக்கலாகச் செய்வதால்தான் உண்டாகின்றன.

சாதாரணமாய் ஒரு பொருளை செய்துவிட்டு அதற்குப் பின் அதை இன்னும் நேர்த்தியாகச் செய்வதற்கு என்னென்ன மாறுதல்கள் செய்யலாம் என்று யோசிக்கிறோம். ஆனால் நான் எதையும் செய்வதற்கு முன்னதாக, எப்படிச்செய்தால் அது மிக நேர்த்தியாகவும், பிரயோஜனமுள்ளதாயு மிருக்குமென்று யோசித்து, அதற்குப் பின் தான் செய்கிறது வழக்கம். நாம் செய்கிற சாமான் திருப்திகரமாய் இருக்கும் என்கிற நம்பிக்கை ஏற்படுகிறவரையில், அதை எவ்வெவ்வகையில் அபிவிருத்தி செய்யக்கூடுமென்பதை யோசித்து, செய்யும் முறைகளையும், அதற்கு வேண்டிய பொருள்களையும் இதர சில்லரை விஷயங்களையும் ஆராயவேண்டும். முதலில், நாம் செய்யப் புகுகிற சாமான் எதற்காகச் செய்கிறோம், என்ன காரியத்தை அது சாதிக்கவேண்டும், அது எப்படி யிருக்கவேண்டும் என்பதையெல்லாம் நிர்ணயஞ்செய்து கொள்ளவேண்டும். அதற்குப் பிறகே தொழிலில் இறங்கவேண்டும். இப்படி திடமான இலட்சியம் முதலிலிருந்தே உறுதியாக அமையாததால்தான் பலர் தொழில் துறையில் விருத்தியடைகிற தில்லை. ஜனங்கள் சாதாரணமாய் ஒரு தொழில் நடத்த வேண்டுமெனில் பெரிய தொழிற்சாலை கட்டடங்கள் அமைக்க வேண்டுமென்றும், ஸ்டோர் ஒன்று ஸ்தாபிக்க

வேண்டுமென்றும், மூலதனம் சேர்க்க வேண்டுமென்றும், நல்ல நிர்வாகிகளிடம் தொழிலை ஒப்புவிக்க வேண்டுமென்றும் இம்மாதிரி விஷயங்களைப்பற்றி விசாரப்படுகிறார்களே யன்றி, உண்மையில் என்ன சாமான் செய்யவேண்டும், அதற்கு வேண்டிய கருவிகளும், சாமக்கிரியைகளும் என்ன, எப்படிச் செய்தால் அது நேர்த்தியாக உத்தேசித்தபடி செய்து முடிக்கக்கூடும் என்றெல்லாம் சிந்திப்பதே யில்லை. சாமான் எங்ஙனமிருக்க வேண்டுமென்பதே முக்கியமானது. "போர்ட்" மோட்டாரை என் மனதுக்கு இசைந்தவாறு செய்து முடிக்கிறதற்குமுன் 12 வருஷகாலம் நான் சிரமப்பட்டேன். அங்ஙனம் எனக்குத் திருப்தி ஏற்பட்ட பிறகுதான் வியாபார தோரணையில் ஏராளமாய் வண்டிகளைச் செய்ய ஆரம்பித்தோம். அப்படிச் செய்ததால்தான் நாளதுவரையில் விசேஷமான மாறுதல்கள் ஒன்றும் அதில் செய்யவில்லை.

புதிய புதிய யோசனைகள் தோன்றத் தோன்ற அதைக் கொண்டு நடைமுறையில் வேலைசெய்து பார்ப்பது வழக்கம். எங்கள் தொழிற்சாலைக் கருகில் பலவிதமான வண்டிகளைப் பார்க்கலாம். ஆனால் அவையெல்லாம் பரீட்சார்த்தமாகச் செய்யப்பட்டவையே யன்றி முடிவாக செய்து முடிக்கப்பட்டவையல்ல. ஏதாவது புதிய யோசனையை சாதாரணமாய் நான் ஏற்றுக் கொள்கிறதில்லை. அது உண்மையில் உபயோகத்திற்கு வருமா என்று பரீட்சை செய்து முதலில் பார்ப்பேன். இங்ஙனம் பரீட்சை செய்வதென்றால் வண்டியில் ஒருவகை மாறுதலும் செய்ய முற்படுகிறதில்லை. சில தொழிற்சாலைகளில் புதிய புதிய யோசனைகள் மேல் சாமான்களையே மாற்றியமைத்து விடுகிறார்கள். நாங்களோ தொழில் முறைகளிலும், செய்யும் விதத்திலும் என்னென்ன மாறுதல் செய்தால், செய்யப்படும் சாமானும் அதிக நேர்த்தியா யிருக்கக்கூடுமென்று யோசிக்கிறோம். நாங்கள் செய்துள்ள மாறுதல்களெல்லாம் செய்கிற முறையில்தான். முதன் முதலில் "போர்ட்" மோட்டாரை எங்கள் பட்டரையில் செய்தபோது என்னென்ன முறைகளை அனுசரித்தோமோ, அதற்கும் தற்போதுள்ள முறைகளுக்கும் சம்பந்தமேயிராது என்று எண்ணுகிறேன். அதனால்தான் எங்கள் வண்டிகளை இவ்வளவு மலிவாகச் செய்ய முடிகிறது. வண்டியின்மேலேயே மட்டும் அதிக மாறுதல்கள் கிடையாது. சௌகரியத்திற்காக சிற்சில ஏற்பாடுகள் செய்திருப்போம்; அல்லது வண்டியின் வலிமையை யதிகரிக்க ஏதாவது புதிதாகச் சேர்த்திருக்கலாம். வண்டியைச் செய்யத் தேவையான சாமக்கிரியைகளும் நாளாக நாளாக அனுபவத்தினால் மாறுதலடையலாம். ஏதோ ஒரு அவசியமான சாமான் கிடைக்காமல் போய்விட்டால் தொழிற்சாலையை அடைத்து, வேலையை நிறுத்திவிடவேண்டிய நெருக்கடி ஏற்படாமலிருக்கும்

பொருட்டு, அத்தகைய சாமானுக்கு வேறு எதை உபயோகித்தால் வண்டியின் வலிமையிலும், நேர்மையிலும் குறைவு ஏற்படாமலிருக்கக் கூடுமென்று கண்டுபிடித்து வைத்திருக்கிறோம். தவிர எங்களுக்குத் தேவையான சாமான்களனைத்தையும் எங்கள் தொழிற்சாலையிலேயே நாங்கள் செய்துகொண்டு விடுகிறோம். வெளியில் எவரிடமாவது "ஆர்டர்" கொடுத்துவிட்டு, அவர்களால் செய்து கொடுக்க முடியாமல்போய், தொழில் நடக்காமல் நின்றுவிடாமலிருப்பதற்காக, பிறரை எதிர்பார்க்காமலே எல்லாவற்றையும் நாங்களே செய்து வருகிறோம். மகா யுத்தத்தின்போது கண்ணாடியின் விலை மிகவும் அதிகமாக ஏறிவிட்டது. எங்கள் வேலைக்கு கண்ணாடி அதிகமாய்த் தேவையா யிருப்பதால், நாங்களே கண்ணாடி செய்வதற்காக ஒரு தொழிற்சாலையை அமைத்து வருகிறோம். இங்ஙனம் சாமானைச் செய்யும் முறையில் அபிவிருத்திகள் செய்துள்ளோமேயொழிய வண்டியிலேயே அதிக மாறுதல்கள் செய்யவில்லை.

ஒரு உளியில் முக்கியமான பாகம், அதன் வெட்டுகிற முனைதான். அது கூர்மையாயில்லாமல் பிடி அழகாகவும், அதன்மேல் அடிக்கிற சம்மட்டி பெரிதாயுமிருந்தால் என்னபயன்? அதேமாதிரி எந்தத் தொழிலிலும் செய்யும் முறைதான் பிரதானம். அதைச் சீராகச் செய்யாத பட்சத்தில் அதற்கு ஏராளமான முதலும், நிபுணர்கள் யோசனையும், பெரிய கட்டடங்களுமிருந்து என்ன பயன்? எந்தத் தொழிலிலும் அவசியத்திற்குமேல் வியர்த்தமாக சக்தியைப் பிரயோகிக்காமலிருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்.

உண்மையான ஜனசேவை செய்வதற்குத் தடையாயிருப்பவை வியர்த்தமாகச் செலவிடுதலும், பண ஆசையும்தான். நாம், சாமான்களைச் செய்கிற வகை தெரியாமையாலும், அதில் அதிக கவனம் செலுத்தாமையாலும்தான் வியர்த்தம் ஏற்படுகிறது. என்னுடைய தொழிற்சாலையில் சாமான்கள் வியர்த்தமாகாமலும், மனிதரின் உழைப்பு வீணாய்ச் செலவாகாமலும் கவனிப்பதோடு, குறைந்த லாபத்தில் அதிகமான சரக்கு வியாபாரமாகும்படி பார்த்துக் கொள்கிறோம். இதனால் வியாபாரம் அதிகரித்து லாபமும் ஏராளமாய்க் கிடைக்கிறது. வேலை நடக்கும் முறையிலும் கூலி அதிகமாக எல்லோருக்கும் பரவும்படி செய்கிறோம். இதனால் எங்கள் தொழிற்சாலையில் வேலை செய்பவர்களெல்லாம், மிக்க திருப்தியுடன் உழைத்து சுகமாக காலந்தள்ள முடிகிறது. நாங்கள் அமைத்திருக்கும் தொழிற்சாலையினால் பொதுஜன சேவை செய்கிறோம். அதனால்தான் அதைப்பற்றி நான் எழுதத் துணிந்தேன். அதன் முக்கியமான கொள்கைகள் என்னவெனில்:—

(1) எதிர்காலத்தைப் பற்றி பயப்படுகிறதில்லை; பண்டைக் காலத்தைப் பற்றி துதி செய்கிறதில்லை. பின்னால் என்ன நேர்ந்து

விடுமோ, நமக்குத் தொழிலில் நஷ்டம் வந்துவிடுமோ என்று பயப்படுகிறவர்கள், தொழில் செய்ய லாயக்கற்றவர்கள். நாம், நமது தொழிலில் அபஜயம் அடைந்தால் அதனால் அஞ்சாமல் அதன் மூலம் வெற்றிக்கு உழைக்க நல்ல யோசனைகளைக் கண்டுபிடித்து விடா முயற்சியுடன் வேலைசெய்ய வேண்டும். தவறிப்போய் விடுகிறதில அவமானமில்லை; தவறிப்போய் விடுமோ என்று அஞ்சி பின் வாங்குவதுதான் அவமானம். சென்றவையிலிருந்து இன்னும் அபிவிருத்தியடைய நமக்கு அனுபவம் முதிர்கிறது.

(2) போட்டா போட்டியை லட்சியம் செய்யக்கூடாது. எவர் திறமையுடன் நன்றாக ஒரு வேலையைச் செய்கிறார்களோ அவர்கள் தான் அதைச் செய்ய லாயக்குள்ளவர்கள். மற்றவர் தொழிலைக் கெடுத்து நாமே எல்லா லாபத்தையும் அடைய வேண்டுமென்று யத்தனித்தல் பெருங் குற்றமாகும். தன்னுடைய சொந்த லாபத்திற்காக நமது சகோதரருக்கு நஷ்டம் உண்டாக்குதல் பாவமாகும். நமது மூளையினால் தொழிலில் வெற்றிபெற வேண்டுமே யன்றி பலாத்காரத்தினால் போட்டியில் வெற்றியடையப் பார்ப்பது தவறு.

(3) லாபத்தை விட சேவை செய்வதே பெரிதெனக் கருத வேண்டும். லாபமில்லாமல் தொழில் நடத்துவது சாத்தியமில்லை. லாபம் சம்பாதிப்பதில் உண்மையில் தவறொன்றுமில்லை. நன்றாய் நடக்கும் எந்தத் தொழிலிலும் லாபம் கிடைக்காமலிராது; ஆனால் உண்மையான சேவை செய்யும் நோக்கத்துடன் நடத்தப்படும் எந்தத் தொழிலிலும் தானாக லாபம் வரும். ஆனால் லாபத்தை அடிப்படையாகக் கொண்டு சேவை செய்யக்கூடாது. சேவை செய்வதின் மூலம் லாபம் வரும்; அதைப் பெறலாம்.

(4) தொழிற்சாலையில் சாமான் செய்வதென்றால் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பதாகாது. நல்ல சாமான்களை ஒழுங்கான முறையில் வாங்கி, அவைகளை நேர்மையான தொழிலாளிகளைக் கொண்டு உருப்படுத்தி தேவையானவர்களுக்கு விற்பதுதான் தொழிற்சாலையின் வேலையாகும். வியாபாரத்தில் சூதும், ஒரேயடியாய் லாபம் சம்பாதிக்கப் பார்ப்பதும், இவைபோன்ற இதர விரும்பத்தகாத முறைகளெல்லாம் தான் தொழில் முன்னேற்றமடையாமல் செய்து விடுகின்றன.

இந்தக் கொள்கைகளை எங்ஙனம் ஸ்தாபித்துக் கொண்டு அனுசரித்து வருகிறோம் என்பதைப் பின்னால் வரும் அத்தியாயங்களில் விளக்கப் போகிறேன்.

---

# அத்தியாயம் 2.

## தொழில் ஆரம்பம்.

முதல் "போர்ட்" மோட்டார் — பண்ணை வேலையில் வெறுப்பு—எஞ்சினில் வேலை—குழந்தைப் பருவத்தில் எனது விளையாட்டு சாமான்கள் — குதிரை யில்லா வண்டி— ஆரம்பக் கஷ்டங்கள்.

1921-ம் ஆண்டு மேமீ 31-ம் தேதி 'போர்ட்' மோட்டார் கம்பனியில் 5,000,000 நெம்பர் கொண்ட மோட்டார் செய்யப்பட்டது. அதுவும், முதன் முதல் 30 ஆண்டுகளுக்கு முன்னர் நான் செய்த மோட்டாரும் இன்னும் என் காட்சி சாலையி லிருக்கின்றன. இவை யிரண்டுக்கும் பார்வையில் எவ்வளவோ வித்தியாசமுண்டு; அவைகளின் அமைப்பிலும், அவை செய்வதற்கு உபயோகப்பட்டிருக்கும் சாமான்களும் வேறுபட்டிருக்கின்றன. ஆனால் அடிப்படையான முறையில் இரு வண்டிகளும் ஒரேவகையா யிருக்கின்றன. முதலில் செய்த வண்டி மணிக்கு 25 மைல் ஓடுவதோடு, ஒரு காலன் பெட்ரோலுக்கு 20 மைலும் போகும். இன்றைக்கும் அது முதன் முதலில் கட்டியவன்று எப்படி யிருந்ததோ அதேமாதிரி போகின்றது. அடிப்படையான மாதிரியில் மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை; ஆனால் செய்கிற முறையிலும், பிரயோகிக்கும் சாமான்களிலுமதான் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. முதல் வண்டியைவிட சகல விதத்திலும் தற்போதுள்ள 'போர்ட்' வண்டி மிக சௌகரியமாய் செய்யப்பட்டிருக்கிறது. செய்யும் வகையில் அனுபவ பூர்வமாய் கண்டுகொண்டதை அனுசரித்து இம் மாறுதல்கள் வழங்கப்பட்டுள. ஆயினும் இப்போதைய வண்டியி லுள்ள எல்லா அம்சங்களும் முதல் வண்டியிலும் காணலாம்.

பண்ணையில் நடக்கும் தாமதமான வேலையைப் பார்த்து கவனித்ததால் தான், எங்ஙனமாகிலும் சீக்கிரமாகப் போக்குவரத்து நடத்தக்கூடிய முறையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு உதித்தது. 1863-ம் ஆண்டு ஜூலை 30உ 'டியர்பார்ன்' என்ற இடத்தில் நான் பிறந்தேன். ஆங்கு எங்கள் பண்ணையில் நடந்த வேலையையும், அதற்குத் தகுந்தபடி பயன் கிடைக்கவில்லை என்பதையும் நான் பார்த்தபோது, இதைச் சீர்

திருத்த வேண்டுமென்ற கருத்து உதித்தது. பண்ணை வேலையில் இன்னும் இத்தகைய வீண் உழைப்பு இருப்பதாக நான் கருதுகிறேன். என் பெற்றோர்கள் மிக ஏழைகளென்றும், நான் பாலியத்தில் வெகுவாகக் கஷ்டப்பட்டேனென்றும் ஒரு கதை உலவி வருகிறது. அவர்கள் பணக்காரர்களில்லை தான்; ஆனால் ஏழைகளுமில்லை. சாதாரணமாய்க் குடியானவர்கள் அந்தஸ்தை உத்தேசிக்கையில், நாங்கள் சுபிக்ஷமாகவே யிருந்தோம். நான் பிறந்த வீடு இன்னும் அப்படியே யிருக்கிறது. அதுவும், அதைச் சேர்ந்த பண்ணையும் என்னைச் சேர்ந்தவையாகவே யிருக்கின்றன.

எங்கள் பண்ணையிலும், இதர பண்ணைகளிலும் வீணாகக் கையால் அதிகமாக வேலை செய்தார்கள். இதையெல்லாம் வேறு நல்ல வகையில் செய்யக்கூடாதாவென அப்பொழுதே நான் சிந்தனை செய்ததுண்டு. அதனால்தான் நான் இயந்திர வேலையிலிறங்கினேன். என் தாயார் எப்பொழுதும், நான் இயந்திர வேலைக்குத் தான் லாயக்கு; அதற்காகவே பிறந்தவன் என்று சொல்லுவதுண்டு. ஒரு சிறிய தொழிற்சாலையையும் நான் அமைத்துக் கொண்டேன். பலவித இரும்புத்துண்டுகளும், ஆயுதங்களும் அதில் சேகரித்து வைத்திருந்தேன். இவைதான் எனது விளையாட்டு சாமான்கள்.

அந்த நாளில், ஒரு ரோட்டு எஞ்சினைப் பார்ப்பது பெரிய விஷயம். ஒரு நாள் நாங்கள் கிராமத்திலிருந்து வெளியே நகரத்திற்கு வண்டியில் போய்க்கொண்டிருக்கையில், ஒரு எஞ்சினை வழியில்பார்த்தோம். எனக்கு அப்போது 12 வயது. அந்த ஆண்டில் எனக்கு ஒரு கைகடிகாரமும் கிடைத்தது. இதுவும் ஒரு பெரிய குறிப்பிடத்தக்க சம்பவம். அந்த எஞ்சினை நேற்றைய தினம்தான் பார்த்ததுபோல் அவ்வளவு நன்றாய் எனக்கு ஞாபகமிருக்கிறது. குதிரையில்லாமல் ஓடிய வண்டியை முதன் முதலில் அப்பொழுதுதான் நான் பார்த்தேன். எங்கள் வண்டி, தாண்டிச் செல்லுதற்காக எஞ்சின் டிரைவர் அதை நிறுத்தினார். நான் வண்டியிலிருந்து என் தகப்பனாருக்குத் தெரியாமல் இறங்கிப்போய் . எஞ்சின் டிரைவருடன் எஞ்சினைப் பற்றிப் பேசி எல்லா தகவல்களையும் தெரிந்துகொண்டேன். அவர் மிகுந்த சந்தோஷத்துடன் எனக்கு எல்லாவற்றையும் விளக்கியுரைத்தார். இந்த எஞ்சினைப் பார்த்த பிறகுதான் எனக்கு மோட்டாரைப் பற்றிய சிந்தனை ஏற்பட்டது.

நான் கிராமத்திலிருந்து நகருக்குச் செல்லுகையில் சட்டைப் பை நிரம்ப இயந்திரங்களைச்சேர்ந்த பலவிதமான கருவிகளைப்போட்டுக்கொண்டு போவேன். சில சமயம் உடைந்துபோன கடிகாரம் ஒன்றைக் கொண்டுபோய் அதை சரியாக ஓடும்படி செய்யப் பார்ப்ப

துண்டு. இவ்வாறு செய்து வருகையில், ஒருநாள் எனக்குப் பதின்மூன்று வயதாயிருக்கும்போது ஒரு கடிகாரத்தையும் "ரிப்பேர்" செய்து ஓடவைத்து விட்டேன். பதினைந்து வயதுக்குள் கடிகார ரிப்பேரில் சகலமும் எனக்குத் தெரிந்துவிட்டது. சும்மா பரீட்சார்த்தமாய் வேலை செய்வதனால் எவ்வளவோ சங்கதிகள் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு சாமானும் எப்படி செய்யப்படுகிறது என்று புஸ்தகங்கள் மூலம் கண்டுகொள்ள முடியாது. ஆனால் இயந்திர சாமான்களில் வேலைசெய்பவர்கள் அதைத் தெரிந்து கொள்ளாமல் தொழில் செய்ய முடியாது. எழுத்து வேலையில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு புஸ்தகங்கள் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் இயந்திரங்களும் இயந்திரத்தொழிற்காரர்களுக்கு. அதன்மூலம் அவர்களுக்குப் புதிய கருத்துக்கள் தோன்றும். அவர்களுக்கு மூளையிருந்தால் அதை அவர்கள் பிரயோகிப்பார்கள்.

ஆதிமுதல் பண்ணை வேலையில் எனக்கு இஷ்டமில்லை. எனக்கு இயந்திரங்களில் வேலைசெய்ய வேண்டுமென்றே ஆவல் அதிகம். ஆனால் என் தந்தைக்கு இது பிடிக்கவில்லை. நானும் அவரைப்போல் பண்ணை வேலையில் ஈடுபட வேண்டு மென்பதே அவர் நோக்கம். 17-வது வயதில் பள்ளிக்கூடத்துப் படிப்பை விட்டு நீங்கி ஒரு இயந்திரசாலையில் வேலை கற்றுக்கொள்ள நான் அமர்ந்தேன். என்னை ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை என்று என் தகப்பனார் கழித்துவிட்டார். அங்கே வேலை கற்றுக்கொள்ள ஏற்பட்ட மூன்று வருஷ கெடுவுக்குள்ளாகவே நான் வேலையில் தேர்ச்சி பெற்றுவிட்டேன். இராவேளையில் ஒரு கடிகாரக் கடையில் கடிகார ரிப்பேர் வேலை செய்வது வழக்கம். ஒரு சமயத்தில் மட்டும் சுமார் முன்னூறு கடிகாரங்கள் என் கையிலிருந்தன. நான் இந்தத் தொழிலிலேயே வேலை செய்திருப்பேன். ஆனால் கடிகாரங்கள் எல்லோராலும் உபயோகிக்கப்படும் அவசியமான சாமான் அல்லாததால் அதில் எனக்கு அவ்வளவு பிரியமில்லை.

1879-ம் ஆண்டில் நான் ஒரு ரோட் எஞ்சினை ஓட்ட அமர்ந்தேன். பிறகு ரோட் எஞ்சின்களை ரிப்பேர் செய்வதில் தேர்ந்து அவ்வேலை செய்து வந்தேன். இதற்குமுன் வெகுகாலமாக நிலங்களை உழுவதற்குக் குதிரைகளை உபயோகிப்பதற்குப் பதிலாக இயந்திர சக்தியையே ஏன் பிரயோகிக்கக் கூடாது என்று நான் சிந்தித்து வந்ததுண்டு. இதேமாதிரி தெருக்களில் ஓடவும் ஒரு வண்டி செய்யலாம் என்ற எண்ணமுமுண்டு. இப்பொழுது இயந்திர வேலைகள் எல்லாம் எனக்கு நன்றாய்த் தெரிந்துவிட்டதோடு, கையில் ஒரு சிறிய பட்டறையும் இருந்ததால் ஒரு வண்டி இங்ஙனம் செய்தல் சுலபமாயிருந்தது. தேக சிரமத்தை ஒழித்து, மோட்

டார் பலத்தால் பண்ணைத்தொழிலை நடத்த வேண்டுமென்பது என் ஆசை. முதலில் பண்ணை வேலையை சுலபமாகச் செய்வதே என் நோக்கமா யிருந்தபோதிலும், பின்னர் ஜனங்களின் மனப் போக்கை அனுசரித்து ரோட்டில் ஓடக்கூடிய வண்டி ஒன்றை சீக்கிரத்தில் செய்து முடித்தேன். அதை நீராவியால் ஓட்ட ஏற்பாடு செய்தேன். ஆனால் அது திருப்திகரமா யில்லை. எனவே இரண்டு வருஷம் சிரமப்பட்டபின் ரோட் எஞ்சினை நீராவியைக் கொண்டு ஓட்டும் எண்ணத்தையே விட்டுவிட்டேன். மேலும், பெரியபணக்கார பண்ணைக்காரர்கள் மட்டும் வாங்கக்கூடிய ஒரு இயந்திரத்தைச் செய்வது பிரயோஜனமில்லை என்று நான் கருதினேன்.

இதற்குமுன் நான் வேலை கற்றுக்கொண்டபோது ஒரு ஆங்கில சஞ்சிகையில் எண்ணெய்ப் புகையினால் வண்டிகளை ஓட்டக் கூடுமென்ற விஷயத்தை நான் படித்திருந்தேன். ஆனால் நிபுணர்களாய்க் கருதப்பட்டவர்க ளெல்லாம் நீராவியுடன் எண்ணெய் போட்டி போட முடியாதென்றனர். நிபுணர் எப்பொழுதும் காரியம் ஆகவொட்டார்கள்; சந்தேகங்களைக் கிளப்பிவிட்டுக் கொண்டேயிருப்பார்கள். கடைசியில் வேலை நடக்காது. இதனால்தான் நான் ஒருபோதும் நல்ல கைதேர்ந்த நிபுணர்களை நியமிக்கிற தில்லை. என்னுடைய எதிரிகளை வெல்ல வேண்டுமெனில் சில நிபுணர்களை அவர்களிடம் அனுப்ப ஏற்பாடு செய்வேன். அவர்களிடம் பேச்சுத்தான் அதிகம்; பல பல யோசனைகள் கூறுவார்கள். ஆனால் காரியத்தில் ஒன்றும் நடக்காது.

1887-ம் ஆண்டில் எண்ணெய்ப் புகையினால் ஓடக்கூடிய ஒரு எஞ்சினை நான் செய்து முடித்தேன். அதன்பின் எனது தகப்பனார் எனக்கு 40 ஏகரா மரங்களடங்கிய பூமியைக் கொடுப்பதாகவும், ஆனால் நான் இந்த இயந்திரத்தொழிலை விட்டுவிட வேண்டுமென்றும் சொன்னார். நான் ஒருவாறு ஏற்றுக்கொண்டேன். அந்தப் பண்ணையிலேயே ஒரு மரம் அறுக்கும் இயந்திரம் அமைத்து, அதில் இருந்த மரங்களை யெல்லாம் வெட்டியறுக்கத் தொடங்கினேன். இந்த சமயத்தில் நான் கலியாணமும் செய்து கொண்டேன். இடையில் பலவிதமான எஞ்சின்கள் செய்வதில் மூளையைச் செலவழித்தேன். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு மின்சாரக் கம்பெனியார் மாதம் ஒன்றுக்கு 45 டாலர் தருவதாக என்னை வேலைக்கு அழைத்தார்கள். பண்ணையில் வந்ததைவிட இந்த வரும்படி அதிகமாயிருந்ததால் நான் சந்தோஷமாய் அதை ஏற்றுக் கொண்டேன். மேலும் எனக்குப் பண்ணை வேலையிலே பிடித்தமில்லை. ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொண்டோம்; அதன் பின்புறத்தில் ஒரு பட்டரையையும் வைத்தேன். முதலில்

கொஞ்ச நாள் இரவில் வேலைக்குப் போகவேண்டியிருந்தது பின்னர்,பகல் வேலை ஏற்பட்ட பின், இராவெல்லாம் புதிய மோட்டாரில் வேலை செய்ய ஆரம்பித்தேன். அந்த வேலை அவ்வளவு கடினமாயிருந்ததாக நான் சொல்லமாட்டேன். ருசிகரமான வேலையெதுவும் கஷ்டமானதல்ல. சிரமப்பட்டு வேலை செய்தால் கோரிய பலன் எப்பொழுதும் கிடைக்கும். எனக்கு பெரிய உதவியாயிருந்தது என்னவெனில், என் மனைவி தைரியமாய் நின்று எனக்கு உற்சாகமூட்டியதுதான்.

இவ்விஷயத்தில் முந்திய வழிகாட்ட ஒருவித உதவியும் எனக்கு இல்லை. இத்தகைய வண்டியைச் செய்ய இன்னும் பலர் வேலை செய்து கொண்டிருந்தார்களானாலும், அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்களென்பதை அறிய எனக்கு வழியில்லை. கடைசியில் 1892-ம வருஷத்தில் முதல் முதல் மோட்டார் வண்டியைச் செய்து முடித்தேன். ஆயினும் அது திருப்திகரமாய் ஓட ஒரு வருஷமாயிற்று. நான்கு குதிரை சக்தியுடன் அது ஓடிற்று. இரண்டே பேர்தான் உட்கார முடிந்தது. மணிக்குப் பத்து மைலோ, 20 மைலோ ஓடும்படி முன்னும் பின்னும் ஒரு கைப்பிடியை தள்ளுவதனால் வேகத்தை கட்டுப்படுத்த ஏற்பாடு செய்திருந்தேன். பின்னால் ஓட்ட முடியாது. மொத்தத்தில் வண்டி 500 பவுன் கனம் இருந்தது. இவையும் பிற அம்சங்களும் முன்னாலேயே யோசித்து அமைக்கப்பட்டவை தான். பெரும்பான்மையோர் முன்னதாக தாங்கள் இன்னது தான் செய்யப்போகிறோமென்று யோசனை செய்யாததால்தான் அவர்கள் வேலை திருப்திகரமாயிருக்கிறதில்லை. என்னுடைய வேலைக்கு ஏற்பட்ட கஷ்டமெல்லாம் தேவையான சாமான்கள் கிடைக்காததுதான்; தவிர அதற்கேற்ற கருவிகளும் அகப்படவில்லை. மேலும் இவைகளைத் தேடி சம்பாதிக்க வேண்டிய அவகாசமும், பணமும எனக்குக கிடையாது. ஆயினும் 1893-ம் ஆண்டில் ஒருவாறு திருப்திகரமாய் நான் செய்த மோட்டார் வண்டி ஓடிற்று. அதைக்கொண்டு மேலே அபிவிருத்தி செய்யலாம் என்ற உற்சாகமும் எனக்கு உண்டாயிற்று.

# அத்தியாயம் 3.

## நான் கற்றது.

தொழிலாரம்பத்தில் இடையூறுகள்—எதிர்ப்பும் பரிகாசமும்—போட்டிப் பந்தயம்—பணமும் சேவையும்—நல்ல தொழிலுக்கு அடையாளம்—வியாபார லக்ஷணம்—புதிய மாறுதல்களைக் கண்டு அச்சம்—போட்டா போட்டியும் உண்மை வேலையும்—வெற்றிக்கு அவசியமானவை.

டீட்ராய்ட் நகரில் வெகுநாள் வரையில் என்னுடைய மோட்டாரைத் தவிர வேறு மோட்டாரே கிடையாது. இந்த வண்டி வெகு பேருக்கு பெரிய உபத்திரவமா யிருந்தது. தடபுடலாய் பெரிய சத்தம் அது செய்ததால், குதிரைகள் அதைக் கண்டு மிரண்டன. தவிர, போக்குவரத்தும் அதனால் தடைப்பட்டது. வண்டியை நிறுத்தினால் உடனே அதைச் சுற்றிக் கூட்டம் கூடிவிடும். எங்கேயாவது கொஞ்சநேரம் நிறுத்திவைத்து விட்டுப் போனால் யாராவது அதில் ஏறிவிடப் பார்ப்பார்கள். இதனால் அதை நிறுத்திவிட்டுப் போகிற பொழுதெல்லாம் ஒரு சங்கிலியைக் கொண்டுபோய் லாந்தல் கம்பத்தில் கட்டிவைத்து விட்டுப்போவது வழக்கம். இத்துடன் நிறகவில்லை. போலீஸ்காரர் தொந்தரவு அந்தக் காலத்திலும் இருந்தது. நகர மேயரிடம் லைசென்சு பெற்றுதான் ஓட்டலாமென்றார்கள். எனவே, ஒரு சமயத்தில் அமெரிக்கா தேச முழுதும் லைசென்சு பெற்ற மோட்டார் ஓட்டி என்னைத்தவிர வேறெவருங் கிடையாது. 1895, 1896 இரண்டு வருஷம் ஆயிரம் மைல் தூரம் அந்த வண்டியைப்போட்டு அடித்தேன். பிறகு சார்லஸ் எய்னஸ்லீ என்பவருக்கு இருநூறு டாலருக்கு அதை விற்றேன். விற்பதற்காக அந்த வண்டியைச் செய்ய வில்லை. பரீட்சை பார்க்கத்தான் செய்தேன். ஆனால் இன்னொரு வண்டி செய்யவேண்டுமென்றிருந்தேன். எய்னஸ்லீ ஒரு மோட்டார் வாங்க உத்தேசித்தார். அந்தப் பணத்தைக்கொண்டு நான் புதியதாய் இன்னொரு மோட்டார் செய்யக் கூடும். ஒரு விலையைத் திட்டஞ்செய்து கொள்வதில் எங்களிருவருக்கும் அதிக சிரம மில்லை. எனவே வண்டியை அவருக்கு விற்றேன்.

இந்தமாதிரி சில்லரையாக வண்டிகள் செய்து விற்பதில் எனக்கு இஷ்டமில்லை. ஆயிரக்கணக்காய் வண்டிகள் செய்யவேண்டு

மென்பது என் கருத்து. ஆனால் அதற்கு சௌகரியம் வேண்டுமே. அவசரப்படுவதில் பிரயோஜனமில்லை. 1896-ம் ஆண்டில் இன்னொரு வண்டி செய்ய ஆரம்பித்தேன். முதல் வண்டியைப்போலவே அது இருந்தது. ஆனால் கொஞ்சம் கனக்குறைவு. இந்த வண்டியிலிருந்து நான் பல விஷயங்கள் கற்றுக்கொண்டேன். அந்த சமயத்தில் அமெரிக்காவிலும், இதர தேசங்களிலும் வேறு பலர் மோட்டார் வண்டி செய்ய பிரயாசைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். நியூ யார்க் நகரில் 1895-ம் ஆண்டு ஜெர்மனியிலிருந்து ஒரு மோட்டார் பார்வைக்கு வந்திருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அதைப்போய் நான் பார்த்தேன். அதில் விசேஷமாய்க் குறிப்பிடத்தக்கது ஒன்றையுங் காணவில்லை என் வண்டியை விட மிக்க பளுவாக விருந்தது. வண்டியின் பளுவைக் குறைக்கும் லக்ஷியத்துடனேயே நான் வேலைசெய்தேன்; மற்ற மோட்டார் வண்டி செய்கிறவர்கள் இதை கவனிக்கவேயில்லை. என்னுடைய வீட்டுப் பட்டரையில் நான் மூன்று வண்டிகள் செய்தேன். அவை மூன்றும் வருஷக்கணக்காய் டெட்ராய்ட் நகரில் ஓடின. முதன் முதல் செய்த வண்டி இன்னும் என்னிடமிருக்கிறது. எய்ன்ஸ்லீ வேறொருவரிடம் அதை விற்றார். அவரிடமிருந்து நான் அதைத் திரும்ப நூறு டாலருக்கு வாங்கினேன்.

இந்த நாளெல்லாம் மின்சாரக் கம்பெனியில் நான் வேலைசெய்து கொண்டுதானிருந்தேன். நாளடைவில் அதில் நான் பிரதம எஞ்சினீயராகிவிட்டேன். 125 டாலர் எனக்கு மாதச் சம்பளம். ஆனால் என்னுடைய மோட்டார் வேலைகள் கம்பெனித் தலைவருக்குப் பிடிக்கவில்லை. அவர் மின்சாரத்தால எதையும் சாதித்துக்கொள்ளலாமென்று அபிப்பிராயப்பட்டார். ஆனால் என்னுடைய வேலைக்கு அது பிரயோஜனப்படுமென்று நான் நினைக்கவில்லை.

எடிசன் கம்பனியார், என்னுடைய மோட்டார் பைத்தியத்தை நான் ஒழித்தால், தங்கள் கம்பனியின் சூபரின்டண்டு வேலை எனக்குத் தருவதாகச் சொன்னார்கள். உத்தியோகத்தைப் பெரிதாகக் கருதினால் என்னுடைய மோட்டார் எண்ணத்தை ஒழிக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆனால் நான் வேலையைப் பெரிதாகக் கருதாமல் 1899-ம் ஆண்டு ஆகஸ்டு 15வ ராஜீநாமா செய்துவிட்டு மோட்டார் தொழிலில் பூரணமாய் இறங்கினேன்.

இப்படி நான் செய்தபோது என் கையில் சொந்தப்பணம் ஒன்றுங் கிடையாது. காலக்ஷேபத்திற்குச் செலவானது போக மிஞ்சிய பணத்தையெல்லாம் பரீட்சார்த்தமாய் மோட்டார் வேலை செய்வதிலேயே செலவுசெய்துவிட்டேன் மோட்டார் அபிவிருத்தி

யை விட்டுவிடக்கூடாது என்றே என் மனைவியும் அபிப்பிராயப் பட்டாள். அப்பொழுது மோட்டார் வண்டிகளுக்கு அவ்வளவு தேவை யில்லை. புதிதான எதற்கும் இருக்கிறது அரிதுதான். ஆகாய விமானங்களை இப்பொழுது எங்ஙனம் அதிகமான பேர் கோருகிற தில்லையோ, அதுபோலவே மோட்டார் வண்டிகளை அப் பொழுது பெரும்பாலனவர்கள் கோர வில்லை. முதலில் அதைப்பல "பிரகஸ்பதிகள்" பரிகசித்தார்கள். வியாபார முறையில் அது முன்னுக்கு வராது என்று பணக்காரர்கள் நினைத்தார்கள். புதி தாகப் போக்குவரத்துக்கு ஏற்படும் எந்த சாதனத்தையும் ஜனங் கள் முதன் முதல் ஏன் இப்படி எதிர்க்கிறார்கள் என்று எனக்குப் புரிய வில்லை. இன்றைக்கும் கூட மோட்டார் ஒன்றுக்கும் பிரயோ ஜனமில்லை என்ற அபிப்பிராய முள்ளவர்கள் இருக்கிறார்கள். எனவே, ஆரம்பத்தில் வியாபாரத்துக்குப் பெரிய சாதனமாய் மோட்டார் விளங்கு மென்று ஒருவரும் நம்ப வில்லை. துவிசக்கிர வண்டிபோல் இருக்குமென்று சிலர் மட்டும் நம்பினார்கள். பின்னர் மோட்டாரும் பயன்படும் என்று கண்டுகொண்ட பிறகு பலர் மோட்டார்கள் செய்யத் தொடங்கினர். அதன்மேல் எது மிக்க வேகமாக ஓடும் என்ற கேள்வி பிறந்தது. இதனால் கொஞ்சம் மோட்டார் தொழிலே பின்னடைந்தது. வேகமாய் ஓடக்கூடிய வண்டிகளிலேயே அதிக கவனஞ் செலுத்தப்பட்டதே யன்றி வண்டி நன்றா யிருக்க வேண்டுமே யென்று வண்டிகள் செய்பவர்கள் கவலைப்பட வில்லை.

நான் மின்சாரக் கம்பெனியி லிருந்து நீங்கியவுடன் சிலர் சேர்ந்து என்னுடைய மோட்டாரை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒரு மோட்டார் கம்பெனி ஆரம்பித்தார்கள். நான் அதில் பிரதம எஞ்சினியர். எனக்கும் அதில் பங்கு இருந் தது. என்னுடைய முதல்வண்டி மாதிரி மூன்று வருஷ காலம் வண்டிகள் செய்து வந்தோம். ஆனால் கொஞ்சம்தான் விற்பனையாயின. நல்ல வண்டிகள் செய்வதற்கு ஆதரவு கிடைக்க வில்லை. ஆர்டர்மேல் வண்டிகள் செய்து எவ்வளவு அதிகவிலைக்கு விற்கக் கூடுமோ அந்த விலைக்கு விற்பதே நோக்கமா யிருந்தது. பணம் சம்பாதிப்பதே பிரதம இலட்சியமாகக் காணப்பட்டது. எனவே, இந்த கம்பனி என்னுடைய கருத்துக் கிசைந்ததாக வில்லை. 1902-ம் ஆண்டு மார்ச்சு மாதம் என் பதவியை ராஜீ நாமா செய்துவிட்டு விலகினேன். மறுபடி எவரிடமும் இங்ஙனம் வேலைக்கு அமருவ தில்லை என்ற உறுதியுடன் வெளியேறினேன்.

பிறகு ஒரு கடையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டேன். தொழிலை நடத்திப் பார்த்துவிட வேண்டியது என்ற எண்ணத்

துடன் ஆரம்பித்தேன். 1902-ம் ஆண்டு நான் வேலையை விட்டு நீங்கியது முதல், போர்ட் மோட்டார் கம்பெனி ஏற்படுகிறவரையில் நான் பரீட்சார்த்தமாய் பற்பல வேலைகள் செய்து பார்த்தேன். நான் முதன் முதல் மோட்டார் செய்ததிலிருந்து போர்ட் கம்பெனி ஸ்தாபிதமாகும் வரையில் இடையில் சுமார் 25 வண்டிகள் செய்திருப்பேன். அதில் 19 அல்லது 20 வண்டிகள் டிட்ராய்ட் மோட்டார் கம்பெனி மூலம் செய்யப்பட்டவை. ஓடினால் போதும் என்ற காலம்போய் வேகமாக ஓட வேண்டுமென்ற காலம் வந்து விட்டது. அப்பொழுது வின்டன் மோட்டாரைச் செய்த அலெக்ஸாண்டர் வின்டன் என்பவர்தான் மோட்டாரை அதிவேகமாக ஓட்டுபவர் என்று பேர் பெற்றிருந்தார். நான் அவருடன் போட்டி போட ஏற்பாடு செய்தேன். அதில் அவரை வென்றேன். அது முதல் என் பிரசித்தி எங்கும் பரவிற்று.

இந்தக் காலத்தில் தொழிலில் பணத்திற்கு இருந்த கௌரவம் சேவைக்கு இல்லை. பணம் உழைப்பின் பலனாக அதன்பின் வரவேண்டுமே யன்றி அதற்கு முன்னதாக யிருக்கக் கூடாது. தவிர, சாமான்களை நன்றாக செவ்வையாகச் செய்யவேண்டுமே யென்ற எண்ணமே வியாபாரிகளுக்கு அப்பொழுது கிடையாது. எப்படியாவது விலையாகி, பணமானால் போதுமென்பதே இலட்சியமாயிருந்தது. சாமான் வாங்குபவர் திருப்தியடையாவிடில் அவரை மோசஞ் செய்து பணம் சம்பாதித்து விட்டோமே என்ற வருத்தமே உண்டாகிற தில்லை; ஆனால் அவரைப் பெரிய உபத்திரவமாகவோ, அல்லது இன்னும் முதலிலேயே சரியாகச் செய்து கொடுத்திருக்க வேண்டிய சாமானுக்குப் பதிலாக இனிமேலாகிலும் நல்லதாகச் செய்து கொடுத்துப் பணம் பறிக்கத் தகுந்த பாத்திரமாகவோ கருதுகிறார்கள். மோட்டாரை ஒருவரிடம் விலை பேசித் தள்ளி விட்டுவிட்டால் அதன்பின் அதற்கு என்ன நேரிட்டாலும் கவலையில்லை. அது உடைந்துபோய் சில பாகங்கள் புதுப்பிக்கும்படி நேர்ந்தால் அது மோட்டாரை விற்றவர் குற்றமில்லை. வாங்கியவருடைய துரதிருஷ்டம்தான் அது. ஒருவர் ஒருதரம் மோட்டாரை வாங்கிவிட்டால் பிறகு தேவையான போதெல்லாம் அதன் பாகங்களை வாங்கித்தானாகவேண்டும்; அதன் மூலம் ஏராளமாய்ப் பணம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணமே வியாபாரிகளுக்கு பெருவாக அப்பொழு திருந்துவந்தது.

யோக்கியப் பொறுப்பான முறையில் மோட்டார் தொழில் நடத்தப்பட வில்லை யெனினும், இதர தொழில்களும் எதுவும் அதே மாதிரித்தான் இருந்தது. அந்த சமயத்தில் பல சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, முதல் சேர்த்து தொழில்கள் ஆரம்பித்தனர்.

இதற்கு முன் ரயில்பாதை போடுவதில் கவனஞ் செலுத்திய முதலாளிகள் தொழில்களில் இறங்கினார்கள். எந்தத் தொழிலும் செவ்வையாக நடத்தப்படின், தானாக அதன் பொருள்நிலை நேர்மையாக இருக்கும் என்பதே என் கருத்து. எதையும் சிறுக ஆரம்பித்து அதன் லாபத்தைக்கொண்டு அதை வளர்த்து பெருகவாழ வைக்கவேண்டும். லாபம் வராவிடில் வீணாய்க் காலங் கழிக்கிறதாக உணர்ந்து அந்தத் தொழிலை விட்டு நீங்கிவிடுதல் உசிதம். நல்ல வேலை செய்து அதற்குத் தகுந்த பணம் சம்பாதிக்க வேண்டுமென்பதே என் கொள்கை.

பணத்திற்கு வட்டியை கணக்குப் பார்ப்பதால்தான் பல தொழில்கள் முன்னுக்கு வரவில்லை. மூலதனம் போடுகிற முதலாளிகளுக்கு அதனுடைய வட்டி வந்தாக வேண்டு மென்ற நோக்கமே பிரதானமா யிருக்கிறது. பணம் தானாக ஒன்றுஞ் செய்துவிட முடியாது. பணத்தைக்கொண்டு வேலைக்கு வேண்டிய கருவிகளை வாங்கலாம். 100-க்கு 5, 6 வட்டி கிடைக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் பாங்கியில் பணத்தைப்போட்டு காப்பாற்ற வேண்டுமே யன்றி தொழில்களுக்கு அவர்களுடைய பணம் உதவாது. தொழிலில் போடுகிற பணம் பணமாகாது; வேலை செய்வதற்கு ஒரு கருவியாய் விளங்குகிறது. வேலையின் பயனாக கிடைப்பதே அந்த மூலதனத்திற்கு சரியான பிரதிப் பிரயோஜன மாகும்.

எந்தத் தொழிலும் பணத்தைக் கொண்டு நடத்தி விடலா மென்ற எண்ணம் முதலாளிகளுக்கு இருந்து வந்தது. முதலில் சரியாக நடைபெறாவிடில், இன்னும் மூலதனத்தை அதிகரிக்க வேண்டுமென்று அதிகப் பணத்தைப் போடுகிறது வழக்கம். இதெல்லாம் தொழிலை சரியாக நிர்வகித்து நடத்தாததால் உண்டாகிறதே யன்றி பணக்குறைவா லன்று. இங்ஙனம் வீணாகப் பணத்தைப் போட்டு அதிகப்படுத்துவது விரயம்தான்.

பணத்தையே வேலையைவிடப் பெரிதாகக் கருதுகிற கம்பெனியிலோ, பணக்கார முதலாளிகள் சம்பந்தப்பட்ட கம்பெனியிலோ நான் வேலை செய்வ தில்லை என்று தீர்மானஞ் செய்துகொண்டேன். பொது ஜனங்களின் நன்மைக்காக தொழிலை நடத்துவது சாத்திய மில்லை என்று தோன்றினால், தொழிலே ஆரம்பிக்காம லிருந்துவிடுகிறது என்றும் முடிவு செய்துகொண்டேன். பணம் சம்பாதிப்பதையே இலட்சியமாய்க் கொண்டு தொழில் நடத்துவது, ஒரு பெரிய காரியத்தை சாதிக்க வேண்டு மென்ற எண்ணங் கொண்ட என்னைப் போன்றவர்களுக்கு லாயக் கில்லை. எந்தத்

தொழிலுக்கும் அடிப்படையாக விருப்பது பொது ஜன சேவை.

ஒரு சாமானை விற்பனை செய்து விட்டவுடன் வியாபாரிக்கும், வாங்குபவருக்கும் உள்ள உறவு நீங்கிவிடாது. உண்மையில் அதன் பின்தான் இருவருக்கும் நெருங்கிய பாந்தவ்யம் ஏற்படுகிறது. மோட்டாரை விற்ற பின்தான் இருவருக்கும் சினேகம் ஆரம்பிக் கிறது. சரியான மோட்டாரை "சப்ளை" செய்ய முடியாவிடில் இந்த சினேகம் உண்டாகாம விருப்பதே நலம். ஏனெனில் வியா பாரிகளுக்குத் தங்களிடம் சரக்கு வாங்குபவர்கள் அதிருப்தி அடைந்தால் அதைவிட வேறு வினை வேண்டியதில்லை. மோட்டார் தொழில் துவக்கத்தில், ஒரு வண்டியை விற்றுவிட்டால் போதும், அதன்பின் வாங்கினவருக்கு என்ன நேர்ந்தாலும் பாதகமில்லை என்ற எண்ணமிருந்து வந்தது. ஆனால் எங்கள் கொள்கை யென்ன வெனில், ஒரு தரம் 'போர்ட்' வண்டியை ஒருவர் வாங்கிவிட்டால் அதை நிற்காமல் ஓடும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது எங்கள் கடமை. நடுவில் ஏதாவது "ரிப்பேர்" வந்தால் உடனே அதை சரிப்படுத்தித் தரவேண்டும். இதுதான் "போர்ட்" வண்டி இவ் வளவு பிரபலமானதின் இரகசியம். இதர வண்டிகளைச் செய்த வர்கள் இந்த சௌகரியம் செய்து தரவில்லை. வண்டி வாங்கியவர் கள் உள்ளூரில் உள்ள "ரிப்பேரர்" கையை எதிர்பார்த்து நிற்க வேண்டியதாயிற்று ரிப்பேரர் கையில் தேவையான சாமான்கள் இருந்தால் வண்டிக்காரர் அதிருஷ்டசாலிகள்தான்; இல்லாவிடில் அவர் பாடு திண்டாட்டந்தான். வாரக்கணக்காய் இழுக்கப்போட்டு கடைசியில் பெரிய செலவு பட்டியல் அனுப்பிவிடுவார்கள். "ரிப் பேர் சார்ஜு" மட்டும் ஒரே யடியாய் ஏறிவிடும். மோட்டார்காரர் என்றால் அவரிடமிருந்து எவ்வளவு பணம் வேண்டுமானாலும் பறிக்கலா மென்ற ஒரு எண்ணம் ஏற்பட்டிருந்தது. இந்தப் பண ஆசை பிடித்தவர்களுக்கு நாங்கள் இடங் கொடுக்கவில்லை. வண்டிக் காரர்களுக்கு வேண்டியவைகளை நாங்களே செய்துகொடுத் தோம்.

இன்னொரு விஷயத்தையும் நான் கவனித்தேன். தொழிலில் ஈடுபட்டவர்கள் தங்கள் பாடு என்றைக்கும் கஷ்டம்தான் என் றெண்ணி, சீக்கிரத்தில் வேலையிலிருந்து நீங்கி கொஞ்சம் பணம் மீத்து வைத்துக்கொண்டு சுகமாகக் காலந்தள்ளும் நாளை எதிர்பார்த் துக் கொண்டிருந்தார்கள். இது மிகவும் தவறான கொள்கை என் பது என் அபிப்பிராயம். வாழ்க்கை, தினசரி மேலும் மேலும் சென்று கொண்டே யிருக்கிறது. ஒரே யிடத்தில் அது ஸ்திர மாக நிலை பெறுகிறதில்லை.

தொழிலாளர் எப்பொழுதும் புதிய வழக்கங்களை இலகுவாக ஏற்றுக் கொள்ளுவதில்லை; வெகு சிறிய மாறுதல் ஏற்படினும் அவர்கள் மனங் கலங்குகிறார்கள். அதிக சிரமமில்லாமல் தொழிலாளர் வேலையை செய்வதின்பொருட்டு, அவர்களுடைய வேலை முறைகளைப் பற்றி விசாரணை செய்தபொழுது, அதை அவர்கள் எதிர்த்தார்கள். இதன்மூலம் தங்களிடம் அதிகவேலை வாங்க ஏற்பாடு செய்யப்படுவதாக அவர்கள் நினைத்தார்கள். தொழில்களிலுள்ளவர்கள் பழைய வழக்கங்களை மாற்றிக் கொள்ளுவதற்கே இணங்குவதில்லை. பழையது கழிந்து, புதியது புகுந்து விட்டதென்றே அவர்கள் உணர்கிறதில்லை. வாழ்க்கையின் காலசக்கிரம் சுழன்று வருகிறபோது அடுத்த சுற்றில் அவர்கள் கீழேவிழுந்து விடுவார்களென்பது நிச்சயம்.

பிறர் நம்மை முட்டாள்களென்று நினைத்துவிடப் போகிறார்களே யென்ற பயம் வெகுப்பேருக்கு. பெரும்பாலோருக்கு இந்தப் பொதுஜன அபிப்பிராயம் அவசியமான முட்டுக் கட்டையாக விளங்குகிறது. அது, சில மனிதரை, அவர்கள் சாதாரணமாயிருப்பதைவிட நேர்மையாக யிருக்கும்படிச் செய்கிறது. ஆனால் நேர்மையாக யிருப்பதால் முட்டாள் என்று பிறர் சொல்லுவார்களானால் அதற்காக அஞ்சவேண்டியதில்லை. இத்தகையார் நாளடைவில் தாங்கள் முட்டாள்களென்று உலகிற்கு நிரூபித்துக் காட்டுவார்கள்; அல்லது அவர்களுடைய வேலையாவது நிதரிசனமாய் விளக்கும்.

பணத்தைப் போட்டு அதன்மேல் லாபம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணமே பல இடையூறுகளுக்குக் காரணம். குறைந்த கூலி தொழிலாளருக்குக் கொடுக்கப்படுவது அதனால்தான். பணம் தான் இத்தகைய தொழில்களில் முதன்மையாய்ப் போய்விடுகிறது. பணம் சேர்க்கும் நோக்கத்துடனேயே எல்லா வேலையும் செய்யவேண்டி யிருக்கிறது. வேலையில் கொஞ்சங்கூட சிரத்தையிருப்பதில்லை. ஆனால் வேலையிலிருந்துதான் லாபம் வரக்கூடுமென்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டாக வேண்டும். குறுக்கு வழியொன்றைக் கண்டுபிடித்து பணம் சம்பாதிக்க வேண்டுமென்பதே இலட்சியமா யிருந்ததேயன்றி, நேரான வழியாகிய உழைப்பின் மூலம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணமே தோன்றவில்லை.

போட்டியை எதிர்த்துப் போராடுவதில் செலவு செய்யும் நேரம், வீண் வியர்த்தம் என்பது என்கொள்கை; அதற்கு பதிலாக அந்த நேரத்தை வேலைசெய்வதில் செலவிடலாம். ஜனங்களுக்குத் தேவையான பொருளை மட்டும் சரியான விலைக்கு விற்கத் தயாராயிருந்தால், வாங்குவதற்கு ஏராளமானவர்களிருக்கிறார்கள். ஏதோ

ஒரு சிலர்தான் வாங்கக்கூடுமென்று எண்ணுவது தவறு. இந்த யோசனை காலத்திலெல்லாம் நான் சும்மாயிருக்கவில்லை. எனக்கு அவகாசம் நிரம்ப இருந்தது. ஏனெனில் நான் என் தொழிலிலேயே ஈடுபட்டிருந்தேன். எவரும் தன் தொழிலைவிட்டு அவகாசம் சம்பாதிக்கக் கூடுமென்று நான் நினைக்கவில்லை. பகலெல்லாம் அதே நினைவாயிருப்பதோடு, இரவிலும் அதே கனவா யிருக்க வேண்டும். குறிப்பிட்ட காலத்தில் மட்டும் வேலை செய்கிறதென்பதும், காலையிலிருந்து மாலைவரையில் வேலை செய்துவிட்டு மறுநாட் காலைவரையில் விசாரப்பட வேண்டாமென்றிருப்பதும், ஆயுள் முழுதும் பிறர் கீழ்வேலை பார்த்து ஊழியஞ் செய்யத் தயாராயிருப்பவர்களுக்கு சரி. ஒரு தொழிலை நிர்வகித்து நடத்தும் நோக்கமுள்ளோருக்கு அது தகுதியல்ல. கையினால் வேலை செய்பவர்களுக்கு காலவளவு தேவை; இல்லாவிடில் அவர்கள் வேலையிலேயே பிராணனை விட நேரிடும். எப்பொழுதும் இந்த வேலையில் உழல விரும்புகிறவர்கள், மாலையில் மணி அடித்ததும் வேலையை மறந்துவிட வேண்டும். ஆனால் அவர் அபிவிருத்தி யடைந்து முன்னேற விரும்பினால் அந்தப்பிரகாரம் வேலை முடிந்ததும், அதைப்பற்றி சிந்தித்து அதை எங்ஙனம் திருத்தி யமைக்கலாம் என்று யோசிக்க வேண்டும்.

திறமையாக வேலை செய்யவும், தீர்க்கமாக யோசனை செய்யவும் சக்தியுள்ளவர்கள்தான் முன்னேற முடியும்.

நான் இந்த ஓராண்டில் தொழிலைப்பற்றிக் கற்றுக்கொண்டதென்னவெனில்:—

(1) தொழிலில் பணத்திற்கு முதல் ஸ்தானம் அளித்து, அதனால் சேவை என்ற அடிப்படையான கொள்கையையே மறந்துவிட்டார்கள்.

(2) பணத்தையே இலட்சியமாய்க் கொள்ளுவதால் தொழில் சரிவர நடக்காதோ என்ற பீதி உண்டாகிறது. இதனால் போட்டியைக் கண்டும், முறைகளை மாற்றிக் கொள்ளுவதென்றாலும், பயம் ஏற்பட்டு தொழிலுக்கே இடையூறு நேருகிறது.

(3) சேவையையே முதன்மையாகக் கருதி, நேர்மையாக ஊழியம் புரிய உத்தேசிப்பவர்களுக்கு நேரான மார்க்கமிருக்கிறது.

இந்த முடிவுகளுக்கு நான் வந்து பல ஆண்டுகளாகியும், அவற்றை மாற்றும்படியான சந்தர்ப்பமோ, காரணமோ நேரவில்லை. அவைகளையே நான் உறுதியாகக் கொண்டுளேன்.

# அத்தியாயம் 4.

## தொழிலின் துவக்கம்

சேலவை ஒடுக்கி விலையைக் குறைத்தல்—லாபத்தை விட சேவையே பிரதானம்—போது ஜனங்கள் சௌகரியமே பெரிது—போர்ட் கம்பனி ஸ்தாபனம்—கனம் அதிகமாவதால் வலிமை யுண்டாகாது—முதல் வண்டியின் விற்பனை—முதன் முதல் பிரசுரித்த விளம்பரம்—போர்ட் மோட்டார் மீது போர்—கோர்ட்டில் வழக்கு—அதனால் ஏற்பட்ட பலன்—கடைசி வெற்றி.

**பா**ர்க் பிளேஸ் 81-வது கடையிலேயே, நான் வாடகைக்கு அமர்த்திக் கொண்டிருந்த இடத்தில் புதிய மோட்டார் ஒன்றைச் செய்வதற்கு வேண்டிய சௌகரியமிருந்தது. வேலையை நேர்மையாகச் செய்து, ஜனங்களுக்குத் தேவையான வகையில் செய்வதென்ற எனது மூலக்கொள்கையை அனுசரித்து ஏதேனும் செய்வதென்றாலும், அப்போது வழங்கிய வியாபார தோரணையில் நல்ல வண்டி ஒன்றைச் செய்து குறைந்த விலைக்கு விற்பதென்பது சாத்தியப்படாதென்பது தென்பட்டது.

எதையும் இரண்டாவது தரம் செய்யும்பொழுது, முதல் தடவையைவிட நன்றாகச் செய்யக்கூடுமென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதை சாமான்கள் செய்கிறவர்கள் கவனிக்கவில்லை; ஏதாவது வியாபாரத்திற்கு சாமான் செய்தால் போதும்; அதை நேராகச் செய்யவேண்டுமே யென்கிற சிரத்தை கூட அவர்களுக்கு இல்லை. ஆர்டர்மீது செய்கிறது; ஏராளமாய் சாமான்கள் செய்து போடுகிறதில்லை. ஆனால் ஆர்டர் கொடுப்பவர்களில் 100 பேரில் 80 பேருக்குத் தங்களுக்கு இன்னதுதான் தேவையென்று தெரிந்திராது. 15 பேர் யோசித்து எதையாவது சொல்லுவார்கள். பாக்கியுள்ள 5 பேருக்குத்தான் கொஞ்சமாவது விஷயம் தெரிந்திருக்கும். இவர்கள்தான் சாமான் இன்ன விதம் இருக்கவேண்டும் என்று சொல்லுவார்கள். ஆனால் அவர்கள் மிகச் சிறுபான்மையோர். எஞ்சிய 95 பேரில் 10 அல்லது 15 பேர்தான் சாமானின் தராதரத்தைப் பார்த்து விலை கொடுப்

பார்கள்; மற்றவர்களில் பெரும்பாலர் விலையை கவனித்து சாமானின் தரத்தைப் பொருட்படுத்தாமலே வாங்குவார்கள். ஆனால் இத்தகையார் இப்பொழுது அருகி வருகின்றனர். வர வர ஜனங்கள் சாமான் எப்படி வாங்கவேண்டு மென்பதை நன்றாய்த்தெரிந்து கொண்டுவிட்டார்கள். நல்ல சாமானையே வாங்க வேண்டுமென்ற கருத்து பரவி வருகிறது. எனவே, இந்த 95 பேருக்கு எது மிக்க அவசிய மென்று கண்டு, மிகவும் உயரிய சாமானை மிகத் தாழ்ந்த விலைக்கு விற்க ஏற்பாடு செய்தால், அதுதான் வியாபாரம் எங்கும் பரவி விருத்தி யடையக்கூடிய மார்க்கமாகும்.

சாமான்களை ஒருவகை குறிப்பிட்ட தரத்திற்குக் கொண்டு வந்துவிட வேண்டுமென்ற கொள்கை ஆபத்திற் கிடமானது. அதனால் வியாபாரிகள் தாங்கள் சுலபமாய்ச் செய்துதரக்கூடிய சாமானை செய்து, மிகவும் அதிக லாபத்திற்கு விற்கிறார்கள். சாமான் எப்படியிருக்க வேண்டுமென்கிற விஷயத்தைப் பற்றி பொது ஜனங்களைக் கேட்கிறதே யில்லை. விலையையும் பற்றி லக்ஷியஞ் செய்கிற தில்லை. ஒருதரப் படுத்துகிறதெனில் அதைக் கொண்டு அதிகலாபம் சம்பாதிக்கலாம் என்பதே முதல் எண்ணமாய் விளங்குகிறது. எனவே, இங்ஙனம் குறிப்பிட்ட அளவுக்கு ஒரு சாமானையே செய்கிறதென்றால் மேன்மேலும் செய்கிறவர்களுக்கு லாபம் வந்து குவிந்துகொண்டே யிருக்கும். எனவே, சாமான்கள் அதிகமாய்ச் செய்ய சௌகரிய முண்டாகி, தேவைக்கு மேல் செய்யப்பட்டு, சாமான்கள் விலையாகாமல் முடங்கிப்போய் விடுகின்றன. ஒரு சாமான் வெகு அதிகமான விலைக்கு விற்கப்பட்டு, திடீரென வியாபார மாகாததால் விலையை இறக்கினால், அதனால் சாமான் ஏராளமாய் விலையாய் விடுகிறதில்லை. பொது ஜனங்களுக்கு இத்தகைய வியாபாரத் தந்திரங்களைக் கண்டு சந்தேகம் ஏற்படுகிறது. ஆனால் சாமானை செய்யும் செலவைக் குறைத்து அதற்குத் தகுந்தபடி விலையையும் குறைத்தால் பொது ஜனங்களுக்கு நம்பிக்கை யுண்டாகி சாமானை வாங்குவார்கள். அவர்கள், வியாபாரி நாணய முள்ளவன்தான் என்று நம்பி அவனிடம் வியாபாரம் செய்கிறார்கள். ஒரு சாமான் அதிக விலையாகிற தென்பதை கவனித்து அதையே பற்றி அதிக கவனஞ் செலுத்துவது முறையல்ல; ஆனால் ஜனங்களுக்கு அவசியமாகவும், அவர்களுடைய தேவைகளுக்கு சரியானதாகவும் உள்ளதாக சாமான் எப்படி இருக்கவேண்டு மென்பதை யோசித்து அந்தப் பிரகாரம் செய்வதே சரியான ஏற்பாடாகும். இதற்கு பல ஆண்டுகள்கூட யோசித்து முடிவு செய்ய வேண்டியிருக்கலாம். சாமான் செய்கிற முறைகளெல்லாம் தானாக ஏற்படும். லாபத்தைக்கருதாமல் பொதுஜனங்கள் சௌகரியத்தை தரக்கூடிய முறைகளே வேண்டற்பாலன.

இந்தப் பிரகாரம் வேலை செய்தால்தான் பொதுஜன சமூகத்துக்கு நன்மை யுண்டாகும். எல்லாத் தொழிலும் ஏன் இந்த கொள்கையை அனுசரித்து நடக்கவில்லை என்பது எனக்கு விளங்கவில்லை. சீக்கிரத்தில் அதிகப் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற பேராசை யொழிந்தால், தானுக இந்தக் கொள்கையின் தத்துவத்தை உணர்ந்து வியாபாரிகள் நடப்பார்கள். வியாபாரத்தில் வாங்குபவர்கள் சக்தியை நோக்கி விலையை ஏற்படுத்தாமல், சாமான் செய்வதற்கு என்னசெலவான தென்று கணக்கிட்டு அதன்மேல் விலையை வைக்க வேண்டும்; அந்தச் செலவையும் குறைக்கத் தகுந்த முறைகளை அனுசரிக்கவேண்டும். இதுவெல்லாம் ஒரு நாளில் நிர்ணயஞ்செய்து விடுகிற காரியமல்ல. வருஷக் கணக்காய் ஊன்றி ஆராய்ந்து உழைக்க வேண்டும்.

இந்த ஓராண்டில் இந்தக் கொள்கைகளெல்லாம் அனுபவ பூர்வமாய் நான் நிர்ணயஞ் செய்துகொண்டேன். நான் இப்பொழுது வேகமாய் போட்டிக்கு ஓடக்கூடிய வண்டிகள் செய்வதிலேயே அதிக கவனஞ் செலுத்திவந்தேன். முதல்தரமான வண்டியெதுவும் பந்தயத்திற்கு ஓடத் தகுந்ததா யிருக்கவேண்டுமென அந்நாளில் கருதப்பட்டது. ஒரு போட்டிப் பந்தயத்தில் ஓடி கெலித்தால்தான் மோட்டார் நல்லதென்ற பெயர் கிடைக்கும். ஆனால் எனக்கு மட்டும் இந்தமாதிரி அபிப்பிராயத்தில் நம்பிக்கையில்லை; ஆயினும் மற்றவர்கள் செய்வதைப்போல் காலத்தை யனுசரித்து நடக்கவேண்டியிருந்தது.

1903-ம் ஆண்டில் நானும், டாம் கூப்பர் என்பவருமாக வேகமாக ஓடவேண்டியதற்காகவே இரண்டு வண்டிகள் செய்தோம். அவைகளின் சப்தம் மட்டும் பாதி உயிரை வாங்கி விடப்போதுமானது. ஒரே ஒருவர்தான் அவைகளில் உட்கார இடம் அமைக்கப்பட்டிருந்தது. அவைகளை நானும் கூப்பரும் பூரா வேகத்தில் ஓட்டி பரீட்சை பார்த்தோம். ஆயினும் போட்டிப்பந்தயம் ஓட எனக்கு இஷ்டமில்லை; கூப்பருக்கும் மனமில்லை. ஆனால் கூப்பர் பார்னி ஓல்ட்பீல்ட் என்ற ஒருவரை வரவழைத்தார். அவர் துவிசக்கிரத்தில் வேகமாக ஓடுபவரென பிரக்கியாதி பெற்றிருந்தார். ஆனால் அவருக்கு மோட்டார் வண்டியை ஓட்டத் தெரியாது. ஒரு வாரத்தில் அவருக்கு மோட்டாரை ஓட்டக் கற்றுக்கொடுத்தோம்.

கடைசியில் ஓல்ட்பீல்ட் பந்தயம் ஓடுவதற்காக நாங்கள் செய்திருந்த ஒரு வண்டியில் ஏறி உட்கார்ந்தார். உட்காரும்போதே "ஒருவேளை இதில் நான் இறக்கலாம்; ஆனால் நான் சாகும்போது தலைகால் தெரியாமல் இதில் சவாரி செய்தே னென்றுவது சொல்

வார்க ளல்லவா" என்று மனதைத் தேற்றிக்கொண்டார். அவர் திரும்பியே பார்க்க வில்லை. வண்டி அதிவேகமாய் ஓட்டம் எடுத்தது. கடைசியில் பந்தயத்தில் கெலித்தது. இரண்டாவதாக வந்தவருக்கும் ஒல்ட்பீல்டுக்கும் அரைமைல் தூரமிருந்தது.

இதனால் நானும் வேகமாய் ஓடக்கூடிய மோட்டார் ஒன்றை கட்டக்கூடும் என்று நிரூபிக்கப்பட்டது. இதற்கு ஒருவாரத்திற்கெல்லாம் போர்ட் மோட்டார் கம்பெனியை நான் ஸ்தாபித்தேன். கம்பெனிக்கு நான் உபதலைவனு யிருந்ததோடு சூபரின்டென்டாயும், பொது நிர்வாக மானேஜராயும், பிரதம இன்ஜினீயராயும் இருந்தேன். கம்பனிக்கு மூலதனம் ஒரு லக்ஷம் டாலர் என்று நிர்ணயிக்கப்பட்டது. இதில் கால் பங்குக்குமேல் என் பணம். பங்கு சேர்த்தபின் ரொக்கமாக வசூலானது 23 ஆயிரம் டாலர்தான். முதன் முதல் கம்பெனியின் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தத் தகுந்தவாறு பெரும்பான்மையான பங்குகளை நான் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமிரா தென்று தவறுக எண்ணினேன்; சீக்கிரத்தில் என் தவறை உணர்ந்து 1906-ம் ஆண்டில் 100-ல் 51 பங்கு அதாவது பாதிக்குமேல் பங்குகள் எடுத்துக்கொண்டேன்; இன்னுஞ் சிலநாள் கழித்து $58\frac{1}{2}$ பங்கு வாங்கினேன். இவையெல்லாம் கம்பெனியிலிருந்து நான் சம்பாதித்த பணத்தைக் கொண்டே செய்தேன். 1919-ம் ஆண்டில் பாக்கியுள்ள பங்காளிகள் எனது கொள்கைகளை யெல்லாம் அங்கீகரிக்காமல் தங்கள் பங்கை யெல்லாம் விற்றுவிட்டார்கள். அந்த $41\frac{1}{2}$ பங்கையும் என் குமாரன் எட்சல் வாங்கினன். 100 டாலர் பெறுமான பங்கு ஒன்றுக்கு 12 ஆயிரத்து 500 டாலர் அதாவது 125 மடங்கு அதிகமான விலை அவன் கொடுத்தான். சுமார் $7\frac{1}{2}$ கோடி டாலர் அவன் கொடுக்கவேண்டியிருந்தது.

முதன் முதலில் கம்பெனி ஆரம்பத்தில் அதிக ஆடம்பரமாயில்லை. நான் சாமான்களை யெல்லாம் செய்வதற்கு வேண்டிய திட்டங்கள் போட்டிருந்தபோதிலும், அதற்கேற்ற இயந்திரங்களை வாங்க சக்தி யில்லாமையால் பற்பல பட்டரைகளில் கொடுத்து செய்ய வேண்டியிருந்தது. டயரையும், சக்கிரத்தையும் போட்டு வண்டியில் மாட்ட வேண்டியதுதான் எங்கள் வேலை. ஒரு சாமான் செய்வதெனில் அதன் பலான பாகங்கள் ஒவ்வொன்றையும் தனித் தனியே அது எங்கெங்கே செவ்வையாகச் செய்யக்கூடுமோ அங்கு செய்து பிறகு ஒன்றித்தல்தான் சரியான முறை. அதைத்தான் நாங்கள் அனுசரித்து வருகிறோம். ஒருவருக்கே இந்தப் பலான பட்டரைகளும் சொந்தமா யிருந்தாலும் சரி, அல்லது தனிப்பட்ட நபர்களுடையதாக விருந்தாலும் சரி, நான் குறிப்பிட்டபடி

ஜனங்களின் சேவையைக் கருதி, அவைகள் வேலை செய்கிறவரையில் ஒரு வித்தியாசமும் ஏற்பட்டுவிடாது. நாம் ஒரு சாமானை எவ்வளவு நேர்த்தியாகச் செய்துகொள்ள முடியுமோ அதேமாதிரி சரியான விலைக்கு அது ஏராளமாய்க் கிடைக்குமானால், நாம் அதை வாங்கி விடுகிறதே நலம்.

நான் பளுவைக் குறைக்கும் லட்சியத்துடனேயே வேலை செய்து வருகிறேன். பளுவாயிருந்தால் பலமாயுமிருக்குமென்ற ஒரு தவறான அபிப்பிராயம் எப்படியோ நமக்குள் இருந்துவருகிறது. "ஸ்டீம் ரோலர்" பளுவாயிருக்க வேண்டியது அவசியம். வேறெதுவும் நிறை அதிகமாயிருக்க வேண்டிய காரணமேயில்லை. பளுவுக்கும், பலத்துக்கும் சம்பந்தமே இல்லை. பளுவைக் குறைத்தால்தான் அழகு கொடுக்கும். நான் செய்த வண்டி அதற்குமுன் செய்யப்பட்ட எல்லா வண்டிகளையும் விட இலேசாக யிருந்தது. அதை இன்னமும் இலேசாய்ச் செய்யமட்டும் எனக்குத் தெரிந்திருப்பின் அப்படியே செய்திருப்பேன். பின்னர்தான் இலேசான வண்டி செய்வதற்கு ஏற்ற சாமக்கிரியைகள் கிடைத்தன.

முதல் ஆண்டில் "A" மாடல் வண்டியைச் செய்து முடித்தோம். அதை 850 டாலர் வீதம் விற்றோம். அது எட்டு குதிரை சக்தியுடன் ஓடக்கூடியதா யிருந்தது. முதல் ஆண்டிலேயே 1708 வண்டிகள் செய்துவிற்றோம். அவ்வளவு தூரம் பொதுஜன ஆதரவு எங்களுக்குக் கிடைத்தது. போர்ட் "ஏ" மாடல் வண்டி ஒவ்வொன்றையும் பற்றி தனியாக எழுதலாம். 420-ம் நெம்பர் "ஏ" வண்டி பல கைகள் மாறி கடைசியில் கான்டெல்லோ என்பவர் அதை வாங்கினார். அவர் அதிலிருந்த மோட்டாரை ஜலம் இறைக்க உபயோகித்து வருகிறார். வண்டியின் இதர பாகங்களும் வெவ்வேறான வகையில் பிரயோஜனப்பட்டு வருகின்றன. இதிலிருந்து தெரிய வருகிறது என்னவெனில் ஒரு போர்ட் வண்டியை பற்பல பாகங்களாகப் பிரிக்கலாமே யன்றி, அதைப் பயனற்றதாக அடியோடு அழித்துவிட முடியாது.

முதன் முதல் நாங்கள் பிரசுரித்த விளம்பரத்தில் கூறியதாவது:—

"தினசரி தொழிலுக்கும், குடும்பத்திற்கும் பிரயோஜனப்படத்தகுந்த ஒரு மோட்டாரை செய்து விற்பதே எங்கள் நோக்கம். வீணாய் கண்டிக்கத் தக்கவாறு அதிவேகமாய் ஓடாமல், சாதாரணமாய் அவசியத்துக்கு ஏற்றபடி ஓடத்தகுந்ததாயும் ஆடவர், பெண்டீர், பாலர் யாவரும் கண்டு மெச்சத் தக்க

படி சகல சௌகரியங்களும் அமைக்கப் பெற்றதாயும், மிகக் குறைந்த விலையில் ஒரு வண்டியைச் செய்து சகல ஜனங்களா லும் வாங்கக் கூடியதாய் அது இருக்கவேண்டுமென்பதே எங் கள் இலட்சியம். இதர வண்டிகளின் விலையைக்கண்டு மயங்கு கிறவர்கள் எளிதில் எங்கள் வண்டியை வாங்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம்."

எங்கள் வண்டியில் முக்கியமாய் கவனிக்கப்பட்ட விஷயங்கள் என்னவெனில்:—

(1) முதல்தரமான சாமான்களையே உபயோகித்தோம்.
(2) எளிதில் ஓட்டக்கூடியதாக அமைத்தோம்.
(3) எஞ்சின் மிகச் சிறந்தது.
(4) வேலைப்பாடு மிகவும் திறமை வாய்ந்தது.

இவைபோன்ற இன்னும் பல அம்சங்களும் 'போர்ட்'மோட்டா ரின் மதிப்பை உலகிற்கு விளங்க வைத்தன. மோட்டார், சுகம் அனுபவிப்பதற்காக இருக்கவேண்டுமென்ற யோசனையையே நாங் கள் ஏற்கவில்லை. மிக்க அவசியமான ஒரு சாமானாக அது இருக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். இதையெல்லாம் எங்கள் விளம்பரத்தில் குறிப்பிட்டோம்.

வண்டிக்கு நல்லபேர் சீக்கிரத்தில் கிடைத்துவிட்டது. ஆனால் என்னுடைய சகாக்கள் ஒரேவித மாடல் மட்டும் இருந்தால்போதா தென அபிப்பிராயப்பட்டார்கள். பழைய மாடல்களைக் கழித்து புதியன செய்ய வேண்டுமென்று ஒருவித எண்ணமிருந்துவந்தது. பெண்கள் அடிக்கடி தங்கள் உடைகளை மாற்றுவதைப் போன்றது தான் இந்த எண்ணமும். ஆனால் இது நான் கொண்டுள்ள வியாபார நோக்கத்திற்கு ஒத்ததாகாது. இது பொதுஜன சேவையல்ல புதி தாய் ஒன்று செய்வதால் அது முந்தியதைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டுமென்பதல்ல. ஆனால் என்னுடைய உத்தேசமெல்லாம் பழைய மாடலையே வைத்துக்கொண்டு அதிலேயே அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பது. ஒரு தரம் ஒரு சாமானை வாங்கினால் மறு படியும் அதை இரண்டாந்தரம் வாங்கவேண்டிய அவசியம் எவருக் கும் இருக்கக்கூடாது. நல்ல இயந்திரம் எதுவும் ஒரு நாளும் கெடா மல் நீடித்திருக்கவேண்டும்.

இரண்டாவது ஆண்டில் 'B', 'C', 'F' என்று மூன்று புதிய மாடல்கள் செய்தோம். 'B' 2000 டாலருக்கும், 'C' ஏற்கெனவே விற்ற 'A' மாடலைவிட 50 டாலர் அதிகமாயும்; 'F' 1000 டாலருக்

கும் விற்ருேம். இவ்விதம் எங்கள் சக்தியை யெல்லாம் பலான துறைகளில் செலவிட்டதாலும், விலையை உயர்த்தியதாலும் முதல் ஆண்டைவிட இவ்வாண்டில் குறைவான வண்டிகளே விற்றன 1695 வண்டிகள்தான் இவ் வருஷம் வியாபாரமாயிற்று.

மாடல் 'B' யைப்பற்றி விளம்பரப்படுத்த வேண்டியிருந்தது. அதை ஒரு போட்டிப் பந்தயத்தில் விட்டு ஜெயித்தோம். ஆனால் அதனால் விலை தாரதம்மியத்தில் ஏற்பட்ட போட்டியில் எதிர்த்து நிற்க முடியவில்லை.

இங்ஙனம் எங்கள் தொழில் வளர வளர நாங்கள் அமர்ந்திக் கொண்டிருந்த சிறிய கடை அதற்குப் போதவில்லை. எனவே, மூன்று மெத்தை வைத்த கட்டடம் ஒன்றைக் கட்டினும். பற்பல பாகங்களை நாங்களே செய்துகொண்டோம். 1905 - 1906-ம் ஆண்டில் இரண்டே மாடல்கள்தான் செய்தோம்; எங்கள் வியாபார மும் இறக்கமாயிருந்தது. 1599 வண்டிகள்தான் விற்றன. புதிய மாடல்கள் செய்யாததால் விற்பனை குறைவாகிக்கொண்டு வருவதாக சிலர் சொன்னார்கள். ஆனால் எங்களுடைய வண்டி பெரும்பான்மை யோரின் சக்திக்கு ஏறறவாறில்லாமல் விலை அதிகமாயிருந்ததால் தான் இங்ஙனம் வியாபாரம் மட்டாயிற்றென்று நான் கருதினேன். மறு ஆண்டில் கம்பனியின் நிர்வாகம் முழுதையும் என் கையில் பற் றிக்கொண்டு, வேறு கொள்கையை அனுசரிக்கத் தொடங்கினேன். இதனால் மிகவும் அதிக விலை 750 டாலருக்குமேல் செல்லவில்லை. 600 டாலருக்குக்கூட வண்டிகள் விற்க சாத்தியமாயிற்று. எனவே, 8423 வண்டிகள் இந்த ஆண்டில் மட்டும் விற்ருேம். அதாவது இதற்குமுன் மிக்க அதிகமாய் விற்றதைவிட 5 மடங்கு அதிகமாக விற்பனையாயிற்று. அடுத்த வருஷம் பெரிய வண்டி ஒன்று, 50 குதிரை பலனுடைய தொன்றைச்செய்ய ஏற்பாடுகள்செய்து முடித் தேன். முன்போல சிறிய வண்டிகள் செய்துகொண்டுதா னிருந் தோம். ஆனால் 1907-ம் ஆண்டில் உண்டான ஒருவகை பீதியாலும் விலையுயர்ந்த வண்டிகளை வாங்குவதில் ஜனங்கள் அதிகமா யிறங்கிய தாலும் 6398 வண்டிகள் தான் விற்பனையாயின.

இங்ஙனம் ஐந்தாண்டுகள் மோட்டார் வியாபாரத்தில் பரீட்சை களெல்லாம் செய்துபார்த்தோம். "போர்ட்" வண்டிகள் ஐரோப்பா வில் விற்க ஆரம்பித்தன. வியாபாரமும் வளர்ந்துவந்தது; பணமும் ஏராளமாய் வந்து குவிந்தது. நாங்கள் ரொக்க வியாபாரமே செய் தோம்; கடனே வாங்குகிறதில்லை. நேராக வாங்குபவர்களிடமே சரக்கை விற்ருேம். வராத கடன் என்ற இனமே கிடையாது. வேலையை மட்டும் சரிபாகச் செய்து, சேவையென்ற நோக்கத்துட

னேயே உழைத்தால், தானாக வியாபாரம் பெருகி பொருள் சேரும் என்பதில் சந்தேகமில்லை.

விற்பனைக்கு நல்ல ஆள் பிடிப்பதும் முக்கியம். முதலில் மோட்டார் வியாபாரம் நிலையற்றதா யிருக்குமென்று கருதப்பட்டதால் அதற்குத்தகுந்த ஆள் கிடைப்பதே கஷ்டமாயிருந்தது. கடைசியாக ஏஜண்டுகளை நியமித்தோம். அவர்கள் தாங்களாகவே தொழில் செய்திருந்தால் சம்பாதித் திருக்கக்கூடியதைவிட அதிகமாய் அவர்களுக்குச் சம்பளம் கொடுத்தோம். ஏஜண்டுகளுக்கு அடியிற்கண்ட யோக்கியதாம்சங்கள் இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தோம்:—

(1) தொழிலின் விவரங்களெல்லாம் தெரிந்த முற்போக்கான நோக்கமுள்ளவராக யிருத்தல்வேண்டும்.

(2) பார்ப்பதற்கு லக்ஷணமாயும், கௌரவமாயுமுள்ள இடத்தில் தொழிலை நடத்தவேண்டும்.

(3) அவர் வட்டத்திலுள்ள 'போர்ட்' வண்டி எதற்கும், எந்நேரத்தில் என்னபாகம் தேவையாயிருந்தாலும் கொடுக்கவேண்டிய சாமான்களை எப்பொழுதும் கையில் வைத்திருக்கவேண்டும்.

(4) எத்தகைய ரிப்பேரும் செய்யத்தகுந்த ரிப்பேர் சாமான்களும், கருவிகளும் கையில் இருந்துகொண்டே யிருக்கவேண்டும்.

(5) 'போர்ட்' வண்டியைப்பற்றி எல்லாம் தெரிந்தவர்களாக யிருக்கவேண்டும்.

(6) கணக்கு வழக்குகளை நேர்மையாகவைத்து, எந்த நிமிஷத்திலும் வியாபாரத்தின் நிலைமை எங்ஙன மிருக்கின்றது என்பதைத் தெரிவிக்கக் கூடியவராக யிருத்தல்வேண்டும்.

(7) எங்கு பார்த்தாலும் சுத்தமாயிருக்கவேண்டும். ஜன்னல்கள் ஒட்டடைபடிந்தும், தளவாடம் புழுதிபடிந்தும், மேஜை நாற்காலிகள் அழுக்கடைந்தும் இல்லாமல் சுத்தமாக வைக்கப்பட வேண்டும்.

(8) நல்ல போர்டுப்பலகை ஒன்றிருக்கவேண்டும்.

(9) தொழில் முறைமையில் நாணயமாயும், யோக்கியப் பொறுப்புடனும் நடந்துகொள்ள வேண்டும்.

கீழ்க்கண்டபடி அனுசரிக்க வேண்டுமென்று எல்லா வியாபாரிகளுக்கும் அறிவித்திருந்தோம்:—

ஒவ்வொரு 'போர்ட்' ஏஜண்டும் தன் தன் வட்டத்தில் மோட்டார் வாங்கக்கூடியவர்கள் எல்லோருடைய பெயரையும் குறிப்பிட்டு ஒரு ஜாபிதா தயார்செய்து வைத்துக் கொள்ளவேண்டும். இவர்களைக் கூடுமானால் நேரில் போய்ப்பார்த்து அவரவர்கள் தேவைகளை உணர்ந்து குறித்து வைத்துக்கொள்ளவேண்டும். நேரில் போக முடியாமற்போனால் கடிதமூலமாயாவது எழுதித் தெரிந்துகொள்ள வேண்டும். இதைச்செய்ய சாத்தியப்படாவிடில் அவர் தன்னுடைய வட்டம் தன்னால் சமாளிக்கக் கூடியதைவிட பெரிதாக யிருப்பதாக உணர்ந்து சிறிய வட்டத்தில்போய் வேலைசெய்யவேண்டும்.

ஆனால் எங்கள் வேலை எளிதாயில்லை. ஒரு பெரிய வழக்கு எங்கள்மீது தொடரப்பட்டது. எங்களை மோட்டார் தொழிலிலிருந்து வெருட்டி யடிக்கவே அவ்வழக்கைக் கொண்டுவந்தார்கள். கடைசியில் 1909-ம் ஆண்டு செப்டம்பர் 15-ந் தேதி ஜட்ஜ் எங்களுக்கு விரோதமாய்த் தீர்ப்புச்செய்தார். உடனே நாங்கள் செய்யும் மோட்டார்களை வாங்காம லிருக்கும்படி எங்கள் எதிரிகள் எல்லோருக்கும் எச்சரிக்கை செய்தார்கள். வழக்கு ஆரம்பித்தபொழுதும் 1903-ம் ஆண்டிலுங்கூட இங்ஙனமே அவர்கள் செய்தார்கள். எங்களை எளிதில் தொழிலிலிருந்து வெருட்டி விடலாமென்பதே அவர்கள் எண்ணம். எப்படியும் கடைசியில் ஜயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை மட்டும் எனக்கு எப்பொழுதும் உண்டு. எனினும், முதன் முதலில் தீர்ப்பு எங்களுக்கு விரோதமாய்ப்போகவே கொஞ்சம் சஞ்சலமடைந்தோம். எங்களிடம் வாங்க விரும்புகிறவர்கள் பீதியடைந்து விடக்கூடும். தவிர, கடைசியில்கூட வழக்கு எனக்கு விரோதமானால் 'போர்ட்'வண்டி வைத்துக்கொண்டிருப்பவர்கள் ஒவ்வொருவரையும் தொந்திரவு செய்வதுடன்,அவர்கள்மீதும் நடவடிக்கை தொடரப்படுமென்று ஒரு வதந்தியைப் பரப்பிவிட்டார்கள். 'போர்ட்' வண்டி வாங்கினால் ஜெயிலுக்கு நேராக டிக்கட்டு வாங்கினாற்போல் என்றுஞ் சிலர் சொல்லிவந்தார்கள். இவ்விதம் எங்களுக்கு விரோதமாய் செய்யப்பட்ட பிரசாரத்துக்கு, நாங்கள் பிரபல பத்திரிகைகளில் 4 பக்கம் விளம்பரஞ்செய்து பதில் எழுதினோம். எங்கள் கட்சியை யெடுத்துக்கூறி கட்டாயம் எங்களுக்கு ஜயமுண்டாகும் என்று வற்புறுத்தினோம். முடிவுரையாக அதில் நாங்கள் கூறியதாவது:—"இந்த போர்ட் மோட்டார் தொழிலை அழிக்கும் எண்ணத்துடன் இவ் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. ஆனால் போர்ட் மோட்டார் வாங்குகிறவர்கள் எவருக்கேனும் இவ் வழக்கினால் அச்சம் ஏற்பட்டிருப்பின் போர்ட் கம்பெனியாரின் 120

லக்ஷம் டாலர் சொத்தும் அழியும்வரையில் அவர்களுக்கு நாங்கள் துணை நிற்போம் என்று உறுதிமொழிப் பத்திரம் எழுதித்தரச் சித்தமா யிருக்கிறோம். கேட்டமாத்திரத்தில் அத்தகைய பத்திரம் கொடுக்கிறோம். பெரிய பெரிய வக்கீல்களையெல்லாம் கேட்டுத்தான் நாங்கள் இந்த யுத்தத்தை நடத்திவருகிறோம்."

இதன்பயனாக 18 ஆயிரம் வண்டிகள் விற்றோம். ஆனால் மேல் குறிப்பிட்ட உறுதிமொழியை 50 பேருக்குமேல் நாடவில்லை.

உண்மையில் இந்த வழக்கின் மூலம் போர்ட் கம்பெனிக்கும், வண்டிக்கும் அதிக விளம்பரமேற்பட்டது. 1908-ம் ஆண்டுக்குள் இந்த வழக்கினால்கூட ஒருவிதத்திலும் பாதிக்கப்படாமல் நான் விரும்பிய வண்டியைச் செய்து முடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு தயாராகிவிட்டன.

## அத்தியாயம் 5.

# வர்த்தகத் தொழிலின் அந்தரங்கம்.

கடனில்லா வர்த்தகம்—அதனால் விளையும் நன்மைகள்—மலிவான மோட்டார் செய்த விதம்—அதற்குக் கையாண்ட முறைகள்—அதன் இலட்சணங்கள்—லண்டன் பத்திரிகைகளும், போர்ட் மோட்டாரும்—பொது ஜன மனோபாவம்—அதற்கு மதிப்பு வைக்கலாமா?—வேலை இலகுவாக்கும் முறை—"நிபுணர்"கள் தொல்லை—இயந்திர வேலையும் கைவேலையும்—சில வியாபார முறைகள்—மலைமீது ஏறிய போர்ட் மோட்டார்—இங்கிலாந்தில் போர்ட் தொழிற்சாலை ஸ்தாபனம்.

போர்ட் மோட்டார் கம்பெனியின் வளர்ச்சியை, எத்தகைய சொந்தப் பெருமையையும் உத்தேசித்து நான் எழுத வரவில்லை. நான் செய்த பிரகாரம் மற்றவர்களையும் செய்யும்படி சொல்லவும் நான் வரவில்லை. மொத்தத்தில் நான் வற்புறுத்த விரும்புவது என்னவெனில், தற்போது நடைமுறையில் வர்த்தகம் நடத்திவரும் முறை சரியானதல்ல. நான் சாதாரணமாய் தொழில் நடத்தப் படும் முறைகளிலிருந்து முற்றும் மாறுபட்டு அனுசரித்த முறைகளை இங்கு இப்பொழுது குறிப்பிடப்போகிறேன். இதிலிருந்து தான் என்னுடைய வர்த்தகம் அபிவிருத்தி ஏராளமாய் அடைந்தது.

எங்கள் வியாபாரத்தைச் செவ்வையாகவே நடத்தி வந்தோம். மற்ற மோட்டார்களைவிட எங்களுடைய வண்டி எளிதாகக் கட்டப் பட்டிருந்தது. வெளியிலிருந்து ஒருவரும் எங்கள் வியாபாரத்தில் பணம்போட்டு உதவவில்லை. இவ்விரண்டு அம்சங்களைத் தவிர இதர விஷயங்களில் எங்கள் கம்பெனி மற்ற மோட்டார் கம்பெனிகளைப்போலவே யிருந்தது. எனினும் மற்ற கம்பெனிகளைவிட சுபீக்ஷமாய் நடைபெற்றது; ரொக்கக் கமிஷனையெல்லாம் அப்போதைக் கப்போது எடுத்துக்கொண்டு, அது சேர்ந்தபின் லாபத்தையெல்லாம திருப்பவும் தொழிலிலேயே போட்டு அபிவிருத்தி செய்ததோடு, எப்பொழுதும் ரொக்கமாக மட்டும் கையிருப்பில் அதிகமாய்ப் பணம் வைத்துக்கொண்டிருந்தோம். எல்லாப் போட்டிப் பந்தயங்களுக்கும் எங்கள் மோட்டார்களையும் அனுப்பினோம்; விளம்பரங்கள் செய்தோம். வியாபாரத்தை அதிகரித்தோம்.

சாதாரணமாக வெகு எளிதாக எங்கள் வண்டியை அமைத்ததோடு, சுகம் அனுபவிக்கும் ஒரே நோக்கத்துடன் செய்யப்படும் வசதிக ளெல்லாம் அதில் இல்லை. மற்ற வண்டிகளைப்போல் அதில் சௌ கரியங்கள் செய்யப்பட்டனவே யன்றி ஆடம்பரத்திற்காக, சுகம் அனுபவிப்பதற்காகத் தனியாக ஒருவித ஏற்பாடும் நாங்கள் செய்ய வில்லை. எவருக்காவது தேவையானல் அவர்கள் குறிப்பிடும் சௌகரியங்களைச் செய்து கொடுப்போம். ஸ்பெஷலாக ஆர்டர் கொடுத்தால் அதற்கேற்றபடியும் செய்து தருவோம். நாங்கள் வியாபாரத்தில் வளர்ச்சி யடைந்து சௌகரியமான தசை யடைந் திருந்தோம். நல்ல ஸ்திதிக்கு வந்தாய்விட்டது. இனிமேல் சௌ கரியமாய் இப்படியே யிருந்து காலந்தள்ளலா மென்று நாங்கள் இருந்திருக்கலாம்.

இந்த மாதிரி இருந்துவிடவும் முதலில் கொஞ்சம் மனம் சஞ் சலப்பட்டது. சில பங்காளர்கள் தினசரி நூறு வண்டிகள் செய் வதைக் கண்டு அஞ்சினார்கள். கம்பெனி தொலைந்து நாசமாய்ப் போய்விடுமென பயந்து இதை நிறுத்தவேண்டு மென்றார்கள். ஒரு நாளைக்கு நூறு வண்டிகள் செய்வது மிக சாதாரணம்; மிகவும் குறைவு என்றும், சீக்கிரத்தில் ஆயிரம் வண்டிகளாவது செய்ய வேண்டுமென்றும் நான் அபிப்பிராயப்பட்டபோது அவர்கள் நடு நடுங்கிப்போய் விட்டார்கள். சிலர் கோர்ட்டில் நடவடிக்கை தொட ரவும் உத்தேசித்தார்கள் என்று கேள்விப்பட்டேன். அவர்கள் அபிப்பிராயப்படி மட்டும் நான் நடந்திருந்தால், எங்கள் தொழில் இதே நிலையில் இருந்திருப்பதோடு, பணத்தையெல்லாம் நன்றாய் சேர்த்துவைத்து இதர கம்பெனிகளுடன் போட்டி போட்டு, புதிய புதிய மோட்டார் தினுசுகள் செய்து இம்மாதிரி வேலைகளில் ஈடு பட்டு நல்ல பெயர் எடுத்திருக்கலாம். நல்ல ஸ்திதியை அடைந்த பின் அந்நிலையிலேயே யிருந்துகொண்டு சுகமாய்க் காலந்தள்ள எவ ருக்கும் ஆசையாய்த்தானிருக்கும். ஊக்கமாய் வேலை செய்யும் துறையிலிருந்து நீங்கி சுக ஜீவனம் பண்ணுவதற்கு எவர்களுக்கும் விருப்பமாயிருப்பது சகஜம். எனக்கு அத்தகைய எண்ணங்கள் உதிக்காவிடினும், அவ்வாறு பிறருக்குத் தோன்றக்கூடும் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். ஆகிலும் இம்மாதிரி சுகமாய்க் காலங் கழிக்க விரும்புகிறவர்கள் முற்றும் தொழிலிலிருந்து நீங்கிவிட வேண்டும். விலகியுமிருக்க வேண்டும், ஆனல் வியாபாரத்தையும் நிர்வகிக்க வேண்டும் என்று பலருக்கு ஆசையாயிருக்கிறது. ஆனல் எனக்கு இங்ஙனம் ஒன்றும் செய்வதாகவே எண்ணமில்லை. இன்னும் மேன்மேலும் விருத்தி செய்ய வேண்டுமென்றே நான் கருதினேன். உண்மையான சேவை செய்ய இதுதான் நல்ல சமய மென்று நான் அபிப்பிராயப்பட்டேன், எல்லோருக்கும் சௌக

யயாய் வாங்கக்கூடியதாக இருக்கக்கூடிய ஒரு மோட்டாரைச் செய்து முடிக்க வேண்டுமென்பதே என் இலட்சியம். என்னுடைய வண்டியின் போக்கிலிருந்து ஏற்பட்ட அனுபவத்தினால், 1905-ம் ஆண்டுக்குள் அவ்வண்டி எத்தகையதாக விருக்கவேண்டு மென்பதை ஒருவாறு என் மனதிற்குள் திட்டஞ்செய்து கொண்டேன். அதிக கனமில்லாமல் வலிமையைத் தரக்கூடிய சாமான் மட்டும் கிடைக்கவில்லை. தற்செயலாக அதை நான் கண்டுபிடித்தேன்.

1905-ம் ஆண்டில் ஒரு மோட்டார் பந்தயத்திற்குச் சென்றிருந்தேன். அதில் ஒரு பெரிய விபத்துநேர்ந்து, மோட்டார்கள் மோதிக்கொண்டு, ஒரு பிரெஞ்சு மோட்டார் சேதமாய்ப் போய் விட்டது. அதன்பின் ஒரு சிறிய துண்டை நான் பொறுக்கியெடுத்தேன். அது மிக்க இலேசாய் இருந்ததுடன் நல்ல வலுவாகவு மிருந்தது என்னைச் சுற்றிலுமிருந்தவர்களை அது எதனால் செய்யப்பட்டிருக்கிறது என்று வினவினேன். ஒருவருக்கும் தெரிய வில்லை. அதை என்னிடம் எனக்கு உதவியாய் வேலை செய்தவரிடம் கொடுத்து "இதுவென்னவென்று தீர ஆராய்ந்துக் கண்டறியுங்கள்; அதுதான் நமக்கு மிகவும் தேவையான சாமான்" என்று சொன்னேன்.

அது ஒருவகை எஃகு என்று கண்டுபிடித்தோம். அமெரிக்காவில ஒருவராலும் அத்தகைய சாமான் செய்ய முடியவில்லை. அதைச் செய்யக்கூடிய ஒருவரை இங்கிலாந்திலிருந்து தருவித்தோம். பிறகு அதைச் செய்யக்கூடிய இயந்திரங்களைச் சேகரிக்க வேண்டியிருந்தது. இந்த எஃகை உருக்க 3000 டிகிரி உஷ்ணம் தேவையாயிருந்தது. சாதாரணமான ஆலையில் 2700 டிகிரிக்குமேல் சூடு உண்டாகிறதில்லை. ஓகியோவிலுள்ள ஒரு கம்பெனியிடம் இந்த சூட்டை வளர்த்து எனக்குத் தேவையான எஃகைச்செய்ய முடியுமா என்று கேட்டேன். அதனால் நஷ்டம் ஏற்பட்டால் அதை நான் பொறுத்துக் கொள்ளுவதாயும் சொன்னேன். அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். முதல் தரம் சரியாய் வரவில்லை. இரண்டாம் தரம் நான் விரும்பியபடி கிடைத்தது. சாதாரண எஃகைவிட இது $2\frac{1}{2}$ மடங்கு பலமுள்ளதா யிருந்தது. இங்ஙனம் "வனேடியம்" என்று சொல்லப்படும் இப்புதிய எஃகை செய்து கொண்டபின், எங்கள் மோட்டார் மாடல்களைப பிரித்துப் பார்த்து எத்தகைய எஃகு எந்த பாகத்திற்கு மிகவும் சிலாக்கியமானதென்பதை பரீட்சார்த்தமாய் சோதித்துப் பார்த்தோம். மிகவும் கடினமா யிருக்கவேண்டுமோ, முறப்பாயிருக்கவேண்டுமோ, மிருதுவாய் வளைந்து கொடுக்கவேண்டியதா யிருக்கவேண்டுமோ என்றெல்லாம் பார்த்தோம். சாஸ்திரஞான அறிவைப் பிரயோகித்து

எத்தகைய எஃகு, எதற்குப் பிரயோஜனப்படும் என்று முதன் முதல் சோதித்துப்பார்த்த பெரிய வர்த்தக நிலையம் எங்கள் கம் பெனிதான் என்று நினைக்கிறேன். இவ்வாறு செய்ததின் பலனாக 20 தினுசு தராதரமுள்ள எஃகு 'போர்ட்' மோட்டார் வேலைக்குத் தேவையென்பதை கண்டுகொண்டோம். இதில் 10 தினுசு மேற் கூறிய புதிய வர்க்கமாகிய "வனேடியம்." இலேசாகவும், வலிமை யாகவும் இருக்கவேண்டிய பாகங்களுக்கு இதை உபயோகித்தோம். அந்தந்த இடத்திற்குத் தக்கபடி வில்போல் வளைந்து கொடுக்க வேண்டியதற்கு ஒரு தரமுள்ளதாயும், கெட்டியாகத் தேயாம லிருக்க வேண்டியதற்கு மற்றொரு தரமுள்ளதாயும் இந்த வனேடி யத்தில் பொறுக்கி உபயோகித்தோம். இதற்கு முன்னதாக மோட்டார் வண்டி வேலையிலேயே நான்கு தினுசு எஃகுக்கு மேலாக உபயோகிக்கப்பட்டதாக எனக்கு ஞாபகமில்லை. இன்னும் இம்மாதிரி பரீட்சைகள் செய்ததின் பலனாக எஃகின் வலிமையை அதிகரிகக முடிந்ததுடன் மோட்டாரின் கனத்தையும் குறைக்க சாத்தியப்பட்டது. 1910-ம் ஆண்டில் பிரெஞ்சு சர்க்காரின் வர்த் தக கைத்தொழில் இலாகாதார் எங்கள் மோட்டாரிலிருந்து மிகவும் நுட்பமான பாகமொன்றைப் பொறுக்கியெடுத்து, அத்துடன் தங் கள் நாட்டில் செய்யப்படும மிகத் திறமையான மோட்டாரின் அதே பாகத்தை ஒப்பிட்டு சோதனை செய்துபார்த்தார்கள். எல்லா வகை யிலும் எங்கள் மோட்டாரில் உபயோகித்த எஃகு அதிக வலிமை கொண்டதென ருஜுவாயிற்று.

இங்ஙனம் வனேடியம் எஃகை உபயோகித்தமையால் வண்டி யின் கனம் குறைய ஏற்பாடாயிற்று. எல்லோருடைய சக்திக்கும் எட்டக்கூடிய மோட்டாரின் இதர இலக்ஷணங்களும் இன்னவை யென்று நான் ஏற்கெனவே நிர்ணயஞ் செய்ததுடன், அவற்றில் பலவற்றைக் கையாண்டும் வந்தேன். ஆயினும் ஒன்றுகொன்று பொருத்தி எல்லாம சேர்ந்து வலிமையுள்ளதாக யிருக்குமாறு செய் தல் அவசியமாயிருந்தது. மனிதர்களுக்குள் மற்றெல்லா அவயவங் களும் நன்றாயிருந்து, ஒரு அவயவம் மட்டும் சரியானபடி அதன் வேலையைச் செய்யாதிருப்பின் அவர்கள் மாண்டுபோகிறார்கள். அதேமாதிரி, இயந்திரங்களில் சில பாகங்கள் மற்றவற்றைவிட பலஹீனமாயிருப்பின் அவை நொறுங்கிப்போகும் எனவே, ஒன் றுடனொன்று பொருந்துமாறு செய்தல் பெரிய வேலையாயிற்று. அத்துடன் எவரும், முட்டாள்களும்கூட, கையாடினால் கெடாமல் படி மோட்டாரை அமைக்கவேண்டும். எனவே "போர்ட் மோட் டார்களில் ஏதேனும் பிழை ஏற்பட்டுவிடில் அதற்கு நானே ஜவாப் தாரி" என்ற கொள்கையை அனுசரித்து எவரும் ஓட்டக்கூடிய வாறு வண்டி யிருக்கவேண்டும் என்று நான் சிரமப்பட்டேன்.

முதன் முதல் மோட்டார் வண்டி ஏற்பட்டு தெருக்களில் ஓட ஆரம்பித்தது முதல், அது வாழ்க்கைக்கு இன்றியமையாத ஓர் சாதனமென்று நான் கருதினேன். இந்த உத்தேசத்தினால்தான் இந்த உறுதி எனக்கு பலப்பட்டதனால்தான் ஒரே இலட்சியத்துடன், அதாவது பொதுஜனங்களின் தேவைக்கும், சக்திக்கும் பொருந்தியதாயுள்ள ஒரு போட்டாரைச்செய்து முடிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன், நான் வேலைசெய்தேன். இந்த ஒரேவிதமான வண்டி செய்யும் உத்தேசத்துடனேயே நான் எனதுழைப்பையும் ஆரம்பமுதல் நாளது வரையில் உழைத்துவருகிறேன். வருஷா வருஷம், வண்டியை மேன்மேலும் சேர்மையாக அபிவிருத்தி செய்ததுடன், விலையையும் குறைத்துக்கொண்டே வருகிறேன். பொது ஜனங்களின் கைக்குக் கிடைக்கக்கூடிய வண்டியின் இலட்சணங்கள் என்னவெனில்:—

(1) அதிக நாள் நிற்கும்படியாக நல்ல சாமான்களைக்கொண்டு செய்ததாயிருத்தல் வேண்டும். இதற்கு வனேடியம் என்ற எஃகு தான் மிகவும் சிலாக்கியமானது. மிகவும் வலிமையுள்ளதாயும், முறப்பாயும், நாள்பட்டு நிற்கக்கூடியதாயும் அது இருக்கிறது. மோட்டார்களின அடிபாகத்திற்கும், மேற்பாகத்திற்கும் அதை உபயோகிக்கிறோம். அதுதான் எல்லாவித எஃகையும்விட உயர்ந்தது. விலையை மட்டும் லட்சியஞ் செய்யக்கூடாது.

(2) இரண்டாவதாக ஒரு மோட்டாரை ஓட்டுவது வெகு எளிதாக இருக்கவேண்டும்; அதிக சிக்கல்களில்லாமல் சுலபமாயிருத்தல் அவசியம். ஏனெனில் பொதுஜனங்கள் இயந்திரவேலைகளில் தேர்ச்சிபெற்ற நிபுணர்களல்லர்.

(3) கூடியவரையில் அதிக சக்தியுடன் ஓடத்தகுந்ததாய் இருக்கவும் வேண்டும்.

(4) பலான வேலைகளுக்கு உபயோகிக்கப்படக் கூடுமாதலாலும், அனேகவித சாலைகளில் ஓடவேண்டி இருக்கக் கூடுமாதலாலும், எந்த சமயத்திலும் வேண்டுமானாலும் அதை நம்பி ஏறிச்செல்லத் தகுந்ததாயிருப்பது முக்கியம். திடமாக நம்பி நடுவில் மோசஞ் செய்துவிடாத வண்டியாக இருக்கவேண்டும்.

(5) மிகவும் இலேசாக யிருப்பது ஒரு விசேஷ இலட்சணம். 'போர்ட்' காரின் பிரதம அம்சங்களில் இதுவே முதன்மையானது. அதனால்தான் எங்கேயானாலும், எத்தகைய ரோட்டிலும், மணலிலோ சேற்றிலோ, கல்லிலோ முள்ளிலோ, மேட்டிலோ பள்ளத்

திலோ, ஜலத்திலோ வெறுங் கட்டாந்தரையிலோ, குன்றிலோ குகையிலோ, வயலிலோ வரப்பிலோ எங்கு வேண்டுமானாலும் 'போர்ட்' மோட்டாரைவிட்டு அடிக்கலாம்.

(6) நல்ல கட்டுக்கு அடங்கியதாக இருப்பதும் மிக்க இன்றியமையாதது. திடீரென வேகத்தைக் குறைக்கவும், நிதானத்துடன் சில அவசரங்களில், கூட்டம் நெருங்கிய தெருக்கள் வழியாகச் செல்லும்போதும், அபாயகரமான ரோட்டுகள் வழியாகப் போகும்போதும் உடனே வேகத்தைக் குறைத்து வண்டியை ஜாக்கிரதையாய் விடத்தகுந்த வசதிகளிருக்கவேண்டும். 'போர்ட்' மோட்டாரில் இவ்வளவுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அதனால்தான் "யாரும் 'போர்ட்' வண்டியை ஓட்டலாம்" என்ற சொல் வழங்குகிறது. எங்கேயானாலும் திடீரெனத் திருப்பவும், பின்னால் தள்ளவும் சௌகரியங்கள் அதிலிருக்கின்றன.

(7) மோட்டாரின் நிறை அதிகமானால் அதற்கு எண்ணெய்ச் செலவும் ஏராளமாகிறது; இலேசானால் செலவு குறைவு. முதன் முதலில் 'போர்ட்' மோட்டார் இலேசாக யிருப்பதாக பழித்தார்கள். இப்பொழுது உண்மையறிந்து அதன் விசேஷத்தை எல்லோரும் உணர்ந்து வருகிறார்கள்.

நான் முடிவுசெய்து ஏற்பாடு பண்ணின வண்டிக்கு "T" மாடல் என்று பெயர் வழங்கிற்று. கடைசியாக செய்து பிரபலமாய் வழங்கி, என் மனதிற்கு இசைந்தவாறு இருந்த மாடல் இதுவேயாகையால் இதைப்பற்றி சற்று விரிவாகக் கூறலாம். அதன் விசேஷமெல்லாம் மிக்க எளிதாக, சுலபமாய் அதை கட்டலாமென்பதுதான். அதன் பாகங்கள் நான்குக்குமேல் கிடையாது: ஓட்டும் விசை, வண்டியின் அடிபாகம், முன் அச்சு, பின் அச்சு. இவையெல்லாம் செய்வதற்கு அதிக சாமான் தேவையில்லை. மேலும், அவை எளிதில் கிடைக்கும். சுலபமாயும் செய்யலாம். எனவே, அதில் எதையேனும் பழுதுபார்த்து ரிப்பேர் செய்யவேண்டியிருந்தாலும், அடியோடு எடுத்துவிட்டு வேறு ஒன்றுபோட வேண்டியிருந்தாலும் ஒரு கஷ்டமுமில்லாமல் சீக்கிரத்தில் மாட்டிவிடலாம். இவ்வாறு எளிதாகவும், மலிவாகவும் வண்டிக்கு வேண்டிய எல்லா பாகங்களையும் செய்துகொள்ள முடியும் என்ற திட நம்பிக்கை எனக்கு எப்பொழுதும் உண்டு. இதனால் கையினால் செய்து ஏராளமாய்க் கூலிகொடுக்கும் தொல்லை இல்லாமல் போய்விடும். எல்லாவற்றையும் இயந்திரத்திலேயே ஆயிரக்கணக்காய் செய்வதால், மலிவாக முடிகிறது. சாதாரணமாய் ஒரு அச்சு முறிந்து, அதைக் கொல்லன் பட்டறைக்குக் கொண்டுபோய ரிப்பேர் செய்வதற்குப்

பதிலாக, புதிதாக ஒரு அச்சையே மாட்டிவிடுவது சுலபம், மலிவு என்று நான் நிரூபித்தேன். இரும்புக் கடைகளில் ஆணியும், கீலும், தாழ்ப்பாளும் விற்பதுபோல் மோட்டார் சாமான்களும் விற்கும் படியாகச் செய்யவேண்டும். இங்ஙனம் வண்டியை வெகு எளிதாக அமைத்ததின் கருத்து எவரும் வண்டியின் சகல பாகங்களையும் அறிந்து, ஒரு கஷ்டமுமில்லாமல் ஓட்டும்படியாக அது இருக்க வேண்டுமென்பதே. ஒரு சாமான் சுலபமாகச் செய்யக்கூடியதா யிருந்தால், அது மலிவாகவு மிருக்கும்; எனவே அதிக சாமான் களும் விலையாகும். அதனால் அதினின்றும் கிடைக் கும் பலாபலன்களை அனுபவிக்கலாம். இந்த "T" மாடல் முடிவாக செய்து விலைக்கு வருமுன் எட்டு மாடல்கள் நான் செய்திருந்தேன். அவைகளில் எதிலேனும் ஒன்றிலாவது இல்லாத புதிய அம்சம் ஒன்றும் இதில் அமைத்துவிடவில்லை. 1908-1909-ல் அதை விற் பனைக்குத் தயாராக்கி அனுப்பினேன்.

கம்பெனி ஏற்பட்டு இப்பொழுது ஐந்து வருஷம் ஆய்விட்டது. முதன் முதல் $\frac{1}{4}$ ஏகரா நிலத்தை வாங்கி ஒரு தொழிற்சாலையை அமைத்தோம். முதல் வருஷத்தில் மட்டும் 1708 வண்டிகள் ஆங்கு கட்டப்பட்டன. 311 ஆட்கள் வேலை செய்தனர். ஒரு கிளை ஸ்தாபனமும் ஏற்பட்டிருந்தது. 1908-ம் ஆண்டிலோ, 5 வரு ஷங்களுக்குள்ளாக $2\frac{5}{8}$ ஏகராவுக்குமேல் நிலம் வாங்கிவிட்டதோடு சொந்தத்தில் ஒரு கட்டடமும் கட்டியாய்விட்டது. தொழிலாளர் களிலும் 1908 பேர் வேலைசெய்து கொண்டிருந்தனர். 6181 மோட்டார் வண்டிகள் செய்து விற்பனையாயின; 14 இடங்களில் வியாபார ஸ்தலங்கள் ஸ்தாபித்தோம். வியாபாரம் நல்ல விருத்தி யடைந்து சுபிக்ஷமாக விருந்தது.

முந்திய வண்டிகள் எல்லாவற்றையும் விட "T" மாடல் வெகு அதிகமாய்ச் செலவாயிற்று. சாதாரண விலை 850 டாலர் தான், அதாவது சுமார் 2500 ரூபாய். பத்தாயிரம் வண்டிகளுக்கு மேல் (10607) வியாபாரமாயிற்று. இதுதான் சமயமென்று என்னுடைய கொள்கையை அமுலுக்குக் கொண்டுவர நான் உத்தேசித்தேன். அதாவது ஒரே ஒரு வகையான மாடல்தான் விற்கவேண்டு மென் பதும், அதை வெகு எளிதாயும், மலிவாகவும் செய்து எல்லோரும் வாங்க சௌகரியமாகச் செய்ய வேண்டுமென்பதே. ஒரு சாமான் வெகுவாக விலைபோகி, எல்லோருக்கும் திருப்தியளிக்கத் தக்கவா றிருக்கையிலேயே அதையும்விட வேறு மாதிரி கொஞ்சம் மாற்றி யமைத்தால் இன்னும் நன்றாயிருக்கும் என்ற ஒருவித தப்பெண் ணத்தை யாராவது ஒருவர் கிளப்பிவிட்டு விடுகிறார்கள். உடனே கடையில் வியாபாரத்துக்கு வைத்திருக்கும் ஆள் அதைக் கேட்டுக்

கொண்டு அங்ஙனம் மாற்ற வேண்டுமென்று சரக்குச் செய்து அனுப்புகிறவர்களைக் கேட்கிறார். ஆனால் நான் ஏற்கெனவே கூறியபடி 100-ல் 5 பேர்தான் ஒவ்வொரு சாமானை அது இப்படியிருக்கிறது; இது அப்படியிருக்கிறது என்று புகார் சொல்லிக் கொண்டு வெவ்வேறு மாதிரிகளை நாடுகிறார்கள். மற்ற 95 பேருக்கு அங்ஙனம் சில்லரை மாறுதல்கள் கண்டுபிடித்துச் சொல்லவே ஞானம் போதாது. தேவைக்குத் தக்கவாறு பயனளிக்கத் தக்கதாக இருப்பின் அவர்கள் திருப்தியடைகிறார்கள். எந்த வர்த்தகமும் வாங்குபவர்களின் புகார்களையும், யோசனைகளையும் அலட்சியஞ் செய்துவிட முடியாது. அங்ஙனம் அலட்சியம் செய்யும் எந்த வார்த்தகமும் முன்னுக்கு வாராது. ஆயினும் சரியானபடி வேலைக்கு உதவாமல் ஏதேனும் பிழை ஏற்பட்டிருக்கிறதா, அல்லது நூதனமான மாதிரிகளைக் கோரி ஒரு சிலர் மட்டும் தங்கள் புத்திக்குத் தோன்றியவாறு யோசனைகள் சொல்லுகிறார்களா என்று கவனிப்பது அவசியமாகும். வியாபாரிகளும் இங்ஙனம் நூதன மாதிரிகள் விரும்புகிறவர்களின் மனோ இச்சையைத் திருப்தி செய்துவைக்க முயலுகிறார்களே யன்றி உண்மையில் தேவையான மாறுதலைத் தான் அவர்கள் கோருகிறார்களா என்று விசாரிக்கிறதில்லை. சரியான வியாபாரியானவன், புகார் ஒருவர் சொன்னால், தன் சரக்குடைய தரம் எத்தகையது என்பதை உணர்ந்து, புகார் எழுவது அவசியமான பழுதினாலேதானா, அல்லது எதேச்சையாய் அவரவர்கள் தோன்றியபடி கூறுவதா என்று அறிந்து, தக்கபடி பதிலுரைத்து வாங்குபவர்களைத் திருப்தி செய்யக்கூடியவனா யிருக்க வேண்டும்.

எனவே, திடீரென ஒரு நாள் 1909-ம் ஆண்டில், முன்பின் ஒருவருக்கும் சொல்லாமல், இனிமேல் "T" மாடல் மோட்டார் ஒன்றையே செய்யப்போகிறதாக நான் விளம்பரப் படுத்தினேன். இதை எவரேனும் ஏற்றுக்கொண்டார்களா அல்லவா என்று என்னால் கூறமுடியாது. வியாபாரிகள் ஒரே ஒரு வகை சரக்கை விற்பதால் பலனுண்டாகுமென்று கருதவில்லை. அத்துடன் 'போர்ட்' மோட்டார் கூடியவரையில் நல்ல வியாபாரமாகிக் கொண்டுவந்ததால், அதன் விலையைக் குறைத்து மலிவாக விற்கவேண்டிய அவசியமுமில்லை என்று அவர்கள் சொன்னார்கள். லாபத்தையே பிரதானமாகக் கொண்டு வியாபாரஞ் செய்கிறதென்றால் அது சரியான யோசனைதான். நானோ பெரும்பான்மையானவர்களுக்கு சௌகரியஞ் செய்து கொடுத்து ஊழியம் புரிவதே வர்த்தகத்தின் லக்ஷியமாயிருக்க வேண்டுமென்ற கொள்கை கொண்டவன். அந்தக் காலத்தில் மோட்டார் வர்த்தகத்தின் தன்மையைப்பற்றி சரியான அபிப்பிராய மொருவருக்கும் உண்டாகவில்லை. மோட்டார் வண்டி

என்றால் பெரிய மனிதர்களெனும் பணம் படைத்தவர்கள்தான் ஏறிச்செல்லத் தகுந்ததென்று ஒரு தப்பெண்ணம் உலவியது. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களும் இவ்வெண்ணத்தைப் பரப்பி வந்தார்கள். சில தந்திரக்காரர்கள் "சுகபோகங்கள்" தரத் தக்க வண்டியெனத் தனியாக ஒரு வகை வண்டியைச் செய்தார்கள். அவர்கள் விளம்பரமூலம் இந்த வண்டியின் சௌகரியங்களைப் பகிரங்கப் படுத்தினார்கள். இதன்பின் நான் பின்வருமாறு ஒரு விளம்பரத்தை வெளியிட்டபோது வியாபாரிகளும் என்மீது சீறிவிழுந்தார்கள். என் விளம்பரம் என்னவென்றால்:—

"பொது ஜனங்கள் பிரயோஜனத்துக்காக நான் மோட்டார் வண்டி கட்டப்போகிறேன். சாதாரணமாய் ஒரு குடும்பத்திற்குப் போதுமானதாயும், ஒருவர் அதை ஓட்டி கவனிக்கக் கூடியதாயும் அது இருக்கும். மிகவும் திறமையான வேலைக்காரர்களைக் கொண்டு, உயர்ந்த சரக்குகளைக்கொண்டு மிகவும் சுலுவான மாதிரியில் தேர்ந்த இஞ்சினியர்களுடைய முறையை அனுசரித்து அதைக் கட்டப்போகிறேன். ஆனால் வெகு மலிவாக விற்கப்போகிறேன். சாதாரணமாய் நல்ல சம்பளம் வாங்கும் எவரும் ஒரு மோட்டார் வாங்குவது தன் சக்திக்கு மிஞ்சியது என்று எண்ணாதபடி அவ்வளவு மலிவாக விற்கப்படும். தானும், தன் குடும்பமும் தன் சொந்த மோட்டாரில் ஏறி கிராமாந்தரங்களுக்குச் சென்று, கடவுள் அளித்துள்ள இயற்கை இன்பங்களை எவரும் நுகருவதற்கு அது ஒரு கருவியாக இருக்க வேண்டுமென்பதே என் நோக்கம்."

இந்த மாதிரி நான் பிரசுரித்ததும் வெகு பேருக்கு அது சந்தோஷமாயிருந்தது. சிலர் எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்றார்கள். "போர்ட் மட்டும் தான் கூறியுள்ளபடி செய்தால் ஆறு மாதத்தில் கடையை அடைத்துவிட்டு மூட்டையைக் கட்டவேண்டியதுதான்" என்று பொதுவாக எல்லோரும் பேசிக்கொண்டார்கள்.

சாதாரணமாய் நல்ல வண்டி எதையும் மலிவான விலைக்குச் செய்ய முடியாதென்று ஒருவித அபிப்பிராயம் எல்லோருக்கும் இருந்து வந்தது. தவிர பணக்காரர்கள்தான் மோட்டார் வாங்குவார்களாதலால் விலையைக் குறைத்து வைக்க வேண்டியதில்லை என்றார்கள். ஆனால் நான்மட்டும் வேறு வகையான கொள்கையுள்ளவன். ஏழைகளும் மோட்டார் வாங்கி இன்ப வாழ்க்கை எய்த வேண்டுமென்பது என் ஆசை.

1908-1909-ல், 10 ஆயிரம் வண்டிகளுக்கு மேல் வியாபாரமாகவே, புதிதாய் ஒரு தொழிற்சாலை கட்டவேண்டுமென்று நான் தீர்மானித்தேன். ஏற்கெனவே தற்காலத்திற்குத் தக்கபடி புதிய முறைகளை அனுசரித்து ஒரு பெரிய தொழிற்சாலை எங்களுக்கு இருந்தது. மோட்டார் வர்த்தகத்தில் ஈடுபட்ட மற்றெந்த கம்பெனியையும்விட எங்கள் கம்பெனியின் தொழிற்சாலையே பெரியது. ஆனால் அது வளரும் வர்த்தகத்துக்கு ஈடு கொடுக்க முடியாதென்று நான் கண்டுகொண்டேன். ஆகவே, கிராமாந்தரப் பக்கமாய் 60 ஏகர் நிலம் வாங்கி இதுவரையில் உலகம் கண்டறியாத பெரிய தொழிற்சாலையைக் கட்ட எண்ணங் கொண்டேன்.

"சரிதான் போர்டின் ஆட்டம் என்றைக்கு ஓயப்போகிறது" என்று சகஜமாய் எல்லோரும் கேட்டார்கள். அதற்குப் பின் பல்லாயிரம் தரம் இதே கேள்வி பிறந்திருக்கிறது. நான் ஒரு கொள்கையை அனுசரித்து நிற்கிறேனேயன்றி, என்னைமட்டும் தாங்கி நிற்கவில்லை என்பதை உணராததால்தான் இங்ஙனம் கேட்கிறார்கள். மனிதர்கள் அழிவுறலாம்; கொள்கைகள் நிலைபெற்று நிற்பன.

புதிதாக 60 ஏகர் நிலம் வாங்கி கட்டடம் கட்ட வேண்டியிருந்ததால் 1909-ம் ஆண்டில் 100 டாலர் விலையைத் தூக்கி வைத்தேன். இதனால் மோட்டார் வாங்குபவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டு விடாது. இதற்குப் பதிலாக கடன் வாங்கி கட்டடமும், நிலமும் வாங்கியிருக்கலாம். ஆனால் அந்தக் கடன் எப்பொழுதும் அப்படியே நின்றுவிடும். பின்னால் கடனுக்கு வட்டி செலுத்த சரக்கின் விலையை ஏற்றி வைக்க வேண்டிவரும். கடனும் அடையாது. என்றைக்கும் விலை ஏறியபடியே யிருக்கும். எல்லா மாடல்களின் விலையையும் நூறு பவுன் உயர்த்தி வைத்தேன். 18 ஆயிரத்து 664 வண்டிகள் விற்பனையாயின. 1910-11-ல் புதிதாக தொழிற்சாலை அமைத்து சௌகரியங்களெல்லாம் செய்ததன் பயனாக விலையில் 170 டாலர் குறைக்க முடிந்தது. எனவே 1908-ல் விற்றதைவிட 70 டாலர் இன்னும் மலிவாக விற்றேன். இந்த வருஷம் 34 ஆயிரத்து 528 வண்டிகள் வியாபாரமாயின. இதிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாய் விலையைக் குறைத்துக்கொண்டே வந்தேன். சாமான்களின் விலையோ, ஆட்களின் கூலியோ எதிரிடையே ஏறிக்கொண்டே வந்தது.

190 -ல் 2½ ஏகர் நிலம் இருந்த இடத்தில் 1911-ல் 32 ஏகர் நிலம் கம்பெனியின் தொழிற்சாலைக்கு இருந்தது. 1908-ல் சுமார் 2 ஆயிரம் தொழிலாளர் வேலை செய்தவிடத்தில், 1911-ல் 4 ஆயிரத்துச் சொச்சம் பேர் வேலை செய்தனர். அதாவது தொழிலாளர்

தொகை 2 மடங்கு அதிகரித்தது. ஆனால் ஆறாயிரம் வண்டிகள் மட்டும் 1908-ல் கட்டினதுபோய் 1911-ல் 35 ஆயிரம் வண்டி செய்தோம். எனவே தொழிலாளர் தொகை 1-க்கு 2 ஆக, வண்டிகள் தொகை 1-க்கு 6 ஆகப் பெருகிவிட்டது.

இவையெல்லாம் எங்ஙனம் சாத்தியமாயிற்று? புத்தியை உபயோகித்து, நமக்கு இயந்திரங்கள் மூலம் கிடைக்கும் சக்தியை வியர்த்தமாக்காமல் நேரான வழியில் செலுத்தினால் இவ்வளவு எளிதில் சித்திக்கும். இந்தக் கொள்கையையே நான் என் கம்பெனியில் அனுஷ்டித்தேன். பல ஆண்டுகளுக்குமுன் ஒரு கிழ ஆசாரி ஒரு பட்டறையில் கோடரிக்காம்புகள் செய்து கொண்டிருந்தான். ஒன்றாவது மற்றதைப் போலிராது. ஒரு நாளைக்கு ஒரு காம்புக்கு மேல் அவனால் செய்யவும் முடியாது. கடைசியில் 1½ டாலர் சம்பாதிப்பான். இங்ஙனம் செய்யும் கோடரிக்காம்புகளில் சில பயனற்றவையாய்ப் போய்விடும். இன்றையதினமோ இயந்திரத்தைக் கொண்டு ஒரே சீராக ஒன்றைப் போலவே நூற்றுக்கணக்காய் கோடரிக் காம்புகள் செய்து தள்ளலாம். விலையும் 1½ டாலருக்குப் பதிலாக அதில் 10-ல் ஒரு பங்குதானிருக்கும். இங்ஙனம் யுக்தியாக இயந்திரத்தின் உதவியால் சுளுவாக வேலையை முடித்துக் கொள்வதுடன், மலிவாகவும் சாமானைச் செய்யலாம். இதே கொள்கையைத்தான் இன்னும் பெரிய வகையில் என் கம்பெனியில் பிரயோகிக்கிறேன்.

ஒரு தொழில் இங்ஙனம் ஒரு கருத்தை, ஒரு நோக்கத்தை, ஒரு கொள்கையைத் தாங்கி வளரும். அக் கருத்தை ஒருவர்தான் வெளியிடலாம். ஆனால் அதை அத்தொழிலில் ஈடுபட்ட எல்லோருமாகச் சேர்ந்து வளர்த்துத்தான் பரிபூரணமாக்க வேண்டும். எவரும் "நான்தான் இந்தத் தொழிலை வளர்த்தேன்" என்று சொல்லிக் கொள்ள உரிமையில்லை. அதை வளர்க்க ஆயிரக்கணக்கானவர்கள் அவருக்கு உதவியிருப்பார்கள். எல்லோரும் சேர்ந்துதான் அதை வளர்த்திருக்கக்கூடும். இங்ஙனம்தான் எங்கள் வர்த்தகம் வளர்ந்தது. இதைப்பற்றி அடுத்த அத்தியாயத்தில் கூறுகிறேன்.

இதற்குள் எங்கள் வியாபாரம் வளர்ந்து பெருகிவிட்டது. லண்டனிலும், ஆஸ்திரேலியாவிலும் கிளை ஸ்தாபனங்கள் அமைத்தோம். முதலில் பிரிட்டிஷ் பத்திரிகைகள் அமெரிக்கன் மோட்டாரை அலட்சியஞ் செய்ததோடு, வெறும் குச்சியும், கயிறும் வைத்துக் கட்டியிருப்பார்கள் என்று பழித்தார்கள். 1905-ம் ஆண்டில் எங்கள் ஏஜண்டு ஒரு போட்டியில் வெல்லவே, போர்ட் வண்டியின் தரத்தை ஆங்கிலேயர் உணர ஆரம்பித்தார்கள். கடை

சியில் 1911-ல் ஸ்ரீ ஹென்றி அலெக்சாண்டர் என்பவர் 4,600 அடி உயரமுள்ள ஒரு குன்றின் உச்சிக்கு "T" மாடல் வண்டியில் ஒரு சங்கடமுமின்றி போய்ச்சேர்ந்தார். அந்த வருஷம் இங்கிலாந்தில் மட்டும் 14 ஆயிரத்து 600 போர்ட் மோட்டார் விற்றது. அதன்பின் அது ஏறிக்கொண்டே வருகிறது. மான்செஸ்டரிலும் ஒரு தொழிற்சாலை சொந்தமாய் அமைத்தோம்.

# அத்தியாயம் 6.

## ஏராள உற்பத்தி.

சிக்கன முறைகள்—கைவேலை இயந்திர வேலைக்கு இணையாகுமா?—சாமான்களின் விலையும் பெறுமானமும்—தொழிலாளரின் உழைப்பும் கூலியும்—'போர்ட்'மோட்டாரின் பாகங்கள்—அவற்றை ஒன்றாகப் பிணைக்கும் வழி—அதில் கையாண்ட சீர்திருத்த முறைகள்—வேலையைப் பகிர்ந்திடல்—ஒரு சாமானுக்கு ஒரு இலாகா—முடியாத காரியம் ஒன்றுமில்லை—அரை லக்ஷம் ஜனங்கள் கொண்ட தொழிற்சாலை.

ஏதேனும் ஒரு உபாயத்தால் செலவில் 10-ல் ஒரு பங்கு குறைக்கக்கூடு மென்றாலும், வருமானத்தை அதிகரிக்கக் கூடுமென்றாலும், அவ்வுபாயத்தைக் கையாளாததால் அவ்வளவுக் கவ்வளவு நஷ்டம் உண்டாகிறதாகக் கொள்ளலாம். ஒருவர் மணிக்குப் பத்துப்பணம் சம்பாதிப்பாரெனில், 6 நிமிஷம் அவர் சும்மாயிருப்பது ஒரு பணம் பெறும். மாடமாளிகைகளில் வசிப்பவர் எவரேனும் தனது வருமானத்தை 10-ல் ஒரு பங்கு அதிகரித்துக் கொள்ளக் கூடுமானால், அதில் அரைப் பங்கையாகிலும் எவ்விதம் சம்பாதிக்கலாம் என்றறியச் செலவிடத் தயாராயிருப்பர். இத்தகைய மாடமாளிகை கட்டிக்கொண்டு வசிப்பவருக்கு, சாஸ்திரீக முறையில் குறைந்த இடத்தில் உயர்ந்த பலான உப்பரிகைகள் வைத்துக் கட்டடம் கட்டி அதிகமாய் வாடகை மூலம் வருமானம் சம்பாதிக்கிற முறை தெரியும். 5 மெத்தையுள்ள கட்டடத்திற்கும், 30 மெத்தையுள்ள மாளிகைக்கும் அடிதளவாடத்திற்கு ஒரே விஸ்தீரணம்தான் தேவை. எனவே, பண்டைக்கால முறையிலேயே வீடுகள் கட்டினால் வாடகை நஷ்டமாகின்றது. மீண்டும், 12 ஆயிரம் தொழிலாளருள்ள ஒரு தொழிற்சாலையில் ஒவ்வொருவரும் 10 அடி தூரம குறைவாக நடக்கும்படி ஒரு உபாயம் செய்தால் 12 லக்ஷம் அடி நடப்பதற்கு எவ்வளவு சக்தியும் நேரமும் செலவாகின்றதோ அவ்வளவும் மிச்சமாகி வேறு உபயோகத்திற்குப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

இந்தக் கொள்கையை அனுசரித்துத்தான் என்னுடைய இயந்திரசாலையை அமைத்தேன். இதுவெல்லாம் தானாகவே வரிசைக்

கிரமமாய் ஒரு சிரமமில்லாமல் ஏற்படுகிறது. முதன் முதலில் சில இயந்திரத் தொழிலாளரைக் கொண்டு வேலைசெய்ய முயன்றோம். ஆனால் நாளுக்கு நாள் உற்பத்தி அதிகரிக்கவே, இயந்திர வேலை செய்யத் தெரிந்தவர்கள் போதுமானவர் கிடைப்பது அரிதாகிப் போனதுடன், உற்பத்திக்கு இத்தகைய தேர்ந்த வேலையாட்கள் அவசியமில்லை என்றும் கண்டுகொண்டோம்.

இவ்வுலகில் பெரும்பான்மையோர் ஜீவனோபாயத்திற்கு ஏற்ற வழியைக் கண்டுபிடித்து ஒழுகும் மனோசக்தி யற்றவர்கள் என்பது சொல்லாமலே விளங்கும். அதாவது அவர்கள் தங்கள் கையினால் ஏதேனும் உலகத்தாருக்குப் பயன்படக்கூடிய சாமான் செய்து கொடுத்து, அதற்குப் பதிலாகத் தாங்களும், தங்களுக்குத் தேவையான சாமானைப் பெற்றுக்கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்கள். எங்களுடைய தொழிற்சாலையில், சாதாரணமாய் தொழிலாளரின் வேலைப்பாட்டில் உள்ள திறமை போய்விட்டது என்கிறார்கள். இது தவறு. உண்மையில் வேலைப்பாட்டில் திறமையும் நாங்கள் காட்டியுள்ளோம். சரியான திட்டங்கள் ஏற்பாட்டு, நிர்வகித்து, ஆயுதங்கள் செய்து வேலை செய்வதில் எங்கள் திறமையைக் காட்டியிருக்கிறோம். அந்தத் திறமையின் பயனை திறமையற்றவர்கள் அனுபவிக்கிறார்கள். இதைப்பற்றி பின்னர் விரித்துரைக்கிறேன்.

மனிதர்கள் புத்தி கூர்மையிலும், மனோவலிமையிலும் ஒருவருக்கொருவர் எவ்வளவோ வேற்றுமைப் பட்டிருக்கிறார்கள். எங்கள் கம்பெனியில் ஒவ்வொரு வேலைக்கும் தேர்ச்சியடைந்தவரையே நியமிக்கிறதென்று நாங்கள் இருந்திருந்தால் கம்பெனி முன்னுக்கு வந்திராது. ஆங்கு தேவைக்கு வேண்டிய நிபுணர்களைத் தயார் செய்ய நூறு வருஷம அவகாசமிருந்தாலும் போதாது. பத்து லக்ஷம் பேர் கையினால் வேலைசெய்தாலும் தற்போது நாங்கள் எங்கள் கம்பெனியில் செய்து வருகிறதுபோல் அவ்வளவு ஏராளமாய் வண்டிகள் செய்யமுடியாது. தவிர கையினால் செய்யப்படும் அத்தகைய சரக்கு விலையுமாகாது. இன்னும் இவையெல்லாம் சாத்தியமானாலும் இதற்கு எவ்வளவு இடம் பிடிக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். சாதாரணமாய் தேர்ந்தவர்கள் செய்யும் சாமான்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோவதற்கு மட்டும் எவ்வளவு தொழிலாளருடைய சக்தி வியர்த்தமாகும். அவர்களுக்கு இந்த வேலைக்குத் தகுந்தபடி தானே கூலியும் குறைவாகக் கொடுக்கமுடியும். பணம் சம்பாதிப்பதும கூலி கொடுப்பதும் முதலாளியல்ல. எந்த சாமான் செய்யப்படுகிறதோ அதிலிருந்துதான் கூலி சம்பாதிக்கப் படுகிறது. தொழிலை நிர்வகித்து நடத்துபவர்கள் சாமான், கூலிக்குக் கட்

டும்படியாகவாவது விற்கும்பொருட்டு உற்பத்தியை நேர்படுத்துகிறார்கள்.

உற்பத்தியில் சிக்கனமுறைகள் உடனுக்குடன் ஏற்பட்டுவிடவில்லை. நாளடைவில்தான் பற்பல மாதிரி மோட்டார்கள் கட்டியதுபோல், சிக்கனமுறையும் வர வர அமைந்தது. நாங்களே செய்த முதல் மோட்டார் "T" மாடல்தான். அந்தந்த சாமான்களை சேர்த்து மோட்டாரை ஒன்றிப்பதில் முதலில் சிக்கனஞ் செய்தோம். பிறகு இதர பிரிவுகளிலும் இச்சிக்கனத்தைத் தொடர்ந்து கையாண்டோம். எங்களிடம் ஏராளமான தேர்ந்த வேலையாட்கள் இப்பொழுது இருக்கிறார்களெனினும், அவர்கள் மோட்டார்களை செய்வதில்லை. பிறர் ஏராளமாய் வண்டிகளைச் செய்து கொடுக்க அவர்கள் உதவினார்கள். எங்களிடம் உள்ள திறமைபெற்ற வேலையாட்களெல்லாம் பற்பல கருவிகள் செய்பவரும், புதிது புதிதாய் சாமான்களைச் செய்து பரிட்சார்த்தம் செய்ய அனுப்புகிறவர்களும், இயந்திரக்காரர்களும் இவர்கள் போன்ற இன்னும் பலரும்தான். ஆனால் அவர்கள் வேலையை இயந்திரங்கள் திறமையாக இன்னும் நன்றாய்ச் செய்யக்கூடுமெனில் அவர்களைக்கொண்டு வேலை செய்யச் சொல்வது வீணாய் மிகவும் வியர்த்தமாய் மனித சக்தியைப் பிரயோகிப்பதாகும். சாதாரணமாய் வேலைக்கு வரும் ஆட்கள் தேர்ந்த வேலையாட்களல்லர். இங்கே வந்துதான் அவர்கள் வேலை கற்றுக் கொள்கிறார்கள். கொஞ்ச நாளில், குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் அங்ஙனம் கூட வேலையைக் கற்றுக்கொள்ளாவிடில் அவர்கள் பயன்படவே மாட்டார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் அன்னிய நாட்டினர். அவர்களிடம் நாங்கள் கோருவதெல்லாம் அவர்கள் அடைக்கும் இடத்திற்குத் தக்கபடியாவது வேலை செய்யட்டும் என்பதே. அவர்கள் நல்ல திடசாலிகளாயிருக்கவேண்டுமென்பதல்ல. இப்படிப்பட்ட திடசரீரமும், நல்ல பலமுமுள்ளவர்களுக்கு எங்களிடம் சில வேலைகளிருக்கின்றன. அவைகூட இப்பொழுது குறைய ஆரம்பித்துவிட்டன. சில வேலைகளோ மூன்று வயதுக் குழந்தைகூட செய்யும்படியாக அவ்வளவு எளிதாயிருக்கின்றன.

தொழிலின் அபிவிருத்தியை விரித்துக் கூறுவோமெனில், சில்லரை விஷயங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எடுத்து விஸ்தாரமாக விவரிக்கவேண்டும். இங்ஙனம் செய்வது சாத்தியமென்று நான் கருதவில்லை. சுருங்கச் சொல்லின் ஏராளமான உற்பத்தி செய்கிற இடங்களிலிருந்து நாம் அனுபவத்தில் கண்டு கொள்ளக் கூடுவதென்னவென்றால், சாதாரணமாய் சாமான்களுக்கு நாம் உண்மையில் எவ்வளவு அதிகமாய் விலை அவற்றின் பெறு

மானத்திற்குமேல் கொடுக்கிறோமென்பதும், அதற்கு ஏற்றபடி கூலி எவ்வளவு குறைவாக விருக்கின்ற தென்பதும்தான். இவ் விஷயத்தில் ஓர் சிறிதுதான் 'போர்ட்' கம்பெனியார் உள்ள நிலைமையை விளக்கியிருக்கின்றனர்.

ஆணி, அச்சு, திருகு முதலிய சிறிய பாகங்களுள்பட சுமார் 50 ஆயிரம் பாகங்கள் ஒரு 'போர்ட்' மோட்டாரில் இருக்கின்றன. சில சுமாராய்ப் பெரிதாகவே யிருக்கும்; பிற ஒரு கடிகாரத்தின் மிக நுட்பமான பாகங்களையும் விட சின்னதாக யிருக்கும். முதன் முதலில் ஒரு வண்டியைக் கட்டியபொழுது தரையிலேயே வைத்துக்கொண்டு, ஒரு வீடு கட்டுவதற்கு சிற்றாட்கள் கல், சுண்ணாம்பு முதலியன கொண்டுவந்து தருவதுபோல், அவ்வப்போது வேண்டிய சாமான்களை ஆட்களைக் கொண்டு எடுத்துவரச் சொன்னோம். பின்னர் உற்பத்தி அதிகரிக்கவே, ஒரு ஆள் செய்கிற வேலையை இன்னொரு ஆள் செய்யாம லிருக்கும்படி இலாகா, இலாகாவாய் எல்லாவற்றையும் தனித்தனியாக பிரிக்கவேண்டி யிருந்தது. மேலும், மேற் பார்வையிட்டு அவ்வப்போது இன்ன இன்ன செய்ய வேண்டுமென ஆட்களை ஏவவேண்டும். இல்லாவிடில் நமது வேலையாட்கள் சாமான கொண்டுவர ஒரு முறை, ஆயுதங் கொண்டுவர ஒருதரம், இந்தமாதிரி அங்குமிங்கும் நடப்பதிலேயே அதிக நேரம் செலவிடுவார்கள். இதனால்தான் இவர்கள் வேலை மிகக் குறைவாகிறது; கூலியும் அதற்குத் தகுந்தபடி வெகுவாய்த் தாழ்ந்துபோய் விடுகிறது. சும்மா நடப்பதற்கெல்லாம் ஒருவரும் கூலி கொடுக்க மாட்டார்க ளல்லவா?

இதைச் சீர்திருத்த நாங்கள் செய்த ஏற்பாடு, வேலை செய்கிற இடத்திற்கு ஆட்களைக்கொண்டு போவதைவிட்டு, ஆட்கள் இருக்கும் இடத்தில்போய் அவர்களுக்கு வேலை கொடுத்ததாகும். எந்த வேலையிலும் நாங்கள் அனுசரிக்கும் இரண்டு முக்கிய கொள்கைகள் கவனிக்கத்தக்கன. அதாவது அனாவசியமாக ஒரு அடிகூட எடுத்து வைக்கக் கூடாது; எவரும் ஒரு வேலையைச்செய்ய முதுகு வளைந்து குனிய வேண்டியதில்லை. வண்டியைக் கடைசியாகக் கட்டுவதற்கு முன் மூன்று விஷயங்கள் அவசியம் செய்துமுடிக்க வேண்டும். வண்டிக்கு வேண்டிய சகல பாகங்களையும் ஒன்றின்பின் ஒன்றாக அவற்றைக் கோக்கும் வரிசையில் வைத்துக்கொண்டு, ஆட்கள் சாமானுக்காக எவ்வளவு குறைவாக நடக்கவேண்டுமோ அதற்கு மேல் நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும்; இரண்டாவதாக, தனது வேலை தீர்ந்ததும் அந்த பாகத்தை அடுத்த தொழிலாளியிடம் அனுப்ப ஏதாவது சரிவு மட்டம் வைத்து, துரிதமாக சிரமமில்லாமல் தானாகவே அது போய்விடும்படி ஏற்பாடு செய்யவேண்

டும். கடைசியாக எல்லா பாகங்களும் இதேமாதிரி வந்து சேர்ந்து கைக்கு எட்டவும் சௌகரியமான வசதி ஒன்றிருக்கவேண்டும். இங்ஙனம் செய்தால் வேலையாட்கள் ஒன்றின்பின் ஒன்றாக யோசனையின்றி தாமாக வேலையைச் செய்ய முடியும்; அவர்கள் எவ்வளவு குறைவாக நகர்ந்து கை கால்களை அசக்கி வேலைசெய்ய வேண்டுமோ அதற்குமேல் செய்யவேண்டியதில்லை. ஒரு சமயத்தில் ஒரு காரியத்திற்குமேல் ஒரு தொழிலாளி செய்யவேண்டியிராது. வண்டியின் தளவாடத்தைச் சேர்த்துக் கட்டுவதுதான் சாதாரணமாய் முக்கியமென்று தோன்றும். இதர பாகங்களையெல்லாம் தனியாக அனுப்பி வர்த்தகர்களை ஒன்றித்து மோட்டாராக விற்கும்படி இப்பொழுது ஏற்பாடு செய்திருக்கிறோம்.

முன்னர் நாங்கள் எல்லாவற்றையும் கோத்து அனுப்பினோம். முதன்முதல் ஒரே ஆள் எல்லா வேலையையும் செய்தபோது ஒரு வண்டியைக் கோக்க 20 நிமிஷம் பிடித்தது. பிறகு இந்த ஒரு ஆள் செய்த வேலைகளனைத்தையும் 29 படியாகத் தனித்தனியாகச் செய்தோம். முன்னர் இரண்டு வண்டி செய்த நேரத்தில் இப்பொழுது மூன்று வண்டி செய்ய முடிந்தது. பிறகு வேலையாட்கள் அதிகமாகக் குனிந்து வேலைசெய்யாமல் பட்டறையை உயர்த்தினோம். இதனால் ஒரு வண்டி செய்வதற்கு 7 நிமிஷத்திற்கு மேலாகவில்லை. இன்னும் இம்மாதிரியே வேலைசெய்யும் விதத்தை மாற்றிக்கொண்டு போனதால் 5 நிமிஷத்தில் ஒரு வண்டியை பூட்டிக்கொடுக்க முடிந்தது. மொத்தத்தில், 4 வருஷத்திற்குமுன் ஒரு ஆள் எவ்வளவு வேலை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்ய முடிந்ததோ அதைப்போல் நான்கு மடங்கு வேலை இப்பொழுது செய்ய சாத்தியப்பட்டது. இப்பொழுது ஒரு வண்டியை மாட்ட 84 சில்லரை வேலைகள் செய்தாக வேண்டியிருக்கிறது. ஆனால் முன்னர் மூன்று ஆட்கள் செய்த வேலையை இப்பொழுது ஒரு ஆள் செய்கிறான்.

இதேமாதிரி வண்டியின் அடி தளவாடத்தை மாட்டுவதிலும் ஏற்படும் நேரத்தைக் குறைத்துக்கொண்டே வந்தோம். முதன்முதலில் ஒரு தளவாடத்தை ஒன்று சேர்க்க 12½ மணி நேரம் பிடித்தது. மேற்கூறிய ஏற்பாடுகளை அனுசரித்தமையால் இந்நேரத்தை 1½ மணிக்குக் குறைத்துவிட்டோம். ஒரு வண்டி செய்த நேரத்தில் 8 வண்டி செய்ய முடிந்தது. இதெல்லாம் இங்கே படிக்கிற காலத்துக்குள் சித்தியாய் விட்டதாக எண்ணிவிடக் கூடாது. நாளடைவில் தான் இவ்வளவும் செய்ய முடிந்தது. தளவாடத்தைப் பூட்ட மட்டும் 45 காரியம் செய்தாகவேண்டும். முதல் வேலை "மண் காப்பு"களை மாட்டுதல். மோட்டார் எஞ்சினை மாட்டுவது

10-வது வேலையாகும். இதே மாதிரிதான் பிறவும். 45-வது வேலை வண்டியை ஓட்டி கொட்டகைக்குப் போய்ச்சேர்த்தல். ஒரு ஆள் செய்த வேலையை இன்னொருவன் செய்யமாட்டான். ஒருவன் ஆணியைப் போட்டால், அதற்கு மறையை மாட்டுபவன் வேறொருவன்; அதை முடுக்குபவன் பின்னொருவன். இவ்வாறுதான் 45 தினுசு வேலையும் நடக்கிறது. இவ்விதம் மோட்டாரை ஒன்று சேர்ப்பதற்குத் தனியாக ஒரு தொழிற்சாலை அமைத்தோம்.

பிறகு ஒவ்வொரு பாகத்திற்கும் தனியாக இலாகா ஏற்படுத்தி, ஒரு இலாகாவில் ஒரே சாமான் செய்துவந்தோம். ஒவ்வொரு இலாகாவும் சிறியதோர் தொழிற்சாலையாகும். முதலில் அந்த பாகத்திற்கு சாமான், அந்த இலாகாவுக்கு வந்துசேரும். அதைப் பட்டறையில் கொடுத்து காய்ச்சியும், உருக்கியும், அடித்தும், தட்டியும் பலவிதமானபடி தேவைக்குத் தக்கபடி வேலை செய்த பின், இந்த இலாகாவிலிருந்து மோட்டார் பாகமாக வேலை முடிந்து வெளியேறும். எல்லா பாகங்களையும் ஒரே தொழிற்சாலையில் செய்தாக வேண்டுமென்பது மில்லை. தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் செய்துகொள்ளலாம். முதன் முதலில் தனித்தனி பாகங்களை வெளியிலிருந்து பிற கம்பெனிகளிடம் வாங்கியதுபோக, இப்பொழுது நாங்களே எங்களுடைய பலான தொழிற்சாலைகளில் செய்து கொள்ளுகிறோம். கடைசியாக எங்களுடைய பிரதம தொழிற்சாலையில் ஓரிரண்டு வேலைதான் நடைபெறும். வார்ப்பு வேலைமுழுதும் இப்பொழுது வேறிடத்திற்கு மாற்றியாய் விட்டது. இனிமேல் பெரிதாக ஏதேனும் தொழிற்சாலை கட்டினாலும், ஏதேனும் குறிப்பிட்ட ஒரு பாகம் ஏராளமாய்ச் செய்யவேண்டியிருந்தால் அதற்காகத்தான் அமைப்போமே யல்லாது பொதுவாக மோட்டார் வேலை செய்வதற்காக அது ஏற்படாது. இது மிகவும் குறிப்பிடத் தக்க விஷயம். இங்ஙனம் ஏற்பாடு செய்துவிடின் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பெரிய இயந்திரங்களைக் கொண்டுபோகும் சங்கடமும், அவைகளை வைத்துக் காப்பாற்ற பெரிய இடங்களைத் தேடும் கஷ்டமும் ஒழியும். தனித்தனியான பாகங்களாகப் பிரித்துப் போட்டுவிட்டால் திரும்ப ஒன்று சேர்ப்பது சுலபமான காரியம். ஒரு தொழிற்சாலைக்கு ஆயிரம், ஐந்நூறு ஆட்களுக்கு மேல் தேவையிராது. இதனால் கும்பல் அதிகரித்து அதன் நிமித்தம் உண்டாகும் இதர தொல்லைகளும் நேரா.

இப்பொழுது எங்கள் தொழிற்சாலையில் 500 இலாகாக்களிருக்கின்றன. முன்னர் 150 இலாகாதான் உண்டு. இதிலிருந்து தனிப் பாகங்கள் செய்வதில் நாங்கள் எவ்வளவு துணிந்திருக்கிறோமென்பது விளங்கும்.

ஒவ்வொரு வாரமும் இயந்திர வேலையிலோ, செய்யும் முறையிலோ ஏதேனும் ஒரு அபிவிருத்திராவது செய்யாமலிருப்பதில்லை. சில சமயம் சாதாரணமாய் வழக்கமாய் அனுசரிக்கப்பட்டு வந்துள்ள முறையையும் மீறி, நூதனமாய் ஒரு ஏற்பாட்டைக் கையாளுகிறோம். ஒரு தரம் ஒரு இயந்திர வேலையாளை அழைத்து மணிக்கு 200 வீதம் ஒரு சாமானைச் செய்யவேண்டு மென்றோம். அவன் ஒரு நாளைக்கு இருநூறு என்பதற்கு மணிக்கு இருநூறு என்று தவறிச் சொல்லுகிறீர்களா என்று கேட்டான். நாங்கள் உடனே இந்த விதம் செய்யலாம் என்று திட்டம்போட்ட இஞ்சினியரைப் பார்த்துக் கேட்டோம். அவர், "இது என்ன முடியாதா? இது ஓர் பிரமாத காரியமா? சற்றுக் கீழே வந்து ஆங்கு நடக்கும் வேலையைப் பார்த்தால் இந்த வேலை ஏற்கெனவே நடந்து கொண்டிருப்பதைக் காணுவீர்கள்" என்றார்.

எங்கள் தொழிற்சாலையில் இங்ஙனம் பரீட்சார்த்தமாய் செய்யும் வேலைகளை யெல்லாம் குறித்து எழுதி வைக்கவில்லை. அந்தந்த இலாகா மேஸ்திரிக்கும், சூபரிண்டன்டுக்கும் அது ஞாபக மிருந்து கொண்டே யிருக்கும். முன்பு எதையேனும் ஒன்றை ஒருவர் செய்ய எத்தனித்து அது கைகூடாவிடில், எவருக்காவது அது கட்டாயம் நினைவிலிருக்கும். ஆனால் இங்ஙனம் தவறிப்போனவற்றை யெல்லாம் தொழிலாளர் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருக்க வேண்டியது அவசியமென்றே நான் கருதவில்லை. அப்படி நினைவு வைத்துக் கொள்ளுவார்களே யானால், தவறிப்போய் செய்யக் கூடாமற் போன விஷயங்கள்தான் நினைவிருக்கும். பழைய சோதனைகளை யெல்லாம் குறிப்பிட்டு வைத்துக்கொள்வதன் தீமைகளில் இதுவொன்று. ஆனால் இப்படி எல்லாவற்றையும் தாக்கல் செய்து கொண்டு வருவதானால், கடைசியில் எல்லா வழியும் பார்த்தாய்விட்டது; பலிக்கவில்லை. இனிமேல் என்ன செய்ய விருக்கிறது என்ற ஏக்கம் பிடித்துவிடும். ஒரு குறிப்பிட்ட முறையில் ஒருவர் தவறிவிட்டால் வேறொருவர் அதில் வெற்றிபெற முடியாது என்று நிர்ணயித்துவிட முடியாது.

ஓரிரண்டு விஷயங்களில் முன்னர் முடியாது என்று கைவிடப்பட்ட காரியங்களை நாங்கள் சாதித்திருக்கிறோம். "பெரிய பெரிய மனிதர்கள் திறமையான முறைகளைக் கைப்பற்றி சாதிக்கக் கூடாத விஷயங்கள் நம்மாலா ஆகப்போகிறது" என்று இளைஞர்களும், நிபுணர்களும் தளர்ச்சி யடைந்த இடத்தில், முந்தி விஷயமே தெரியாதவர்களாகிய சில தொழிலாளர்கள் கண்ணை மூடிக் கொண்டே குருட்டுத்தனமாய் பழக்கத்தினால் வேலை செய்து, வெற்றியுடன் சிறப்பாய்ச் செய்து முடித்திருக்கின்றன ரல்லவா?

பெரியோர் அடியெடுத்துக்கூட வைக்க அஞ்சும் இடங்களில் பேதைகள் விரைந்தோடி பெருமை அடைந்திருக்கிறார்களல்லவா?

எங்கள் தொழிற்சாலையில் நிபுணர்கள் கிடையாது. எவனாவது ஒருவன் தான் நிபுணனாய்ப் போய்விட்டதாக நினைத்துக் கொள்ளத் தொடங்கினால் மறு நிமிஷம் அவனை வெளியே அனுப்பி விடுவது எங்கள் வழக்கம். தன் வேலையை நன்றுணர்ந்த எவரும் தான் தான் பெரிய மேதாவி என்று கர்வமடைய மாட்டார். தன் வேலையின் முழு விவரங்களும் செவ்வையாய்த் தெரிந்தவருக்கு இன்னும் எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறதே என்ற கவலையிருக்கும். மேன்மேலும் வேலையை அபிவிருத்தி செய்ய என்னென்ன செய்ய வேண்டுமென்று யோசித்துக் கொண்டேயிருப்பாரேயன்றி, நாம் எவ்வளவு நன்றாய் வேலை செய்கிறோம் என்று நம்மைத்தாமே பாராட்டி தற்புகழ்ச்சி கொள்ள அவருக்கு நேரமிராது. மேன்மேலும் என்ன செய்யலாம் என்பதையே யோசிப்பதால், ஏதாவது செய்துகொண்டேயிருப்பதால், அசாத்தியம் என்று ஒன்றையும் தள்ளிவிடாத மனப்பான்மை ஏற்படுகிறது. அவர்களுக்கு எதுவும் அசாத்தியமில்லை. "நிபுணர்"களாய் விட்டால் எவ்வளவோ காரியங்கள் சாத்தியமில்லாமல் போய்விடும்.

சாத்தியமில்லை என்று ஒரு விஷயமும் கிடையாது என்பதே என் சித்தாந்தம். எவருக்காவது எந்த விஷயத்தையும் குறித்து இது சாத்தியம், இது சாத்தியமில்லை என்று ஒதுக்கும்படியாக அவ்வளவு பூரண ஞானம் ஏற்படவில்லை என்பதே என் கருத்து. சரியான பயிற்சி கொடுக்கப்படின், மனிதனுக்குத் தெரிந்த அசாத்தியமாய்த் தோன்றும் காரியங்களில் சிலவற்றை சாதிக்கவும் கூடும். ஆனால் இங்ஙனம் பயிற்சி அளிக்காமல் விருப்பப்படி, முன் எவராவது "இது சாத்தியமில்லை; அது சாத்தியமில்லை" என்று எழுதிவைத்து விட்டுப் போயிருந்தால், அதைக்கொண்டு எதுவும் சாத்தியமில்லையென நமது ஜனங்கள் எண்ண ஆரம்பித்து விடுகிறார்கள். முன் பின் யோசனையின்றி சுலபமாக ஒரு கூட்டத்தார் "அது முடியவே முடியாது" என்று கூக்குரலிடவும் தொடங்கிவிடுகிறார்கள்.

வார்ப்பு வேலையை எடுத்துக் கொள்வோம். வார்ப்பில் எவ்வளவோ வியர்த்தமாகிறது. தவிர வார்ப்பு வேலை பண்டைக்காலந் தொட்டு நடந்து வருகிறது. அதில் ஏதேனும் ஒரு நூதனமுறையை அனுஷ்டிக்கிறதெனில் அதற்கு ஏற்பட்டுள்ள பழைய பெயரினால் ஒன்றுஞ் செய்ய சாத்தியப் படுகிறதில்லை. வார்ப்பு வேலையில் ஏற்படும் செலவை ஆறு மாதத்தில் குறைத்துவிட ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லி நாங்கள் பற்பல பரீட்சைகள் செய்த

போது, அப்படிச் செலவு குறைந்து விடுமென்று கூறுபவர்கள் வெறும் மோசடிக்காரர்கள் என்று ஒரு நிபுணர் கூறினர்.

எங்கள் பட்டறையும் மற்ற பட்டறைகள் போல்தான் முதலில் இருந்தது. முதன் முதல் "T" மாடல் வண்டியை செய்தபோது எல்லாம் கையாலேயே செய்யப்பட்டது. இப்பொழுது எல்லாம் இயந்திரத்தைக் கொண்டே செய்கிறோம். ஒவ்வொரு பாகத்திற்கும் ஆட்களைக் கொண்டு மேற்பார்வை செய்துகொண்டு இயந்திர மூலமாகவே அவ்வளவு வேலையும் நடக்கிறது. ஒன்றுக்காவது கை வேலையே தேவையில்லை. எல்லாம் தானாக இயந்திர மூலமாகவே செய்தாகி விடுகிறது. ஒவ்வொரு பாகமும் மிக சுலபமாய்ச் செய்யும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம். இதனால் உண்டாகும் லாபத்தைக் கணக்கிட்டால் எவ்வளவு ஆகிறது? இப்பொழுது நாங்கள் உற்பத்தி செய்யும் வண்டிகளைக் கணக்கிட்டுப் பார்த்து, 1903-ம் ஆண்டில் ஒரு வண்டியைச் செய்ய எவ்வளவு ஆட்களைவிட்டோமோ அவ்வளவு ஆட்களை இப்பொழுதும் ஒவ்வொரு வண்டிக்கு விடுவதென்றால், மொத்தம் 2 லக்ஷம் ஜனங்கள் கொண்ட ஒரு பெரிய சைன்னியம் தேவையாயிருக்கும். ஆனாலோ தினம் ஒன்றுக்கு 4 ஆயிரம் வண்டிகள் செய்கிற அதிக வேலையுள்ள நாளிலும் கூட 50 ஆயிரம் ஜனங்களுக்கு மேல் எங்கள் தொழிற்சாலையில் வேலை செய்யவில்லை.

# அத்தியாயம் 7.

## இயந்திரங்களும் மனிதரும்.

உத்தியோக முறைகளும், அவற்றின் தாமதமும்—உத்தியோக ஆர்ப்பாட்டங்களும், அவைகளால் விளையும் தொல்லையும்—பட்டங்களும் பதவிகளும் — அவற்றால் உண்டாகும் தீமை—ஒவ்வொருவருக்கும் பொறுப்பு அவசியம்—வேலை பெரிதே யன்றி பதவி முக்கியமல்ல—வேலைக்கு ஆட்களைப் பொறுக்கும் விதம்—"எந்த வேலையும் இன்னும் நன்றாக நடைபெறக் கூடும்"—வேலைக்குத் தக்க கூலி—சிடார்சுக்கு இடங்கொடுக்க லாகாது—அபிவிருத்தியின் இரகசியம்—மனிதரும் இயந்திரமும்—தொழிலாளர் மூளையைப் பிரயோகிக்கும் முறை.

**ப**ற்பல மனிதர்களை ஒன்று திரட்டி ஒரு வேலையை நடத்துவதில் ஏற்படும் பெரிய கஷ்டம், நிர்வாக அமைப்பிலும் முறையிலும் சம்பவிக்கும் சட்ட திட்டங்களும் ஆர்ப்பாட்டமும்தான். நிர்மாண வேலைகளில் வெகு சமர்த்தர் என்று எவரையாவது என்னிடம் சொன்னால் அவர்களிடம் எனக்கு சந்தேகந்தான். அம்மாதிரி மூளைகளின் போக்கு விபரீதமாகவே யிருக்கும். இந்த நிர்மாணத்தால் ஏற்படுகிறது என்னவெனில், தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் ஒரு உத்தியோகமும் ஒரு பட்டமும் வழங்கப்படுகிறது. அவரவர்களுக்கு இவ்வளவுதான் வேலையென்று வரையறுத்து விடுவதால் அதற்கு மீறி ஒருவரும் ஒன்றும் செய்கிறதில்லை.

ஒரு தொழிற்சாலையின் சிப்பந்தி தனது காரியாலயத்தின் சூப்ரிண்டன்டைக் கண்டு பேச விரும்பினால், அடியிலிருந்து சிற்றாள், மேஸ்திரி, தலைமை குமாஸ்தா, உதவி சூப்ரிண்டன்டு இவ்வளவு பேர் மூலமாயும் அந்த சமாசாரத்தைச் சொல்லியனுப்பி சுற்றி வளைக்க வேண்டியிருக்கிறது. இதனால் அவன் பேச விரும்பிய சமாசாரம் கெஜட்டில் போட்டது போல் பிரசுரமாகி விடுகிறது. ஒரு குமாஸ்தாவிடம் கேட்டுவிட்ட விவரத்தை அவர் திருப்பியனுப்பி காரியாலயத் தலைவருக்கு அது போய் சேருமுன் ஒன்றரை மாதமாகிவிடும். அதற்குள் அதன்கீழ் பற்பல உத்தியோகஸ்தர்களால் வியாக்கியானமும, யோசனைகளும், குறிப்புகளும், ஷராத்துக்களும் சேர்ந்து ஒரு பெரிய கட்டு சேர்ந்துவிடும். ஒரு விஷயம்செய்து

தீர்ந்தாயிருக்க வேண்டும் என்கிற காலங்கழிந்து வெகு நாட்களுக்குப் பின்னர்தான் சாதாரணமாய் அது உத்தியோக முறையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். பொறுப்பை உணர்ந்து ஒருவரும் வேலை செய்கிறதில்லை. தன்னை விட்டால் போதுமென்று பிறர்மீதே அதைத் தள்ளப்பார்க்கிறார்கள்.

ஒரு தொழிலானது சாதாரணமாய் ஒரு இயந்திரத்தைப் போன்றதல்ல. வேலை செய்வதற்காக பல மனிதர்கள் ஒன்று சேருகிறார்கள். அதுதான் தொழிலின் இலட்சணம். சும்மா ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக் கொள்வதற்காக ஆங்கு சந்திக்கவில்லை. ஒரு இலாகாவில் என்ன நடக்கிறதென்று இன்னொரு இலாகாவிலிருப்பவர்களுக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை. ஒருவர் தன் வேலையைச் சரியாகச் செய்தால் பாக்கிப்பேர் வேலையைப் பற்றிக் கவனிக்க அவகாசமிராது. எல்லா வேலையையும் நிர்வகிப்பவர், அந்தந்த இலாகா, குறிப்பிட்ட வேலையைச் சரிவரச்செய்து முடிவான இலட்சியம் கைகூடும்படி பார்க்கவேண்டும். ஒருவருக்கொருவர், இலாகாவுக்கு இலாகா நல்லெண்ணமும், நல்லுறவும் வளர அவர்கள் சந்தித்து சம்பாஷிக்க வேண்டுமென்பதில்லை. மிகவும் உறவாடுவதும் தவறு. ஒருவர் பிழை செய்தால் அதை அவரது நண்பர் மறைக்கப் பார்ப்பார். இருவருக்கும் அது தீது.

வேலை செய்யும்போது அதைத்தவிர வேறொன்றையும் கவனிக்கக் கூடாது. விளையாடும்போது விளையாட்டிலேயே புத்தி செல்ல வேண்டும். இரண்டையும் கலப்பதில் பயனில்லை. வேலையைச் செய்து அதற்குக் கூலியைப் பெறுவதே பிரதம நோக்கமாயிருக்க வேண்டும். வேலை முடிந்தபின் விளையாடலாம்; அதற்குமுன் அந்த சிந்தனையே கூடாது. எனவே போர்ட் கம்பனிகளில் நிர்மாண திட்டங்களும், இன்னாருக்கு இன்ன வேலைதான் என்று பகிர்ந்தளிப்பதும், இன்னாருக்கு அடுத்தபடி அந்தஸ்தோ அதிகாரமோ படைத்தவர் இன்னாரென்றும், உத்தியோக பட்டங்களும், கூட்டங்கள் கூடி பேசுதலும் இவையெல்லாம் கிடையவே கிடையாது. அவசியமாய் வேண்டியதற்கு மட்டும் குமாஸ்தாக்களிருக்கிறார்கள். மூட்டை மூட்டையாய் தஸ்தாவேஜிக் கட்டுகள் எங்கள் தொழிற்சாலையில் காண முடியாது. ஆகவே உத்தியோக ஏற்பாட்டங்களும் ஆங்கு இல்லை.

அவரவர்கள் பொறுப்பு இவ்வளவு என்றும், அதற்கு அவர்களே ஜவாப்தாரி என்றும் நிர்ணயஞ் செய்து விடுகிறோம். ஒவ்வொரு தொழிலாளியும் அவனுடைய வேலைக்குப் பொறுப்பாளி. மேஸ்திரி தன் கீழுள்ள தொழிலாளிகளின் வேலைக்கு உத்திரவாத

யாவார். இலாகாத் தலைவர் இலாகா முழுதுக்கும் ஜவாப்தாரி. பொது சூப்ரிண்டண்டு தொழிற்சாலை நிர்வாகம் அவ்வளவுக்கும் பொறுப்பு நிர்வகிக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் தங்கள் தங்கள் பிராஞ்சியத்தில் என்ன நடக்கிறது என்று தெரிந்திருக்க வேண்டும். பொது சூப்ரிண்டண்டு என்று நான் இங்கு குறிப்பிடுகிறேனே யொழிய அத்தகைய பட்டம் ஒருவருக்கும் கிடையாது. ஒருவர் பல ஆண்டுகளாக தொழிற்சாலையை மேற்பார்வை பார்த்து வருகிறார். அவருக்கு உதவியாக ஒருவர் இருக்கின்றனர். அவர்கள் வேலையைத் தனியாக நிர்ணயிக்காமலேயே தாங்களாக அவர்கள் தனித்தனியாக வேலையைப் பிரித்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சுமார் அரை டஜன் பேர்வழிகள் உதவியா யிருக்கின்றனர். இவர்களுக்கும் குறிப்பிட்ட உத்தியோக மில்லை யெனினும், ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டுதான் இவர்கள் இருக்கின்றனர். அவரவர்கள் எந்த வேலையில் திறமை வாய்ந்தவர்களோ அந்த வேலையையே அவர்கள் செய்கிறார்கள். ஒருவர் சரக்குக் கையிருப்பையும், அதில் ஏற்படுகிற குறைவுகளையும் பரிசோதிக்கிறார். இன்னொருவர் எல்லோருடைய வேலையையும் மேற்பார்த்து சோதனை செய்கிறார்; மற்றுமுள்ளவர்கள் இங்ஙனமே தங்கள் தங்கள் மனோ சக்திக்கும், தேக சக்திக்கும் இசைந்தவாறு வேலைகளைச் செய்கின்றனர்.

ஒருவித ஏற்பாடுமின்றி தாறுமாறாக இருப்பதாக இது தோன்றலாம். வேலை நடந்தாக வேண்டுமென்ற ஒரே நோக்கங் கொண்ட ஒரு சங்கத்தார் அவ்வேலையைச் செய்து முடிப்பது கஷ்டமல்ல. அதிகார தோரணைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்றும், இன்னாருக்கு இவ்வளவு அதிகாரந்தான் உண்டென்றும், வரையறுத்து, எல்லைகட்டி வேலை செய்ய வேண்டிய தொல்லை அவர்களுக்கில்லை. அவர்கள் பட்டங்களைப் பற்றியும், பதவிகளைப் பற்றியும் சிந்திப்பதே யில்லை. உத்தியோகங்களும் இதர ஆடம்பரங்களும் இருந்தால் அவரவர்கள் வேலையைச் செய்யாமல் மற்றவரை விட தங்களுக்கு ஏன் பெரிய உத்தியோகம் கிடைக்கவில்லை யென்று சண்டை போட்டுக் கொள்வதிலும், 'குருட்டு யோசனை செய்வதிலும் தான் காலங்கழியும்.

பதவியும், அதிகாரமும் இல்லாமையால் உத்தியோக ஆர்ப்பாட்டமும், ஒருவர்மீது ஒருவர் அமுல் செலுத்துவதும் இவைகளுக்கொன்றும் இடமில்லை. எந்தத் தொழிலாளியும் எவரிடமும் சென்று பேசலாம். ஒரு வேலையாள் நேரில் தொழிற்சாலைத் தலைவரைக் கண்டு பேசிவிட்டால், தன்னை அலட்சியம் செய்துவிட்டதாக மேஸ்திரி கோபங் கொள்ளுகிறதில்லை. ஆனால் எந்தத் தொழி

லாளியும் இங்ஙனம் நேரில் போய் தலைவருடன் பேச அவசியம் ஏற்படாது. மேஸ்திரிகளுக்கெல்லாம் தொழிலாளரிடம் அக்கிரமமாய் நடந்துகொண்டால், மறுநாள் தாங்கள் மேஸ்திரியாயிருக்க முடியாதென்று நன்றாய்த் தெரியும். அநீதம் எவருக்கும் வழங்கக்கூடாது. அதற்கு சற்றேனும் நாங்கள் இடங்கொடோம். எந்த மேஸ்திரியாவது அந்தஸ்துக் கொண்டாடிக் கொண்டு அமுல் செலுத்துவதாகத் தெரியவந்தால் உடனே அவரை வேலையிலிருந்து நீக்கி விடுவோம். அல்லது திரும்பவும் இதர வேலையாட்களைப் போல் இயந்திரத்தில் வேலைசெய்ய அனுப்பி விடுவோம். தொழிலாளரிடம் ஏற்படும் தொல்லைகளுக்கெல்லாம் பெருவாக சில்லரை அதிகாரிகள் அக்கிரமமாய் அதிகாரத்தைத் துர்ப்பிரயோகம் செய்வதுதான் காரணம். வர்த்தக ஸ்தலங்கள் பலவற்றில் தொழிலாளருக்கு நீதி வழங்கப்படவில்லை என்றும் நான் அஞ்சுகிறேன்.

நம்முடைய லக்ஷியம் முற்றும் வேலையிலேயே இருக்க வேண்டும். அதுவே நம்மை ஆட்கொள்ள வேண்டும். அதனால் தான் எங்கள் தொழிற் ஸ்தாபனங்களில் உத்தியோக பதவி பட்டங்கள் கிடையாது. பதவி பட்டத்தினால் விளைவதெல்லாம், வேலை நடைபெறாமல் பட்டத்தையே பெரிதாகக் கருதி கௌரவம் பாராட்டிக் கொள்ளுவது தான். "இந்த மனுஷனுக்குத் தான் தான் பெரிய மனிதன் என்று பாராட்டிக் கொள்ளுவதையும், இதராளெல்லாம் தாழ்ந்தவர்களென்று ஏளனஞ் செய்வதையும் தவிர வேறு வேலை கிடையாது" என்று ஒரு பட்டங்கட்டித் தொங்க விடுவதற்கு ஒப்பாகும் எத்தகைய பதவியும். பட்டமும் பதவியும் அதை வகிப்பவர்களுக்கு இங்ஙனம் தீமை விளைவிப்பதுமன்றி பிறருக்கும் கெடுதலாகவேயிருக்கும். பட்டம் பதவி வகிப்பவர்கள் உண்மையான தலைவர்களாயில்லாமையால் பொது ஜனங்களுக்குள் ஏற்படும் அதிருப்திக்கு அளவில்லை. உண்மையான தலைவராயிருப்பின் அவரை யாரும் ஏற்பார்கள். சரியான திட்டங்கள் செய்து, வழிகாட்டி அவ்வப்போது உத்தரவுகள் அனுப்பும் ஆற்றலுள்ளவர்கள் தான் தலைவர்களாயிருக்கக்கூடும். உண்மையான தலைவர்கள் பட்டம் வகித்தால் அதைப்பற்றி அவர் தானாகவே புகழ்ந்து பேசிக்கொள்ள மாட்டார். பிறரிடமிருந்துதான் நாம் கேட்டறிய வேண்டும்.

இந்தப் பட்டங்களினால் தொழில் முறைக்கு அதிக தீமை விளைந்திருக்கிறது. பதவிக்குத் தகுந்தபடி பொறுப்பையும் பகிர்வதுதான் எல்லாவற்றையும் விட பெரிது; இதனால் பொறுப்பே அடியோடு இல்லாமல் போய்விடுகிறது. பொறுப்பைச் சிறிது சிறிதாகப் பிரித்துத் தனித்தனியாய் இலாகாக்கள் ஏற்படுத்தினால்

உண்மையாய் யார்தான் ஜவாப்தாரி என்று கண்டுபிடிப்பதே கஷ்டமாகிவிடும். மெதுவாகத் தன்னைவிட்டு கழிந்தால் போதுமென அவரவர்கள் பிறரைக் காட்டிவிட்டுவிட்டு இருந்து விடுவார்கள். ஆனால் எந்த ஸ்தாபனமும் வளர வேண்டுமானால் அதைச் சேர்ந்த ஒவ்வொருவரும், தன்னுடைய பதவியையும பட்டத்தையும் லக்ஷியஞ் செய்யாமல், தான் ஈடுபட்டிருக்கும் வேலையின் நன்மைக்கு உரித்தானதென்று தனது அனுபவத்தில் தென்படுகிறதெல்லாவற்றையும் செய்து முடிக்கவேண்டும். ரயில்வே கம்பெனிகளில் சிலர், "இவ்விஷயம் நாங்கள் கவனிக்க வேண்டியதில்லை, 100 மைலுக்கு அப்பாலுள்ள வேறொரு இலாகாவைச் சேர்ந்தவர்களுடைய பொறுப்புதான் இது" என்று சொல்லி தட்டிக் கழித்து விடுகிறார்கள். இதனால் பெரிய இடையூறு நேருகின்றது.

உத்தியோகஸ்தர்கள் தங்கள் பதவிகளையே பெரிதாகக் கருதி வேலையில் லக்ஷியஞ் செலுத்துவதில்லை யென்று ஒருவகை புகார் இருந்து வருகின்றது. இதைச் சீர்திருத்த, முதலாவதாகப் பட்டம் பதவிகளை யொழிக்க வேண்டும். சில அவசியமிருக்கலாம். பொது ஜனங்கள் தொழில் நடத்துவதற்கு சௌகரியமாய் இருக்கும் பொருட்டு சில உத்தியோகங்கள் இருந்துதானாக வேண்டிவரும். ஆனால் பொதுவாகப் பட்டங்களை ஒழிப்பதுதான் நல்லது. உண்மையில் வேலை நடக்க வேண்டுமென்று சிரத்தை யுள்ளவருக்கு பட்டம் ஒன்றும் தேவையில்லை. அவருடைய வேலையின் பெருமையினாலேயே அவர் கௌரவ மடைகிறார்.

எங்கள் தொழிற்சாலையில் மிகவும் அடியிலிருந்து தான் வேலைக்கு ஆள் பொறுக்கி நியமிக்கிறோம். எவருடைய பழைய சமாசாரங்களைப் பற்றியும் நாங்கள் விசாரப்படுகிறதில்லை. ஒன்றுக்கும் பிரயோஜன மில்லையென்று தள்ளி விடும்படியானவராக ஒருவரையும் இதுவரையில் நான் பார்த்ததில்லை. சரியான சமயம் வாய்த்தால் ஏதாவது ஒரு வகையில் எவரும் பயன் படக்கூடும். இதனால்தான் எவருடைய பூர்வீக யோக்கியதையைப் பற்றியும் நாங்கள் கவலைப் படுகிறதில்லை. நாம் வேலைக்குக் கூலி கொடுக்கிறோமே யன்றி யோக்கியதைக்குக் கொடுக்கிறதில்லை. எவனாவது ஒருதரம் ஜெயிலுக்குப் போயிருந்தால் அதனால் அவன் திரும்பவும் ஜெயிலுக்குப் போவான் என்று சொல்லிவிட முடியாது. முன் ஜெயிலுக்குப் போனதனால் அவன் திருந்தவே மாட்டான் என்று எண்ணுவதும் தவறு; ஆனால் கூடிய சீக்கிரத்தில் தன்னை நல்லவனாக்கிக் கொள்ள சமயம் வாய்க்காதா என்று பிரயத்தனப்படுவது சகஜம். முந்தி ஏதோ செய்து விட்டதற்காக ஒருவரையும் வேலைக்குக் கூடாதென்று எங்கள் நியமன இலாகாவில் தள்ளி விடுகிற

இல்லை. வேலை செய்வதற்கு ஆற்றல் இருக்கிறதா என்பதைத்தான் கவனிப்போம். இவ்வித ஆற்றல் இல்லாத எவரும் வேலைக்கு வரவேமாட்டார்களென்பதை யோசிக்க வேண்டும். மேலும் எங்கள் கம்பெனியில், வேலை செய்பவருக்குத்தான் இடம் கிடைக்குமென்பதை யாரும் அறிந்திருப்பார்கள்.

ஒருவனுடைய பழங் கதையைப்பற்றி நாங்கள் கவலைப்படுகிறதில்லை என்று திரும்பவும் வற்புறுத்துகிறேன். கலாசாலைகளில் படித்தவராயிருந்தால் மற்றவரைவிட சீக்கிரமாய் வேலை கற்றுக்கொள்ள சக்தியுள்ளவராயிருக்கலாமே யன்றி, அவர்களும் கூட அடியிலிருந்து வேலை கற்றுக்கொண்டு தானாகவேண்டும். நல்ல திறமை யுள்ளவராக தமது வேலை மூலம் காட்டினால், தானாக மேன்மேலும் விருத்தி யடையலாம். ஒவ்வொரு மனிதனுடைய முன்னேற்றமும் வாழ்வும் அவரையே பொருத்திருக்கிறது. மனிதர்கள் திறமையைச் சரியானபடி அங்கீகரிக்கவில்லை யென்று பலவாறாகச் சிலர் பேசுகிறார்கள். ஆனால் எங்கள் தொழிற்சாலையில் அவரவர்கள் வேலைக்குத்தக்கபடி கட்டாயம் அங்கீகாரம் பெறுவார்கள்.

இங்ஙனம் அங்கீகாரம் பெற வேண்டுமென்று ஆவல் இருப்பது சகஜந்தான் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன். ஆனால் தற்காலம் அனுசரிக்கப்படும் தொழில் முறையினால் இந்த ஆவல் ஒருவித மனப் பேய்போல் மனிதர்களை பிடித்து வாட்டுகிறது. முன்னர் எந்த மனிதனும் தன்னுடைய உழைப்பினாலேயே முன்னுக்கு வருவது வழக்கம்; ஒருவருடைய தயவையும் அவன் எதிர்பார்க்க வேண்டிய அவசிய மிருக்கிறதில்லை. இந்தக் காலத்திலோ நல்ல செல்வாக்கு உள்ளவர் எவரையேனும் தொத்திக்கொண்டு மேலேற வேண்டியிருக்கிறது. அங்ஙனம் தங்களுக்கு சிபார்சு செய்யக் கூடியவர் எவரேனும் ஒருவர் கிடைத்தால் அதுவே பெரிய அதிருஷ்டமாகக் கருதப்படுகிறது. இதைத்தான் நாங்கள் பலமாகக் கண்டிக்கிறோம்; சிபார்சுக்கே நாங்கள் இடங்கொடுக்கிறதில்லை. பிறருடைய தயவை சம்பாதித்து அங்கீகாரம் பெற வேண்டுமென்ற எண்ணமிருக்கிற வரையில் வேலையில் சிரத்தையே யிராது. கையிலுள்ள வேலை முக்கியமென்ற எண்ணம்போய், தயவை நாடி முன்னுக்கு வரவேண்டுமென்ற ஆசைதான் பெரிதாகி விடுகிறது. இவ்வித ஆசை உண்டாவது வேலைக்கும் நல்லதல்ல; அந்த ஆளுக்கும் நல்லதல்ல. ஆனால் தற்காலத்தில் எல்லாத் தொழிலிலும் இத்தகையார் இருக்கின்றனர். முதலாளியின் தயவைப் பெற்றுவிட்டால் தமக்கு விசாரமில்லை என்று அவர்கள் நினைக்கிறார்கள். மேலும், இப்பொழுதுள்ள தொழில் முறையும் இத்தகைய எண்ணத்திற்கு இடங்கொடுக்கிறது. மேஸ்திரிகள் மனிதர்கள் தானே;

தங்கள் கீழுள்ள ஆட்களின் க்ஷேமலாபங்களும், இன்ப துன்பங்களும், கஷ்டமும் சுகமும், தங்கள் கையிலேயே இருப்பதாக அவர்கள் நினைத்து விடுகிறார்கள். அங்ஙனம் அவர்களை முகஸ்துதி செய்து அவர்களுக்குக் கீழுள்ளவர்களில் சிலர் தூக்கிவைத்து விடுகிறார்கள். இதனால் மற்றவர்களும் அவர்களை துதிசெய்து தயவு சம்பாதிக்கப் பார்க்கிறார்கள். இங்ஙனம் மனப்பான்மை கெட்டு அடிமை புத்தி புகுந்துவிடுகிறது. இதனால்தான் நான் பட்டமும் பதவியும் ஒருவருக்கும் இருக்கக் கூடாது என்று மிகவும் வற்புறுத்தி எங்கள் தொழிற்சாலையில் அதற்கு இடமும் கொடுக்கவில்லை.

சாதாரணமாய் தான் மேல் பதவிக்குவந்து கொண்டிருப்பதாக அறியாமலே ஒருவர் முன்னேறி வருவது எங்கள் கம்பெனியில் சுலபம். சிலர் வெகு சிரமப்பட்டு வேலை செய்பவர்களாயிருப்பார்கள்; ஆனால் அவர்களுக்குப் புத்தி தீட்சண்யமாயில்லாமல், எதையும் பற்றி யோசித்து ஊன்றி கவனிக்க சக்தியற்றிருக்கலாம். இவர்கள் தங்கள் உழைப்புக்கு ஏற்றவாறு ஸ்தானங்கள் பெறுவார்கள். ஆனால் இவர்களிடம் பொறுப்பாக தலைமை வகித்து நடத்த வேண்டிய எந்த வேலையையும் ஒப்புவிக்க முடியாது. நாம் கனவுலகில் இல்லை. நாளடைவில் அவரவர்களுக்கு உரித்தான ஸ்தானத்தை எவரும் அடைவார்களென்பது உறுதி.

எங்கள் ஸ்தாபனத்தில் எல்லா இலாகாக்களும் செவ்வையாயிருக்கின்றனவென்று நாங்கள் திருப்தியடைந்து சும்மா இருந்துவிடுகிறதில்லை; எப்பொழுதும் எங்ஙனம் இன்னும் மேலாக நடத்தலாம் என்றே யோசிப்பது எங்கள் வழக்கம். மேல் பதவிக்கு வேண்டிய யோக்கியதை பொருந்திய எவருக்கும் தானாகவே அப்பதவி கிட்டும். பதவிகளும், பட்டங்களும் எங்கள் ஸ்தாபனத்தில் கிடையாதாதலால், மேன்மேலும் நன்றாய் வேலை செய்யக்கூடியவர்கள், தாங்களாகவே அவ்வேலைகளை மேற்போட்டுக்கொண்டு செய்கிறார்கள். தனக்கு அந்தப்பதவி கிடைக்கும், இந்தப்பதவி கிடைக்கும் என்ற எவ்வித ஆசையும் அவர்களைக் கட்டுப்படுத்துகிறதில்லை. குறிப்பிட்ட உயர்ந்த ஸ்தானம் ஒன்றும் ஒருவருக்கும் தனியாகக் கிடையாது. அவரவர்கள் திறமையால் முதல்தரமானவர்கள் முதன்மையான ஸ்தானங்களைத் தாங்களாகவே பெறுகிறார்கள். எப்பொழுதும் வேண்டிய வேலை இருந்துகொண்டேயிருக்கிறது. அந்த வேலையை செய்துமுடிக்க வேண்டுமென்ற லக்ஷியமிருந்தால் வேலைக்குத் தகுந்தபடி பதவிகளும் தொழிலாளருக்குக் கிடைக்கும். மனிதர்களுக்குத் தகுந்தபடி பதவிகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற விபரீத நோக்கமில்லாத வரையில், சுலபமாக வேலை நடக்

கும். நாளடைவில் தானாகவே ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலை செய்து அதிகப்பணமும் சம்பாதித்தல் எந்த ஆளுக்கும் எளிது.

எங்கள் தொழிற்சாலையிலுள்ளவர்களெல்லாம் இங்ஙனம்தான் அடியிலிருந்து மேலே வந்தார்கள். தொழிற்சாலையின் தலைவர் சாதாரண "மெஷின்" வேலைதான் முதன் முதல் செய்ய ஆரம்பித்தார். இன்னொரு முக்கியமான இலாகாவுக்குத் தலைமை வகிப்பவர் தொழிற்சாலையைக் கூட்டித் துப்புக்கார வேலை செய்பவராகத்தான் தொடக்கத்தில் அமர்ந்தார். எங்களிடம் வேலை செய்பவர்கள் ஒவ்வொருவரும் எங்களிடம் வந்து வேலை கற்றுக்கொண்டுத் தேர்ந்தவர்தான். விசேஷமான எந்தக் கொள்கையையும் நாங்கள் ஸ்தாபித்து அனுசரிக்கவில்லை. ஏதேனும் கொள்கை எங்கள் கம்பெனிக்கு உண்டா என்று கேட்டால், "எந்த வேலையையும் இன்னும் நன்றாகச் செய்யக்கூடும்" என்பதையே நாங்கள் வற்புறுத்துவோம். எந்த வேலையையும் இன்னும் சீக்கிரமாகவும், செவ்வையாகவும் நடத்த வேண்டுமென்று தூண்டுகோல் போடுவதில் தான் தொழிற்சாலைகளின் இரகசியம் அடங்கி யிருக்கிறது.

வேலை துரிதமாக நடந்து உற்பத்தி அதிகரிப்பதைப் பொருத்திருக்கிறது ஒரு இலாகாவின் உயர்வும் தாழ்வும். உற்பத்தியும், அதன் செலவும் சம்பந்தா சம்பந்தமற்றவை. தங்கள் இலாகாவின் செலவைப் பற்றி கவனித்துக்கொண்டு மேஸ்திரிகளும், சூபரிண்டெண்டுகளும் உட்கார்ந்திருந்தால் வீண்காலம் கழியும். ஆட்களின் கூலியையும், சாமான்களின் விலையையும் எந்த மேஸ்திரியும் கட்டுப்படுத்தி சாத்தியமில்லை; அதைப்பற்றி அவர்கள் விசாரப்படக்கூடாது. ஆனால் தங்கள் இலாகாவில் நடக்கும் வேலையின் மூலம் உற்பத்தி செய்யப்படும் சரக்கின் கிரயத்தை அவர்கள் சுலபமாக்கலாம். வேலை செய்யும் ஆட்களுக்குத் தகுந்தபடி சரக்கும் செய்யப்படுகிறதா என்று ஒவ்வொரு மேஸ்திரியும் குறிப்புத் தயார் செய்ய வேண்டும். சூபரிண்டெண்டு எல்லா மேஸ்திரிகளுடைய குறிப்புகளையும் பார்வையிட்டுத் தான் சேர்த்துக் குறித்து வைத்துக் கொள்ளுகிறார். ஏதாவது உற்பத்தியில் குறைவு ஏற்பட்டிருந்தால் இந்தக் குறிப்பிலிருந்து உடனே கண்டுபிடித்து விடலாம். அதன் மேல் சூபரிண்டெண்டு மேஸ்திரியை அழைத்து ஏதனால் குறைவு உண்டாயிருக்கிறதென்று விசாரிப்பார். பிறகு மேஸ்திரி உஷாராகி தன் கீழுள்ள ஆட்களிடம் சரியானபடி வேலை வாங்குவார். இதனால் இன்னும் நன்றாக வேலை செய்ய ஆட்களுக்கு ஆவலையுண்டாகிறது. மேஸ்திரிக்குக் கணக்குவேலை தெரிந்திருக்கவேண்டுமென்பதில்லை. தன் கீழுள்ள மெஷின்களும், அதில் வேலை செய்

யும் ஆட்களும் சரியானபடி வேலை செய்தால், மேஸ்திரியும் தன் வேலையைச் செவ்வையாகச் செய்தாய் விட்டதாகக் கருதலாம். உற்பத்தியின் அளவையே அவர் குறியாக வைத்துக்கொள்ள வேண்டும். பல விஷயங்களைப் பற்றி சிரமப்பட அவசியமே அவருக்கு இல்லை.

இங்ஙனம் எவ்வளவு வேலை தன் இலாகாவில் நடக்கிறது என்று ஒவ்வொரு மேஸ்திரியும் குறித்து வைக்கவேண்டியிருப்பதால் வேலையிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாயிருப்பார்கள். ஆட்களைப் பற்றியே யோசிக்க மாட்டார்கள். எந்தெந்த வேலைக்கு யார் யார் லாயக்கோ அவர்களுக்கு அந்த வேலையைக் கொடுக்காமல், தங்களுக்கு வேண்டிய பேர்வழிகளுக்கு நல்ல வேலையைக் கொடுக்கிறதென்று எந்த மேஸ்திரியாவது ஆரம்பித்தால், வேலையின் கணக்கைப்பற்றிய குறிப்பிலிருந்து இது வெளிப்பட்டுவிடும்.

ஆட்களைப் பொறுக்குவது சிரமமான வேலையில்லை. முன்னரே கூறியபடி வேலைக்குத் தகுந்தபடி தாங்களாகவே ஆட்கள் ஏற்பட்டு விடுவார்கள். சாதாரணமாய் தொழிலாளிகளில் 100-ல் 5 பேருக்கு மேல் பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பவர்கள் கிடையாது. அதிக கூலி சம்பாதிக்க ஆசையிருந்த போதிலும், அதிகப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள அவர்கள் பின் வாங்குகிறார்கள். 100-ல் 25 பேர்தான் மிகக் குறைவான பொறுப்புள்ள சாதாரண உத்தியோகத்தைக் கூட ஏற்க சம்மதிக்கிறார்கள். அதுவும் மெஷின் வேலையைவிட அதில் அதிகக் கூலி கிடைப்பதால் தான். கருவிகள் செய்வதில் விசேஷ கவனஞ் செலுத்துகிறவர்கள், ஆயுத இலாகாவிற்குப் போய் விடுகிறார்கள்; ஆங்குப் பொறுப்பு அதிகம் கிடையாது; கூலியோ கூடக் கிடைக்கும். பெரும்பான்மையோர் எல்லாப் பொறுப்பையும் பிறர் வகித்து இவர்களுக்காக வேலைசெய்ய வேண்டுமென்று விரும்புகிறார்களே யன்றி அவர்களே முன்னுக்கு வருவதரிது. எனவே, தாமாக பொறுப் பேற்று முன்னேறி வருபவர்கள் சொற்பத் தொகைதான்.

நான் ஏற்கெனவே கூறியபடி எந்த வேலையும் முற்றும் செவ்வையாக நடைபெற வில்லை; இன்னும் நன்றாக அதைச் செய்யலாம் என்னும் ஒரே கொள்கையைத்தான் நாங்கள் அனுசரிக்கிறோம். வேறெவ்விதமான கொள்கையும் எங்களிடம் கிடையாது. முன்னேற்றத்துக் குரித்தான யோசனைகளைச் சேகரிக்க ஒரு வகை ஏற்பாடு செய்துள்ளோம். இதனால் எந்தத் தொழிலாளியும் தனக்கு ஒரு யோசனை தோன்றினால் அதைத்தெரிவித்துக் கொள்ளலாம். அதன் மேல் அதை அனுசரித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

மோட்டாரின் ஒரு பாகத்தில் மட்டும் ஒரு உருப்படிக்கு ஒரு டாலரில் 100-ல் ஒரு பங்கு மீதி பிடித்தாலும் அதனால் எவ்வளவோ லாபம் வரும். ஒன்றில் மட்டும் இங்ஙனம் சிக்கனம் பிடித்து வருஷத்தில் 12 ஆயிரம் டாலர் நாங்கள் லாபம் பிடித்திருக்கிறோம். இதேமாதிரி ஒவ்வொன்றிலும் லாபம் பிடித்தால் மொத்தத்தில் லக்ஷக்கணக்காய் மிச்சமாகும். எனவே, லாபக் கணக்கு பார்ப்பதில் ஒரு டாலரில் ஆயிரத்தில் ஒரு பங்கு மீதமானாலும் கவனிக்க வேண்டும். புதிதாய் ஒரு மாறுதல் ஒன்றைப் புகுத்துவதால் லாபம் ஏற்படக் கூடுமென்றும், அம் மாறுதலினால் உண்டாகும் செலவு தானாக மூன்று மாதத்திற்குள் ஈடாகும்போல் தோன்றினால் உடனே அம் மாறுதலை அங்கீகரித்து விடுவோம். உற்பத்தியை அதிகரித்து செலவைக் குறைப்பதைப் பற்றி மட்டும் நாங்கள் புதிய யோசனைகளைக் கவனிக்கிறதாக நினைக்கக்கூடாது. வேலையையும் இலகுவாக்கும் வகையில் எவ்வளவோ புதிய மாறுதல்களைச் செய்திருக்கிறோம். மனிதனின் உயிரை வாங்கும்படியான வேலையை யெல்லாம் ஒழித்துவிட வேண்டு மென்பது எங்கள் கருத்து. இப்பொழுது அநேகமாய் இத்தகைய வேலை எல்லாவற்றையும் அடியோடு தொலைத்தாய்விட்டது. இதனால் செலவுங்கூட குறைவாகி விடுகிறது. இதைத் தவிர ஒரு சாமானை நாங்களே செய்துகொள்ளுவது மலிவாகுமா, வெளியில் விலைக்கு வாங்குவது மலிவாகுமா எனபதையும் விசாரித்து அதிகச் செலவை குறைத்து விடுகிறோம்.

இங்ஙனம் நாங்கள் யோசனை கேட்பதால் பல இடங்களிலிருந்தும் யோசனைகள் வருவது வழக்கம். போலந்து தேசத்திலிருந்து வந்திருக்கும் தொழிலாளரின் யோசனைகள்தான் நல்ல புத்திசாலித்தனமாயிருக்கின்றன. ஆங்கிலமே பேசத்தெரியாக ஒருவர் தன் மூளையைப் பிரயோகித்து தனது இயந்திரத்திலுள்ள ஒரு கருவியைக் கொஞ்சம் சாய்வாக வைத்தால் அது அதிக நாள் நீடித்திருக்கும் என்று குறிப்பிட்டார். அவர் யோசனை மிகவும் பொருத்தமாயிருந்தது. அதை ஏற்றுக்கொண்டதால் ஏராளமாய்ப் பணம் மிச்சமாயிற்று. "தமிர்" வேலை செய்யும் இன்னொருவர்—அவரும் போலந்துக்காரர்தான்—இதேமாதிரி நல்ல யோசனை கூறியதால் அவர் இலாகாவில் செலவு குறைந்தது. இயந்திரத்தைத் துடைத்து சுத்தம் செய்வது இயந்திர வேலை செய்பவர்களின் வேலையில்லையெனினும், இயந்திரத்தைச் சுத்தமாய் வைத்துக் கொண்டிருப்பதிலிருந்து தொழிலாளியின் புத்தி கூர்மையை ஒருவாறு அறியலாம்.

எங்கள் இயந்திரங்களெல்லாம் ஆழ்ந்து யோசனை செய்த பின்னரே செய்யப்படுகின்றன. ஒவ்வொரு சிறிய விஷயத்தையும்

நாங்கள் ஊன்றி கவனிப்பது வழக்கம். சில சமயம் மாத்திரைல் இயந்திரத்தைப் போன்ற அச்சு ஒன்று செய்து பார்த்துக்கொள்ளுவோம். அல்லது கருப்புப் பலகையில் வரைந்து பார்ப்போம். நாங்கள் பழைய வழக்கம் என்று கண்மூடித்தனமாய் எதையும் அனுசரிக்கிற தில்லை. ஆனால் எதையும் அனுபவ பூர்வமாய்ப் பார்த்துக் கண்டுகொள்ளாமல் தானாக சரியாகிவிடும் என்றும் விட்டு விடுகிற தில்லை. இதனால் எந்த உத்தேசத்துடன் ஒரு இயந்திரம் செய்யப் படுகிறதோ அது நிறைவேறாமல் போகிறதில்லை. 100-ல் 90 எப்பொழுதும் கைகூடியே வந்திருக்கிறது.

இயந்திரங்களில் ஏற்பட்டிருக்கும் புதிய மாறுதல் எதுவும் அவைகளில் வேலைசெய்யும் ஆட்களின் யோசனைகளை அனுசரித்தே செய்யப்பட்டவை. ஆட்களைத் தொந்திரவு செய்து கட்டுப்படுத்தாமல் விட்டுவிட்டால், அவர்கள் தாங்களாகவோ தாங்கள் உழைக்கவே வந்திருக்கிறோமென்பதை உணர்ந்து தங்கள் மனப்பூர்வமாய் எத்தகைய சிறிய வேலையையும் செய்து முடிப்பார்களென்பது என் கருத்து.

# அத்தியாயம் 8.

## தொழிற்சாலை அமைப்பு

தொழிற்சாலையில் மூளையைப் பிரயோகிக்க இடமில்லையா?—இயந்திர வேலைக்கு தேகபலம் அவசியமில்லை—அங்க ஹீனர்களுக்கும் வேலை கொடுக்கலாம்—ஆளுக்குத் தகுந்த வேலை—எவரும் எந்த வேலைக்காவது லாயக்கா யிருப்பார்கள்—தொழிற்சாலையில் கண்டிப்பும் ஒழுங்கும் அவசியமாகும்—தொழிற்சாலை அமைப்பு—வெளிச்சம், சுத்தம், காற்று முக்கியம்—விபத்துக்களைத் தடுக்கப் பாதுகாப்புகள்.

ஒரே வேலையை திரும்பத் திரும்ப ஒரே வகையில் செய்து கொண்டிருத்தலைக் கண்டால் சிலருடைய மனதிற்கு அருவருப்பா யிருக்கும். எனக்கு அதைப் பார்த்தால் அதிக நடுக்கம். ஒரே வேலையை நாள்தோறும் செய்வதைக் கண்டு எனக்கு இங்ஙனம் வெறுப்பா யிருப்பினும் சிலருக்கு அதைப்பற்றிய கவலையே கிடையாது. இவர்கள் புத்தியை உபயோகித்து சிந்தனை செய்து ஒரு வேலையைச் செய்வதையே விரும்புகிறதில்லை. தேக சிரமப்படுவதுடன் மூளையும் பிரயோகிக்க வேண்டிய வேலைகளுக்கு அதிகம் பேர் வருகிறதில்லை. ஒரு வேலை சிரமமா யிருக்கிறதாலேயே அதை ஏற்றுக்கொண்டு செய்யக்கூடிய பேர்வழிகள் தான் சரியான வேலையாட்கள். ஆனால் சாதாரணமாய் எந்தத் தொழிலாளியும் அதிக தேகப் பிரயாசை யில்லாததும், மூளையைப் பிரயோகித்து உழைக்க வேண்டிய அவசிய மில்லாததுமான வேலைகளைத்தான் நாடுகிறார்கள். இங்ஙனம் கூற நான் வருந்துகிறேன். புதிது புதிதாக யோசனைசெய்து அபிவிருத்தி முறைகளை அனுசரிக்க திட்டங்கள் அமைக்கும்படியான மூளையுள்ளவர்கள், தினே தினே ஒரே விதமான வேலையைச் செய்து கஷ்டப்படும் தொழிலாளரைக் கண்டு அனுதாபப் படுவார்கள். ஆனால் இங்ஙனம் தங்களிடம் அனுதாபங்கொண்டு வேலைசெய்யும் முறையை மாற்ற யத்தனிப்பவர்களைத் தொழிலாளர் பாராட்டுகிறதில்லை.

நன்றாய் ஊன்றி கவனித்தால் பெரும்பான்மையான வேலைகளில் இங்ஙனம் திரும்பத் திரும்ப செய்ததையேதான் செய்ய வேண்டி யிருக்கிறது. தொழில்களில் ஈடுபட்டிருக்கிறவர்கள் தின

சரி தவறாமல் குறிப்பிட்ட ஒரு முறையையே ஏற்பாடாய் அனுசரிக்கிறார்கள். ஒரே வகைப்பட்ட வழியையேதான் அவர்கள் தொடருகிறார்கள். ஒரு பாங்கியில் வேலை செய்யும் தலைவர் முதல் குமாஸ்தாக்கள் உத்தியோகஸ்தர்கள் உள்பட எல்லோரும் ஒவ்வொரு நாளும் மணிப்பிரகாரம் இன்ன வேலைதான் என்று அமைத்துக்கொண்டு, அந்தப்படியே உழைக்கிறார்கள். சில மனிதருக்கும், சில வேலைகளுக்கும் இங்ஙனம் அட்டவணைபோல் வேலை முறையை வரிசைக் கிரமமாய் குறித்து வைத்துக்கொண்டு அனுசரிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் அதனால் மூளையைப் பிரயோகிக்கக் கூடியவர்களும் அவ்வாறே செய்துகொண்டே போக வேண்டியதின் அவசியம் புரியவில்லை. நல்ல தேர்ச்சி யடைந்தவர்களுக்கு சரியான இடங்கள் ஏராளமாயிருக்கின்றன; ஆனால் தேர்ச்சியடைய வேண்டுமென்று அதிகம் பேர் விரும்புகிறது கூட இல்லை. விருப்பம் இருந்தாலும் அதற்கு வேண்டிய பயிற்சியைப் பெறும் தைரியம் இருப்பதில்லை. விருப்பமிருந்தால் மட்டும் தேர்ச்சியடைந்து விட முடியாது.

மனித சுபாவம் இவ்வாறு தான் இருக்க வேண்டுமென்று நாமாகவே நினைத்துக்கொண்டு விடுகிறோமே யன்றி, உண்மையில் அது எவ்வாறிருக்கிற தென்று ஊன்றி விசாரிக்கிறவர்கள் வெகு சொற்பம். மூளையை உபயோகிக்க வேண்டிய அவசியம் சங்கீதத்திலும், சித்திரம் வரைவதிலும்தான் இருக்கிறதென்று சாதாரணமாய் நாம் நினைக்கிறோம். ஒரு வேலையுமில்லாமல் சுகஜீவனம் பண்ணுகிறவர்கள் வாழ்க்கையில்தான் மூளையைப் பிரயோகிக்கும் வேலைகள் இருப்பதாக ஒரு தவறான கொள்கையிருந்து வருகிறது. உண்மையில் புத்தியைப் பிரயோகித்து வேலைசெய்ய ஒருவர் விரும்பினால் சாதாரணமான சங்கீதத்தையும், ஓவியத்தையும் விட்டு மனிதர் சுபாவத்தைப் பற்றிய விஷயங்களை ஆராயட்டும். தொழில் உலகத்தில் அனுசரிக்க வேண்டிய முறைகளைப்பற்றி சிந்தனை செய்யத் தகுந்தவர்கள் நமக்குத் தேவை. தொழில் முறையில் சரக்குகளை அபிவிருத்தி செய்வதெங்ஙனமென்றும், அதைச் செய்பவர்கள் நடந்துகொள்ள வேண்டிய வகை எப்படியிருக்க வேண்டுமென்றும் மூளையைப் பிரயோகித்து உழைப்பவர்கள் நமக்குத் தேவை. சமூகத் துறையிலும், தொழிற் துறையிலும் நெறிமுறைத் துறையிலும் இப்பொழுது இருந்து வரும் ஊழல்களை நிவர்த்திக்கத் தகுந்த மூளை யுடையவர்கள் அவசியமாயிருக்கிறது. நமது புத்தியை வெகு அற்ப விஷயங்களிலேயே நாம் இதுவரையில் பிரயோகித்து வந்திருக்கிறோம். வாழ்க்கையில் நேர்மையான, விரும்பத்தக்க, நன்மை படைத்த எல்லாவற்றிற்கும் பொருந்தும்படியாக வாழ்க்கை முறையைச் சீர்திருத்தி அமைக்கும் ஆற்றல் படைத்த

வர்கள் தோன்ற வேண்டும். நல்ல எண்ணங்களும் ஏற்பட்டு, அவைகளுக்குத் தக்க முறைகளும் அமைந்தால் எளிதில் முன்னேற்றம் அடையலாம்.

தொழிலாளர் சுகமாக வாழ்வதற்கு, அவர்கள் குறைவாக வேலைசெய்ய வேண்டுமென்பதில்லை; ஆனால் அவர்கள் அதிகமாக உழைக்க உதவிபுரிய மார்க்கங்கள் கற்பிக்கலாம் மற்றவர்களும் லாபம் அடைந்து சுகவாழ்க்கை எய்த வேண்டுமென்ற கருத்துடன் மட்டும் நாம் நமது திட்டங்களைச் செய்வோமாகில், அவைதான் நீடித்திருக்கக் கூடியவையாகும். மனித வாழ்க்கையில் பொருளாதார முறையில் அத்தகைய திட்டங்களே லாபந்தரத் தக்கவையாயுமிருக்கும். நமது ஜனங்கள் தொழிற் துறையில் நீதியும், நெறியும், தயாளமும் இருக்க இடமிருக்கிறது என்பதை அங்கீகரித்து நடப்பதுதான் அவசியம். தொழிற் துறையில் இக்குணங்களுக்கு இடமில்லாவிடில் தொழில்கள் சாகவேண்டியது தான். ஆனால் அவைகளை அனுசரிப்பது அசாத்தியமில்லை. நாங்கள் நடைமுறையில் கையாண்டு வருகிறோம்.

இயந்திரங்களின் உதவியின்றி மனித வாழ்க்கையை நடத்துவது சாத்தியமில்லையென்றிருப்பின், இயந்திரங்களை கவனித்து வேலை செய்வது கஷ்டமாயிருக்கும் எனபதற்காக வாழ்க்கையையே கடினமாய்ச்செய்து கொள்வதா? இயந்திரங்களில்லாவிடில் பட்டினி கிடந்து சாகவேண்டியிருப்பின் அப்படிச் சாகும்படி பார்த்துக் கொண்டிருக்கிறோமா? இயந்திரத்தின் உதவியால் ஒருவர் எவ்வளவு சாதகம் பெறலாமோ அவ்வளவையும் அடையாமையால் பெறும் சுகத்தைவிட, அதன் சாதகத்தை முற்றும் பயன்படுத்திக் கொள்வதால் அதிக சுகம் அவர் பெறலாமல்லவா?

ஒரு வேலையை ஒரே வகையில் திரும்பத் திரும்பச் செய்வதால் எவருக்கும் பெரிய தீமை விளைந்து விட்டதாகவே நான் இது வரையில் கண்டதில்லை. வீண் வம்பு வளர்க்கிறவர்கள், இத்தகைய வேலை தேகத்திற்கும் ஆன்மாவிற்கும் தீதெனப் பேசுவார்கள். ஆனால் நாங்கள் கவனித்து ஆராய்ந்ததில் அங்ஙனம் தென்படவில்லை. ஒரு மனிதன் "டிரெடில் மெஷின்" ஒன்றை காலால் மிதித்து ஓட்டும் வேலை செய்துவந்தான். இதனால் அவன் தனது உடம்பு கெட்டுப்போவதாக நினைத்து வேறு வேலை செய்ய விரும்பினான். வைத்தியரை விட்டுப் பரிசோதனை செய்ததில் அவன் தேகத்தில் ஒரு கெடுதலும் இல்லை என்று தெரிய வந்தபோதிலும், அவனுக்கு வேறு வேலை கொடுத்தோம். இதில் காலால் மிதிக்கும் வேலையில்லை. இருந்தாலும் திரும்பப் பழைய வேலைக்கே போய்

விடுகிறேனென்று கேட்டுக்கொண்டான். எங்கள் தொழிற்சாலையில் தொழிலாளர் ஒரு வேலையிலிருந்து வேறு வேலைக்குப்போக விரும்பினால் அதற்கு நாங்கள் சம்மதித்து அவர்கள் கோரும் வேலையை அளிப்பது வழக்கம். அவர்களாய்க் கோராமல் நாங்களாக மாற்றினால் அவர்கள் அதை விரும்புகிறதில்லை. சில வேலைகள் மிகவும் அருவருப்பாக இருக்கும். அதிக நாள் ஒருவரும் அம்மாதிரி வேலையைச் செய்யமாட்டார்கள். இருந்தாலும் இத்தகைய வேலையொன்றில் எட்டு வருஷகாலமாய் ஒரே ஆள் இருந்து வருகிறான். இந்த எட்டு வருஷமாய் அவன் 40 ஆயிரம் டாலர் சேர்த்திருக்கிறான். வேறு நல்ல வேலைக்கு அவனை மாற்றுகிறதாகச் சொன்னால் அவன் வேண்டாமென்று மறுத்துவிடுகிறான். எந்த வேலையினாலும் தொழிலாளரின் மூளை கெட்டுப் போனதாகவே நாங்கள் பார்த்ததில்லை.

தேக துர்ப்பலத்தால் வேலைக்கு லாயக்கில்லை என்று ஒருவரையும் தள்ளி விடுகிறதில்லை யென்று நான் முன்னரே கூறியிருக்கிறேன். 1914-ம் ஆண்டு ஜனவரி 12-ந் தேதியிலிருந்து இந்தக் கொள்கை அனுசரிக்கப்பட்டு வருகிறது. அப்பொழுதுதான் நாளொன்றுக்கு 5 டாலருக்குக் குறைந்து ஒருவருக்கும் கூலி கொடுக்கக் கூடாதென்றும், 8 மணி நேரத்துக்கு மேல் எவரும் வேலை செய்யக்கூடாதென்றும் தீர்மானஞ் செய்தோம். அத்துடன் தேக அசௌக்கியத்தினால் எவரையும் நீக்கக் கூடாதென்றும் விதிக்கப்பட்டது. தொத்து வியாதியினால் அவஸ்தைப் படுகிறவர்களை மட்டும் வேலைக்கு வைத்துக் கொள்ளுகிறதில்லை. அங்கஹீனத்தாலோ, வேறு தேக அசௌகரியத்தாலோ கஷ்டப்படுகிறவர்களுக்கும் வேலை கொடுத்து அவர்கள் வேலைக்குத் தக்கபடி கூலி கொடுக்கலாம் என்று எங்கள் தொழிற்சாலையில் கண்டு கொண்டிருக்கிறோம். கண்ணில்லாத குருடனும், கை காலில்லாத முடவனும் குறிப்பிட்ட ஒருவகை வேலைக்கு உதவலாம். நல்ல திடசரீர முள்ளவர்களைப் போலவே அவர்களும் அந்த வேலையைச் செய்து முழுக் கூலியையும் பெறலாம். இதை நாங்கள் நிரூபித்துக் காட்டியாய் விட்டது.

அங்க ஹீனர்களாயிருக்கிறார்களே யென்று குறைந்த சம்பளத்திற்கு ஆட்களை நியமித்து, வேலையும் குறைவாக நடக்கும்படி பார்த்துக் கொண்டிருந்தால், எங்களுடைய பிரதம கொள்கைக்கே அது விரோதமாகும். அத்தகைய மனிதர்களுக்கு ஒருவாறு அது உதவி புரிதலாகுமேயன்றி, அதுதான் அவர்களுக்குச் செய்யும் மிகவும் சிலாக்கியமான உதவியாகாது. அவர்களுக்கும் திடசரீரக்காரர்களுக்குப் போல் உற்பத்திச் செய்யத்தகுந்த வேலை அளிப்பதுதான்

நேர்மையான முறை. இவ்வுலகத்தில் தர்மஞ் செய்ய வேண்டிய தற்கே அவசியமில்லை. தானம் ஒருவரும் செய்ய வேண்டாம். தொழில் முறையில் தர்மத்திற்கு இடமில்லை. தொழிற்சாலை, சரக்குகளைச் செய்வதற்கே ஏற்பட்டது; அதில் எவ்வளவு அதிகமாக சாமான்கள் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்யாவிடில் அதன் பயனை முற்றும் ஜனங்கள் அடையக் கூடாமல் போய்விடுகிறது. எல்லா அங்கங்களும் செவ்வையா யிருந்தால்தான் எந்த வேலையும் நன்றாய்ச் செய்து முடிக்கக் கூடும் என்ற ஒரு தப்பெண்ணம் எல்லோருக்கும் இருந்து வருகிறது. இதன்மேல் ஒவ்வொரு வேலையின் தன்மையையும், தாராதரத்தையும் நான் ஆராய்ந்து பார்த்தேன். எங்கள் தொழிற்சாலையில் 7,882 வெவ்வேறு வகையான வேலைகள் இருந்ததாகக் கணக்கிட்டதில் தெரியவந்தது. இதில் 949 வேலைகளுக்கு நல்ல திடகாத்திரமுள்ள பலசாலிகள் தேவையா யிருந்தது. 3,338 வேலைகளுக்கு சாதாரண சக்தி வாய்ந்தவர்கள் போதுமென்றுத் தெரிய வந்தது. பாக்கியுள்ள 3595 வேலைகளும் வெகு துர்ப்பலமான சாமான்ய ஜனங்களால்கூட செய்யக் கூடியவை யென்றும், ஒருவித தேகப் பிரயாசையும் தேவையில்லையென்றும் காண்கிறது. இந்த 3595 வேலையையும் திரும்பவும் பகிர்ந்து பார்த்ததில் 670 வேலைகளைக் காலில்லா முடவர்கள் செய்யலா மென்றும், 2,637 வேலைகளுக்கு ஒருகால் மட்டும் உள்ளவர்கள் போதுமென்றும்; இரண்டு கையுமில்லாதவர்கள் 2 வேலைக்கு லாயக்குள்ளவர்களென்றும், 715 வேலைகளை ஒரு கையுள்ளவர்கள் செய்யலாமென்றும், 10 வேலைகளுக்குக் குருடர்கள் போதுமென்றும் தெரிய வந்தது. எனவே 7,882 வேலைகளில் 4,034 வேலைகளுக்கு அங்க ஹீனமா யுள்ளவர்கள் கூட தகுதியானவர்களென்று விளங்கிற்று. எனவே நன்றாக அமைக்கப்பட்ட எந்த தொழிற்சாலையிலும் அங்க ஹீனர்களிடம் முழு வேலையும் வாங்கிக் கொண்டு சாதாரண ஆட்களுக்குக் கொடுக்கும் கூலியை அவர்களுக்கும் கொடுக்கலாம். ஆதலால் இத்தகையோர் சமூகத்தின் தர்மத்தை எதிர்பார்த்துப் பிழைக்க வேண்டுமென்ற ஒரு கொள்கையினால் சாதாரணமாய் அரை வயிற்றுக்குக்கூட கூலி யளிக்காத கூடை முடைதல் போன்ற சில்லரை வேலைகளை அவர்களுக்குக் கற்றுக் கொடுத்து ஏதோ ஒருவகை பிழைப்பு அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணுவது பொருளாதாரக் கொள்கைக்கு நேர் விரோதமாகும், அது வீண் வியர்த்தமுமாகும்.

ஒரு ஆளை வேலைக்கு எடுத்துக் கொள்ளும்போது அவனுக்கேற்ற உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்பது எங்கள் கொள்கை. ஏதேனும் ஒரு வேலையை அவன் சரியாகச் செய்ய முடியாமலிருந்தாலும், அவனுக்குக் கொடுக்கப்படும் வேலை அவனுக்குப்

பிடிக்காவிடினும் உடனே அவனால் செய்யக் கூடியதும், அவன் மனதிற்கு இசைந்ததுமான வேலைக்கு அவனை மாற்றிவிடுகிறது வழக்கம். தேக வலிமை குன்றியவர்களும் அவர்களுக்குத் தகுந்த வேலையைக் கொடுத்தால் நேர்மையாகச் செய்வார்களென்பதில் சந்தேகமில்லை. ஒரு குருடனை மறைகளையும், தாழ்ப்பாள்களையும் கப்பலேற்றி அனுப்புமுன், எண்ணும் வேலையில் போட்டோம். அவனுக்கு உதவியாக இரண்டு பேரும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இரண்டு நாளில் எல்லா வேலையையும் அந்தக் கண்ணில்லாதவனே செய்ய முடிந்ததால் இவர்கள் இருவரையும் வேறு இலாகாவுக்கு மாற்றி விடும்படி மேஸ்திரி குறித்து அனுப்பிவிட்டார்.

இவ்வாறு அங்கஹீனர்களுக்கு நல்ல உதவி அளிக்க வழி இருக்கிறது. சாதாரணமாய் காயமடைந்த ஒருவன் வேலைக்கு லாயக்கில்லை என்று எண்ணி உடனே அவனுக்கு ஜீவனும்சம் ஏதாவது பொருளுதவி செய்து விடுகிறது வழக்கம். ஆனால் குணமடைந்து கொண்டு வருகிற காலத்தில் இங்ஙனம் காயமடைந்தவர்கள் வேலை செய்து முழுக் கூலியையும் சம்பாதிக்க முடியும். எனவே அவர்களுக்கு வேலையைக் கொடுத்து கூலியையும் கொடுத்தால் அனாவசியமான செலவு தொழிற்சாலைக்கு ஏற்படாது. இல்லாவிடில் சாமான்களின் தலைமேல் இந்தச் செலவையும் வைத்து விலை ஏறிப்போய்விடும்; இதனால் சாமான் விலையாகாமல் வியாபாரம் குறைந்துவிடும்; எனவே தொழிற்சாலையில் வேலை குறைந்துபோய் சிலருக்கு வேலையில்லாமல் போய்விடும்.

படுக்கையிலேயே உட்கார்ந்துகொண்டு வேலை செய்யக் கூடிய வியாதியஸ்தர்களுக்கு அவர்களால் செய்யக் கூடிய வேலைகளைக் கொடுத்துப் பரீட்சை பார்த்தோம். மறைகளைத் தாழ்ப்பாளில் முடுக்கும் வேலை சிலருக்குக் கொடுக்கப்பட்டது. ஆஸ்பத்திரியில் கிடந்த இவர்களும், தொழிற்சாலையில் வேலை செய்தவர்களைப் போலவே இவ் வேலையைச் செவ்வையாகச் செய்ய முடிந்தது. உண்மையில் சாதாரணமாய் 5 ஆள் செய்கிற வேலையை இங்கே 4 பேர் செய்தார்கள். அவர்களாக விரும்பினாலன்றி எவரையும் கட்டாயப்படுத்தி வேலை செய்யச் சொல்லவில்லை. ஆனால் எல்லோரும் வேலை செய்ய ஆசைப்பட்டார்கள். அவர்கள் இங்ஙனம் சுலபமான வேலை செய்து கூலி சம்பாதித்ததுடன், பொழுதும் இலகுவாகக் கழித்தனர். இதனால் நன்றாக ஆகாரம் சாப்பிட்டு நன்றாய் தூங்கினர்; சீக்கிரத்தில் குணமும் அடைந்தனர்.

செவிடர்களுக்கும், ஊமைகளுக்கும் விசேஷமாக ஒருவித சலுகையும் காட்டவேண்டிய அவசியமேயில்லை. அவர்கள் பூரா

வேலையும் ஒழுங்காகச் செய்கிறார்கள். காச நோய்க்காரர்களும் அவர்கள் சக்திக்கு ஏற்ற வேலையில் அமர்த்தப் படுகிறார்கள். அவர்களுக்குத் தனியாக ஒரு பிரிவு இருக்கிறது. சுமார் 1000 பேர் அதில் வேலை செய்கிறார்கள். அவர்கள் திறந்த வெளியிலேயே வேலை செய்கிறார்கள்.

கடைசியாய் எடுத்த கணக்குப்படி 9,563 பேர்கள் ஏதாவது ஒருவகையில் அங்கஹீனர்களா யிருந்தனர். 123 பேர்கள் கை கொண்டி; ஒருவனுக்கு இரண்டு கையுமில்லை. 4 பேர் இரண்டு கண்ணும் தெரியாதவர்கள்; 207 பேருக்கு ஒரு கண் குருடு; 253 பேருக்கு ஒரு கண் அநேகமாய்த் தெரியாது; 37 பேர் ஊமையும் செவிடும். 60 பேருக்கு வலிப்பு நோய்; 4 பேருக்கு இரண்டு காலும் கிடையாது. 234 பேருக்கு ஒரு கால் நொண்டி. மற்றவர்களுக்கு ஏதேனும் சில்லரைத் தொந்திரவுக ளிருந்தன.

எங்கள் தொழிற்சாலையிலுள்ள வேலைகளில் 100-ல் 43 பங்கை ஒரே நாளில் கற்றுக் கொள்ளலாம்; 36 பங்கு ஒரு வாரத்தில் கற்றுக்கொள்ளக் கூடியது; 6 பங்கு ஒருவாரத்தி லிருந்து இரண்டு வாரம் பிடிக்கும். 14 பங்கு ஒரு வருஷத்திற்குள் கற்றுக்கொள்ள லாம்; பாக்கியுள்ள ஒரு பங்கு கற்க மட்டும் ஆறு வருஷம் வரையில் பிடிக்கலாம். இதற்கு அதிக சாமர்த்தியம் தேவை. வெகு கண்டிப்பான ஒழுக்கம் வற்புறுத்தப் படுகிறது. அக்கிரமமான சில்லரை விதிகள் கிடையாது. எவரையும் எதேச்சாதிகாரமாய் வேலையிலிருந்து நீக்குவதில்லை. நியமன இலாகா மானேஜருக்குத் தான் வேலையிலிருந்து நீக்கும் அதிகாரமுண்டு. அவரும் அந்த அதிகாரத்தை விசேஷமாய்ப் பிரயோகிக்கிறதில்லை. 1919ம் ஆண்டில் 80 பேர்தான் நீக்கப்பட்டனர்.

தொழிலாளர் சொன்ன வேலையைச் செய்தாகவேண்டும். தங்களிஷ்டப்படி செய்யும்படி வேலையாட்களை விடுவது சாத்தியமில்லை. கண்டிப்பு இன்றி குழப்பம் ஏற்படும். தொழிற்சாலையில் கண்டிப்பு இல்லாமல் வேலை நடக்காது. எவ்வளவு தூரம் வேலை செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து மிகவும் அதிகமாய்க் கிடைக்கக்கூடிய கூலியைப் பெறுவதே தொழிலாளர் நோக்கமா யிருக்க வேண்டும். ஒவ்வொரு ஆளும் அவனிஷ்டப்படி வேலை செய்வதென்றால் வேலை நடக்காது. நாங்கள் ஏவுகிறபடி வேலை செய்ய மனமில்லாதவர்கள் வேலையை விட்டுவிட்டுப் போய் விடலாம். அநீதமேற்பட்டால் தொழிலாளர் நிவர்த்தி தேடிக்கொள்ள வேண்டிய வழி இருக்கிறது; அநீதமுண்டாவது வெகு சகஜம். அதைத் தடுக்க நாங்கள் கூடியவரையில் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

வேலைக்கு ஒழுங்காக வருவதைப் பற்றி மிகவும் கண்டிப்பாயிருக்கவேண்டிய தவசியமாகும் தனக்குத் தோன்றியபடி தொழிலாளி வருவதும் போவதும் கிடையாது; ரஜா எடுத்துக்கொள்ளலாம்; ஆனால் தெரிவிக்காமல் வேலைக்கு வராமலிருந்து விட்டால் அதைப்பற்றி அவன் திரும்பி வந்தவுடன் விசாரித்து, சரியான காரணங்களினால் வரக்கூடாமலிருந்தால் திரும்பவும் வேலை செய்ய அனுமதி தரப்படும். அகாரணமாய் நின்றிருந்தால் அவனை வேலையிலிருந்து நீக்கிவிடுவோம். ஒரு ஆளை வேலைக்கு எடுத்துக்கொள்ளும்பொழுது அவனுடைய பெயர், விலாசம், வயது முதலிய விவரங்களை குறித்துக்கொள்ளுவது வழக்கம். அவன் கலியாண மானவனா பிரம்மச்சாரியா என்றும், அவனைச்சார்ந்தவர்கள் எவ்வளவு பேரென்றும், அவனுக்குக் கண் நன்றாய்த்தெரிகிறதா, காது சரியாய்க் கேட்கிறதா என்றும், ஏற்கனவே எங்கள் கம்பெனியில் வேலை செய்ததுண்டா என்றும் இத்தகைய விவரங்களுங் கேட்பதுண்டு. இதற்கு முன் என்ன செய்துகொண்டிருந்தானென்பதைப் பற்றியே கவலைப்படுகிறதில்லை. ஆனால் ஏதாவது வேறு தொழில் தெரியுமானால் அதை அவர்களாகவே பதியவைக்கலாம். அங்ஙனஞ் செய்தால் அத்தகைய வேலைதெரிந்தவர்கள் அவசியமாயிருக்கும்பொழுது உடனே அவர்களைப் பொறுக்கி எடுத்துக் கொள்ளுவோம். ஒரு சமயம் கடியாரவேலை தெரிந்தவனொருவன் தேவையாயிருந்தது. நியமன இலாகாவின் ஜாபிதாவை வரவழைத்துப் பார்த்ததும் அந்த வேலை தெரிந்தவன் ஒருவன் தமிர் வேலை செய்துக் கொண்டிருப்பதாய்த் தெரிந்தது. அதேமாதிரி காளவாய் வேலை தெரிந்தவன் ஒரு சமயம் வேண்டியிருந்தது. அவனும் தமிர் வேலைதான் செய்துகொண்டிருந்தான். இப்பொழுது அவன் ஒரு இன்ஸ்பெக்டராக யிருக்கிறான்.

தொழிலாளர் ஒருவருடன் ஒருவர் அதிக உறவாட நாங்கள் இடங் கொடுக்கிறதில்லை. தொழிற்சாலை, வேலை செய்யுமிடமே யல்லாது, பாந்தவ்யம் கொண்டாடி நேசம் பாராட்ட ஏற்பட்டதில்லை. எங்கள தொழிற்சாலையை ஒரு சிறிய உலகம் என்றே சொல்லலாம். அவ்வளவு இலாகாக்கள் அதில் இருக்கின்றன. சகல விதமான ஜனங்களும் அதில் வேலை செய்கின்றனர். சில சமயம் ஆட்களுக்குள்ளேயே சண்டை ஏற்படும். அங்ஙனம் சண்டை செய்தால் உடனே வேலையிலிருந்து இருவரையும் நீக்கிவிடுவோம். ஆனால் மேஸ்திரிகள் இங்ஙனம் அவர்கள் வேலையைவிட்டு அவர்கள் குடும்பங்கள் கஷ்டப்படாமலிருப்பதற்காக உடனுக்குடன் அங்கேயே வேறு வகையில் அவர்களை தண்டித்து விடுகிறார்கள்.

எந்த தொழிற்சாலையும் சுத்தமாயும், நல்ல வெளிச்சமுள்ளதாயும், காற்றோட்டமுள்ளதாயுமிருக்க வேண்டும். அப்பொழுது

தான் வேலை சரியாக நடைபெறும்; அத்துடன் தொழிலாளரும் சௌக்கியமாய் இருக்கலாம். எங்கள் தொழிற்சாலையில் இயந்திரங்களெல்லாம் மிகவும் நெருக்கமாகவே யிருக்கும். ஆனால் வேலையாட்கள் வேலை செய்வதற்கு வேண்டிய இடம் அளித்தே அமைக்கப் பட்டிருக்கின்றன. அவசியத்திற்கு மேல் இடம் விடுகிறதில்லை. தொழிற்சாலைகள் உலாவுவதற்கு ஏற்பட்ட நந்தவனங்கள் அல்ல.

இயந்திரங்களினால் விபத்துக்கள் நேராமல் பாதுகாப்பது ஒரு முக்கியமான வேலை. என்ன நன்றாய் ஒரு இயந்திரம் வேலை செய்த போதிலும் அதனால் விபத்து நேருவதானால் அது பிரயோஜன மில்லை. எங்களிடமுள்ள இயந்திரங்களினால் ஆபத்து ஒன்றும் நேராது. எனினும் ஏதாவது சில்லறை விபத்து நேராமலிருக்கிற தில்லை. இதற்காக ஒரு தேர்ந்த தொழிலாளி இருக்கிறான் அவனுடைய வேலை இங்ஙனம் விபத்து நேர்ந்தால் உடனே அதை கவனித்து திரும்பவும் அது நேராமல் தடுப்பதாகும்.

முதன் முதல் எங்கள் கட்டடங்களை கட்டியபோது வெளிச்சம், காற்று இவைகளுக்கு இப்பொழுதுள்ளது போல அவ்வளவு இடமில்லை. பின்னால் கட்டிய கட்டடங்களில் இதற்கு விசேஷ ஏற்பாடு செய்திருக்கிறோம். பகலில் விளக்குப் போட வேண்டிய அவசியமே கிடையாது; கெட்ட காற்று வெளியே போகவும், நல்ல காற்று உள்ளே வரவும் நல்ல வசதிகள் அமைத்திருக்கிறோம். தொழிற்சாலையை சுத்தஞ் செய்து அலம்பி தூய்மையாய் வைத்திருப்பதற்காக 700 பேர் நியமனஞ் செய்திருக்கிறோம்.

தொழிற்சாலையில் வேலை ஆபத்திற்கிடமானதாக இருக்க இடமே யில்லை. மிகவும் அதிக நேரமோ, கஷ்டமாகவோ ஒருவன் வேலை செய்தால் அவன் மூளை கலங்கி விபத்துக்கள் நேரலாம். இதற்கு நாங்கள் இடங் கொடுக்கிறதில்லை. அஜாக்கிரதையா யிருப்பதினால் விபத்துக்கள் உண்டாகும்; இதையும் நாங்கள் தடுத்துவிடுகிறோம். விபத்துக்கள் அடியிற்கண்ட காரணங்களால் நேரலாம்.

(1) கட்டடத்தின் தவறு
(2) இயந்திரத்தில் தவறு.
(3) போதுமான இடமில்லாமை.
(4) சரியான பாதுகாப்புகள் இல்லாமை.
(5) அசுத்தம்.
(6) வெளிச்சக் குறைவு.
(7) கெட்ட காற்று.

(8) வேலைக்கேற்ற உடை தரிக்காதது.
(9) அஜாக்கிரதை.
(10) அறியாமை.
(11) மனத்தடுமாற்றம்.
(12) ஒத்து உழைக்காமலிருத்தல்.

இவற்றில் 1, 2, 3, 5, 6, 7, 11, 12 இவைகளை எளிதில் நிவர்த்திக்கலாம். கஷ்டமாக வேலை செய்யாதவரையில், நல்ல கூலி கொடுக்கும் வரையில மனத்தடுமாற்றம் ஏற்பட இடமில்லை; கட்டடம் சரியான முறைப்படி கட்டப்படின் மற்ற இடையூறுகளும் சேரா. உடை விஷயமாயும், அஜாக்கிரதை, அறியாமை இவைகளைப் பற்றியும்தான் விசேஷமாய் கவனிக்க வேண்டும். முட்டாள்கூட வேலை செய்யக் கூடியவாறு இயந்திரங்களிருக்க வேண்டும். இவைகளுக் கெல்லாம் வேண்டிய பாதுகாப்புக்கள் செய்திருக்கிறோம். துணி சிக்கிக்கொண்டு வேலை செய்பவர்கள் இயந்திரத்தில் மாட்டிக் கொள்ளாதபடி இயந்திரங்கள் மூடப்பட்டிருக்கின்றன. சரியான உடை தரிக்காமல் வேலைக்கு வருகிறவர்களை மேல்திரிகள் கண்டுபிடித்து கண்டித்து விடுகிறார்கள். புதிய இயந்திரங்களை யெல்லாம் பரீட்சை செய்தபின்தான் அமைத்து வேலைக்கு ஆரம்பிக்கிறது வழக்கம். இத்தகைய முன் ஜாக்கிரதைகளால் பெரிய விபத்துக்கள் ஒன்றுமே நேருகிறதில்லை. தொழிற்சாலைகளில் தொழிலாளர் உயிரைத் தியாகஞ் செய்ய வேண்டிய அவசிய மில்லை.

## அத்தியாயம் 9.

# தொழிலாளரும், முதலாளிகளும்

கூலி நிர்ணயம்—தொழிலாளர் முதலாளிக்குள்ள சம்பந்தம்—தொழிலாளர் பொறுப்பும் பங்கும்—வேலைக்குத் தக்க கூலி—முதலாளிகளின் நோக்கம் எங்ஙனமிருக்க வேண்டும்?—தொழிலாளர் கடமை—நல்ல தொழிலாளியின் லக்ஷணம்—லாபமும் தொழிலாளருக்கு அதில் பங்கும்.

ஒவ்வொரு நாட்டிலும் பெரும்பான்மையோர் கூலியைக் கொண்டே ஜீவனஞ் செய்வதால் அது மிகவும் முக்கியமான விஷயமாகும். அவரவர்களுக்குக் கிடைக்கும் கூலியைப் பொருத்தே யிருக்கிறது அவரவர்களுடைய வாழ்க்கை; நாட்டின் சுபிக்ஷமும் அதையே சார்ந்திருக்கிறது. போர்ட் தொழிற்சாலைகள் எல்லாவற்றிலும் நாள் ஒன்றுக்கு 6 டாலருக்குக் குறைந்த சம்பளம் ஒருவருக்கும் கிடையாது. இதற்கு முன் 5 டாலரா யிருந்தது. அதற்கும் முன் அவசியத்திற் கேற்றபடி கூலி கொடுத்தோம்.

முதலாளிக்கும், தொழிலாளருக்கும் இருக்கவேண்டிய சம்பந்தத்தைப்பற்றி கவனிப்போம். தொழிலாளியைப் பங்காளியாகச் சாதாரணமாய்க் கருதுகிறதில்லை. ஆனால் தொழிலாளிக்கும், முதலாளிக்கும் இருக்கவேண்டிய பாந்தவ்யம் வேறு எங்ஙனம்தான் இருக்கவேண்டும்? ஒரு தொழிலைத் தன்னால் முற்றும் நிர்வகிக்க முடியாவிடில், தனக்கு உதவி செய்யக் கூடியவர்களை தொழிலில் சேர்த்துக் கொள்ளுவது சகஜம். அதேயாதிரி உற்பத்தி விஷயத்தில் தன் இரு கைகளாலும் செய்ய முடியாத வேலைகளுக்குத் தொழிலாளரை நியமிக்கையில் அவர்களையும் ஏன் பங்காளிகளாகக் கருதக் கூடாது? தனக்கு உதவி செய்வதற்காக ஒரு சிறு பையனுடைய உதவியைக்கூட முதலாளி நாடினால் அவர்களிருவரும் பங்காளிகளாவார்கள். தொழிலின் முதல் அனைத்தும் ஒருவருக்கே சொந்தமா யிருக்கலாம். அதனைமேற் பார்வை முழுவதையும் அவரே பார்க்கலாம். ஆனால் முற்றும் அவரே எல்லா வேலையையும் செய்தாலன்றி தொழில் முழுவதும் தனக்கே உரித்தானதென்று அவர் கருத நியாயமில்லை. பிறர் உதவியை முதலாளி நாடுகிற வரையில் அந்தத் தொழில் பங்காளிகளால் நடத்தப்படுவ

தாகவே கருதப்பட வேண்டும். முதலாளி தொழிலாளியின் பங்காளி; தொழிலாளி முதலாளியின் பங்காளி. ஆக இருவரும் பரஸ்பரம் பங்காளிகளாகிறார்கள். ஒருவரின்றி மற்றவர் மட்டும் தொழிலை நடத்த முடியாது. தொழிலாளரும், முதலாளிகளும் சண்டை போட்டுக் கொண்டால் இருவருக்கும் ஆதரவு அளிக்கும் தொழிலுக்கு ஹானி ஏற்பட்டு இருவருக்குமே தீமை விளையும்.

முதலாளிகள் தங்களைப் போன்ற தொழிலிலேயே ஈடுபட்டிருக்கும் இதர கம்பெனிகளைவிட அதிகமாய்க் கூலி கொடுக்கும் நோக்கமுடையவர்களாயிருத்தல் வேண்டும். இங்ஙனம் அதிகக் கூலி முதலாளிகள் கொடுக்க சாத்தியமாகும்படி தொழிலாளர் வேலை செய்யவேண்டும். தாங்கள் செய்யும் ஊழியத்தின் பலன் அனைத்தையும் முதலாளிகளே அடைகிறார்கள் என்ற எண்ணமுள்ள தொழிலாளர் எல்லா தொழிற்சாலைகளிலுமிருக்கிறார்கள். தங்களுக்கும் அதனால் லாபமுண்டு என்பது அவர்களுக்குத் தோன்றுகிறதில்லை. அத்தகைய எண்ணமிருப்பது வருந்தத் தக்கது. எனினும் அது இருந்தே வருகிறது. அதற்குத் தக்க காரணமுமிருக்கக் கூடும். தங்களால் எவ்வளவு தூரம் வேலை செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் வேலை செய்யும்படி தொழிலாளரை முதலாளி தூண்டி நன்றாய் வேலையை வாங்கிக்கொண்டு, பிறகு அதனால் கிடைக்கும் லாபத்தையும் முதலாளியே அடைகிறதைத் தொழிலாளர் கண்டு கொண்டால், திரும்பவும் சாதாரணமாய் கூலிக்குத் தக்கபடி ஏற்பட்ட வேலையைத்தான் செய்வார்கள். ஆனால் தாங்கள் அதிக சிரமப்பட்டு உழைத்தால் தங்களுக்கும் பிரயோஜனமுண்டென்று அவர்களுக்குத் தெரிந்தால், தங்களுக்கும் அந்தத் தொழிலில் ஒருவித சம்பந்தமுண்டென்று அவர்கள் உணர்ந்து, தொழிலபிவிருத்தி அடைந்தால்தான் தாங்களும் அபிவிருத்தியடையலாம் என்ற உணர்ச்சியுடன் தொழிலில் ஈடுபட்டு வேலை செய்வார்கள்.

"தொழிலாளருக்கு முதலாளி என்ன கூலி கொடுக்க வேண்டும்?" என்கிற கேள்வி முக்கியமானதல்ல. "இந்தத் தொழிலுக்கு என்ன கூலி கொடுத்தால் கட்டிவரும்?" என்பதுதான் பிரதானம். வருவாய்க்கு மேல் செலவாகும் எந்த தொழிலும் முன்னுக்கு வராது என்று சொல்லத் தேவையில்லை. கிணற்றில் ஊறுவதைவிட அதிக ஜலம் இறைத்தால் சீக்கிரத்தில் கிணறு வற்றிப் போய் விடுகிறது; அந்தக் கிணற்றிலிருந்து ஜலம் முகர்ந்து கொண்டிருந்தவர்களெல்லாம் தாகத்தால் கஷ்டப்பட நேரும். இப்பொழுது லாபத்தை நியாயமாகப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று எங்கு பார்த்தாலும் கூக்குரலிருந்து வருகிறது. ஆனால்,

இதற்கு ஓர் எல்லையுண்டு. ஒரு லக்ஷம் டாலர் தான் வருமானம் வருகிற இடத்தில் ஒன்றரை லக்ஷம் டாலரைப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்பது தவறு. தொழிலுக்குத் தக்கபடி கூலி கொடுக்கவேண்டும்.

"முதலாளி இப்படிச் செய்யவேண்டும், அப்படிச் செய்ய வேண்டும்" என்று தொழிலாளர் சொல்வதை விட்டு, "இங்ஙனம் தொழிலை நடத்த வேண்டும், அங்ஙனம் நடத்த வேண்டும்" என்று சொன்னால் பயனுண்டு. தொழிலின் அபிவிருத்தியால்தான் தொழிலாளருக்கும் கூலி கிடைக்கும். தொழில் நன்றாய் நடை பெறாவிடில் முதலாளி எங்கிருந்து கூலி கொடுக்கமுடியும்? ஆனால், தொழில் நன்றாய் அபிவிருத்தி யடைந்து அதிகக் கூலி கொடுக்கலா மென்றிருப்பின், முதலாளி கொடுக்க மறுத்தால் என்ன செய்வது? ஒரு தொழிலை அண்டி வெகுப்பேர் பிழைக்கிறார்கள்; அதைக் கொலை செய்வது பெரிய பாவமாகும். ஆயிரக்கணக்கான ஜனங் கள் வயிற்றுப் பிழைப்புக்காக எதிர்பார்த்து நிற்கும் ஒரு தொழிலை நடக்க வொட்டாமல செய்வது பெரிய அக்கிரமம். வேலைநிறுத்தம் செய்தோ, அல்லது கதவை அடைத்தோ ஒரு தொழிலைக் கொலை புரிவதால் ஒரு நன்மையும் விளையாது. தொழிலாளருக்கு எவ்வ ளவு குறைவாகக் கூலி கொடுக்கலாம் என்ற எண்ணம் முதலாளிக்கு இருக்கக் கூடாது; எவ்வளவு அதிகமாக முதலாளிகளைக் கொடுக்கும் படி கட்டாயப்படுத்தலாம் என்ற எண்ணம் தொழிலாளருக்கு ஏற் படக்கூடாது. இருவருமாக தாங்கள் சம்பந்தப்பட்ட தொழிலை அபிவிருத்தி செய்து, இருதாரத்தாருக்கும் சௌகரியம் அளிக்கும் படி அதை எங்ஙனம் செய்யலாம் என்ற நோக்கமே இருவருக்கும் இருக்கவேண்டும்?

ஆனால் எல்லாத் தொழிலாளருக்கும், முதலாளிகளுக்கும் நேர் மையான நோக்கம் இருப்பதில்லை. குருட்டுத்தனமான திருஷ்டி தான் சிலருக்கு ஏற்படுகிறது. அதை எளிதில் மாற்ற முடியாது. அதற்கு என்ன செய்யலாம்? ஒன்றும் முடியாது. என்ன விதிகள் செய்தபோதிலும், என்ன சட்ட திட்டங்கள் நிறுவினாலும் இந்த எண்ணத்தை மாற்ற முடியாது. ஆனால் கொஞ்சம் விசால நோக்க முண்டாகி, சுய நன்மைக்காகவேகூட தொழிலாளரும் நன்றா யிருக்கவேண்டும் என்ற கருத்து முதலாளிக்கும், தாங்கள் நன்றா யிருக்க முதலாளிகளும் வாழவேண்டு மென்ற எண்ணம் தொழி லாளருக்கும் ஏற்பட்டால் இந்தக் குறுகிய புத்தி பறந்து போய் விடும். நாளடைவில் தொழிலாளரும் முதலாளிகளும் ஒரே திருஷ்டி யுடன் வேலை செய்தால், இத்தகைய நல்லெண்ணம் முதிர்ந்து தொழிலும் அபிவிருத்தி யடையும்.

அதிகக் கூலி யென்றால் என்ன தாத்பரியம்? 10 மாதத்திற்கு முன்னரோ, 10 வருஷங்களுக்கு முன்னதாகவோ வழங்கப்பட்ட கூலியைவிட அதிகக்கூலி என்ற அர்த்தம்தான் ஏற்படும். சாதாரணமாய் கொடுக்கவேண்டிய கூலியைவிட அதிகமான கூலி என்ற பொருள் நாம் கொள்ளுகிறதில்லை. இன்று நாம் அதிகக் கூலி என்று நம்புவது, 10 வருஷங்களுக்குப் பின் தாழ்ந்த கூலியாயிருக்கலாம்.

ஒரு தொழிலிலிருந்து முதலாளிகளுக்கு அதிக லாபம் கிடைக்க வேண்டுமென்று விரும்பினால், தொழிலாளருக்கும் அதிகக் கூலி கிடைக்கவேண்டுமென்ற எண்ணமுமிருக்கவேண்டும். தொழிலின் முதலாளி அதிகக் கூலி கொடுக்கவில்லை என்றால், முதலாளியால கொடுக்க முடிந்து கொடுக்காமலிருந்தால அவர்மீதுதான் குற்றம். ஆனால் அதிகக் கூலி கொடுப்பது முதலாளியை மட்டும் பொருத்ததல்ல. தொழிலாளரே தங்கள் உழைப்பால் அதை சம்பாதிக்க வேண்டும் உற்பத்தி அதிகமாகும்படி தொழிலாளர் உழைக்கவேண்டும். நிர்வாகம் சரியாயில்லாவிடில் தொழிலாளரின் உழைப்பும், சாமான்களும் வியர்த்தமாகும். அதேமாதிரி நல்ல நிர்வாகமிருக்குமிடத்தில் தொழிலாளர் சரியாக வேலை செய்யாமல் தொழில் கெட்டுப் போகலாம். ஆனால் திறமையுள்ள நிர்வாகிகளும, யோக்கியப் பொறுப்புள்ள தொழிலாளருமசேர்ந்துபொருந்திய இடத்தில், தொழிலாளரே அதிக கூலி கிடைக்கும்படி செய்து கொள்ளலாம். தன்னுடைய திறமையாலும் சக்தியாலும், முழு மனதுடன் யோக்கியமாய் வேலை செய்யும தொழிலாளி, தனக்கே அனுகூலத்தைத் தேடிக்கொள்ளுகிறான். தான் அதை சம்பாதிப்பதுடன் அங்ஙனம் கிடைப்பதற்கு வழியைத் தேடியவனும் அவனே யாகும்.

அடியில் தொழிற்சாலையிலேயே அதிகக் கூலி கிடைக்க இடமேற்பட வேண்டும் அங்கு ஏற்படாவிடில் மேலே உள்ளவர்களும் அதிக சம்பளம் வாங்க முடியாது. வேலை செய்யாமல் எந்த அமைப்பும் நடைபெறாது. அது இயற்கையாய் ஏற்பட்ட விதி. சோம்பேறித்தனமாய் எவரும இருக்க முடியாது; மூளையை உபயோகிக்காமலும் இருக்கமுடியாது. நமது சுயமதிப்பும், கதி மோட்சமும் நமது உழைப்பையே பொறுத்திருக்கிறது. சமூகத்தில் மேன்மையும் சிறுமையும், யோக்கியமான உழைப்பைத்தான் தாங்கியிருக்கிறது. அவரவர்களுக்கு சமூகத்தில் என்ன பதவி கிடைக்க வேண்டும் என்று கருதுகிறார்களோ அதெல்லாம் உழைப்பின் பயனாகத்தான் கிடைக்கக்கூடும். அதிகம் உழைக்கிறவர்கள் அதிக பலனைப் பெறுவார்கள். எனவே, கூலி கொடுப்பதில் தர்ம சிந்

னைக்கே இடமில்லை. தர்மத்திற்காக எவரும் உழைக்கவில்லை; உழைப்பது குறைவாயிருக்கிறபொழுது தர்ம சிந்தனையுடன் எவரும் அதிகக்கூலி கொடுத்துவிடப் போகிறதுமில்லை. தான் ஏற்றுக்கொண்ட வேலையை முழு மனதுடன்தான் எவ்வளவு சாமர்த்தியமாய் செய்து முடிக்கக் கூடுமோ அவ்வளவு திறமையாகச் செய்பவன்தான் நல்ல வேலைக்காரன். ஆனால் தனது வேலையை சரியாக மதித்து, அதற்கேற்ற பிரதிப் பிரயோஜனத்தை யடையாமல் என்றென்றைக்கும் அவன் உதை செய்துகொண்டேயிருப்பான் என்று எதிர்பார்க்க முடியாது. தான் என்னதான் வேலை செய்தாலும், தனக்கு வேண்டியவளவுகூட கூலி கிடைக்காது, தனது காலக்ஷேபத்திற்குக்கூட கட்டும்படியான வளவு சம்பாத்தியம் கிடைக்காது என்ற கவலையுடன் வேலைக்கு வருகிறவன், வேலைக்கு லாயக்கில்லை. அவன் மனக்கவலையினால் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதனால் வேலை சரிவர நடக்காது.

ஆனால், ஒரு தொழிலாளி தான் உழைப்பதின் பலனாக தனது குடும்ப சம்ரக்ஷணையாவதுடன், தன் குழந்தைகளுக்கு சௌகரியங்கள் செய்துகொடுத்து வாழ்க்கைக்குத் தயாராக்க கொஞ்சமும், தனது இல்லாள் இன்பவாழ்வு எய்துவதற்குச் சிறிதும் மீக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட இடமிருந்தால் தானாகவே அவன் தனது முழு சக்தியையும் தன் வேலையில் ஈடுபட உழைப்பான். இதனால் அவனும் நன்மையடைவான்; தொழிலும் விருத்தியாகும். தான் அன்றன்று செய்கிற வேலையைக்கொண்டு திருப்தியடையாத தொழிலாளி, தனது உழைப்பிற்கு ஏற்ற கூலியைப் பெறவில்லை.

அவரவர்கள் தினே தினே செய்யும் வேலை மிகவும் முக்கியமானது. அதுவே இவ்வுலக வாழ்க்கையின் மூலாதாரமாகும். நமது சுயமதிப்பைக் காப்பது அதுதான். முதலாளியும், தனது கீழ்வேலை செய்யும் தொழிலாளர் எல்லோரையும்விட கடினமாக வேலை செய்யவேண்டும். தனது கடமையைச் சரிவரச்செய்ய விரும்பும் முதலாளி, கடுமையாக உழைப்பவராயிருக்கவேண்டும். "எனக்காக ஆயிரக் கணக்கானவர்கள் வேலை செய்கிறார்கள்" என்று சொல்லிக்கொண்டு அவர் திருப்தியடைந்துவிட முடியாது. உண்மையென்னவெனில் அவ்வளவு ஆயிரம் ஜனங்களும் அவருடைய உழைப்பை எதிர்பார்த்து நிற்கிறார்கள். அவர்கள் நன்றாய் உழைக்க, உழைக்க அவர்களுடைய முதலாளிக்கும் தாங்கள் செய்து தரும் சாமான்களை விற்பதில் அதிக வேலை கொடுத்து வருகிறார்கள். கூலியும் சம்பளமும் நிரந்தரமான தொகையாயிருக்கவேண்டும்; அப்பொழுதுதான் ஒரு ஆதாரமாக அதைக்கொண்டு கணக்கிடமுடியும். கூலியும், சம்பளமும் லாபத்தில் ஒரு பகுதியாக

முதலிலேயே நிர்ணயிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டவையாகக் கருத வேண்டும்; ஆனால் வருஷக் கடைசியில் கணக்குப் பார்க்கும் பொழுது அதிகத்தொகை கொடுக்கக் கூடுமென்று வெளியாகும். அப்பொழுது அதிகம் தொழிலாளருக்குக் கொடுத்தாக வேண்டும். ஒரு தொழிலில் எல்லோரும் சேர்ந்து உழைக்கையில் லாபத்தில் எல்லோருக்கும் ஒருவகையில் பங்கு கிடைக்கவேண்டும்; அதிகக் கூலியோ, சம்பளமோ, அல்லது லாபப்பங்கோ அவரவர்களுக்குக் கிடைக்கவேண்டும். இப்பொழுது இந்தக் கொள்கையை சாதாரணமாய் எல்லோரும் ஒப்புக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

தொழிலில் பணம் சம்பாதிப்பதுடன், தொழிலாளரின் சௌகரியத்தையும் கவனிக்கவேண்டும். இதற்கு தொழிலாளரும் பங்காளர் என்பதை உணர்ந்து தொழிலை நடத்தல்தான் நேரானவழி. ஒவ்வொரு மனிதனும் பிறருடைய உதவியை எவ்வகையிலும் எதிர்பார்க்கவேண்டியதில்லை என்ற ஏற்படும் வரையில், கூட்டாளிகளாக விருந்துதான் தொழில்களை நடத்தவேண்டும்.

தொழிலாளருக்கு அளிக்கப்படும் கூலி அவர்களுக்குத் தொழிலுள்ள பங்கிற்குக் கிடைக்கும் பகுதி என்று கருதப்படவேண்டும்.

கூலி போதுமானதாக எப்பொழுது கொள்ளலாம்? உழைப்பினால் ஜீவனோபாயத்திற்கு எவ்வளவு சம்பாதிக்க முடியும்? காலக்ஷேபத்திற்கு வேண்டியவளவு கூலியிருக்க வேண்டுமென்று மட்டும் சொல்லிவிட்டால் போதாது. உற்பத்தியும், போக்குவரத்தும் திறமையுடன் நடைபெறுவதைப் பொருத்திருக்கிறது. இதற்கு நிர்வாகிகளும், தொழிலாளரும் திறமையாய் வேலைசெய்ய வேண்டும். சரியாக நிர்வகிக்கப்பட்டால் எந்தத் தொழிலிலிருந்தும் அதிகக்கூலி கிடைக்கும்; காலக்ஷேபத்திற்குள்ள செலவும் குறையும்.

கோதுமை டாலருக்கு ஒரு படி விற்கிறபோதும், $2\frac{1}{2}$ டாலருக்கு ஒரு படி விற்கிறபோதும் தினசரி தொழிலாளிகள் செய்ய வேண்டிய வேலைக்கு ஒரே சிரமம்தான் படவேண்டியிருக்கிறது. வேலை செய்பவரை மட்டும் பொருத்திருந்தால் அவருடைய காலக்ஷேபத்தைப் பற்றி அதிக கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் அவர் தனித்த மனிதரல்ல. பொதுஜன சமூகத்தில் ஈடுபட்டவராவர். குழந்தை குட்டிகளைப் பாதுகாத்து நல்ல குடிமக்களாக வளர்க்க வேண்டியவராகிறார். இவற்றையெல்லாம் நாம் கவனிக்க வேண்டும்.

தொழிலாளருக்கு அவர்களுடைய வேலைக்காக கூலி கொடுக்கப்படுகிறது ஆனால் அதில் எவ்வளவு அவருடைய இல்லறத்தைச் சேருகிறது? அவர் குடும்பக்களாயிருப்பதற்காக எவ்வளவு பாகம் போகிறது? தந்தை என்ற பதவியில் எவ்வளவு செலவாகிறது. ஆண்மக்கள் தொழிற்சாலையிலும், பெண்மக்கள் இல்லத்திலும் வேலை செய்கிறார்கள். இவர்களிருவருக்கும் தொழிற்சாலையில் கூலி கொடுக்கவேண்டும். தனது குடும்ப சம்ரக்ஷணையான பின், துணிமணிகள் செலவும், வீட்டுவாடகை, கல்வி முதலிய செலவுகளுக்கும் ஆனபின் மீதம் வைப்பதன் பொருட்டு ஒரு சிறு தொகை யிருக்க வேண்டிய தில்லையா? இவையனைத்தும் தினசரிக் கூலியிலிருந்து செலவு செய்யத் தகுந்தபடி கூலியிருக்க வேண்டுமென்பது என் அபிப்பிராயம் இல்லாவிடில் அநியாயமாய் சிறு குழந்தைகளும், தாய்மார்களும் வேலை செய்யவேண்டி நேரும். இந்த அக்கிரமத்தைத் தடுக்கவேண்டும்.

இதுவரையில் கொடுக்கப்பட்டுள்ள மிக அதிகக் கூலிகூட சாதாரணமாய் எவ்வளவு கொடுக்கப்பட வேண்டுமோ அதற்குக் குறைவாகவேதா னிருந்திருக்கிறது. இதற்குத் தக்கபடி இன்னும் தொழில முறைகள் அமைக்கப்பட வில்லை. இது நம்முன் னிற்கும் வேலைகளில் ஒன்று. கூலி அளிக்கும் ஏற்பாட்டை ஒழித்து தொழில் எல்லோருக்கும் சொந்தம் என்று அமைத்துவிடலாம் என்று சொல்லுவதால் நிவர்த்தி ஏற்பட்டுவிடாது. கூலி விகிதப்படிதான் உற்பத்திக்குத் தக்கபடி வெகுமதி யளிக்கக் கூடும். அதை யொழித்தால் அநீதம்தான் ஏற்படும். ஆனால் அதைச் சீர்படுத்தினால் எல்லோருக்கும் நீதி வழங்கலாம்.

இவ்வளவு ஆண்டுகளாக எனக்கு ஏற்பட்ட அனுபவத்திலிருந்து கூலி விஷயத்தைப்பற்றி நன்றாகத் தெரியும். நாங்கள் கொடுக்கும் கூலியைப் பொருத்தே யிருக்கிறது எங்கள் வியாபாரமும் என்று நான் கண்டு கொண்டிருக்கிறேன். அதிகக் கூலி கொடுத்தால் இதர தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சுபிக்ஷம் உண்டாகும்; அதனால் அவர்கள் எங்கள் சாமான்களை வாங்குவார்கள்; எனவே எங்கள் வியாபாரமும் விருத்தியடையும் தேச முழுதும் அதிகக்கூலி வழங்கினால் அத்தேசம் நல்ல ஸ்திதியிலிருப்பதற்கு அது அடையாளமாகும்; ஆனால் அதிக உற்பத்தியானால்தான் அதிகக்கூலி கொடுக்கவேண்டும். அதிகக்கூலியும் கொடுத்து, உற்பத்தி குறைவா யிருப்பின் தொழில் க்ஷீணித்துவிடும்.

"T" மாடல் வண்டியைச் செய்த பிறகுதான் கூலி விகிதம் எங்ஙனமிருக்க வேண்டுமென்ற நிர்ணயம் ஏற்பட்டது. அதற்கு

முன் லாபத்தில் ஒரு பங்கு தொழிலாளருக்குக் கொடுத்து வந்தோம். வருஷக் கடைசியில் அவர்களுக்கு ஒரு பகுதி அளிப்பது வழக்கம். ஒரு வருஷம் வேலை செய்தவர்களுக்கு கூலியில் 100-க்கு 5-ம், 2 வருஷம் வேலையி லிருந்தவர்களுக்கு 100-க்கு 7½ -ம், 3 வருஷம் வேலை செய்தவர்களுக்கு 100-க்கு 10-ம் வருஷக் கடைசியில் பொருளுதவி அளித்தோம். ஆனால் தினசரி செய்யப்படும் வேலைக்கும், இதற்கும் சம்பந்த மில்லை யாதலால் இது அவ்வளவு பொருத்தமான முறையல்ல.

தவிர, வேலைக்குத் தக்கபடி கூலி யமைய வில்லை. அதிக சிரமும், சாமர்த்தியமும் தேவையாயிருக்கும் ஒரு வேலைக்கு சாதாரணமாய்ச் செய்யக் கூடிய ஒரு வேலைக்குக் கிடைக்கும் கூலியை விடக் குறைவாக கொடுக்கபடுவ துண்டு. இதனால் அநீதி ஏற்பட்டுவிடுகிறது. 1913-ம் ஆண்டிலி ருந்து ஒவ்வொரு வேலைக்கும் எவ்வளவு நேரம் பிடிக்கும் என்று கணக் கெடுத்தோம். இதிலிருந்து ஒவ்வொரு ஆளும் எவ்வளவு வேலை செய்ய வேண்டுமென்று நிர்ணயிக்கலாம். இதன்மேல் கூலியையும் அளிக்கலாம். எங்கள் தொழிற்சாலையில் இந்த ஏற்பாட்டை அநுசரித்து வருகிறோம்.

1914-ம் ஆண்டில் எங்கள் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தோம். எந்த வேலைக்கும், சில நிபந்தனைக் குட்பட்டு, குறைந்தது தினசரி 5 டாலர் கூலி என்று ஏற்படுத்தினோம். நாள் ஒன்றுக்கு எட்டுமணி நேரம்தான்—அதாவது ஒரு வாரத்தில் 48 மணி நேரம்— எவரும் வேலை செய்ய வேண்டும். இதற்குமுன் இது தினசரி 9 மணியாக விருந்தது. நாங்கள் தானாகவே இங்ஙனம் செய்தோம். எங்களிடம் வேலை செய்பவர்களுக்கு நீதி வழங்கவேண்டு மென்ற ஒரே எண்ணத்துடன் இது செய்தோம். பிறர் இன்புற்று வாழ அநுகூலம் செய்து கொடுத்தோம் என்ற திருப்தி ஏற்பட்டால் அதுவே பெரிய இன்பமாகும். வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் நல்லெண்ணம் உண்டானால் சௌகரியமாய் வாழலாம்.

இதில் தர்மம் ஒன்றும் செய்து விடவில்லை. இதை சாதாரணமாய் ஒருவரும் உணருகிறதில்லை. முதலாளிகள் பலர் நாங்கள் அதிகப் பணம் சம்பாதித்துவிட்ட மமதையால் இங்ஙனம் செய்தோமென்றும், விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகத்தான் இந்த ஆடம்பர மெல்லாம் பண்ணுகிறோ மென்றும், சாதாரணமாய் ஏற்பட்ட விதிகளை மீறி, தொழிலாளி எவ்வளவு குறைவாகக் கூலி வாங்கிக் கொள்ளுவானோ அதற்கு அவனை வேலைக்கு அமர்த்தாமல், வீணாய்த் தொழிலாளருக்கு அதிக ஆசைகாட்டிக் கொடுத்து விட்டதாயும் எங்களைக் கண்டித்தார்கள். இத்தகைய விதிகளையும்,

வழக்கங்களையும் அடியோடு ஒழித்தாக வேண்டும். என்றைக்காவது அவை அழிந்துபோம். இல்லாவிடில் வறுமையை அழிக்க முடியாது. அதிகக் கூலி கொடுக்கவேண்டுமென்பதற்காக மட்டும் நாங்கள் கொடுக்கவில்லை; எங்களால் அங்ஙனம் கொடுக்க முடியும் என்றதால்தான் அப்படித் திட்டஞ் செய்தோம். தொழிலை நல்ல உறுதி செய்வதற்காகவே அதிகக் கூலி அளித்தோம். நாங்கள் ஒன்றும் தானம் அளித்துவிடவில்லை. எங்கள் தொழில் சீராக நிலைபெறவே இங்ஙனம் தொழிலாளருக்கு அனுகூலம் செய்து கொடுத்தோம். குறைவான கூலியளிக்கும் தொழில் நிலைபெறாது. இதனால் பலவிதமான வகையில் எங்களைக் கண்டித்துள்ளார்கள். ஆனால் ஒருவராவது உண்மையை அறியவில்லை. என்ன வேலை செய்த போதிலும் தினசரி 5 டாலர் கூலி கிடைத்து விடுமென்று தொழிலாளர் எண்ணினார்கள்.

உண்மை என்னவெனில் வருஷக் கடைசியில் லாபத்தைப் பகிர்ந்து கொடுப்பதற்குப் பதிலாக ஆரம்பத்திலேயே இவ்வளவு லாபம் கிடைக்குமென்று ஒருவாறு நிர்ணயம் செய்து கொண்டு கம்பெனியில் 6 மாதத்திற்குக் குறைவில்லாமல் வேலையிலிருந்தவர்களுக்கெல்லாம் அந்த லாப விகிதத்தைக் கூலியுடன் சேர்த்து கொடுக்கிறதென்று திட்டஞ் செய்தோம்.

மூன்று வகையான தொழிலாளருக்கு அதைப் பகிர்ந்து கொடுத்தோம்.

(1) குடும்பத்துடன் வாழ்ந்து வந்தவர்கள்.
(2) 22 வயதுக்கு மேற்பட்ட பிரமசாரிகள்.
(3) 22 வயதுக்குட்பட்ட ஆண்களும், நெருங்கிய உறவினர்களுக்குத் தங்களைத் தவிர வேறு ஆதாரமில்லையென்றுள்ள பெண்களும்.

முதலில் ஒவ்வொருவருக்கும் சாதாரணமாய் கணக்குப்படியுள்ள கூலி கொடுக்கப்படும். இதுவே மற்ற இடங்களில் வழங்கும் கூலியைவிட 100-க்கு 15 அதிகமாயிருந்தது. அதற்குமேல் லாபத்திலும் ஒரு பகுதி அளிக்கப்படும். கூலியும், இந்த லாபப் பகுதியுமாக சேர்ந்து குறைந்தது 5 டாலராக வேண்டும். மணிக்கு இவ்வளவு என்று கூலியை வகுத்து மிகவும் குறைவான கூலி பெறுகிறவர்களுக்கு அதிக லாபப் பகுதி கிடைக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டது.

இங்ஙனம் தொழிலாளரும் முதலாளியுடன் சுபிக்ஷமாய் வாழ ஏற்பாடு செய்தோம். ஆனால் இதற்கு சில நிபந்தனைகளுண்டு. தொழிலாளியும், அவன் குடும்பமும் ஒழுங்கான முறைப்படி

வாழ்ந்து தூய்மையா யிருக்கவேண்டும். நேர்மையான வாழ்க்கை நடத்துபவர்களுக்குப் பொருளுதவி யளித்து தூண்டுதலளித்தோம். நேர்மையான வாழ்க்கை நடத்துகிறவர்கள்தான் நேர்மையாக வேலையைச் செய்வார்கள். ஆனால் அதிகக் கூலி கொடுப்பதால் வேலையின் திறமை குன்றாம லிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டி யிருந்தது. மகா யுத்தத்தின்போது ஒருவன் கூலியை சீக்கிரமாக அதிகரிப்பதால் அவனுடைய வேலைத் திறமை குன்றியதோடு, சம்பாத்தியமும் முடிவில் குறைந்து போய் விடுகிறதாகத் தெரியவந்தது. அதிகச் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்கள் விஷயத்திலும் இது பொருத்தமாய்த்தா னிருந்தது.

நாங்கள் வற்புறுத்திய விதிகள் கேவலமானதா யில்லை. பொருளுதவி பெற வேண்டுமெனில் கலியாணமானவர்கள் தங்கள் குடும்பத்துடன் வாழ்ந்து அதைச் செவ்வையாகப் பாதுகாக்கவேண்டும். தங்கள் வீடுகளை ஓட்டல் மாதிரி செய்து பொருள் சம்பாதிக்கும் கெட்ட வழக்கத்தை முறிக்க வேண்டியிருந்தது. 18 வயதுக்குட்பட்ட பையன்கள் தங்களைச் சார்ந்துள்ளவர்களைக் காப்பாற்றினால் தான் லாபத்தில் பங்கு பெறுவார்கள்; பிரமசாரிகள் நேர்மையான வாழ்க்கை வாழவேண்டும். இங்ஙனம் எங்கள் திட்டத்தை நிறுவி அமுலுக்குக் கொண்டு வந்தபோது ஆரம்பத்திலேயே 100-க்கு 60 பேர் லாயக்கானவர்களா யிருந்தார்கள். ஆறு மாதத்திற்குப் பின் 100-க்கு 78 பேரும், ஒரு வருஷத்திற்குள் 87 பேரும் உதவி பெற்றார்கள். ஒன்றரை வருஷத்திற்குள் 99 பேருக்குமேல் உதவிபெறத் தகுதியுள்ளவர்களானார்கள்.

மேலும், இதனால் அடிக்கடி ஆட்களை மாற்றவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

எங்கள் கொள்கை யென்னவெனில், தொழிலாளர் தங்கள் முழு சக்தியையும் பிரயோகித்து வேலை செய்ய வேண்டுமென்று விரும்பினால் அவர்கள் கவலையின்றி வாழும்படி கூலி கொடுக்க வேண்டு மென்பதுதான். நல்ல கூலி கொடுத்தால் வியாபாரமும் நன்றாய் விருத்தி யடைகிறது. வருஷத்தில ஒரு கோடி டாலர் வரையில் லாபத்தில் உதவி யளிப்பதற்கு செலவிட்டு வந்தோம். இதுவும் கொடுத்து, நல்ல கூலியும் அளித்த பின்னர் எங்கள் லாபமும் மிகுதியாகவே யிருந்தது.

நன்னடத்தைக்குத் தக்கபடி கூலி கொடுப்பதில் தீமை விளையும். இதனால் பாரபக்ஷம் ஏற்படும். தொழிலில் அதற்கு இடமில்லை. வேலைக்குத் தக்கபடி லாபத்தில் தொழிலாளர் பங்கு பெறுவதே சிறந்த முறை.

# அத்தியாயம் 10.

## தொழில்முறை தத்துவம்.

தொழிலில் சுபிக்ஷமும் உறக்கமும்—இவை விதி வசத்தால் ஏற்படுகின்றனவா? இல்லாவிடில் காரணமென்ன?—நிவர்த்திக்கு வழி—முதலாளிகளும் சமூகமும்—சமூகத்தின் சுபிக்ஷத்திற்கு முதலாளிகள் எங்ஙனம் உதவக்கூடும்?—குறைந்த விலையில் உயர்ந்த சரக்கு—குறைகளுக் கெல்லாம் காரணம் யார்?—தொழில் முறையின் தத்துவம் என்ன?—அதைக் கையாளும் விதம்.

முதலாளியும் சரிதான், தொழிலாளியும் சரிதான், வருஷம் முழுதும காலக்ஷேபம் செய்தாக வேண்டியிருக்கிறது. ஆனால் இரு வர்க்கத்தாரும் அந்தந்த வர்க்கத்துக்குத் தக்கபடி வேலை செய்துவிட்டு திருப்தியடைந்து விடுகிறார்கள். முதலாளிகள் தங்கள் சரக்குகளுக்கு "ஆர்டர்" கிடைக்கும்போது விலை கூறி பெறுகிறார்கள். அதேமாதிரி தொழிலாளரும வேலை கிடைக்கிற காலத்தில கூலிக்கு அமருகிறார்கள். நல்ல தீவிரமான காலத்தில ஏராளமாய் ஆர்டர்களும் வரும்; தொழிலாளருக்கும் வேலை அதிகமாய்க் கிடைக்கும். தொழிலில் "உறக்கம்" ஏற்படுகிற காலங்களில் ஆர்டர்களும் குறைவு; தொழிலாளருக்கும் வேலை அகப்படுகிறதில்லை. நல்ல சுபிக்ஷம் ஏற்படுகிற நாட்களில் விருந்து என்றும், உறக்கம் உண்டாகிற நாட்களில் உபவாசம் என்றும் கருதலாம். சாதாரணமாய், தொழில் நன்றாக நடக்கிற காலமென்றும், உறக்கமாயிருக்கிற காலமென்றும் இதைச் சொல்லுவது வழக்கம். சில சமயங்களில் திடீரென ஒருவகை சாமானுக்குத் தேவை அதிகமேற்பட்டு ஆர்டர்கள் வந்து குவியும்; அதைச் செய்யும் இயந்திரங்கள் வேலை இல்லாமல் சும்மா கிடக்கிற நாளும் உண்டு. தேவைக்குத் தக்கபடி சாமான்கள் உற்பத்தி செய்து விற்பதற்கு பணத் தடைகள் ஏற்படக் கூடும். உற்பத்தியும், தொழிலாளருக்கு வேலை கிடைப்பதும் ஒரே சீராக இருப்பதில்லை. நிதானமாய ஒருவாறாக உற்பத்தி செய்து கொண்டிருக்காமல், திடீரென ஒரு சமயத்தில் வேலையே நடக்காமல் நின்றுவிடும். இங்ஙனம் நமது தொழில் முறைகளில குறைகளிருந்துகொண்டு வருகின்றன. வெகு பேர் ஒரு சரக்குக்கு கிராக்கி வருகையில், சரக்குக் கையில் அதிகமில்லையென்று சொல்லியனுப்பிவிடுவது சகஜமாயிருந்து வருகிறது. ஒரு

வரும் கோராமலிருக்கும்போது சரக்கு விலைபோகாமல் கையில் தங்கிப் போய் விட்டதாக புகார் உண்டாகிறது. எங்கள் தொழிற்சாலையில் எப்பொழுதாவது தேவைக்குத் தக்கபடி கையில் சாமான்கள் இல்லாமல் போயிருக்கிறதே யன்றி விலையாகாமல் தங்கிப் போனதே கிடையாது. அபரிமிதமாய் உற்பத்தி செய்து விடுகிற வழக்கம் எங்களிடம் கிடையாது. சில சமயத்தில் விலையாகாத உபயோகமற்ற சரக்குகளை செய்து வைத்துக்கொண்டு சாமான் விலையாகவில்லை யென்று சிலர் கூறுகிறார்கள். இப்படி நேரிட்டால் அது அதிக உற்பத்தியில்லை தவறான உற்பத்தி யென்று அதைச் சொல்ல வேண்டும் அது மூளையில்லாமல் செய்கிற வேலை. இன்னும் ஏராளமான விலை வைத்து விற்கும்படியாக சில சாமான்களில் நேரலாம். இது உற்பத்தியில் ஏற்பட்ட குறைகளாலோ, அல்லது பண விஷயத்தில் உண்டான தவறுகளாலோ நேருகிறது. இதனாலும் சாமானுக்குத் தக்க விலையல்லவென்று சரக்கு கையில் தங்கிவிடும். அதிக உற்பத்தி செய்து விட்டதாய் இவ்வித சந்தர்ப்பத்திலும் கருதக்கூடாது.

தொழில் நன்றாய் நடப்பதும், உறக்கமாயிருப்பதும் விதிவசத்தைப் பொறுத்திருக்கிறதா என்பது கேள்வி. வேறு வழியில்லையென்று, நாம் அவ்வப்போது ஏற்படுகிற நிலைமைக்கு உடன்பட்டுத்தானாக வேண்டுமா? தொழில் நன்றாய் நடப்பதும், அல்லாததும் அதை நடத்துபவர்களையே பொருத்திருக்கிறது; அதை விளங்க வைப்பதும், கெடுப்பதும் அவர்கள் கையிலேயே இருக்கிறது. பயிர் சாகுபடி செய்வதும், கனிகளை வெட்டி சுரங்கங்களில் வேலை செய்வதும், தொழில்கள் நடத்தி சரக்குகள் உற்பத்தி செய்வதும், ஜனங்கள் நன்றாய் உண்டு உடுத்து சுகமாய்க் காலங் கழிப்பதற்காகவே என்பதைச் சொல்லத் தேவையில்லை. வேறு எக்காரணம் பற்றியும் இத்தொழில்கள் நடைபெறவில்லை என்பது நிதர்சனமாய் விளங்க வேண்டும். ஆனால் இதை ஒருவரும் லட்சியம் செய்கிறதில்லை; ஒருவருக்கும் இது புலப்படுகிறதில்லை. ஜன சமூகத்தின் சௌகரியத்திற்காக சேவை புரிவதே தொழில்களின் நோக்கமாயிருக்க வேண்டுமென்கிற கருத்துப்போய், பணம் சம்பாதிப்பதையே நோக்கமாகக்கொண்டு வேலைகள் இப்பொழுது நடக்கின்றன. இதனால் என்றால் நமது பணமானது பண்டமாற்று செய்துகொள்ள ஒரு சாதனமாயிருக்கவேண்டியது போய், அதற்கு ஒரு தடையாகவும் ஆய்விட்டதுதான். இதைப் பற்றி பின்னர் விரித்து உரைக்கின்றேன்.

இடை இடையே தொழிலுக்கு துரதிருஷ்டம் சம்பவித்ததாகக் கூறுவதெல்லாம் ஒழுங்கீனமாய் அதை நிர்வகிப்பதால்தான்.

தேச முழுதும் மழையில்லாமலோ, வேறு காரணத்தினாலோ விளைச்சல் சரியா யில்லாமையால் பஞ்சம் உண்டாகி ஜனங்கள் பட்டினியால் வாட நேரிட்டால் அது தெய்வாதீனமாய் ஏற்பட்டது என்று சொல்லலாம். ஆனால் சரியான நிர்வாகமில்லாமல் தொழில்களுக்கு ஹானி ஏற்பட்டு, பஞ்சமும், வறுமையும் உண்டானால் அதற்கு யாரை நொந்து கொள்ளுகிறது; அங்ஙனம் கஷ்டம் ஏற்பட இடமு கொடுக்கலாமா? மகா யுத்தத்தின்போது எல்லா விஷயங்களும் தாறுமாறாக மாறின என்பது வாஸ்தவம்தான். உலக முழுதுமே அத்தகைய மாறுதல்கள் உண்டாயின. சரியான நிர்வாகம் இருந்திருந்தால் யுத்தமே நேர்ந்திராது. ஆனால் அப்பொழுது ஏற்பட்ட சங்கடங்களுக்கெல்லம் மகா யுத்தம் மட்டும் காரணமில்லை மகா யுத்தத்தினால் நமது பணக் கொள்கைகளிலுள்ள குறைகள் வெளிப்பட்டு நமக்கு விளங்கின; அத்துடன் பணத்தை மட்டும் மூலாதாரமாகக் கொண்டு நடக்கும் தொழில் எவ்வளவு நிலையற்றது என்பதை அது நிரூபித்தது தொழில் சரியாக நடக்காதது பணக்கொள்கைகளில் உள்ள குறையால்தானோ? அல்லது தொழில் முறையில் உள்ள தவறான இலட்சியத்தால் தான பணக்கொள்கையில் அத்தகைய குறை ஏற்பட்டதோ? எது எதற்குக்காரணம் என்று என்னால் சொல்லமுடியாது. ஆனால் இதுமட்டும் உறுதி. தற்போதய பொருளாதார முறையை முற்றும் மாற்றியமைத்தல் தவறாயிருக்கலாமெனினும், சமூக சேவைக்கு ஏற்றவாறு தொழில முறைகளை மாற்றிக்கொள்ள வேண்டும். இவ் வளவிற்கு மட்டுமாவது பணக்கொள்கையையும் திருத்தியமைத்தாக வேண்டும். தற்போதய முறை அப்பொழுது தானாக அழிந்துவிடும்; அதற்கு அவசியமே யிராமல் போய்விடும். ஆனால இச் சீர்திருத்தம் நாளடைவில்தான் உண்டாகும்.

தொழில்களை நிலையான ஸ்திதியைக் கொண்டுவந்து வைப்பது பெரிய காரியமல்ல. யாராலும் அது எளிதில் செய்யக்கூடியது. சரக்குக் கையில் தங்கி உறக்க மேற்படுவதும், தேவைக்குத் தக்கபடி கையில் சரக்கு இல்லாமல் கஷிப்பு ஏற்படுவதும் வைசூரியைப்போல் தடுக்கக்கூடிய நோய்கள்தான். நாளடைவில் பொருள் முறையை சீர்திருத்தி தொழில்களையும் மாற்றியமைக்கவே இவை நீங்கிவிடும். தற்போது பயிர்த்தொழில் சீராகிக் கொண்டு வருகிறது. பயிர்த்தொழிலும், கைத்தொழிலும் முற்றும் சீர்திருந்தி அமைந்தபின் அவை இரண்டும் ஒன்றுக்கொன்று துணையாக நின்று துணைத்தொழில்களாக விளங்கும். இவை இரண்டிற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு; இவை வேறுபட்டனவல்ல. உதாரணமாக நாங்கள் அமைத்துள்ள ஒரு தொழிற்சாலையை யெடுத்துக் கொள்ளலாம். நாட்டுப்புறத்தில, நகர்களிலிருந்து

18 மைல் தூரத்துக்கு அப்பால், அத்தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. இதனால் தொழிற்சாலையில் வேலைசெய்கிறவர்கள் பயிர்த்தொழிலையும் செய்யக்கூடும். பயிர்த் தொழிலில் இயந்திரங்களைப் பிரயோகித்தால் இப்பொழுது அதில் செலவிடப்படும் நேரத்தில் ஒரு பகுதிகூட செலவாகாது. சாதாரணமாய் விதை விதைப்பதற்கும், பயிரிடவும், அறுவடை செய்யவும் எவ்வளவு நேரம் பிடிக்கிறதோ அதைவிட அதிககாலந்தான் விளைச்சலுக்கு இயற்கையில் ஆகிறது. இயந்திரத்தின் உதவியைக் கொண்டு வேலை செய்ய வேண்டிய தொழில்கள் பலவற்றில் உபயோகிக்கப்படும் கருவிகள், சாதாரணமாய் அங்கே செய்து கொள்ளக்கூடியவையாக யிருக்கும். நீர் ஓட்டத்தின் சக்தியால் அவ்வியந்திரங்களை ஓட்டவும் கூடும். எனவே, ஒருபுறம் பயிர்த்தொழிலை கவனித்துக்கொண்டு, மறுபுறம் சிறிய கைத்தொழில்கள் எதையேனும் இயந்திரங்களைக் கொண்டு நடத்தலாம். சாஸ்திர ஞானத்தின் உதவியை இவ்வாறு பயன்படுத்திக் கொள்ளுவதுடன், சுத்தக ஆரோக்கியமான வாழ்வையும் அனுபவிக்கலாம். பருவ காலங்கள் நீங்க, இதர காலங்களில், ஏற்றவாறு இப்படிச் சிறிய தொழில்களை நடத்துகையில், நேர்மையான நிர்வாகத்தால் நல்ல லாபம் பெறலாம். எந்தக் காலத்தில் எந்தத் தொழிலை நடத்துவது அனுகூலமென்று அனுபவத்தின் மூலம் கண்டறிந்து கொள்ளவேண்டும்.

இடை இடையே தொழில்களில் உறக்கம் உண்டாவது மிகவும் கவலைக்கிடமானது. இதைத் தடுக்க அந்தந்த தொழிலில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் ஒரு சிறிதேனும் உதவக்கூடும். போர்டு கம்பனியாருக்கு தொழில் உறக்கம் என்பதே இன்னதென்று தெரியாது. தொழில் உலகத்திலேயே மிகவும் தாழ்ந்துபோய் கேவலமாய்ப் போனதாக கருதப்படும் 1920-21 ம் ஆண்டில் மட்டும் 12½ லக்ஷம் மோட்டார்கள் நாங்கள் விற்றோம். அதாவது சாதாரணமாய் வியாபாரம் நடந்ததாகக் கூறப்படும் 1913-14 ம் ஆண்டில் விட 5 பங்கு அதிகம். இதிலெல்லாம் பெரிய இரகசியம் ஒன்றுமில்லை. ஒரு நிரந்தரக் கொள்கையை நாங்கள் அனுசரித்ததுதான் இதற்குக் காரணம்; அந்த கொள்கையை வேறு எந்தத் தொழிலிலும் கையாளலாம்; நாங்கள் அடைந்துவருகிற பலனும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

எத்தகைய நிபந்தனையுமின்றி குறைந்தது தினக்கூலி ஆறு டாலருக்குக் குறைந்து ஒருவருக்கும் சம்பளம் கிடையாது. இன்னம் அதிக சம்பளம் எல்லோருக்கும் நாங்கள் வழங்குவதால் அவர்கள் திருப்தியாக தங்களால் செய்யக்கூடிய முழு அளவுக்கும் வேலை செய்கிறார்கள். இதனால் மேற்பார்வை அவசியமில்லை.

வேலைக்குத் தகுந்தபடியே நாங்கள் கூலி கொடுக்கிறோம். தொழிலாளர் முற்றும் தொழிலில் ஊக்கம் காட்டுகிறார்களென்பதை விளக்க, பெரும்பாலோர் மேற்குறிப்பிட்ட ஆறு டாலருக்கு அதிகமாகவே கூலி பெறுகிறார்கள் என்பதே போதும்.

ஒரு நாட்டின், ஒரு சமூகத்தின் சுபீக்ஷம் அதிலடங்கியுள்ள பெரும்பாலோர் நன்றாய் உண்டு உடுத்து, களிப்புற்று இன்பமாக வாழ்வதைப் பொருத்திருக்கிறது. முதலாளிகள் பணக் குவியல்கள் சேர்த்து பாங்கிகளில் போட்டு சுகம் அனுபவிப்பதைப் பொருத்ததல்ல நாட்டின் சுபீக்ஷம். முதலாளிகளின் கடமை, நாட்டின் சுபீக்ஷத்தை வளர்ப்பதேயாகும். முதலாளிகள் சமூகத்தின் சுபீக்ஷத்தை வளர்க்கும் ஒரு கருவியாகவே தம்மை கருதிக் கொண்டு, மிகவும் குறைந்த விலையில் சிறந்த சரக்கை சமூகத்தினருக்கு செய்தளித்து, தம் கீழ் வேலை செய்யும் தொழிலாளருக்கும் அதிகமான சம்பளத்தைக் கொடுத்து நல்ல வேலையை வாங்கி தொழிலை வளர்க்கவேண்டும். இல்லாவிடில், அவர்கள் சமூகத்தில் வாழவே உரிமை கிடையாது. பொருளாதார நிபுணர்கள் சுபீக்ஷ காலமென்றும், க்ஷாம காலமென்றும் சொல்லி, புள்ளி விவரங்களைக் கொண்டு செய்யும் ஜால வித்தைகளைக் கண்டு நாம் மயங்கவேண்டிய தில்லை. விலைகள் அதிகமாயிருக்கையில் சுபீக்ஷ காலமென்று அவர்கள் சொல்லுவார்கள். முதலாளிகள் தங்கள் சரக்குகளுக்கு அவ்வப்போது கூறும் விலையிலிருந்து நாட்டின் சுபீக்ஷத்தை நிர்ணயஞ் செய்துவிட முடியாது.

சரக்குகளின் விலை சாதாரணமாய் ஜனங்களின் வருவாய்க்குத் தக்கதா யில்லாமல் மிகவும் அதிகமா யிருப்பின், வருவாய்க்கு ஏற்ற வாறு விலையைக் குறைக்க வேண்டும். எந்தத் தொழிலிலும் சரக்குகளை முதலாளிகள் செய்கிறார்கள்; கடைசியாக பொது ஜனங்கள் அதை வாங்குகிறார்கள். இங்ஙனம் வாங்குகிறவர்களின் சக்திக்குத் தகுந்தபடி விலையில்லாமற் போனால், அவர்கள் சரக்கை வாங்கவில்லை யென்றும், தொழில் சரியாக நடக்கவில்லை யென்றும் முதலாளிகள் நொந்துகொள்வது மடத்தனம் அல்லவா? தலைகீழாக வல்லவா அது இருக்கிறது. பொது ஜனங்களுக்காக, தொழிலை நடத்தும் முதலாளியா அல்லது முதலாளியின் நன்மைக்காக பொது ஜனங்களா? பொது ஜனங்கள் சரகை வாங்கவில்லையெனில் அது யாருடைய பிழை? ஒருவருடையது மல்லவெனில், முதலாளி தொழில் நடத்த லாயக்கில்லை. அதை விட்டு விலகிவிட வேண்டும். தொழிலை நடத்தவும், சரக்குகளைச் செய்யவும், அதைப் பொது ஜனங்கள் வாங்கவும் இங்ஙனம் நடவடிக்கைகள் நடக்கப் பணம் எங்கிருந்து வருகிறது? பொது ஜனங்களிடத்திலிருந்து தான்.

சாமான்களை வாங்குபவர்களின் பிரியப்படி சாமான்களைச் செய்து கொடுப்பதைப் பொருத்திருக்கிறது, ஒரு தொழில் முன்னடைவதும் அல்லாததும். குறைந்த விலையில் நல்ல சாமானைச் செய்து கொடுத்தால்தான் வாங்குபவர்கள் திருப்தி யடைவார்கள். அங்ஙனம் செய்கிறவர்கள்தான் தொழிலில் முதன்மை ஸ்தானம் பெறுகிறார்கள். இதை மறுக்க முடியாது.

எனவே தொழில் நன்றாய் நடப்பதற்கு ஒரே விதிதானுண்டு. நல்ல நிர்வாகத்தால் சரக்குகளைச் செய்வதற்கு ஏற்படும் செலவைக் குறைத்து விலையை மலிவாக்குவதே யாகும்.

கூலியைக் குறைப்பதைப்போல கேவலமானதும், மிருகத்தன்மை யானதுமான வழி வேறொன்றுமில்லை. வியாபாரத்தில் நஷ்டம் உண்டாகிறதென்று தொழிலாளர் கூலியைக் குறைப்பது நேர்மையான முறையல்ல. உண்மையான காரணம் எதுவென்று கண்டு பிடித்து நிவர்த்தித்தால் கூலியைக் குறைக்கவேண்டிய அவசியமே வராது. நான் அனுபவத்தில் இதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் எவராவது நஷ்டத்தை சுமத்திக் கொள்ளத்தான் வேண்டும் என்று சொல்லப்படும். இது தவறு. உண்மையில் முன் சம்பாதித்த அதிக லாபத்தில் கொஞ்சம் இப்பொழுது திரும்பக் கொடுத்தாக வேண்டி முதலாளிக்கு நேரும். இதனால் பின்னர் மறுபடி அதிக லாபத்தைப் பெறுவார்கள். எனக்குத் தெரிந்த ஒரு இரும்பு வியாபாரி ஒரு சமயத்தில் சரக்கை அதிகமாய்ச் சேர்த்து வைத்திருந்தால் பத்தாயிரம் டாலர் நஷ்டம் அடைந்தார். ஆனால் அவர், இது உண்மையில் நஷ்டமில்லை என்றும், தான் எதிர்பார்த்த விலைக்கு விற்று அதிகமாய் உத்தேசித்தபடி சம்பாதிக்க முடியாமற் தான் போயிற்றென்றும் என்னிடம் உரைத்தார் தான் கோரிய விலை கிடைக்கவில்லை யென்று சரக்கை முடக்கிப் போட்டுவைக்காமல் நஷ்டப்பட்டே எல்லாவற்றையும் விற்றார். இந்த நோக்கத்துடன், பொது ஜனங்களின் தேவைக்கு சரக்கை யளிப்பதையே பெரிதாகக் கருதி தொழிலை நடத்தவேண்டும். இவர்தான் சரியான வியாபாரி. முதலாளிகள் ஒவ்வொரு சமயம் நஷ்டத்திற் காளாகித்தானாக வேண்டும். பொதுவாய் அவர்கள் அதை உணருகிறதில்லை. ஆனால் மேற் குறிப்பிட்ட இரும்பு வியாபாரி அதை நன்றா யுணர்ந்து நஷ்டம் வந்த காலத்தில் தைரியமாய் அதை ஏற்றுக்கொண்டார். இதுதான் வியாபாரிகளுடைய இலக்ஷணம்.

எங்கள் கம்பெனியிலும் இதர வியாபாரங்களில் போலவே வியாபாரம் நடுவில் உறக்கமாயிருந்தது. சரக்கு ஏராளமாய் கையில் தங்கிப் போய்விட்டது. அதை யெல்லாம் செய்வதற்கு ஏற்பட்ட

செலவு தொகைக்குக் குறைத்துவைத்து, மோட்டார் செய்து,விற்பதென்றால்கூடப் பொதுஜனங்கள் வாங்கக்கூடிய சக்திக்கு அதிகமான விலை வைக்கவேண்டி யிருந்தது. கடைசியில் 1 கோடி 70 லக்ஷம் டாலர் குறைந்த விலைக்கு சாமான்களை மதிப்புப்போட்டு அதற்குத் தகுந்தபடி மோட்டாரின் விலையை வைத்து விற்றோம். இல்லாவிடில் தொழிலை நடைபெறாமல் நின்றுபோய் ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருக்கும். இத்தகைய சந்தர்ப்பத்தில்தான் தொழிலை நிர்வகிக்கிறவர்கள் நிதானமாய் தைரியத்துடன் நின்று வேலை செய்ய வேண்டும். நஷ்டம் வந்த காலத்தில் பொறுத்துக் கொண்டுதானாக வேண்டுமென்று தைரியமாய்த் தொழிலை நடத்தினால் பின்னர் தொழில் சீர்பெற்றோங்கி வளரும். தொழிலை நிறுத்திவிட்டால் சோம்பேறித்தனமும், பீதியும் அதிகரித்து திரும்பத் தொழிலைத் தொடங்கி நடத்தும் ஆற்றல்கூட ஒழிந்துபோகும்.

தொழில் சீராக வேண்டுமென்று காத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. ஜனங்கள் தாங்கள் அத்தியாவசியமென்று கருதும் பொருளுக்கு ஒரு விலைகொடுத்து வாங்க என்றைக்கும் தயாராயிருப்பார்கள். அந்த விலைக்கு விற்பதே தொழில் செய்பவர்களின் கடமை. இவ்வாறு விற்பது அசாத்தியமல்ல; மனம்தான் வர வேண்டும். இதற்காக சரக்கின் தரத்தைக் குறைத்து உபயோகமற்ற சரக்கை விற்கவும் கூடாது. குறுகிய புத்தியுடன் சிக்கனமும் செய்தல் நன்றல்ல. வீணாய் ஆடம்பரம் செய்து பரபரப்பும் செய்யத் தேவையில்லை. உற்பத்தியை சரிவர செய்து சரியான விலைக்கு சரக்கை விற்க முயலவேண்டும். இங்ஙனம் தொழிலில் உறக்கம் ஏற்படில் அதிலிருந்து பெரிய நன்மையை முதலாளிகள் அடையலாம். இதுவே முதலாளிகளின் மூளையைச் சோதிக்கும் காலம். முதலாளிகள் தங்கள் மூளையைப் பிரயோகித்து, பணம் சம்பாதிப்பதைப் பெரிதாக நினைக்காமல், சமூகத்திற்கு சேவை செய்வதே முக்கியமென்று உழைப்பதற்கு நல்ல தருணம் இதன்மூலம் ஏற்படும். பணத்தைப் பெரிதாக எண்ணுபவர்கள் தொழிலை நடத்தத் தகுந்தவர்களல்லர்.

நமது பொருளாதார முறையிலோ, தொழில் துறையிலோ, சமூக வாழ்க்கையிலோ காணப்படும் குறைகளுக்கெல்லாம் காரணம், அவற்றில் உழலும் மானிட வர்க்கமேயாகும். நமது தொழிற் துறையில் ஏற்பட்டுள்ள தவறுகளெல்லாம் மானிட வர்க்கத்தில் சுபாவமாய் ஏற்பட்டுள்ள பிழைகளின் பிரதிபிம்பம்தான். தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள், அவைகளில் சேரும் இன்னல்களெல்லாம் தாங்களாகவே விளைவித்துக் கொண்டவை யென்பதை அறிகிறதில்லை. சமூகத்தின் ஊழல்களுக்கெல்லாம் மானிட வர்க்

கமே காரணமெனினும், தானாக வேண்டுமென்றே எந்த மனிதனும் அவற்றிற்கு இடங்கொடுக்க மாட்டான். அறியாமையாலும், வெகுளித்தனத்தாலுமே மனிதர்கள் அவற்றிற்கு ஆட்படுகிறார்கள்.

முதன் முதலில் நமது தொழில் முறைகள், பின்னர் அவை எங்ஙனம் வளரும் என்றே விளங்கவில்லை. முதலாளிகளென்றும் தொழிலாளரென்றும் பிரிவினைகள் அப்பொழுது ஏற்படுமென்றும், அவை யிரண்டிற்கும் நேர் விரோதமான தத்துவங்கள் அமையுமென்றும் ஒருவரும் நினைத்திருக்க மாட்டார்கள். ஆனால் தொழில்கள் வளர வளர, அவற்றிலுள்ள குற்றங் குறைகளெல்லாம் வெளிப்பட ஆரம்பித்தன. நாளடைவில் இப்பொழுது தொழில் துறையில் தொழிலாளர் பேரைக்கூட தெரிந்துகொள்ளத் தேவையில்லாமல் போய்விட்டது. தொழில் திட்டத்தில் தொழிலாளரும் ஒரு பகுதியாகவே கருதப்படுகிற காலம் வந்துவிட்டது. இங்ஙனம் மிருகத்தன்மையாக அது வளரும் என்று ஒருவரும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் நாளடைவில் அவை வெளிக்கு வந்துவிடுகின்றன.

தொழில் முறையின் தத்துவம் என்ன ? பணம் சேர்ப்பதல்ல; எல்லோருக்கும் பயன்படத் தகுந்தவாறு உழைப்பதுதான். உற்பத்தியை சீர்படுத்தி, உபயோகமான வஸ்துக்களை ஆயிரக்கணக்காக செய்து, தொழிலை விருத்திபண்ணி, சமூக சேவை செய்வதுதான் தொழில் முறையின் தத்துவம். திடீரென விலை ஏற்றத்தினாலோ வேறு காரணத்தினாலோ பணம் சம்பாதித்து லாபம் அடைய எத்தனிப்பது இந்த தத்துவத்திற்கு நேர் விரோதம். உழைப்பினாலேயே லாபம் பெறவேண்டும் தொழில் நடத்துவதில் விட்டுக்கொடுத்து, நாமும் வாழவேண்டும், பிறரும் வாழவேண்டும் "அயல் வாழ, அகம் வாழ" என்ற கருத்து இருக்கவேண்டும். பற்பல துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்பதினாலேயே தொழில்களை செவ்வையாய் நடத்த முடியும். எந்தக் கேவலமான தொழிலும் சேவை செய்யவேண்டுமே என்ற நோக்கத்துடன் நடத்தப்பட்டால் நேர்மையடைந்து ஒழுங்கு பெறும் என்பதில் தடையில்லை.

# அத்தியாயம் 11.

## எல்லோரும் இன்புறும் வழி.

விலை ஏறுவதற்குக் காரணங்கள்—பேராசையும் பீதியும்—சரக்கு முடக்கம் — தேவைக்குத் தக்கவளவு சாமான்—சேலவை ஒடுக்கும் முறைகள்—அதிகக் கூலியும், குறைந்த செலவும்—வியர்த்தத்தைத் தடுத்தல்—மாதிரிகளை மாற்றும லிருத்தல்—கட்டடங்கள் முக்கியமல்ல—தேவையான சரக்குகளை சேகரிக்கும் விதம்—இயந்திர சக்தியும் வேலையில்லா திண்டாட்டமும்—உண்மையில் கஷ்டம் நேருகிறதா?—நிர்வாகம் நேரா யிருப்பின் தொழில் விருத்தியடையும்—மூளையைப் பிரயோசித்து நிர்வாகத்தை நடத்தவேண்டும்—எல்லோரும் இன்புறும் வழி.

விலை இறக்கமா யிருக்கிறவரையில் சரக்குகளை வாங்கக் கூடியவர்கள் எப்பொழுதும் ஏராளமா யிருப்பார்கள். அதிக்கிரமமாய் அதிக விலைக்கு சாமான்கள் விற்கப்படில் தொழில் முறையில் ஏதோ ஊழல் இருக்கவேண்டும். சாதாரணமாய் சரக்கு தேவைக்குத் தகுந்தபடி கிடைக்காமல், தடை ஏற்பட்டுவிடும் என்ற பயத்தினாலும், நாணயச் செலாவணியில் உண்டாகும் சிக்கல்களினாலும் இங்ஙனம் விலை அதிகப்படுத்தப்படுகிறது. உடனே பொது ஜனங்கள் தங்கள் தேவைக்கு அதிகமாய் சாமான்களை வாங்கி சேகரித்து வைத்துக் கொள்ளுகிறார்கள். வியாபாரிகளும் இதே மாதிரி விலை ஏறிக்கொண்டு போகும் என்று பேராசைப்பட்டு சாமான்களை வாங்கிப்போட்டு முடக்கி வைக்கிறார்கள். இம் மாதிரி பொது ஜனங்கள் பீதியால் சாமானை வாங்கி அதிகப்படியாய் சேகரித்து வைத்துக் கொள்வதாலும், பேராசை கொண்ட வியாபாரிகள் சரக்குகளை முடக்கி விடுகிறதாலும், இக் காரணங்களினால்தான் சரக்குகளின் விலை ஏறிவிடுகிறது. மகா யுத்தத்தின்போது நாம் இத்தகைய நிலைமை ஏற்பட்டதை நேரில் கண்டோம்; பிரத்தியட்சமாய் அனுபவித்தோம்.

என்னதான் சரக்கு கிராக்கியாய்ப் போய் கிடைப்பதரிதாய் விட்டபோதிலும், சர்க்கார் கட்டுப்பாடுகள் செய்து சாமானை விற்பதற்கு கண்டிப்பான ஏற்பாடுகள் என்னதான் செய்த போதிலும்,

டணத்தைச் சளைக்காமல் தாராளமாய்க் கொடுக்கத் தயாராயிருப்பவர்களுக்கு வேண்டியவளவு சரக்கு கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. உண்மையில் நாட்டின் தேவை எவ்வளவு என்று திட்டமாகச் சொல்வது எளிதல்ல. இன்றைக்கு ஒரு கணக்கு எடுத்தால் நாளைய தினம் அது மாறிவிடக்கூடும். ஒரு சரக்கு செலவாகிறது அதன் விலையையும் தரத்தையும் பொருத்திருக்கிறது. எனவே, அது இவ்வளவு செலவாகும் என்று பிற்காலத்தைக் குறித்து நிர்ணயமாகச் சொல்லுவது எளிதல்ல. சில சமயம் சரக்கை அதிக நஷ்டத்திற்கு விற்கும்படி நேரிடும். இதனால் பின்னர் அதிக லாபத்திற்கு விற்று ஈடுசெய்து கொள்ளலாம் என்று எண்ணக் கூடாது. லாபமும் நஷ்டமும் மாறி வருமென்றும், அதனால் எவ்வளவு அதிக விலை கிடைக்கக்கூடுமோ அதற்கு விற்பது தான் தொழில் முறை என்றும் கொள்ளுவது தவறு. எங்கள் அனுபவத்தில் அத்தகைய கொள்கை தவறென்று கண்டு கொண்டுள்ளோம்.

உடனே தேவைக்குத் தக்க வளவுதான் சாமான் வாங்கி வைத்துக்கொண்டு சரக்குகளைச் செய்வது எங்கள் பிரதம கொள்கை. சரக்கை செய்து செய்து கப்பலேற்றியோ, ரயிலேற்றியோ வியாபாரத்துக்கு அனுப்புவோம். அவ்வப்போது சரக்குகள் செய்தவுடன் அனுப்பிவிட போக்குவரவு சாதனங்கள் இருந்தால், அனாவசியமாய் சாமான்களைக் கொண்டுவந்து தொழிற்சாலையில் சுமத்திக் கொள்ள வேண்டியதில்லை. வரிசைக் கிரமமாய் திட்டப்படி சாமான்கள் வரவும், அவைகளை வண்டிகளாகச் செய்யவும், செய்து முடிந்த இவற்றை ரயிலிலும், கப்பலிலும் ஏற்றி அனுப்புவதும் இவ்விதம தொழில் ஒன்றின்பின் ஒன்றாக நடைபெறுவதால் எங்கள் கையில் சரக்கு சுமந்து முடங்குகிறதில்லை. 1921-ம் ஆண்டில் கையில் சரக்குத் தங்கிப்போனதற்குக் காரணம் போக்குவரத்து சாதனங்கள் ஒழுங்காயில்லாததுதான். விலை ஏறிக் கொண்டு வரும்பொழுது சரக்கை வாங்கி சேகரித்துவைத்து மிகவும் உயர்ந்த விலைக்கு விற்று லாபம் பெறலாம் என்பது பேராசை யோசனையே யன்றி நேரான வியாபார முறையல்ல. ஒரு சரக்கில் லாபம் வந்தால் மற்றொன்றில் நஷ்டம் வந்து அதையும் சேர்த்து அடித்துக்கொண்டு போய்விடும். விலை அதிகமாயிருக்கிறதென்று சரக்கு வாங்காமலும், குறைவாயிருக்கிறதென்று வாங்கி சுமத்திக் கொள்ளுவதும் எங்களிடம் கிடையாது. லாபத்தைக் கருதி, தேவைக்கு அதிகமாக சாமான்களை வாங்கிக் குவிப்பதே தவறென்று உணர்ந்து நாங்கள் அங்ஙனம் செய்கிறதில்லை. ஒருதரம் லாபமடைந்து விட்டால் திரும்பவும் அந்த ருசியைக் கண்டு பேராசையால் வியாபாரத்தில் சரக்கை வாங்கி முடக்கிவைக்கும் எண்

ணம் தோன்றும். இங்ஙனம் ஓரிரண்டு முறை லாபம் வந்தபோதிலும் கடைசியில் பெருத்த நஷ்டம் உண்டாகி, கைப் பொருளெல்லாம் போய் ஆண்டியாய்ப் போய்விட நேரும். இதைத் தடுக்கும் வழி, தேவைக்கு மேல் வாங்காம லிருப்பதே யாகும். இங்ஙனம் செய்தால் தொழில் முறையில், வழியிலேற்படும் ஒரு பெரிய படுகுழியிலிருந்து மீளலாம்.

நாங்கள் போட்டியை கவனிக்காமல், பொது ஜனங்களின் பெரும்பான்மையோரின் சக்தியையே கருதி, அதற்கேற்றபடியே விலையை நிர்ணயிக்கிறோம். இதனால் 1909 லிருந்து 21 வரையில் திடமாக தொழிலபிவிருத்தி யடைந்து, உற்பத்தி அதிகமானதுடன், விலையும் குறைந்துகொண்டே வந்திருக்கிறது. முதன் முதலில் 950 டாலருக்கு விற்ற வண்டியை 360 டாலருக்கு விற்கும்படி எட்டு வருஷத்துக்குள் அபிவிருத்தி செய்தோம். 18 ஆயிரத்து 664 வண்டிகள் செய்தவிடத்தில் 12½ லக்ஷம் வண்டிகள் செய்கிறோம்.

ஒவ்வொரு வண்டியையும் இன்னும் அதைநேர்ப்படுத்தி நூதனமாய் ஏதேனும் சீர்திருத்தங்கள் அதில் செய்யலாமா என்று நாங்கள் பார்த்த பிறகே அதை தொழிற்சாலையை விட்டு வெளியே அனுப்புகிறது வழக்கம். எங்கள் கம்பெனி வண்டியை விட வேறு கம்பெனிகளில் செய்யப்படும் வண்டிகள் எதிலாவது புதிய அபிவிருத்தி ஏதாவது செய்திருந்தால் உடனே அதை நாங்கள் ஊன்றி கவனித்து விசாரிப்போம். இதற்காக புதிதாய் கம்பெனியிலிருந்து வெளியாகும் ஒவ்வொரு தினுசிலும் ஒரு வண்டியை வாங்கிப் பார்ப்பது வழக்கம். இங்ஙனம் வாங்கும் வண்டிகளை ஓட்டிப் பரீட்சை பார்ப்பதுடன், தனித்தனியாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் சோதித்துப் பார்ப்போம். எங்கள் தொழிற்சாலையை சுற்றிலும், இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு வண்டி தினுசும் காணலாம். இப்படி புதிதாக ஒரு வண்டி வரும்பொழுதெல்லாம் பத்திரிகைகளில் அது பிரசுரமாகிறது. உடனே போர்டு, தன் கம்பெனியில் செய்யப்படும் போர்டு வண்டியைத் தானே உபயோகிக்கிறதில்லை என்று வம்பு கிளம்பும். சென்ற ஆண்டில் லஞ்செஸ்டர் என்ற "இங்கிலீஷ் கார்" வாங்கினோம். இங்கிலாந்தில் செய்கிற வண்டிகளில் மிகவும் உயர்ந்ததென்று அதைச் சொல்லுகிறார்கள். வெகு காலம் அது எங்கள் தொழிற்சாலையிலேயே கிடந்தது. பின்னர் "டீடிராய்ட்" நகருக்கு அதில் போக உத்தேசித்தோம். நாங்கள் ஒரு கூட்டமாகப் போனோம். கூட இரண்டு போர்டு மோட்டாரும், ஒரு "பாக்கார்ட்" வண்டியும் வந்தன. நான் இங்கிலீஷ் காரில் சென்றேன். நியூ யார்க் நகருக்கு சமீபத்தில் ஒரு ஊர்வழியாகப் போகை

யில் பத்திரிகா நிருபர்கள் வந்து என்னைச் சூழ்ந்து கொண்டு நான் ஏன் போர்ட் வண்டியில் போகவில்லை என்று கேட்டார்கள்.

அதற்கு நான் சொன்ன பதில் என்னவெனில், "நாங்கள் இப்பொழுது விடுமுறை யனுபவிக்க புறப்பட்டிருக்கிறோம். ஆகையால் அவசரப் பட்டுக்கொண்டு வீட்டுக்குப் போக வேண்டுமென்ற அவசியமில்லை. சாவகாசமாய்ப் போகலாம். அதனால்தான் இந்த வண்டியில் போகிறேன். இல்லாவிடில் போர்டு வண்டியில் போவேன்."

இதே மாதிரி போர்டு மோட்டாரைப் பற்றி எவ்வளவோ கதைகளுண்டு.

விலையைக் குறைத்து, சரக்கை நயமாக்கி விற்கவேண்டுமென்பதே எங்கள் கொள்கை. விலையைக் குறைப்பதுதான் பிரதமமானது. செய்யும் செலவுகளைப் பற்றி கவலைப் படுகிறதில்லை. தானாகவே அவை விற்கிற விலைக்குத் தக்கபடி செலவுகளும் ஒத்து வந்துவிடும். சாதாரணமாய் செலவுக்குத் தக்கபடி விலையை வைக்க வேண்டுமென்று சொல்லுவார்கள். ஆனால் விலையாகும்படியான விலைக்கு சரக்கைத் தயார் செய்ய முடியாவிடில் செலவைப் பற்றி விசாரப்பட்டு என்ன பயன்? எனவே, மிகவும் குறைந்த விலையை நிர்ணயஞ் செய்துகொண்டு அதற் கேற்றவாறு செலவுகளையும் அமைத்துக் கொள்ளவேண்டும்.

தொழிலாளருக்கு அதிக சம்பளம் கொடுப்பதால், செய்யும் செலவுகள் குறைவாகின்றன. நல்ல கூலி பெறும் தொழிலாளிகள் வேறு ஒருவிதகவலையு மில்லாமல் தொழிலில் சிரத்தையுடன் உழைப்பார்களாதலால் தொழில் செவ்வையாக நடக்கும். எட்டு மணி நேரம் வேலை செய்தால் 5 டாலர் குறைந்தது கூலி கொடுத்தோம்; அதுவுங்கூட பின்னர் 6 டாலராகச் செய்யவே செலவு தொகை இன்னுங் குறைந்தது. இங்ஙனம் அதிகக் கூலி கொடுப்பதால் செய்யுஞ் செலவுகளைக் குறைத்து விட்டோம்.

இரண்டாவதாக வியர்த்தமாக ஒரு செலவும் நாங்கள் செய்கிறதில்லை. டயனற்ற வகையில் எதுவும் செலவிட இடங் கொடுப்பதில்லை. பெரிய கட்டடங்களில் வீணாய் முதலைப்போட்டு, முடக்கி, வட்டி நஷ்டமாகும்படி நாங்கள் விடுகிறதில்லை. எங்கள் சரக்கின் தரத்தினாலேயே அது பகிரங்கமாகி பரவ வேண்டுமே யன்றி அது செய்யப்படும் கட்டடங்களைக் கண்டு எவரும் மயங்கி விடுவார்களென்று எதிர்பார்ப்பது தவறு என்று நாங்கள் நம்பி வேலை செய்

கிறோம். வாங்குபவர்களின் தேவையையும், சக்தியையும் முதலில் மனத்திலிறுத்தி, அதற்கேற்றபடி சரக்கின் தராதரத்தைச் செய்து தொழிலை நடத்த வேண்டும். இதுதான் ஒழுங்கான முறை. தொழில் நடத்துவது ஒருவித சேவையெனக் கொள்ளவேண்டும். விலையை உயர்த்துவதால் தொழில் செவ்வையாக நடக்கும் என்ற தவறான கொள்கை போய், அதிகம் சரக்கு விலையாகி பல பேர் வாங்குவதற்கு ஏற்றதாகச் செய்யவேண்டும்; அதற்கு விலை குறைவாகவே யிருக்கவேண்டும் என்ற உண்மையைத் தொழிலை நடத்துபவர்கள் அறியவேண்டும்.

இன்னொரு விஷயம் கவனிக்கத்தக்கது. அடிக்கடி புது புது மாதிரியாக மாற்றி யமைத்து பழையன வெல்லாம் கர்நாடகம் என்று ஒதுக்கிவிடும்படி செய்தல் தொழில் முறையில் சிறந்தவொரு மார்க்கம் என்று நினைக்கப்படுகிறது. இப்படி மாதிரியை மாற்றிக் கொண்டே போனால் அடிக்கடி வெவ்வேறு மாதிரிகளையும் ஜனங்கள் வாங்குவார்களாதலால் வியாபாரம் வளரும் என்று நம்புகிறார்கள். எங்கள் கொள்கையோ இதற்கு நேர் மாறிடையானது. என்றைக்கும் நிரந்தரமா யிருக்கத் தக்கதாய் செய்து கொடுக்க வேண்டுமென்று நாங்கள் முயலுகிறோம். எங்களிடம் மோட்டார் வாங்கிய பின் அது பயனற்றதாகப் போய்விட்டதென்றோ, கர்நாடகமாய் விட்டதென்றோ ஒருவரும் சொல்லக்கூடாது. ஒரு தரம் ஒரு வண்டி எங்களிடம் வாங்கியபின், திரும்பவும் வண்டி வாங்கவேண்டிய அவசியமே இருக்கக் கூடாது. பழைய மாதிரிகளைக் கர்நாடகமென்று ஒதுக்குமாறு நூதனமான மாறுதலொன்றும் நாங்கள் செய்கிறதில்லை. பத்து வருஷத்துக்கு முன் செய்த ஒரு மோட்டாரில் இன்றைக்கு விற்கும் மோட்டாரின் பாகங்களை மாட்டினாலும் அவை பொருந்தும்படியாகவே நாங்கள் எங்கள் வண்டிகளைச் செய்கிறோம்.

இன்னுஞ் சில விஷயங்களிலும் செலவை ஒடுக்கி வருகிறோம். பிரயோஜன மில்லை என்று குப்பைத்தொட்டியில் எறியப்பட்ட சில சாமான்கள் உபயோகிக்கக் கூடுமென்று கண்டு அவைகளைப் பொறுக்கி எடுத்து பயன் படுத்துகிறோம். எங்கள் தலைமை தொழிற்சாலையில் ஏற்படும் செலவைவிட குறைவான செலவிற்கு கிளை ஸ்தலங்களில் ஏதேனும் செய்யக்கூடுமானால் அவ்வாறு கிளைகளிலேயே அந்த சாமானை செய்து கொள்ளும்படி நாங்கள் ஏற்பாடு செய்கிறது வழக்கம். உதாரணமாக இங்கிலாந்தில் மான்செஸ்டரிலுள்ள தொழிற்சாலையில் போர்டு மோட்டார் முற்றும் செய்துவிடுகிறோம். அதேமாதிரி ஐர்லாந்திலுள்ள கார்க் நகர் தொழிற்சாலையிலும் எல்லா பாகங்களும் செய்யப்படுகின்றன.

வண்டிக்குத் தேவையான சாமான்களைப் பற்றி அடிக்கடி பரீட்சை செய்கிறோம். தேவையான மரம் அனைத்தும் எங்கள் சொந்தக் காடுகளிலேயே வெட்டி வந்துவிடுவதால் எவ்வளவோ சிக்கனமாகிறது. அதே மாதிரி தோலுக்குப் பதிலாக ஒருவகை சரக்கையும் செய்கிறோம்.

இவ்வளவு மலிவாகவும், அதிகமாகவும் சரக்குகளை உற்பத்தி செய்து கொண்டுவந்தால், கடைசியில் ஏராளமாய்ச் சரக்குகள் மிஞ்சிப் போய்விடாதா என்ற கேள்வி பிறக்கும். அத்துடன் தொழில் முறையில் வர வர ஆட்களைக் குறைத்துக் கொண்டுவந்து இயந்திர சக்தியையே எல்லாவற்றிற்கும் உபயோகிப்பதெனில், வேலையில்லாமல் திண்டாடும்படி பலர் கதியாகாதா? அவர்கள் எப்படிக் காலக்ஷேபம் செய்கிறது?

இரண்டாவது, அதாவது தொழிலாளரின் வேலையில்லா திண்டாட்டத்தை முதலில் எடுத்துக் கொள்ளுவோம். இது மிகவும் நியாயமான கேள்வி. ஆனால் கொஞ்சம் விசித்திரமானது. ரயில் வண்டி வந்ததால் வாடகை வண்டிக்காரர்களுக்குத் தொழிலில்லாமற் போய்விட்டதா? வாடகை மோட்டார் வந்துவிட்டதால் குதிரை வண்டிக்காரர்கள் பிழைப்புப் போய்விட்டதா? இயந்திரத்தில் ஜோடு தைப்பதால் கையால் ஜோட்டு வேலை செய்து கொண்டிருந்தவர்களுக்கு ஜீவனமில்லாமல் போய்விட்டதா? முன்னர் ஜோடுகள் விற்ற விலையைவிட இப்பொழுது மலிவாக விற்கிறது. ஏழைகள் கூட மலிவாக ஜோடு வாங்கமுடிகிறது. இதனால் அந்தத் தொழிலே அபிவிருத்தி யடைந்து விட்டது. வேலையில்லாமற் போனவர்களுக்கு வேறு நல்ல வேலை கிடைத்துவிடுகிறது. திடீரென்று தொழில் நிலை மாறி ஆட்களை வெளியேற்றிவிடில் திண்டாட்டம் உண்டாகுமென்பது நிச்சயம்தான். ஆனால் நாளடைவில்தான் இந்த மாறுதல்கள் ஏற்படுகின்றன. இங்ஙனம் மாறுதல் நேரும் போது புதிதாக ஏற்பட்ட நிலைமையில் ஒரு நல்ல வேலை தற்போதுள்ள ஸ்திதியால் வேலையில்லாமற் போனவருக்குக் கிடைத்து விடும்.

இதை நாங்கள் எங்கள் தொழிற்சாலையில் பிரத்தியட்சமாய்க் காண்கிறோம். இதுவே இதர தொழில்களிலும் நேருகின்றது. எஃகுத் தொழிலில் முன்னர் கையால் நடந்த வேலைகளுக்கெல்லாம் இயந்திர வேலை நடந்தபோதிலும், முன்னரைவிட அதிக ஆட்கள் வேலை செய்து வருகிறார்கள். இங்ஙனமே எப்பொழுதும் நடக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதை எவரும் காணவில்லையாகில் அவர்களுடைய திருஷ்டி மிகவும் குறுகியதாக விருக்கவேண்டும்.

தேவைக்கு அதிகமாய் சரக்குகள் செய்யப்பட்டுவிடின் என்ன செய்வது என்று சிலர் பயப்படுகிறார்கள். எங்களைப்பற்றிய வரையில் அத்தகைய நிலைமை ஏற்படில் நாங்கள் சந்தோஷப்படுவோம். எல்லோருக்கும் தேவையான சரக்குகள் கிடைத்து அதற்குமேல் அவசியம் ஒன்றுமில்லை என்ற நிலைமை ஏற்பட்டால் அதைவிட வேறு என்ன சுபிக்ஷம் வேண்டும்? ஆனால் அத்தகைய நல்லகாலம் அருகில் வரும் என்று தோன்றவில்லை. இன்னும் கொஞ்ச காலத்திற்கு உபரியாக சாமான்கள் சேர்ந்து அதிகமாய் மீந்துபோய்விடும் என்ற பயம் வேண்டியதில்லை. விலை மட்டும் சரியானபடி யிருக்கிற வரையில் இத்தகைய விசாரமே படவேண்டிய தில்லை. விலை யதிகமென்று ஜனங்கள் சரக்கை வாங்க மறுத்தால் தொழில் அபிவிருத்தி யடையும். உடனே தொழிலில் சிரத்தையுள்ள வியாபாரி சரக்கின தரத்தைக் குறைக்காமல் விலையை மலிவாக்கிவிட எத்தனம் செய்வார். விலையை மலிவாக்குவதால் உற்பத்தியில் வீண் செலவுகள செய்யாமலும், வியர்த்தம் ஏற்படாமலும் பார்த்துக் கொள்ளும்படி தூண்டும். மேலும் நிர்வாகஸ்தர்கள் நேர்மையாகத் தொழிலை நடத்த சிரமப்படுவார்கள்.

தொழிலாளரின் கூலியைக் குறைத்தோ, வாங்குபவர்களிடம் அதிக விலை வைத்து வாங்கியோ லாபம் சம்பாதிப்பது சரியல்ல. நிர்வாகத்தின் திறமையினாலேயே லாபம் பெறவேண்டும். சரக்கை மிகவும் மலிவாக விற்று நஷ்டமடையவும் வேண்டாம்; தொழிலாளர் கூலியையும் மிகவும் குறைத்துவிட வேண்டாம்; அதிக விலை வைத்து பொது ஜனங்களிட மிருந்து பணம் பறிக்கவும் தேவையில்லை. மூளையை அதிகமாய்ப் பிரயோகித்து முன்னரைவிட நேர்மையாக வேலையை நிர்வகிக்க வேண்டும். இதனால் தொழிலில் சம்பந்தப்பட்ட எல்லோரும் நன்மை யடைந்து சுகம் பெறுவார்கள். இதையெல்லாம் எப்பொழுதும் எளிதில் செய்யக் கூடும்.

# அத்தியாயம் 12.

## லாபம் யாருக்கு உரித்தானது?

பணமும் தொழிலும்—கடன் வாங்குவதால் தொழிலின் ஊழல்கள் நிவர்த்தியாகா—அதனால் விளையும் தீமைகள்—வக்கீல்களும் "பாங்கர்"களும் தொழிலுக்கு லாயக்கானவர்களா?—லாபம் தொழிலுக்கே உரித்தானது—பங்காளரின் பகுதி—வாங்குபவர்களுக்கும் பகுதி—லாபப் பகுதியும், கூலியும்—எது முக்கியம்?—கூலியின் புனிதத்தன்மை—லாபம் யாருக்குள் பங்கிடல் வேண்டும்—தொழிலுக்கும், தொழிலாளருக்கும், வாங்குபவர்களுக்கும் சேரவேண்டும்—நல்ல தொழில்களைக் கெடுப்பவர்கள யார்?— பேராசைக்காரர்கள்—கையிருப்பு —சரக்குக்கும் பணத்திற்கும் சம்பந்தம்.

தொழிலை நடத்துவதற்கும், பணத்திற்கும் சம்பந்தமில்லை. பணம் பாங்கியில் கிடக்கிறது; தொழில் கடையில் நடக்கிறது. ஒரு தொழிலுக்குத் தேவையான பணமெல்லாம் தொழிலிலிருந்தே கிடைக்கும்படியா யிருக்கவேண்டும். பாங்கியிலிருந்து கடன் வாங்கும்படி யிருக்கக்கூடாது. கடன் வாங்குதல் கூடாதென்பது எங்கள் கொள்கையல்ல. ஆனால் உழைப்பினால் சேர்ந்த பொருளுக்கு உள்ள கௌரவம் கடன் வாங்கிய முதலுக்குக் கிடையாது. இதைத்தான் நாங்கள் ஸ்தாபிக்க விரும்புகிறோம். பணம் தொழிலில் ஒரு கருவியாகத்தான் உபயோகப்படுகிறது. தொழிலிலேயே உள்ளூர ஊழலிருந்தால் எவ்வளவு கடன் வாங்கியும் பயனில்லை. மூளையைச் செவ்வையாய்ப் பிரயோகித்து நிதான புத்தியுடன் தைரியமாய் வேலை செய்தால்தான் அத்தகைய ஊழல்கள் நிவர்த்தியாகும். சில முதலாளிகள் தங்கள் ஏற்பாட்டில் ஒரு தவறுமே இருக்காது என அகம்பாவம கொண்டு ஊன்றி விசாரிப்பதில்லை. ஆனால் இயற்கையின் சட்ட திட்டங்கள் எங்ஙனம் மாறா நிலைமைப் படைத்தனவோ, அதைப்போலவே தொழில் முறையின் விதிகளும் நிலையானவையாகும். அவைகளை எதிர்த்துப் போராட முடியாது. தொழிலை அபிவிருத்தி செய்வதற்காகக் கடன் வாங்குதலுக்கும், நிர்வாகத்தின் ஊழல்களையும், வியர்த்தத்தையும் சோப்படுத்தக் கடன் வாங்குவதற்கும் வித்தியாசமுண்டு. வியர்த்தத்தைச் சிக்கன முறையினாலும், நிர்வாக ஊழலை மூளைப் பிரயோகத்தாலும்தான் நிவர்த்

திக்கலாம். இதற்குப் பணச் செலவில்லை. தவிர, பணம் தீமையையே இம் மாதிரி சந்தர்ப்பத்தில் விளைக்கும். குடிகாரன் ஒரு தரம் குடித்ததால் ஏற்படும் வெறியை மாற்ற திரும்பவும் குடிப்பதுபோல, கடன் வாங்க ஆரம்பித்தால் பழைய கடனை அடைக்க புதிதாக கடன் வாங்க வேண்டுமென்று தோன்றும்; இந்த மாதிரி கெடுக போய்க்கொண்டே கடைசியில் படுகுழியில் விழும்படி நேரும். ஆங்காங்கு தொழிலில் காணப்படும் ஊழலை அவ்வப்போது சீர்திருத்துவது, கடன் வாங்கி முதலை அதிகரிப்பதைவிட எவ்வளவோ மேலானது. தொழிலிலுள்ள குற்றங் குறைகளைக் களைய மார்க்கந் தேடாமல் கடன் வாங்குவதென்றால், ஏற்கெனவே உள்ள குறைகளுக்குத் தீனிபோட்டு வளர்ப்பது போலாகும்.

குறைந்த லாபத்திற்கு அதிக சாமான்களை விற்பது, அதிக லாபத்திற்கு குறைந்த சாமான்களை விற்பதைவிட மேலானது. இந்தக் கொள்கையையே என்னுடைய வியாபார தோரணையில் நான் அனுசரித்து வருகிறேன். இதனால் வெகுபேர் சாமான்களை வாங்க முடிகிறதோடு, பலருக்கு நல்ல கூலி கொடுத்து வேலையும் அளிக்க முடிகிறது. விலையைக் குறைப்பதால் வருமானம் குறைந்து விடுமென்று குறுகிய புத்தியுள்ளவர்கள் நினைக்கிறார்கள். இவர்களுக்கு தொழில் என்றால் இன்னது என்று கூட தெரியாததால், இவர்களைத் திருத்தமுடியாது. ஒரு தரம் என்னுடைய 'போர்டு' வண்டியை 80 டாலர் குறைத்து விற்க நான் ஏற்பாடு செய்தபோது 5 லக்ஷம் வண்டி வியாபாரமாகும எங்கள் கம்பனிக்கு 4 கோடி டாலர் நஷ்டமுண்டாகாதா என்று ஒருவர் கேட்டார். கணக்குப்படி இது மிகவும் சரியானதுதான். ஆனால் தொழிலில அது பொருத்தமாகாது. விலை இறங்கினாலன்றி வியாபாரம் அதிகரிக்காது. இல்லாவிடில் க்ஷீணித்துவிடும.

இந்த உண்மையை வக்கீல்களும், லேவாதேவி செய்யும் பணக்காரர்களும் அறிகிறதில்லை. தானாக விலையைக் குறைப்பதை அவர்கள் ஏற்கிறதில்லை. அதனால்தான் இத்தகைய வக்கீல்களையோ, "பாங்கர்"களையோ தொழிலை நிர்வகிக்கும்படி விட்டால் பெருங்கேடு விளையும். நாங்கள் குறைவான விலைக்கு விற்று, குறைந்த லாபத்தை வைத்து விற்பதால் மொத்தத்தில் அதிக லாபத்தை அடைந்து வருகிறோம். ஆனால் இந்த லாபத்தையெல்லாம் முதல் போட்டிருக்கும் பங்காளருக்கு நாங்கள் பகிர்ந்துகொடுத்து விடுகிறதில்லை. மிகக் குறைந்த பங்குதான் பகிர்ந்து அளிக்கிறோம். பங்காளரும் இதை ஒப்புக் கொண்டுள்ளார்கள். தொழிலில் வரும் லாபத்தில் ஒரு பகுதிபோக மிச்சமெல்லாம் தொழிலுக்கே சேர வேண்டுமென்பது என்னுடைய கொள்கை.

பங்காளர்கள் தொழிலில் ஊக்கத்துடன் வேலை செய்பவர்களா யிருத்தல் வேண்டும். அவர்கள் அதன்மூலம் சேவை செய்யும் நோக்கங் கொண்டவர்களா யிருக்கவேண்டுமே யல்லாது பணம் சம்பாதிக்கும் ஆசை யுடையவர்களாய் இருக்கக்கூடாது. அதிக லாபம் கிடைத்தால் அதையெல்லாம் திரும்பத் தொழிலிலேயே போட்டு சரக்கு வாங்குபவர்களுக்கு அதிகத் தொண்டு புரியும்படி ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு ஆண்டில் ஏராளமாய் லாபம கிடைக்கவே, ஒவ்வொரு மோட்டார் வாங்கியவர்களுக்கும் 50 டால ரைத் திருப்பி யனுப்பினோம். எங்களுக்குத் தெரியாமலே எங்க ளிடம் சரக்கு வாங்குபவர்களிடம் அவ்வளவு அதிக விலை பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்று நாங்கள் கருதினோம்.

இத்தகைய கொள்கையை நான் அனுசரித்ததால் பல ஆண்டு களுக்குமுன் அதிக பகுதி தங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று சில பங்காளர் கம்பெனிமீது வழக்குத் தொடர்ந்தனர். அப் பொழுது என்னைக் கோர்ட்டில், கூட்டில் ஏற்றி விசாரித்தபொழுது எங்கள் கொள்கை என்னவென்பதை விளக்கியுரைத்தேன். அதை யே இன்றைக்கும் கடைப்பிடித்து வருகிறோம். அஃதென்ன வெனில்:—

முதலாவதாக குறைந்த லாபத்தில் அதிக மோட்டார்களை விற்றால் பலர் அதை வாங்கி அனுபவிக்கலாம் என்பது என் கொள்கை. அனேகம் பேருக்கு நல்ல வேலையும் கூலியும் இதனால் கிடைக்கின்றது. இவை என் வாழ்க்கையின் இலட் சியங்களாகும். இவை கை கூடி, எனக்கும், என்னுடன் என் தொழிலில் சேர்ந்து உழைப்பவர்களுக்கும், சம்பந்தப்பட் டிருக்கிறவர்களுக்கும் கொஞ்சமாவது லாபம் கிடைக்காவிடில் நான் தவறிவிட்டதாகச் சொல்லுவார்கள்.

தொழில் முறையில் இந்தக் கொள்கைதான் சிறந்ததென்று அனுபவ பூர்வமாய் நான் கண்டுகொண் டிருக்கிறேன். இதை அனுசரித்ததால் வருஷா வருஷம் அதிகமானவர்கள் 'போர்டு' மோட்டாரை வாங்கியிருப்பதை நேரில் கண்டு வருகிறேன்; அதிகமானவர்களுக்கு எங்கள் தொழிற்சாலையில் அதனால் வேலை கிடைத்துக்கொண்டு வருகிறது; தொழிலும் அபி விருத்தி யடைந்து நாங்கள் எதிர்பார்த்ததற்கு மேல் லாபம் அடைந்து வருகிறோம்.

விலையைக் குறைப்பதால், குறைந்த விலையில் சரக்கை வாங் கக்கூடியவர்கள் அதிகமா யிருப்பார்கள். இதுதான் லாபத்தை

அதிகரிக்கிறது. உண்மையில் அக்கிரமமாய் ஏராளமான லாபம் அடையக்கூடாது என்பது என் கருத்து. விலையைக் குறைத்து, அதனால் விளையும் நன்மையை, வாங்குபவர்களுக்கும் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன். இதனால் எங்களுக்கும் ஏராளமான நன்மை விளைகிறது.

தொழிலில் பணம் போட்டிருக்கும் முதலாளிகளாகிய பங்காளருக்குத்தான் மிகவும் அதிக லாபம் கிடைக்க வேண்டுமென்ற கொள்கையுடையவர்களுக்கு நான் மேலே குறிப்பிட்ட முறைகள் பிடிக்காமலிருக்கும். இதனால்தான் பங்காளர்களைக் கொண்டு வியாபாரம் நடத்த நான் விரும்புகிறதில்லை. அதிக ஆட்களை தொழிலில் சேர்த்துக்கொண்டு அவர்களுக்கு நாங்கள் அனுசரிக்கும் தொழிற் திட்டப்படி சௌகரியங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்பது என் ஆசை. வீட்டு வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து, குடியும் குடித்தனமாக தொழிலாளர் சௌகரியமாக வாழ வேண்டுவதே அத் திட்டத்தின் பிரதம கொள்கை. லாபத்தில் பெரும் பகுதியை திருப்பவும் தொழிலிலேயே போட்டு உற்பத்தியை அதிகரித்தால்தான் இதற்கு எளிதாகும். எனவே தொழிலில் ஈடுபட்டு உழைக்காத பங்காளருக்கு எங்கள் திட்டத்தில் இடமில்லை. உழைக்கும் பங்காளர் லாபப் பகுதியைப் பெரிதாகக் கருதாமல் வேலை செய்வார்கள்.

கூலியைக் குறைக்கலாமா, லாபப்பகுதி அளிக்காமல் இருந்துவிடலாமா, என்ற கேள்வி பிறக்கும் காலத்தில் லாபமே பங்காளருக்கு அளிக்காமலிருந்து விடுதல் மேலென்று நான் வற்புறுத்துகிறேன். கூலியைக் குறைத்தால் பொது ஜனங்கள் ஏழையாகி அவர்களுக்கு சரக்குகளை வாங்கும் சக்தியில்லாமல் போய்விடும். பொருளாதார முறைகள் லாபத்தையும், கம்பெனியின் சுபிக்ஷத்தையும் மட்டும் கருதினால் போதாது. பொதுஜன சமூகத்துக்கு தொழிலாளருக்கு அளிக்கும் கூலியின் மூலமாக அவர்களிடமிருந்து வரும் பொருளில் எவ்வளவு திருப்ப அளிக்கப்படுகிறது என்பதையும் கணக்கிடவேண்டும். இது ஏதோ தர்மத்திற்காக செய்வதல்ல. சரியான கூலி கொடுப்பது தர்மகாரியமில்லை.

கூலிக்காக செலவிடும் தொகை மிகவும் புனிதமானது. தொழிலாளரின் இல்லற வாழ்க்கையையும், அவர்களுடைய மனைவி மக்களின் சுகவாழ்வையும், அது குறிப்பிடுகிறது. கம்பெனியின் கணக்குப் புஸ்தகத்தில் அத் தொகை ஒரு புள்ளியாகத்தான் காணப்படும். ஆனால் உலக நடவடிக்கையில் அந்தப்புள்ளியே ஆயிரக்

கணக்கான, லக்ஷக் கணக்கான ஏழை மக்களுடைய உணவையும், உடையும், இல்லற இன்பத்தையும், கல்வியையும், சுகபோகங்களையும் பாதிக்கின்றது. ஆனால் தொழிலை விருத்தி செய்து தொழிலாளருக்குக் கூலி கொடுக்க உதவும் மூலதனமும், மிகவும் விசேஷமானது. நமது தொழில்களின் ஜீவ்ய ரத்தத்தை உறிஞ்சிவிட்டால் ஒருவருக்கும் நன்மை விளையாது. இல்லறம் எவ்வளவு சிறப்பாக கருதப்படுகின்றதோ, அதேமாதிரி ஆயிரக்கணக்கான தொழிலாளரின் இன்ப துன்பங்களுக்குக் காரணமாயிருக்கும் தொழிற்சாலையையும் பாவிக்க வேண்டும். இல்லற வாழ்க்கை இன்புற்றிருக்க வேண்டுமாகில், தொழிற்சாலை வேலை செவ்வையாக நடைபெற வேண்டும். தொழிற்சாலையிலிருந்து லாபம் வருவதானால் அது அங்கு வேலைசெய்யும் தொழிலாளரின் இல்லற வாழ்க்கையை சுகமாகச் செய்து, இன்னும் இவர்கள் போன்ற பலருக்கு தொழில் அமைத்துக்கொடுக்க பயன்பட்டால்தான் நல்லது. அஃதன்றி ஒருவருடைய செல்வத்தைப் பெருக்க அது போய்ச் சேர்ந்து, தொழிலை அபிவிருத்தி செய்து, தொழிலாளருக்கு சுகம் அளிக்க வசதிகள் அமைத்து, நல்ல கூலிகொடுத்து உதவி, இன்னும் தேவையானவர்களுக்கு வேலைகொடுத்து சம்ரக்ஷிக்க இன்னோரன்ன நல்ல காரியங்களுக்குப் பிரயோஜனப்படவில்லையாகில், அது கண்டிக்கத் தகுந்தது.

ஒரு தொழிலில் கிடைக்கும் லாபம் பிரதானமாக மூவகையில் செலவிடற்பாலது. முதலாவதாக தொழிலுக்கே ஒரு பகுதி சேர வேண்டும்; இரண்டாவதாக அத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளரை ஒரு பகுதி சேரவேண்டும்; மிகுதியாயுள்ள மற்றப்பகுதி அத்தொழிலுக்கு ஆதரவு அளிக்கும் பொதுஜனங்களைச் சேரவேண்டும்.

அதிக லாபம் கிடைத்தால் உடனே விலையை மலிவாகச்செய்ய வேண்டும். ஆனால் வாங்குபவர்களிடம் எவ்வளவு தூரம் பற்றிக் கொள்ளலாமோ அவ்வளவையும் உறிஞ்சிக்கொண்டு விடுவோம் என்ற கொள்கை கொண்டவர்கள்தான் அதிகமாயிருக்கிறார்கள். இவர்கள்தான் பேராசைக்காரர்கள்; தொழிலில் ஜாலவித்தைகள் செய்பவர்கள். இவர்களால்தான் நேர்மையான தொழிலும் கெடுகின்றது. தங்கள் பேரேட்டுப் புஸ்தகங்களைத் தவிர உயர்ந்த கருத்துக்கள் அவர்கள் மனத்தில் புகுவதில்லை. இவர்கள் லாபத்தில் ஒரு பகுதியைக் குறைத்துவிட மனமின்றி, கூலியில் ஒரு பகுதியை குறைக்க ஏற்பாடு செய்யும் வர்க்கத்தவர்.

கையிருப்பில் எப்பொழுதும் அதிகமாகவே பணம் வைத்துக் கொண்டிருப்பது எங்கள் வழக்கம். 5 கோடி டாலருக்குக் குறை

யாமல் கையில் பணம் வைத்துக்கொண்டே யிருப்போம் இதை பாங்கிகளில் போட்டு வைத்திருக்கிறோம். நாங்கள் கடன் வாங்குவதே கிடையாது; தேவையானல் பாங்கிகளில் எங்களுக்கு ஏராளமாய்க் கடன் கொடுப்பார்கள். அவ்வளவுக்கு எங்களுடைய நாணயத்திற்குச் செல்வாக்கு உண்டு. ஆனல் கையிருப்பில் எப்பொழுதும் அதிகப் பணம் வைத்திருப்பதால் அதற்கு அவசிய மேற்படுகிறதில்லை. கடன் அவசியமான சமயங்களில் வாங்குவதை நான் கண்டிக்கவில்லை. ஆனல் கடன் வாங்குவதையே வழக்கமாகச் செய்துவிடும்படி அது தொழிலை ஆட்கொள்ள இடம் கொடுக்கக் கூடாது.

ஒரு காலத்தில் மட்டும் தீவிர வேலைசெய்து கையில் சரக்கை சேகரித்து வைத்துக்கொண்டு, மற்ற காலத்தில் வேலையின்றி தொழிற்சாலையை சும்மாய் போட்டுவைப்பது தவறு. முதலாவதாக தொழிலாளருக்கு நிரந்தர வேலையில்லாமல் போய்விடும். அடிக்கடி விட்டுவிட்டு வேலை செய்வதால் வேலை சரியாகவும் நடக்காது. தொழிற்சாலை சரக்கைச் செய்யவும், விற்பனை ஸ்தலத்தில் வியாபாரம் நடக்கவும், வியாபாரிகள் சரக்கை வாங்கவும் வருஷம் முழுதும் ஓயாமல் வேலை நடந்துகொண்டே யிருக்க வேண்டும். இந்தக் கொள்கையை நாங்கள் வெகு காலமாக போர்டு தொழிற்சாலையில் கையாண்டு வருகிறோம். எவ்வளவு சரக்கு செய்து வெளியனுப்பப்படுகிறதோ அவ்வளவு சரக்கு தொழிற்சாலையில் செய்யப்பட்டு, கையில் சரக்கு சேர்ந்து குவிந்து விடாதபடி ஏற்பாடு செய்திருக்கிறோம்.

கடைசியாக திரும்பவும் ஒரு முறை வற்புறுத்த வேண்டிய தென்னவெனில், தொழிலில் பணம் சுழலவேண்டுமே யல்லாது பாங்கிகளில் முடங்கிக் கிடக்கக்கூடாது. சரக்குகளுக்கும் பணத்திற்கும் உள்ள சம்பந்தம் இதுவேயாகும்.

# அத்தியாயம் 13.

## ரத்தங் கசியும் உண்மைகள்.

பணத்திற்கு நாம் அடிமையா யிருக்கவேண்டுமோ?—அல்லது நாம் அதற்கு அதிபதியா யிருக்கவேண்டுமோ?—பலான வதந்திகள்—அவற்றின் உண்மை—அதனின்று மீண்டதெப்படி—வியாபாரத்தில் அயர்வு—விலை இறக்கம்—மார்க்கட்டு நிலவரத்தில் கலவரம்—ஒரு பாங்கியின் யோசனையும் திட்டமும்—நாங்கள் கையாண்ட சிக்கனத் திட்டங்கள்—பணம் ஒரு சாதனமே யன்றி வேறல்ல—நிரந்தரமான பணத்திட்டம் தேவை—பணம் சேவைக்கு ஏற்பட்டதே யன்றி ஆள உண்டானதல்ல—பணம் அதன் எல்லையை மீறக்கூடாது—பணக்காரர்கள் கடமை—சுய நலத்தைக் கருதக்கூடாது—பொதுஜன சேவையையேப் பெரிதாக எண்ணவேண்டும்—ரத்தங் கசியும் உண்மைகள்—யுத்தத்திற்கும் ஏழ்மைக்கும் காரணங்க ளென்ன?—

1920-ம் ஆண்டு டிசம்பர் மாதம் எங்கு பார்த்தாலும் தொழில்களுக்கு ஆபத்து நேர்ந்து, பல தொழில்கள் அடைபட்டன. எங்கள் கம்பெனியைப் பற்றி இச்சந்தர்ப்பத்தில் பலவிதமான வதந்திகள் உலவின. எங்களுக்குப் பணக் கஷ்டம் நேரிட்டுவிட்டதாயும், ஆனால் பணம் கிடைக்காமல் திண்டாடுவதாயும், கடன் வாங்காமல் வர்த்தகஞ் செய்ய வேண்டுமென்ற என் கொள்கையை நான் புறக்கணித்து கையில் ஓட்டை ஏந்தி, கடன் யார் கொடுப்பார்களென்று அலைவதாயும், ஒருவரும் எனக்குப் பணங்கொடுக்க முடியாதென்று மறுத்து விட்டதால் நான் கடையை மூடிவிட்டு, வியாபாரத்தி லிருந்து விலக வேண்டியதுதானென்றும், இவ்வாறெல்லாம் பலான புரளிகளைக் கிளப்பிவிட்டு தாராளமாய் அவை பரவிவந்தன.

உண்மையில் ஒருவாறு எங்களுக்குக் கஷ்டம் நேரிட்டது. சர்க்கார் பத்திரங்கள்மீது நாங்கள் வாங்கியிருந்த கடனுக்காகவும், வருமான வரிக்காகவும், தொழிலாளருக்கு பொருளுதவி அளிக்கவும் மொத்தம் சுமார் ஆறுகோடி டாலர் ஜனவரி 1-ந் தேதியிலிருந்து ஏப்ரல் 18-ந் தேதிக்குள் கொடுபடவேண்டி யிருந்தது.

எங்கள் பாங்கியில் 2 கோடி டாலர் தான் இருப்பிலிருந்தது; பாக்கி யுள்ள 4 கோடியும் கடன் வாங்கித் தானாகவேண்டும் என முடிவு செய்துவிட்டார்கள். இந்த வதந்திக்கு மூல காரணத்தை ஒருவாறு நான் ஊகித்தேனெனினும், நிராவிசாரிக்க முற்பட்டேன். பொருளா தார நிபுணரும், பொருளாதார விஷயமாய் சில பிரசுரங்கள் வெளி யிட்டவருமான ஒரு ஆசிரியர்தான் இதற்குக் கர்த்தா வென்று தெரியவந்தது. எனவே, இந்த வதந்திகளை மறுக்க ஒரு சிறிதும் நான் சிரமப்படவில்லை. எங்களுடைய பணத்திட்டத்தை நாங்கள் குறிப்பிட்டு வைத்துவிட்டோம். கடன் வாங்குவதாகவே ஒரு யோசனையும் அதில் சேர்க்கவில்லை. நாம் பணமின்றி கஷ்டப்படு கிறோம் என்று லேவாதேவிக்காரர்கள் நினைக்கிறபொழுது கடன் வாங்கவே இறங்கக்கூடாது. இது மிகவும் முக்கியமானது. நான் முந்திய அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள கொள்கைகளைக் கை யாண்டு, எங்களுக்கு நேர்ந்த தற்கால சிரம திசையிலிருந்து வெளிக் கிளம்பினோம்.

1920-ம் ஆண்டில் மகா யுத்தம் கழிந்து தோன்றிய தொழில் நிலையங்களில் பெரும்பான்மை 3½ நாழிகை வாழ்ந்துவிட்டு அழிந் தன. எங்களுடைய வியாபாரமும் கட்டையாகி விடுமென்று எங் களுக்குத் தெரியும். கொஞ்சகாலம் சரியா வியாபாரம் நடந்த போதிலும், ஜுன் மாதத்தில் இறங்கத் தொடங்கிற்று. விலையைக் குறைக்கலாமென்று யோசித்தாலோ, சாமான்களின் விலை தலைக்கு மேலிருந்தது. அவைகளை "சப்ளை" செய்கிற வியாபாரிகள் ஆகா யத்தில் பறந்தனர்; கீழிறங்கியே வருவதாகக் காணவில்லை. தொழிலாளரும் தாங்கள் பெறும் உயர்ந்த கூலிக்குத் தகுந்தபடி வேலைசெய்து பிரதிப் பிரயோஜனம் அளிக்கவில்லை. ஜுன் மாதத் திலிருந்து செப்டம்பர் மாதம் வரையில், வியாபாரம் க்ஷீணித்துக் கொண்டே வந்தது. இந்நிலைமையை எதிர்த்துப் போராட தைரிய மாய் ஏதேனும் செய்தாக வேண்டியிருந்தது. 575 டாலருக்கு விற்றுவந்த "டூரிங் கார்" விலையை 440 டாலராகக் குறைத்தோம். எங்களுக்கு என்ன கிரயம் அடங்கிற்றோ அதற்கும் குறைவாகவே இங்ஙனம் விற்க ஆரம்பித்ததும் பெரிய பரபரப்பு ஏற்பட்டது. எங்களைப் பலர் கண்டித்தார்கள். மார்க்கட்டு நிலவரத்தில் கல வரம் உண்டாக்கிவிட்டோம் என்று சினந்தனர். அங்ஙனம் கல வரம் செய்து, அக்கிரமமாய் ஏற்பட்டுள்ள நிலைமையை மாற்றி, இயற்கையாக தொழில் முறையில் ஏற்படவேண்டிய நிலைமைக்கு வியாபாரத்தைக் கொண்டுவர வேண்டுமென்பதே எங்கள் நோக்கம். நாங்கள் செய்தபடி இதர வர்த்தக நிலையங்களும் செய்திருந்தால் தொழிலில் அவ்வளவு நீடித்த அயர்வு ஏற்பட்டிராது. விலை திரும் பவும் ஏறிவிடும் என்று எதிர்பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்த

தால் ஏற்பட்ட நஷ்டத்தைவிட, திடீரென்று தைரியத்துடன் நஷ்டத்திற்குத் தயாராய் விலையைக் குறைத்திருந்தால் இதனால் உண்டாகும் நஷ்டம் குறைவாகவே யிருந்திருக்கும். இங்ஙனம் செய்யாமல், விலை திரும்பவும் அதிகமாகுமென்று கையைக் கட்டி உட்கார்ந்திருந்தால், முடங்கிக் கிடக்கும் சரக்குக்குப் போட்ட முதல் மீது ஏற்படும் வட்டி நஷ்டமே ஆளை விழுங்கிவிடும். தவிர, வேலையில்லாத் திண்டாட்டமும் உண்டாகி சரக்குகளை வாங்க பொது ஜனங்களுக்குச் சக்தியில்லாமல் போய்விட்டது. எனவே, வியாபாரிகளுக்கும் அவர்களுக்கும் பிளவுண்டாகிக் கொண்டு வந்தது.

அமெரிக்காவில் இங்ஙனம் சரக்கு முடங்கவே, அவைகளைக் கையைவிட்டுச் செலவிட ஐரோப்பாவிலுள்ள வர்த்தகர்களுக்கு கடன் கட்டில் சரக்குகளைத் தள்ளிவிடலாமென்று ஒரு யோசனை கிளம்பிற்று. இவ்வளவு வியக்தமாக அதைச் சொல்லாவிடினும் இந்த யோசனை ஏற்பட்டது என்பது உண்மை. வட்டி கிடைக்காமல் போனாலும், முதலுக்கே கூட மோசம் ஏற்பட்டாலும் இங்ஙனம் கடனுக்குச் சரக்குக் கொடுத்தால் அமெரிக்க வியாபாரம் விருத்தியாகுமென்று வெகுப்பேர் அந்தரங்கத்தில் நம்பினார்கள். ஆனால் இதனால் சரக்குகள் கையை விட்டுப் போகுமென்பது நிச்சயமாயினும், பாங்கிப் புஸ்தகங்களில், பேரேடுகளில்தான் பணத்தைக் கண்டுபிடிக்கக் கூடும்.

எங்கள் கம்பெனியில் வண்டிகளின் விலையை திடீரென இறக்கியதால் கொஞ்சம் வியாபாரம் அதிகரித்தபோதிலும், திரும்பவும் குறைய ஆரம்பித்தது. ஜனங்களுடைய சக்திக்கு ஏற்றவாறு விலைகளைக் குறைக்க எங்களால் சாத்தியப்படவில்லை. பொது ஜனங்களுக்கு சாதாரணமாய் எல்லா விலைகளிலும் நம்பிக்கையுண்டாகியிருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் இன்னும் விலையைக் குறைத்துவிட நாங்கள் உத்தேசித்தோம். அத்துடன் மாதா மாதம் லக்ஷம் வண்டிகளுக்கு மேல் செய்ய ஏற்பாடு செய்தோம். வியாபாரத்தின் நிலைமையை உத்தேசித்தால் இங்ஙனம் வண்டிகள் செய்வதற்கு இடமில்லை. ஆனால் கையில் வண்டிகளுக்காகச் சேகரித்துக் கிடந்த சாமான்கள் வீணாய்க் குவிந்து கிடப்பதைவிட அவைகளை வண்டிகளாகச் செய்து விடுதல் நல்லது என்று உத்தேசித்தோம். அத்துடன் இன்னும் விலையைக் குறைப்பதாக தீர்மானித்தபடியால், உடனே விலையிறங்கியதன் மேல் வண்டிகளுக்கு "ஆர்டர்கள்" ஏராளமாய் வரும்; அதற்குத் தகுந்தபடி கையில் வண்டிகள் நிரம்பிக் கிடக்கவேண்டி, இவ்வாறு சாமான்களையெல்லாம் வண்டிகளாகச் செய்துவிடத் தீர்மானித்தோம். இவையெல்லாம் விலை

யாக ஆக, புதிதாக வண்டிகள் செய்யக் குறைந்த விலையில் சாமான்களை வாங்கக்கூடும். எப்படியும் சாமான்களின் விலை இறங்கிவிடும் என்று நாங்கள் திடமாக நம்பினோம்.

டிசம்பர் மாதத்தில் கடையை அடைத்துவிட்டு, பிறகு இரண்டு வாரம் கழித்துத் திறக்கலாம் என்று முடிவு செய்தோம். ஆனால் இடையில் கடையைச் சீர்திருத்த வேண்டிய வேலைகள் ஏராளமாய் இருந்தன. அவை ஆறுவாரம் இழுத்துவிட்டபடியால் இரண்டு வாரத்தில் திரும்பத் தொழிலை ஆரம்பிக்கக் கூடவில்லை. இதற்குள் நாங்கள் கடையை மூடியவுடன் எங்கள் பொருள் நிலையையும், பணக் கஷ்டத்தையும் பற்றி உலவிய செய்திகள் இன்னும் அதிகமாயின. வெகுபேர் நாங்கள் கடன் வாங்க வெளிக் கிளம்ப மாட்டோமோ என்று உள்ளூர விரும்பிக்கொண்டு காத்துக் கொண்டிருந்தார்கள். அப்படி நாங்கள் கடன் வாங்கவந்தால், அப்பொழுது எங்கள் சரக்கை இன்ன விலைக்குத்தான் விற்கவேண்டுமென்று நிபந்தனைகளை வற்புறுத்தலாமென்பது அவர்கள் கருத்து. அதற்கு நாங்கள் இடங் கொடுக்கவில்லை. எங்களுக்குப் பணம் தேவையாயில்லை. ஒரு பாங்கியிலிருந்து எங்களுக்குக் கடன் அளிப்பதாகத் தாங்களாகவேகூட முன்வந்தார்கள். நியூ யார்க்கிலிருந்து அவர்களுடைய பிரதிநிதியும் எங்களிடம்வந்து நேரில் பேசினார். அவர்கள் காரிய நன்மையெனில், பெரிய தொகை எங்களுக்கு அவர்கள் கடன் கொடுக்கிறதென்றும், ஆனால் அந்தப் பாங்கியைச் சேர்ந்த ஒருவர் எங்கள் கம்பெனியின் கணக்கு வழக்குகளைப் பார்த்துக்கொண்டு பொக்கிஷதாரராக விருப்பமென்றும் இந்த யோசனையை நாங்கள் அங்கீகரிக்க வேண்டுமென்பதே யாகும். ஆனால் எங்களுக்குப் பணமே கடன் வாங்க இஷ்டமில்லை. எங்கள் கம்பெனிக்குப் பொக்கிஷதாரர் மட்டும் இல்லை யென்பது உண்மைதான். அதற்காக என் மகன் எட்சலை அந்த ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டு கம்பெனிக்கும் தலைவனாக இருக்கச் சொன்னேன்.

பிறகு கடையைச் சீர்படுத்த ஆரம்பித்தோம். மகா யுத்தத்தின் அவசரத்துக்கு ஏற்றபடி செய்வதற்காக வியர்த்தத்தையும் கவனியாமல் சில ஏற்பாடுகள் செய்திருந்தோம். அவற்றையெல்லாம களைந்து மோட்டார் வண்டி செய்வதற்குப் பயனில்லாமல் கிடந்த சகலத்தையும் அப்புறப் படுத்தினோம்.

ஜனவரி முதல் தேதி எங்கள் தொழிலாளர்களுக் கெல்லாம் கொடுக்கிறபடி எழுபது லக்ஷம் டாலர் பொருளுதவி வழங்கினோம். கையிலிருந்த ரொக்கப் பணத்திலிருந்து இதை பட்டுவாடா செய்தோம்.

மொத்தம் அமெரிக்காவில் மட்டும் எங்களுக்கு 35 தொழிற் சாலைகளிருக்கின்றன. இவற்றில் எல்லாவற்றிலும் போட்டார்களின் பல பாகங்களையும் ஒன்றாகச் சேர்த்து வண்டியாகச் செய்வதுதான் முக்கியமான வேலை. ஆனால் 22 தொழிற்சாலைகளில் சாமான்களும் செய்வதுண்டு. இப்பொழுது இதை நிறுத்தி வைத்து முன் கூறிய வேலையை மட்டும் தீவிரமாகச் செய்து வரும்படி உத்தரவிட்டோம். இங்ஙனம் செய்துவிட்டு, எங்கள் வண்டிகளை விற்கும் ஏஜண்டுகளுக்கு சாமான்களையும், வண்டிகளையும் அனுப்பிக்கொண்டே வந்து கடைசியில் மேற் கூறியபடி சரக்கை அடைத்த பொழுது கையில் ஒரு வண்டிகூட இல்லாமல் ஏற்பாடு செய்தோம்.

ஜனவரி மாதத்தில் 15 தேதிக்குப் பிறகு 10 ஆயிரம் தொழிலாளரை வேலைக்குத் திரும்பிவரச் சொல்லி வேலை தொடங்கினோம். திரும்பவும் உற்பத்தியைத் தொடங்க எல்லா ஏற்பாடும் இதற்குள் செய்தாய்விட்டது. கடையைத் துப்புறவு செய்து, வியர்த்தமாய்க் கிடந்தனவற்றை யெல்லாம் வெளிப்படுத்தியதால், வீணாய் லாபத்தையெல்லாம் இழுத்துக்கொண்டு, விலையையும் அதிகப்படுத்திக் கொண்டுவந்த உபயோகமற்ற சாமான்க ளெல்லாம் கழிந்தன. இதையெல்லாம் ஒரு விலை வைத்து விற்றுத் தொலைத்தோம். முன்னர் ஒரு வண்டி செய்வதற்கு தினசரி 15 ஆள் வேலை செய்த இடத்தில் இப்பொழுது ஒன்பது பேரைக் கொண்டே வேலை நடத்தி சமாளித்தோம். இதனால் மற்ற ஆறு பேருக்கும் வேலையில்லாமற் போய்விட்டது என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. திறமாகவும் சிக்கனமாகவும் வேலை செய்து உற்பத்தியை அதிகரித்து அவர்களுக்கும் வேலை கொடுத்தோம். ஒரு பாதிப்பேருக்குத் தொழிற்சாலையிலும், மற்ற பாதிப்பேருக்கு காரியாலயத்திலுமாக வேலை கொடுத்தோம்.

நாங்கள் செய்த சிக்கனங்கள் என்னவெனில், முன்னர் ஐந்து ஆளுக்கு ஒரு மேஸ்திரி யிருந்தவிடத்தில் இருபது ஆளுக்கு ஒரு மேஸ்திரி நியமித்தோம். மற்ற மேஸ்திரிகளை இயந்திர வேலையில் போட்டோம். டெலிபோன் செலவையும் குறைக்க, ஐந்தில் இரண்டு பங்கு டெலிபோன்களை அனாவசியமென்று எடுத்துவிட்டோம். ஒரு வண்டிக்கு ஏற்பட்ட செலவு தொகை முந்தி 148 டாலர்; இப்பொழுது 93 டாலருக்கு அதைக் குறைத்து விட்டோம். இங்ஙனம் சிக்கனத்திற்காக கூலியைக் குறைப்பதுபோன்ற அக்கிரமமான கொள்கைகளைக் கையாளாமல் வீணாய் ஏற்பட்டுக்கொண்டிருந்த செலவுகளை ஒடுக்கியதால் வண்டியின் விலையை மிகவும் மலிவாகக் குறைக்க சாத்தியப்பட்டது. சாதாரணமாய் அவ்வளவு

குறைவாகவே விற்க முடியாதென்று மற்றவர்கள் நினைப்பார்கள். இன்னும் சரக்குகளை அனுப்பவும், சாமான்களைக் கொண்டுவரவும் போக்குவரவு சாதனத்திற்காகவும் ஒரு ரயில்பாதையையே வாங்கி விட்டோம். இவ்வாறெல்லாம் அபிவிருத்திகளும், புதிய திட்டங்களும் அனுசரிக்கவே ஏப்ரல் முதல் தேதிக்குள் 8 கோடி 73 லக்ஷம் டாலர் சம்பாதித்து விட்டோம். எங்கள் செலவுகளுக்குத் தேவையாயிருந்த தொகை 6 கோடிதான். அதற்குமேல 2½ கோடி சம்பாதித்துச் சேர்த்தோம். இங்ஙனம் கொஞ்சம் மூளையை உபயோகித்து சரியான முறைகளை அனுசரித்தால் எந்தத் தொழிலையும் கடன் வாங்காமலே நடத்தக்கூடும்.

நாங்கள் கடன் வாங்க விரும்பியிருந்தால் அதாவட்டிக்கு 4 கோடி டாலர் கிடைத்திருக்கும். இதனால் பெரிய சுமை தலைமேலேறி வண்டி ஒன்றுக்கு நூறு டாலராவது அதிக விலைவைத்து விற்கவேண்டி ஏற்பட்டிருக்கும். இதனால் வாங்குபவர் தொகை குறையும். எனவே, அதிக வண்டிகள் செய்யவேண்டிய அவசியமில்லாமல் போய் தொழிலும் இறங்கிவிடும். தொழிலாளர் பலரை நீக்க வேண்டுவதாக நேரிடும். எனவே மொத்தத்தில் தொழிலின் மூலம் செய்யக்கூடிய சேவையைச் செய்யக்கூடாமல் போய்விடும். பணம் கடன் கொடுக்க வந்தவர்கள் தொழிலை அபிவிருத்தி செய்வதைப்பற்றியே சிந்திக்காமல், பணம்போட்டு முதலை அதிகரிக்கத்தான் உத்தேசித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் திட்டப்படி நியமிக்க விருந்த பொக்கிஷதாரருக்குப் பதிலாக இன்ஜினியர் ஒருவரை நியமித்தால் எவ்வளவோ மேலாகுமல்லவா? இதனால்தான் லேவாதேவிக்காரர்கள் தொழிலுக்குக் கொஞ்சங்கூட லாயக்கில்லை என்று நான் வற்புறுத்துகிறேன். அவர்களுக்கு பணத்தைப் பற்றியேதான் எப்பொழுதும் நினைவு. ஒரு தொழிற்சாலை ஏதோ பணம் அச்சடிக்கும் தங்கசாலை என்று அவர்கள் நினைக்கிறார்களே யன்றி சரக்குகள் செய்யும் இடம் என்றே அவர்களுக்குத் தோன்றுகிறதில்லை. பணத்தின் மீதே குறியாயிருக்கிறார்களே யன்றி, தொழிலின் ஆதாரத்தையே கவனிக்கிறதில்லை. எனினும் "பாங்கி"த் தொழில் நடத்தும் லேவாதேவிக்காரர்கள் தான் எங்கும் தொழில்களில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இதைத்தான் நான் விரும்பவில்லை. மொத்தத்தில் நான் லேவாதேவிக்காரர்கள் எல்லாரையும் வெறுக்கிறேன் என்று நினைத்து விடக்கூடாது. பணமில்லாமல் உலகம் நடைபெறாது. எதற்கும் முதல் வேண்டும். முதலில்லாமல் உற்பத்தி செய்ய முடியாது. ஆனால் அதை சரியானபடி உபயோகிக்கிறோமா என்பதுதான் கேள்வி. என் விசாரணையில் அற்பத்தனமாய் சுபாகலமான எண்ணம் ஒன்றும் கிடையாது. அதிகமான பேருக்கு எவ்வளவு அதிக

மாய்ச் சௌகரியங்கள் செய்து கொடுக்கலாமோ அதுவே நல்ல திட்டம். சமூக வாழ்க்கையை நடத்துவதற்கு பணம் பெரிய சாதனமாகும். அது எதற்காக ஏற்பட்டதோ அந்த வேலையைச் சரிவர செய்துகொடுக்க அனுகூலமாயிருப்பின் அது பெரிய சௌகரியமாகும். அப்பொழுது அதனால் ஒரு இடையூறும் கிடையாது.

ஆனால் பணம் அதற்கு ஏற்பட்ட எல்லையைத் தாண்டக் கூடாது. ஒரு டாலர் என்றைக்கும் ஒரு டாலராகவே யிருக்க வேண்டும். அஃதன்றி, நாணயமாற்று மார்க்கட்டில் ஏற்படுகிற ஜால வித்தைகளினால், இன்றைக்கு ஒரு மதிப்பும் நாளைக்கு ஒரு மதிப்பும் அதற்கு ஏற்பட்டு மாறிக்கொண்டு, நிரந்தரமில்லாமல் போய்விட்டால் அதை நம்பி எங்ஙனம் ஒன்றில் இறங்க முடியும்? ஒரு படிக்கு எட்டு ஆழாக்கு, ஒரு அடிக்கு பனிரெண்டு அங்குலம் என்று எந்த நேரத்திலும், அந்த தேசத்திலும் நிரந்தரமாய் ஏற்பட்டுள்ளது போல, ஒரு டாலருக்கும் இவ்வளவுதான் மதிப்பு என்று சாசுவதமா யிருக்கவேண்டும். லேவாதேவிக்காரர்களும் பணவுலகில் நடக்கும் சூதுகளைக் கையாளாமல் நேர் முறையாக நடந்துகொண்டால் பொது ஜனங்களுக்கு ஊழியம் புரியக்கூடும். தற்போதுள்ள அக்கிரமங்களும் நடைபெறாமல் பொது ஜனங்களின் சுமை நீங்கும்.

தற்போது தங்களுக்குக் கிடைக்கும் லாபங்களை விட இஷ்டமில்லாமல், பொதுஜன சௌகரியத்திற்காக கொஞ்சம் விட்டுக் கொடுக்க மனமில்லாமல் சுயநலத்தையே பணக்காரர்கள் கருதினால், அதிக நாள் நீடித்து அந்த சுகத்தை அனுபவிக்க முடியாது என்று எச்சரிக்கை செய்கிறேன். பணம் தொழில்களை ஆளாமல், சேவகம் புரியவேண்டிய நிலை சீக்கிரத்தில் வரும். தொழில்தான் பணத்தின்மீது இனி ஆதிக்கம் செலுத்துமே யன்றி, பணம் தொழிலை தன் பலத்தால் தன் கீழ் வசப்படுத்த முடியாது. வட்டியினால் அநியாயமாய் ஏற்பட்டுவரும் அக்கிரமங்கள் ஒழிந்துவிடும். பணத்தினால் பொது ஜனங்களுக்கு சேவைசெய்யும் காலம் அணுகி; அவர்களுக்கு அதன்மூலம் சௌகரிய முண்டாகுமேயன்றி, தீமை விளையாது என்று கூறுவேன். இப்பொழுது இருவகைத் தீமைகள் நிலைபெற்று வருகின்றன. எல்லாப் பண விவகாரத்தையும் மத்திய பாங்கி ஒன்று மூலம் நிர்வகிக்க அமெரிக்காவுக்குள்ளேயே ஒரு யோசனை இருந்து வருகிறது. இதே யோசனை உலக முழுவதும் பரவவும் ஆரம்பித்திருக்கிறது. இதற்கு இரண்டு சீர்திருத்தஞ் செய்யலாம். அடியிலிருந்து தொடங்குவது ஒன்று; மேலேயிருந்து சீர்திருத்துவது இரண்டாவது முறை. முன்னதை ருஷியாவில கையாள யத்தனித்து வருகிறார்கள். நமது திருத்தம் மேலே யிருந்து தொடங்குவதெனில் நல்ல தாராள உயரிய தியாக புத்தியுடன் சுயநலங் கருதாமல் உழைக்கவேண்டும்,

உலகத்தின் தனம் பணத்திலடங்கியில்லை ஆனால் பணமானது உலகத்தின் தனத்தைக் கட்டுப்படுத்தி, பணக்காரர்களின் சித்தம்போல் தனம் பரவவேண்டுமென்ற நிலை ஏற்படுகிற போதுதான் விபரீதமுண்டாகிறது. உலகத்தில் அவ்வப்போது உண்டாகும் ஏழ்மையும் தரித்திரமும் சரக்குகளில்லாமையாலன்று; பணமுடையால்தான். வியாபாரப் போட்டி தேசங்களுக்குள் உண்டாவதும், அதனால் மனக்கசப்பும் குரோத புத்தியும் சேருவதும், இதன்மூலம் யுத்தங்கள் வளருவதும இவற்றையெல்லாம் பிரத்தியட்சமாய் நாம் பார்த்தாய் விட்டது. யுத்தமும், தரித்திரமும் ஒரே காரணத்தினால் ஏற்படும் தீமைகள்தான். இரண்டையும் நாமே தடுக்கலாம். இந்த உண்மைகளையெல்லாம் தற்போதைய பணக் கொள்கையைக் கண்டிப்பதற்காக நான் குறிப்பிடவில்லை. மனிதர்களின் வாழ்க்கையையே அவை பாதிக்கின்றவையாகும்; மனிதரின் ஹிருதயத்திலிருந்து கசியும் ரத்தத்தை அவைகளில் காணலாம். வேறு என்ன நல்ல கொள்கையை அனுசரிக்கலாமென்று இனி கவனிப்போம்.

## அத்தியாயம் 14.

# முதல் எதற்கு?

ஏன் தரித்திரப் படவேண்டும்?—தரித்திர மென்றால் என்ன—எல்லோருக்கும் சகல சாமானும் கிடைப்ப தெப்படி?—சர்க்காரால் உதவி ஏற்படுமோ?—தரித்திரத் திற்கு மூல காரணங்க ளென்ன?—பணம் சேர்ப்பது நல் லதா?—பணம் சேர்த்து வைப்பதற்கா; அல்லது உபயோ கத்திற்கா?—தொழிலும், விவசாயமும்—இரண்டேக்கும் விரோதமா?—உயரிய லட்சியமும் தாராள சிந்தையும் தேவை—நகர வாழ்வின் நன்மை தீமைகள்—முதல் எதற்கு?—போது ஜனங்களுக்கு இன்பவாழ்வு எய்த உதவுவதே முதலின் நோக்கம்—தொழிலில் ஈடுபேட்டவர் களின் கடமை.

*பணத் தரித்திரம் பல காரணங்களால் உண்டாகிறது. இவற் றில் பலவற்றை, அதுவும் முக்கிய மானவைகளை, நாம் தடுத்து விட லாம். இதேமாதிரி பிரத்தியேக உரிமைகளையும் தடுத்து நிறுத்தி விடலாம். இவை யிரண்டையும் தொலைக்க வேண்டியது மிக்க அவசியமாகும்; ஆனால் உழைப்பின் மூலம் அவைகளை அகற்ற முடியுமே யல்லாது சட்ட திட்டங்களால முடியாது.*

*தரித்திர மென்றால் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, குடியிருக்க வீடின்றி தவிப்பதே யாகும். வாழ்க்கையில் மனி தருக்கு மனிதர் தாரதம்மியம் இல்லாம லிருக்கமுடியாது. எல்லா மனிதரும் ஒரு ஸ்திதிக்கு வந்துவிட வேண்டு மெனில் தரித்திர தசையை எலலோருக்கும் பரவச் செய்வதேயாகும். நன்றாய் வேலை செய்து அதிகம் சம்பாதிக்கிறவர்கள், குறைவாக சம்பாதிக் கும் பட்ட வேலைக்காரருக்குச் சமதியாக வரவேண்டுமெனில் இரண்டு பேரும் தரித்திரத்தால் கஷ்டப்பட வேண்டுமேயன்றி வேறு நல்லது விளையாது. உற்பத்தியைச் சீர்படுத்தி திறமை யுடன் தொழிலை நடத்தினால், உற்பத்திக்குத் தக்கபடி எல்லோ ருக்கும் சகல சாமானும் அவரவர்களுடைய உழைப்பினள வுக்கும் சக்தியினளவுக்கும் கிடைக்கும்படி செய்யலாம். எந்தத் தொழிலையும் தனிமையாக எவரும தங்களுடைய புத்தியையும் சாமர்த்தியத்தையும் பிரயோகித்து அபி விருத்தி யடையச்செய்து*

நல்ல பலனைப் பெறலாம். சர்க்காரால் உருவான உதவி ஒன்றுஞ் செய்ய முடியாது. சர்க்கார் செய்யக்கூடியதெல்லாம், சில தடைகளை நீக்கியும், பொதுஜன சமூகத்திற்கு இடையூறுகள் விளைவிப்பனவற்றை விலக்கியும் எதிர் மறையாகச் செய்யக் கூடியவைதான். நேராக ஒருவித சகாயமும் அளிக்கமுடியாது.

தரித்திரத்திற்கு மூல காரணங்கள் தொழிலிலும் சரியே, விவசாயத்திலும் சரியே, செய்யப்படும் பொருள்களையும், விளைகிற உணவு பொருள்களையும் சரிவர எல்லோருக்கும் போய் சேரும்படி பகிர்ந்து கொடுக்காததால் ஏற்படுகின்றன என்று எனக்குத் தோன்றுகிறது. இங்ஙனம் சரியானபடி பகிராதலால் ஏராளமாய் சரக்குகள் வியர்த்தமாகின்றன. பொதுவாக சேவையையே பிரதானமாய்க்கொண்டு புத்திசாலித்தனமாய் நிர்வாகஞ்செய்தால் இந்த வியர்த்தமெல்லாம் ஒரு நாளும் உண்டாகாது. நிர்வாகஞ் செய்யும் தலைவர்கள் சேவையைவிட்டு,பணத்தையே கருதும் குறுகியநோக்கமுள்ளவர்களாயிருப்பின் அவர்களுக்குக் கொஞ்சமேனும் வியர்த்தம் கண்ணுக்குத் தெரியாது. சேவைசெய்வது ஏதோ பரோபகார சிந்தையுடன் செய்வதாக அவர்கள் நினைக்கிறார்களே யன்றி சாதாரணமாய் நாடோடியாய் நடக்கிறதுதான் என்றே அவர்களுக்குத் தோன்றுகிறதில்லை. அற்ப விஷயங்களிலேயே அவர்கள் புத்தி செல்வதால் மேலான விஷயங்கள் அவர்களுக்குத் தென்படுகிறதில்லை. அவர்களுக்கு எங்ஙனம் எல்லாவற்றையும் விட பெரிய தொழில் தத்துவம் விளங்கும்? பணத்திற்காக தொழிலை நடத்துவது மிகவும் லாபகரமற்றதென்ற தத்துவமா அவர்களுக்கு விளங்கப் போகிறது? பரோபகார சிந்தையுடன் சேவை புரியலாம். ஆனால் அது உயர்ந்த சேவையாகாது. தொழில்களிலிருந்து விளையும் தனத்தை நேர்மையாகப்பகிர்ந்து கொடுக்கக்கூடாமற் போய்விடாது. ஆனால் அவைகளில் ஏற்படும் வியர்த்தங்களினால்தான் எல்லோருக்கும் போதுமான வளவு கிடைக்காமல் போய்விடுகிறது. இவ்வளவுக்கும் சரக்குகளும் அதிக விலைக்கே விற்கப்படுகின்றன.

உலகத்தில் வியர்த்தமாய்ப் போகும் சக்தி எவ்வளவு! நமது நாட்டிலேயே நீர் ஓட்டத்தினுடைய சக்தியைப் பிரயோகித்து எவ்வளவோ வேலைகளைச் செய்து முடிக்கக்கூடாதா? தரித்திரத்திற்குப் பரிகாரம் சிக்கனத்தால் ஏற்படாது. உற்பத்தியை அதிகரிக்க சிரமப்படவேண்டும். சிக்கன மென்பது பீதியால் ஏற்படுகிறது. வியர்த்த முண்டாவதைப் பார்த்துக் கொண்டிருப்பதை விட சிக்கனஞ் செய்வது ஒருவாறு நல்லதுதான்.

சிக்கனஞ் செய்கிறவர்கள் அதைப் பெருமையாகப் பாராட்டிக் கொள்ளுவார்கள். ஆனால் அதற்காக அவர்கள் எவ்வளவு

தேகப் பிரயாசையும், மன வருத்தமும் படுகிறார்களென்பதை சிந்தித்தால் எவ்வளவு சக்தி வியர்த்தமாகிறதென்பது விளங்கும். சிக்கனமென்பது வாழ்க்கையின் சத்தையெவ்வளவையும் உறிஞ்சி விடுகிறது. இரண்டு விதமான வியர்த்தங்களுண்டு. ஆடம்பரமாக அட்டகாசமாய்ச் செலவுகள் செய்து கையில் ஒரு பைசா மிஞ்சாமல் வாரி இறைப்பது ஒன்று; மற்றது சுவாமி யளித்துள்ள நல்ல வஸ்துக்களைப் பயன்படுத்தி உபயோகிக்காது "சிக்கனம்; சிக்கனம்" என்று பொத்தி வைத்துக்கொண்டு அவைகளை வீணாக்குவது. அதிகச் செலவும், முட்டாள்தனமான சிக்கனமும் இரண்டும் தீமையையே விளைவிக்கும்.

கடவுள் நமக்கு சிருஷ்டித்தருளி யுள்ளவையெல்லாம் நல்ல வகையில் பயன்படுத்திக்கொள்ளவே தான். அவைகளை துர்ப்பிரயோகஞ் செய்வதுபோல் பெரிய பாவம் வேறொன்றுமில்லை. துர்ப்பிரயோகத்தால்தான் வியர்த்தமே ஏற்படுகிறது.

பணத்தை மீக்கிறது நல்ல குணம்தான். ஆனால் அதையும் ஒரு எல்லைக்குள் கட்டுப்படுத்தி யாகவேண்டும். நமது குழந்தைகளுக்கு முதலில் பணம் சேர்த்துவைக்கிற குணம் படிந்துவிடுகிறது. அதை நாம் மெச்சவும் மெச்சுகிறோம். ஆனால் இவ்வாறு பணம் மீப்பதைவிட நல்ல வழியில் பிரயோகித்து, ஏதேனும் பயன் தரும் வகையில் போட்டால் குழந்தைகளுக்கு தானாகவே தொழில் ஞானம் ஏற்படும். வாலிபர்கள் இவ்வாறு பணத்தைப் பிரயோகிக்கவேண்டுமே யன்றி மீத்துவைத்து சேர்க்க யோசிக்கக்கூடாது. பணம் மீக்கிறதென்று யோசனை செய்வதெல்லாம், அது நல்ல உற்பத்திக்குப் பயன்படாமல் முடங்கிப்போகும்படி செய்து விடுவது தான். நன்கு பிரயோஜனப்படும்படி உபயோகிப்பதே நேரான வழியாகும்.

அதிகக் கூலி கேட்பதும், விலையை அதிகரித்து அதிக லாபம் பெற யோசிப்பதும் இவைபோன்ற இதர சம்பவங்களும், அதிகப் பணம் சம்பாதித்துவிட்டால் தற்போதைய கஷ்டத்திலிருந்து தாண்டிவிடலாம் என்ற தவறான எண்ணத்தினாலேயே நிகழ்கின்றன. பணத்தினால் எல்லாம் சாதித்துவிடலாம் என்ற தப்பெண்ணம் உலவிவருகிறது; இது மிகவும் பரிதபிக்கத்தக்கது. உண்மையான சம்பத்து பணக் குவியலினால் ஏற்படாது.

சாதாரண கைத்தொழில்களுக்கும், விவசாயத் தொழிலுக்கும் நேர் விரோதமென்ற ஒரு தவறான எண்ணமும் இருந்து வருகிறது. நகரங்களில் கூட்டம் அதிகரித்து விட்டதால், எல்லோரும் கிராமத்

தரங்களுக்குப் போய்ப் பயிர்த்தொழில் செய்ய வேண்டுமென்கிறது முட்டாள்தனம். எல்லோரும் நகரங்களில் போய்ச் சேருவதும் பேதைமை. பண்ணைகளை விட்டு எல்லோரும் நகரங்களுக்குப் போய்விடின், கைத்தொழில்கள் நடந்து என்ன உபயோகம்? மேற்கூறிய இரு தொழிலுக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. நல்ல போக்குவரத்து சாதனமுண்டானால் ஒன்றையொன்று தழுவி நிலையாக ஒருவாறு இரண்டு தொழிலும் நடைபெறும். வயல்களிலும், தோட்டங்களிலும் பயிர் செய்யப்படும் சாமான்கள், இடையிலுள்ள வியாபாரிகள் தட்டும் லாபத்திற்கு இடங்கொடாமல், நேருசகு நேர் அவை எல்லோருக்கும் கிடைக்குமாகில் தரித்திரமும் ஏற்படாது; அதனால் உண்டாகும் கொந்தளிப்பும் கிளம்பாது.

இன்னொரு விஷயம் கவனிக்கத்தக்கது. கட்டட வேலை போன்ற நல்ல வேலை செய்யக்கூடும் தொழிலாளர்களை, கட்டட வேலை காலத்தில் அதற்குப் போகமுடியாமல் தொழிற்சாலையிலேயே, பின்னர் நமக்கு இங்கு வேலை கிடைக்காமல் போய்விடப் போகிறதே என்ற பயத்தினால் முடக்கிப் போடுவதால் வியர்த்தம் எவ்வளவு ஏற்படுகிறது. கட்டட வேலையாட்கள் அந்த வேலைக்கும், விவசாய வேலை தெரிந்தவர்கள் நிலத்தை உழவோ, பயிரிடவோ, சாகுபடி செய்து அறுவடை செய்யவோ அந்தந்தக் காலத்தில் போவதற்கு அனுமதிக்கப்பட்டால் உலகம் எவ்வளவோ செவ்வையாக நடைபெறும். பண்ணையிலும் உறக்க காலங்களுண்டு. அப்பொழுது குடியானவர்கள் தொழிற்சாலைகளில் வந்து வேலை செய்து சாமான்கள் செய்யலாம். தொழிற்சாலையிலும் அயர்வு காலமுண்டு. அப்பொழுது தொழிலாளர் கிராமங்களில் சென்று பயிரிட்டு உணவு பொருள்களை விளைவிப்பதில் சிரமப்படவேண்டும். இவ்வாறு இரு தொழிலும் ஒன்றையொன்று தழுவி நடந்தால் இரண்டுக்கும் அயர்வு காலமின்றி தொழில்கள் திருப்திகரமாய் நடைபெறும். இங்ஙனம் ஏற்படும் பிரயோஜனத்துடன் தாராள சிந்தையும், நேர்மையான நோக்கமும் மனிதர்களுக்குள் உண்டாகும். தறபோது இருந்துவரும் சச்சரவுகளுக் கெல்லாம் காரணம் குறுகிய புத்தியும், குரோத பாவமும்தான். ஒவ்வொரு தொழிலும் ஒன்றுக்கொன்று எவ்வளவு ஆதாரமாக நிற்கிறதென்பதையறிந்து, சகலவிதமான வேலைகளையும் பார்த்தறிந்தால், தாராள நோக்கம் தானாக உண்டாகும். ஒவ்வொரு மனிதனும் திறந்த வெளியில் வயல்களில் கொஞ்சமாவது வேலை செய்வதால் நல்ல பலனை யடையக்கூடும். பேராசையை யொழித்து, வாழ்க்கையின் இன்பத்தை நுகரவேண்டி ஒருவருடன் ஒருவர் ஒத்து வாழ்ந்து எல்லாத் தொழில்களையும் நடத்தவேண்டும் என்ற உயரிய எண்ணம் தோன்றவேண்டும்.

பணக்காரர்கள் வருஷத்தில் நான்கு மாதம் தேக சௌக்கியத்திற்காக ஏதேனும் வாசஸ்தலங்களைத் தேடிச் செல்லுகிறார்கள். சாதாரண ஜனங்கள் அதற்கு பதிலாக நல்ல வெளியில் வேலைசெய்யத்தகுந்த பயிர்த்தொழில் முதலியவை செய்யலாம். நமது சங்கடங்களுக்கெல்லாம் இயற்கைக்கு விரோதமான வாழ்க்கையை நாம் நடத்துவதுதான் காரணம். வருஷம் முழுதும் ஓயாமல் வேலை செய்துகொண்டு சூரிய வெளிச்சம் இன்னதென்று அறியாமல் வேலைசெய்தால், அப்படி வேலை செய்கிறவர்களுக்கு ஆத்திரம் ஏற்படுவது சகஜம். அதற்கு அவர்களைக் குற்றங் கூறவே கூடாது. இடையில் நான்கு மாதம் தொழிற்சாலையை விட்டு வயல்களுக்கு வேலை செய்யப் போய்விட்டால் தொழிலின் தரம் குன்றிவிடும் என்று சிலர் ஆட்சேபிக்கக்கூடும். ஆனால் வயல்களில் போய் நல்ல காற்று முதலியன அனுபவித்து வேலை செய்வதால் அவர்கள் எவ்வளவு தேக ஆரோக்கியத்துடன் வேலைக்குத் திரும்புவார்களென்பதை யோசித்தால், இந்த ஆட்சேபனை கிளம்பாது. அத்துடன் இவர்கள் வயல்களில்போய் வேலை செய்வதால் உணவு பொருள்கள் அதிகரித்து விலை வாசிகள் மலிவாகும். இவ்வாறு தொழிற்சாலை வேலையையும், விவசாய வேலையையும் சேர்ந்தாற்போல் நாங்கள் எங்கள் ஸ்தாபனங்களில் செய்து நல்ல பலனை அடைந்து வருகிறோம்.

நகரங்களினால் ஒருவாறு நன்மைகள் விளையாமற் போகவில்லை. பொது ஜனங்கள் நெருங்கி நகரங்களில் வாழ்வதால், கிராமாந்தரங்களில் அறிந்துகொண்டிருக்கக்கூடாத சில இரகசியங்களை அறிந்துகொண்டிருக்கிறார்களென்பதில் சந்தேகமில்லை. சுகாதாரமும், சமூக வாழ்வும், தெருக்களுக்கு தீபம் போடுவதும் இவையெல்லாம் நகர வாழ்வினால்தான் கற்றுக்கொண்டவையாகும். ஆனால் தற்போது நமக்குள் ஏற்பட்டுள்ள எத்தனையோ சமூகத் தீமைக்கும் நகர வாழ்வே காரணம்; பெரிய நகரத்தில் ஜனங்கள் திண்டாடும் பொழுது சுகமாகவும், இன்பமாகவும், மனச் சந்துஷ்டியுடனும் 30 மைலுக் கப்பாலுள்ள கிராமாந்தரங்களில் ஜனங்கள் காலக்ஷேபஞ் செய்து வருகிறார்கள். நகரத்திலுள்ளோர் தங்களுக்கு வேண்டிய உணவு, உடை, முதலிய சௌகரியங்களைத் தாங்களே செய்துகொள்ள முடியாது; குடியிருக்க வீட்டைக்கூட கட்டிக் கொள்ளுவது சாத்தியமில்லை. இயற்கைக்கு மாறான வாழ்க்கையே நகரத்தில் மிகுந்திருக்கிறது. சுபாவமாய் எவரும் அதை வெறுப்பார்கள். மேலும் நகரில் தொழில் செய்வதென்றால், ஜீவனஞ் செய்வதென்றாலும் சராசரி தலைக்கு ஏற்படும் செலவு பொறுக்க கூடிய அளவுக்கு அதிகமாகிவிடுகிறது. பொதுஜன சமூக வாழ்க்கைக்கென்று ராஜீயவாதிகளும்; பொருளாதார நிபுணர்களும் கடனை

வளர்த்து சாக்கடைகளும், குழாய்களும் அமைத்து விடுகிறார்கள். அந்தக் கடனுக்கெல்லாம் கொடுக்கவேண்டிய வட்டியைப் பொது ஜனங்களிடமிருந்து வரிகளாக வசூல் செய்கிறார்கள். சமூக வாழ்க்கையில் கிடைக்கும் சௌகரியங்கள், அதற்கு ஏற்படும் செலவுக்குத் தகுந்தவளவு இல்லை; தற்காலத்து நகரங்கள் வீண் செலவு அதிகம் செய்து இன்று பணமின்றித் தவிக்கின்றன; நாளை அவை அழிந்துபோம்.

வாழ்க்கையைச் சீர்திருத்தியமைத்து, வியர்த்தமாய் செலவாகும் சக்தி முதலியவற்றை சேமித்து, தரித்திரத்தை யொழிக்க வேண்டுமெனில் எல்லா வேலைகளையும் எளிதாகச் செய்வதற்கு மலிவாக நமக்குச் சக்தி கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். நீர் வீழ்ச்சிகளிலிருந்து மின்சார சக்தியை உண்டாக்குதல் போன்ற திட்டங்கள் எவ்வளவோ பயனை அளிக்கும். ஆனால் இதற்கெல்லாம் முதல் வேண்டுமே என்று பொதுவாகப் பலர் சொல்லுவார்கள். முதல் என்பதைப்பற்றி நாம் கொண்டுள்ள அபிப்பிராயத்தை மாற்றினால்தான் இந்த ஆட்சேபனை எழாது.

தொழிலானது தொழிலாளரின் சுபிக்ஷத்தை அதிகரித்து, அதிகப் பேருக்கு வேலை கொடுத்து, பொதுஜனங்களுக்கு மலிவாக ஊழியம் புரியுமாறு நிர்வகிக்கப்பட்டு தானே தனது மூலதனமாகிய முதலை அதிகரித்துக் கொள்ளும்படியிருக்கவேண்டும். அதுதான் ஜன சமூகத்துக்கு நன்மை விளைக்கும். அங்ஙனம் மூலதனம் வளர்த்தவர், அதைத் தனது சொந்தப் பணமாகக் கருத நியாயமில்லை. பலருடைய உழைப்பினால்தான் அது சேகரிக்கப்பட்டது என்பதை அந்தத் தொழிலுக்கு தலைவராயிருப்பவர் உணரவேண்டும். ஒவ்வொரு தொழிலாளியும் அவருக்கு அந்தத் தொழிலில் கூட்டாளியாயிருந்ததால்தான் அந்தப் பொருள் சேர்ந்தது என்பதை மறக்கக்கூடாது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் சுகமாக ஜீவனம் நடத்த முதலாளி என்பவர் வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மேன்மேலும் நல்ல வேலைகளை அதிகரித்துத் தக்க கூலி வேலையாளருக்கு அளிக்கக்கூடாத முதல், மணலுக்கும் கேவலம்; அதனால் யாருக்கு என்ன பிரயோஜனம்? முதலின் பிரதம கடமை அதிகப் பணம் சம்பாதிப்பதல்ல; பணத்தினால் வாழ்க்கையை இன்பமாகச் செய்வதே அதன் நோக்கமாயிருத்தல் வேண்டும். தொழில்களில் ஈடுபட்டுள்ள நாம், சமூக விசாரத்தைத் தீர்த்துவைக்காமலிருப்போமானால் நாம் நமது கடமையைச் செய்யத் தவறியவர்களாவோம்.

# அத்தியாயம் 15.

## பிச்சை எடுப்பானேன்?

பிச்சை யெடுப்பானேன்?—மனிதரின் காருண்ய சுபாவம்—கொடைத்தன்மையும், மனிதர் துன்பமும்—துன்பத்தில் உதவி செய்வதைவிட துன்பத்தைத் தடுப்பது மேல்—தர்ம ஸ்தாபனங்களும், விளம்பர தர்மமும்—பொதுஜன சேவையும், சுய நம்பிக்கை இழப்பும்—கொடையாளிகள் புகார்—உதவி பெறுகிறவர் நன்றி இழக்கின்றனரா?—சிறை நிர்வாகமும், சீர்திருத்தமும்—அனுவசியமாய் ஈதல் சோம்பேறித் தனத்தை வளர்க்கும்—தொழிற் பள்ளிக்கூடங்கள் எங்ஙனம் நடைபெற வேண்டும்?—ஆஸ்பத்திரிகள் வியாதியஸ்தர்களுக்காகவா அல்லது டாக்டர்களுக்காகவா?—அச்சம் ஒழியவேண்டும்.

நல்ல நாகரிகமுள்ள சமூகத்தில் பிச்சைக்காரர்கள் இருக்கக் கூடாது. பிச்சையிடும்படியான அவசியமே ஆங்கு எதற்காக உண்டாகவேண்டும்? மனிதர்களுக்குள் தர்ம சிந்தனை ஏற்பட்டு, பிறர்படும் துன்பத்திற்கு இரங்கி உதவக்கூடாதென்று நான் சொல்ல வரவில்லை. அத்தகைய துர் எண்ணம் எவருக்காவது ஏற்பட்டு, ஈவு இரக்கமற்ற பாவிகளாய் விடாமல் கடவுள் காப்பாராக. மனித சுபாவமே, மனிதருக்கு இயற்கையாயுள்ள இரக்கமே, அத்தகைய கல் நெஞ்சு படைக்க இடங்கொடாது. இவ் விரக்கமின்றி ஒரு பெரிய வேலையும் இவ் வுலகில் நடைபெறாது. எந்தக் கைங்கரியமும் பிறருக்கு உதவவேண்டுமென்ற எண்ணத்துடன் தான் செய்யப்படுகிறது. ஆனால் இந்த உயரிய குணத்தை நாம் வெகு அற்ப விஷயங்களுக்கெல்லாம் கூட பிரயோகித்து வீண் செலவு செய்கிறோம். நமது இரக்கத்தினால் ஏழைகளுக்கு உணவு அளிக்க வேண்டுமென்ற காருண்ய எண்ணம் எழுகின்றது; ஆனால் அந்த ஏழைகளிடத்துப் பசிப்பிணி இல்லாது அகற்றி, அவர்களுடைய ஸ்திதியை மேம்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இதையும்விட மேலானதல்லவா? நமது சகோதர மக்களைத் துன்பத்தினின்று கைதூக்கிவிட வேண்டுமென்ற பச்சாத்தாபம் உண்டாகிறது. அவர்களுக்குத் துன்பமே நேராமல் தடுக்க வேண்டுமென்று தோன்றுவது இன்னும் உயரிய நோக்கமல்லவா?

கொடைத்தன்மை எளிதானது; ஆனால் அனுவசியமாய் அதைப் பிரயோகிக்காமல் தடுத்தல் கடினம். இங்ஙனம் அனுவசியமாகக் கொடுக்காமலிருக்க, கஷ்டப்படுகிறவர்களுடைய துன்பத்தின் காரணம் என்னவென்று ஊன்றி ஆராயவேண்டும்; இடையில் தற்காலிகமாக உதவவேண்டியதுதான். அத்துடன் நின்றுவிடாமல் மூல காரணத்தை விசாரித்தல்தான் பெரிது. ஏழையாயுள்ள குடும்பங்களுக்கு உதவி செய்ய பல பிரபுக்கள் இருப்பார்கள்; ஆனால் அவர்களுடைய ஏழ்மையை யகற்ற ஏதேனும் ஒரு திட்டம் செய்ய தெனில் அதற்கு உதவமாட்டார்கள்.

மனிதருக்குள்ள தயாள குணத்தை, வியாபார ஹோதாவில், தர்மமளித்தலை ஒரு தொழில் முறையாகச் செய்து விடுவதைக் கண்டு நான் வெறுக்கிறேன். அவ்வாறு ஏற்பட்டால் பின்னர் அதில் தயாளமும், இரக்கமுள்ள மனோ நிலையும் எங்கிருக்கிறது? தற்போது தர்ம ஸ்தாபனங்கள் பல, விளம்பரங்கள் மூலமாயும், பிரசாரத்தின் மூலமாயும் வளர்கின்றன. உண்மையில் மனிதருக்கு மனிதர் உதவிபுரிய இந்த ஆடம்பரங்கள் தேவையில்லை. அனாதைப் பிள்ளைகளுக்கென்று அமைக்கப்பட்டுள்ள ஸ்தாபனங்களில் உதவிபெறும் அனாதைக் குழந்தைகளைவிட வெளிக்கு விளம்பரஞ் செய்து கொள்ளாத குடித்தனக்காரர்கள் வீடுகளில் உதவிபெறும் மக்களின் தொகை அதிகம். அதேமாதிரி வயது சென்ற அசக்தர்களுக்கு உதவியளிக்கிறதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள விடுதிகளில் உதவிபெறுகிற வயோதிகர்களைவிட, தங்கள் நண்பர்களால் உதவி பெற்று காலக்ஷேபஞ் செய்யும் அசக்தர்கள் அதிகமானவர்கள். ஜன சமூகமானது அடிப்படையாக தயாளத்தை, காருண்யத்தைத் தழுவியே நிலைத்திருக்கின்றது; எனவே தானாகவே இந்த காருண்ய சுபாவத்தால் மனிதர்கள் தங்களுடைய சகோதர சகோதரிகளுக்குத் துன்பம் வந்தகாலை உதவி வருகிறார்கள். இங்ஙனம் இயற்கையாய் மனிதருக்கு ஏற்பட்டுள்ள காருண்யத்தை வியாபார தோரணையில் செலவிடும்படி செய்வது தகுதியா என்று நாம் தீர ஆராயவேண்டும் இது மிகவும் முக்கியமான பிரச்னை.

தர்மஞ் செய்வதையே ஒரு தொழிலாகக்கொண்டு ஒருவர் தர்மஞ் செய்தால் அதனால் தீமை விளையுமேயன்றி நன்மையுண்டாகாது. அத்தகையாரிடம் சகாயம் பெறுகிறவர்கள் சுயமதிப்பை யிழந்து, அகௌரவ மடைகிறார்கள். சில காலத்திற்கு முன் "சமூக சேவை" என்ற எண்ணம் உலகில் பரவிற்று; உடனே எல்லோருக்கும் சேவை புரிய வேண்டுமென்ற கருத்து உதித்தது. பிறருக்கு ஊழியம்புரிய பொதுஜன ஊழியர் வெளிக்கிளம்பினார்கள். எனவே, ஜனங்களுக்குள்ள சுய நம்பிக்கை அழிய ஆரம்பித்தது; அத்

த்துடன் அத்தகைய சேவை செய்வதற்குக் காரணமாயுள்ள கஷ்ட நிலையை மாற்றுவதற்கு முயற்சிதேட வேண்டுமென்ற எண்ணமும் உதிக்கவில்லை.

இதையும்விட பெரிய தீங்கு இன்னொன்று விளைந்தது. அடிக்கடி ஜனங்கள் தாங்கள் உதவி புரிந்தவர்கள் நன்றி கெட்டவர்களாகி விட்டனர் என்று புகார் செய்வதை நாம் கேட்டிருக்கிறோம். இது மிகவும் சாதாரணமாய் ஏற்படக்கூடிய நிலைமைதான். முதலாவதாக நாம் செய்யும் தர்மத்தில் பெரும்பான்மையானது மனதார பூரண இரக்கத்துடனும், விசுவாசத்துடனும் அளித்த உண்மையான உதவியல்ல. இரண்டாவதாக பிறருடைய தயவையும், உதவியையும் நாடும் தாழ்மையான நிலையிலேயே இருக்க வேண்டுமென்று ஒருவனும் விரும்பமாட்டான்.

முந்திய அத்தியாயமொன்றில் முடவர்களும், குருடர்களும், இதர அங்கஹீனர்களும் வேலைசெய்து சம்பாதிக்கக் கூடும் என்பதை நான் தெளிவாக விளக்கினேன். இத்தகைய அங்கஹீனர்களுக்கு அளிக்கக் கூடியபடியாக ஏராளமான வேலைகளிருக்கின்றன. இவைகளை அவர்களுக்கு அளித்தால் நல்ல திடகாத்திரர்களைப் போலவே அவர்களும் உழைத்துச் சம்பாதித்துக் காலக்ஷேபம் செய்யலாம். ஒரு முடவனால் செய்யக்கூடிய வேலையில் நல்ல திடகாத்திரனை நியமித்தல் வீண் விபர்த்தம்தான். கூடை முடைவதற்கு சாதாரணமாய்க் குருடர்கள் கூட போதும்; அந்த வேலையை அவர்களுக்குக் கொடுக்காமல் நல்ல சகல சக்தியும் பொருந்திய மனிதனை அதற்குப் போடுவதும் வியர்த்தம். சிறையிலுள்ள கைதிகளைக் கொண்டு உருவான வேலைகள் செய்யாமல் கல்லுடைப்பது, சணல் ஆய்வது போன்ற சில்லரை வேலைகளைச் செய்வதும் வியர்த்தம்.

சிறைகளை நன்றாக நிர்வகிக்கும் பட்சத்தில் அதற்கு ஏற்படுகிற செலவுகளை அதிலிருந்தே சம்பாதித்துவிடலாம். தவிர, சிறைப்பட்டுள்ள ஒரு கைதி அங்கு அவன் செய்யும் வேலையினால் கிடைக்கும் பொருளைக்கொண்டு அவனுடைய குடும்பத்தையே சம்ரக்ஷிக்கலாம். குடும்பமில்லாதவர்கள் இதைச் சேர்த்துவைத்து விடுதலையடைந்தபின் அதை முதலாகக்கொண்டு ஒரு தொழில் நடத்தலாம். ஏதோ கைதிகளைக்கொண்டு வேலை வாங்கவேண்டுமென்றும், அவர்களிடம் அடிமைகளைப்போல் வேலை பறிக்கவேண்டுமென்றும் நான் சொல்ல வரவில்லை. நாவினால் சொல்லக்கூட அது தகாது. ஆனால் நமது சிறைகளை நாம் சரியாக நிர்வகிக்கவில்லை யென்று மட்டும் கூறவேண்டியிருக்கிறது. அவைகளை அடியிலிருந்து சீர்திருத்த

வேண்டும். முதலாவதாகப் பொதுஜனங்கள் நன்மைக்காகவும், சிறையாளரின் நன்மைக்காகவும் ஆங்கு நல்ல தொழில்களை செய்து உற்பத்தி நிலையங்களாக அவற்றை மாற்றவேண்டும். யோசனையில்லாமல் செய்யப்பட்ட சில முட்டாள்தனமான சட்டங்கள் இதற்குக் குறுக்கே நிற்கின்றன என்பது எனக்குத் தெரியும். தொழிலாளரின் சௌகரியத்திற்காக அவர்களுடைய கோரிக்கையின்மீது அவை செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒரு சமூகத்தின்மீதுள்ள சுமையை அதிகரிப்பதால் சமூகத்தில் ஒருவருக்கும் நன்மை விளையாது. சமூக சேவைசெய்ய வேண்டுமென்பதையே முக்கியமாகக் கருதும் வரையில், சமூகத்தில் உள்ள எல்லா ஜனங்களும் செய்யக்கூடியதைவிட அதிக வேலை யிருந்துகொண்டே யிருக்கிறது என்று குறிப்பிட வேண்டும்.

ஊழியம் புரிய வேண்டுமென்ற நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொழிலில் தயாளத்திற்குப், தர்மத்திற்கும் அவசியமில்லை. மிகவும் மேன்மையான கருத்துடன் தர்மம் புரிந்தாலும், சுய நம்பிக்கையை அது கெடுத்துவிடும். சுய நம்பிக்கை மிகவும் அவசியமானது. நன்றாக நிர்வகிக்கப்படும் எந்தத் தொழிலும், அதை அண்டியிருப்பவர்கள் சுய நம்பிக்கையுடன், பிறரை எதிர்பாராமல் தங்கள் குடும்பத்தை சம்ரக்ஷிக்கத் தகுந்தவாறு கூலியளிக்கும். உலகத்தார் தங்களுக்கு வேண்டியதைத் தாங்களே செய்து கொள்ளும்படி உதவும் தயாளத் தன்மையானது, அனுதாபமாய் ஈந்து சோம்பேறித்தனத்தை வளர்க்கும் காருண்யத்தைவிட மேலானது. நான் ஒரு தொழிற் பள்ளிக்கூடமும், வைத்திய சாலையும் வைத்து நடத்தி, இத்தகைய தர்மசாலைகள் தங்கள் செலவுகளைத் தாங்களே சம்பாதித்து சமாளித்துக்கொள்ள முடியுமா என்று பரீட்சார்த்தமாய்ப் பார்த்தேன். அங்ஙனம் சாத்தியப்படுமென்றும் கண்டேன்.

சாதாரணமாய் நடத்தப்படுகிற தொழிற் பள்ளிக்கூடங்களில், பையன்களுக்கு சிற்சில விஷயங்களைப் பற்றி ஞானம் உண்டாகிறதேயன்றி, அங்ஙனம் பெற்ற அறிவை எப்படி பிரயோகிப்பது என்று அவர்கள் கற்றுக் கொள்கிறதில்லை. தொழிற் பள்ளிக்கூடமென்பது பையன்களுக்கு எங்ஙனம் சரக்குகளை உற்பத்தி செய்வதென்று கிரியாம்சையில் போதிக்க வேண்டும். பள்ளிகளில் படிக்கும்போதே அவர்கள் உற்பத்தி செய்யும்படியா யிருக்கவேண்டும். இத்தகைய பள்ளிகளில் ஏதாவது தர்மம் ஏற்பட்டிருந்தாலன்றி பையன்கள் சம்ரக்ஷணைக்காக ஒருவித ஏற்பாடும் காண்பதரிது. பையன்கள் சரக்குகளை செய்யும்படிவிட்டு ஒருவித வேலையைக் கற்றுக் கொள்ளாமல், பலான விஷயங்களைக் கற்றுக் கொள்ளுகிறார்கள்.

வெளியேறியதும் எந்த வேலை கிடைக்கிறதோ அதை ஒப்புக் கொள்ள வேண்டியதா யிருக்கிறது. எனவே, நல்ல பயிற்சியில்லா மல் வாழ்க்கையில் புகவே, தேர்ச்சிபெற்ற தொழிலாளர் அருகிப் படும் அவஸ்தையோடு இன்னும் கஷ்டம் அதிகரிக்கிறது.

இத்தகைய நிலையைக் கண்டுதான் 1916-வது ஆண்டில் "ஹென்றி போர்டு தொழிற்பள்ளி" ஸ்தாபிக்கப்பட்டது. இது ஒரு தர்ம ஸ்தாபனமென்றே நாங்கள் சொல்கிறதில்லை. சீக்கிரத்தில் பள்ளிக்கூடத்தை விட்டுவிட நேரும் சிறுவர்களுக்கு உதவி புரிவ தற்காகத்தான் அதை ஸ்தாபித்தோம். இதில் 12 வயதிலிருந்து 18 வயது வரையிலுள்ள பையன்களைச் சேர்த்துக் கொள்ளுகி றோம். ஒவ்வொரு பையனுக்கும் வருஷத்தில் 400 டாலர் உபகாரச் சம்பளம் கொடுத்து உதவுகிறோம். நல்ல திருப்திகரமாய் வேலை கற்றுக் கொள்ளுபவர்களுக்கு நாளடைவில் 600 டாலர் வரையில் கொடுக்கிறோம். இது தவிர ஒரு சிறு தொகையும் அவரவர்கள் பேரால் பாங்கியில் ஒவ்வொரு மாதமும் கட்டிவந்து சேர்த்து வைத்து வருகிறோம். தொழிற் கல்வியும், சாதாரணப் படிப்பும் சேர்ந்தாற்போல் இந்தப் பள்ளிக்கூடத்தில் போதிக்கப்படுகிறது. முதலில் பள்ளிக்கூட நேரத்தில் மூன்றில் ஒரு பங்கு நேரம் படிப் பிற்கும், மீதியுள்ள நேரம் தொழிற்சாலையில் வேலை கற்றுக்கொள் ளுவதற்கும் செலவு செய்யப்பட்டு வந்தது. இது கொஞ்சம் இடைஞ்சலாக இருப்பதாகத் தெரியவந்ததின் மேல், இப்பொழுது ஒருவாரம் சேர்ந்தாற்போல படிப்பிற்கும், பின்னர் இரண்டு வாரம் வேலைக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உபாத்தியாயர்கள் எங்கள் தொழிற்சாலையில் வேலை செய்பவர்களே யாவார்கள்; பாடபுஸ்தகங் களோ இயந்திரங்கள்தான். பெரிய சர்வ கலாசாலைகளில் கற்றுக் கொள்ளுவதைவிட இதில் அதிகமாய்க் கற்றுக் கொள்ளலாம். நேருக்கு நேர் உலகத்திலுள்ள பற்பல தேசங்களுடையவும், ஊர் களுடையவும் வரலாறுகளை வியாபார முறையில் அறிந்து கொள்ள முடிகிறது. கணக்கு வழக்குகளும் தானாக தெரிந்துகொள்ள சுலப மாகிறது. பௌதிக சாஸ்திர ஞானமும் இயந்திரங்களில் பழகு வதிலிருந்து ஏற்படுகிறது.

பையன்கள் இயந்திர வேலைகளில் நல்ல தேர்ச்சியடைகிறார் கள். தங்கள் தங்கள் இயந்திரங்களைத் தாங்களே பழுது பார்த்து செப்பனிட்டுக் கொள்ளுகிறார்கள். இயந்திர வேலை செய்யும் பொழுது என்னென்ன ஜாக்கிரதைகள் செய்துகொள்ள வேண்டு மோ அவ்வளவையும் செய்துகொண்டு விடுகிறார்கள். அவர்கள் எங்கள் தொழிற்சாலையில் பட்டம் பெற்று வெளியேறும்போது நல்ல சம்பளத்தில் இதர தொழிற்சாலைகளில் அவர்களுக்கு வேலை

கிடைக்கின்றது. பையன்கள்மீது அதிகாரம் செலுத்தாமல் சிநேக பாவத்தில் அவர்களுடன் அதிகாரிகள் பழகுகிறார்கள். ஆரம்பத்தில் ஆறு பிள்ளைகளுடன் இந்தப் பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது. இப்பொழுது இருநூறு பையன்கள் இதில் கற்கிறார்கள். நாளடைவில் எழுநூறு பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்ளவும் கூடும். துவக்கத்தில் கொஞ்சம் நஷ்டம் இதனால் ஏற்பட்டபோதிலும், இப்பொழுது அதன் செலவை, அதிலிருந்து கிடைக்கும் வரும்படியைக்கொண்டே சமாளித்துக்கொள்ள இயலுகிறது.

இநேதமாகிரி ஒரு ஆஸ்பத்திரியையும் ஸ்தாபித்து நடத்திக் கொண்டு வருகிறோம். இடையில், யுத்தகாலத்தில், அதை சர்க்கார் வசம் ஒப்புவிக்கவேண்டியிருந்தது. இந்த ஆஸ்பத்திரியின் கருத்து, குறைந்த செலவில் வியாதியஸ்தர்களுக்கு அதிக அனுகூலம் வழங்கவேண்டுமென்பதோடு, தர்மத்திற்கு வைத்திய உதவி பெறுவதாக சிகிச்சைக்கு வருபவர்கள் நினைத்துக் கொள்ளாமலிருக்க வேண்டுமென்பதுமாகும். இப்பொழுது சாதாரணமாய் நிர்வகிக்கப்பட்டு வரும் ஆஸ்பத்திரிகள், வியாதியஸ்தர்களின் நன்மைக்காகவா, அல்லது டாக்டர்களின் சௌகரியத்திற்காகவா என்று விளங்கவில்லை. வியாதியஸ்தர்களின் செல்வத்திற்குத் தகுந்தபடி டாக்டர்கள் பணம் பறிக்க வேண்டுமென்பது சரியான கொள்கையென்று நான் நம்பவில்லை. மேலும் "தொழில் முறை" என்று வழங்கும் வழக்கம் மனித வர்க்கத்திற்கே பெருந்தீமையென்றும், வைத்திய சாஸ்திர அபிவிருத்திற்கு இடையூறென்றும் நான் கருதுகிறேன். வியாதி இன்னதென்று கண்டுபிடித்து, அதற்கு வைத்தியம் செய்யாமல், வியாதியஸ்தர் இதனால்தான் அவதிப்படுகிறார் என்று வைத்தியர் நிர்ணயித்துச் செய்துவிட்டு, அதற்கு சிகிச்சை செய்வது சகஜமாயிருக்கிறது. தவறாக ஒரு டாக்டர் ஒரு வியாதியை நிர்ணயஞ் செய்தால், இன்னொரு டாக்டர் அதைத் திருத்தி வைத்தியஞ்செய்வது "தொழில் முறை"க்கு விரோதமென்று நினைக்கிறார்கள். வைத்தியர்களில் பெரும்பாலோர் வியாதியஸ்தருக்கு வியாதி சொஸ்தமாவதைவிட, தாங்கள் இன்ன வியாதியென்று நிர்ணயஞ் செய்ததை நிலைநாட்டுவதே பெரிதெனக் கருதுகிறார்கள். இந்த வழக்கங்களையெல்லாம் ஒழித்து வியாதியஸ்தர்களின் நலனையே பெரிதாகக் கருதி நடத்த வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் இந்த ஆஸ்பத்திரியை நாங்கள் ஸ்தாபித்தோம். இதில் வேலை செய்யும் டாக்டர்களும் தாதிமார்களும் ஆஸ்பத்திரிக்கு வெளியே சொந்தத்தில் வைத்தியம் செய்யக்கூடாது. மொத்தம் 21 டாக்டர்கள் வேலை பார்க்கிறார்கள். சாதாரணமாய் சொந்தத்தில் தொழில் நடத்தினால் அவர்களுக்கு என்ன வருமானம் கிடைக்குமோ அதற்குக் குறைவின்றி அவர்களுக்குச் சம்பளம் கொடுக்

கப்படுகிறது. ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சைக்கு வருபவர்களை ஐந்தாறு டாக்டர்கள் தனிமையாகச் சோதித்து, அவரவர்கள் பிரத்தியேகமாய் தலைமை டாக்டருக்கு தங்கள் அபிப்பிராயங்களை அறிவிக்கிறார்கள். இங்ஙனம் இன்ன வியாதியால்தான் வைத்தியத்திற்கு வருகிறவர் சங்கடப்படுகிறார் என்பதைக் கூடியவரையில் சரியாக நிர்ணயஞ் செய்ய சாத்தியப்படுகிறது. இப்பொழுது அறுநூறு பேர்களுக்கு ஆஸ்பத்திரியில் இடமிருக்கிறது. ஒரு குறிப்பிட்ட திட்டப்படி ஒவ்வொருவரிடமும் ரூம் வாடகைக்காகவும், சாப்பாட்டுச் செலவிற்காகவும், வைத்திய உதவிக்காகவும் வசூலிக்கப்படுகிறது. 4½ டாலர் ஒரு நாளைக்கு இதற்காக ஒவ்வொருவரிடமும் வசூலிக்கப்படுகிறது. ஆஸ்பத்திரி இன்னும் பெரிதானால் இந்தச் செலவு குறையும். பெரிய ரணவைத்தியம் செய்ய வேண்டுமானால் 125 டாலர் கொடுக்கவேண்டும். இதுவரையில் இந்த ஆஸ்பத்திரிக்காக 90 லக்ஷம் டாலர் செலவிட்டிருக்கிறோம்.

தொழிலை திடமாக நடத்தி வெற்றிபெற வேண்டுமெனில் அச்சத்தை யொழிக்கவேண்டும். அப்பொழுதுதான் சுய நம்பிக்கை யுண்டாகும். பிறர் கையை எதிர்பார்ப்பதால்தான் அச்சம் ஏற்படுகிறது. தவறிவிடுவோமோ என்ற அச்சத்தினால்தான் வெகு காரியங்கள் கெடுகின்றன. உண்மையில் எந்தத் தொழிலிலும் சாதாரணமாய் நிகழக்கூடும் கஷ்டங்களையும் இடையூறுகளையும் கண்டு அஞ்சுவதால்தான் தோல்வி யுண்டாகிறது. அவைகளை எதிர்த்துப் போராடி வெற்றிபெறுதல் கடினந்தான். ஆனால் வெற்றியடைவது எளிதானதல்ல; எளிதில் தோல்வியுறலாம். வெற்றிபெற வேண்டுமானால் கஷ்டப்பட்டுத் தானாகவேண்டும். அச்சத்தை ஒழித்தால்தான் முன்னேற முடியும். தைரியமாய் நின்று போராடவேண்டும்; போராடினால், தானே நல்ல பதவியை அடையலாம். அசக்தர்கள் தர்மத்தை எதிர்பார்த்து பிறர் கையை நோக்கி நிற்பார்கள்.

# அத்தியாயம் 16.

## கூட்டுறவின் நன்மைகள்.

ரயில்வே நிர்வாகம்—தொழில் தெரியாதவர்கள் நிர்வகிப்பதால் ஏற்படும் ஊழல்கள்—ரயில்வேக்களினால் உண்டான தீமை—சரக்குகளின் விலை அதிகமானதற்குக் காரணம்—விவசாயிகள் கடமை—கூட்டுறவால் ஏற்படும் நன்மை—மலிவாகக் குடித்தனஞ் செய்ய வழி—அநுவசியமாய்ப் போக்குவரவு செலவு—இதைக் குறைப்பதற்கு மார்க்கம்.

அமெரிக்காவில் ரயில் பாதைகள் நிர்வகிக்கப்படும் முறையானது பொதுஜன சேவைக்கு அனுகூலமாயில்லை. எல்லோரும் ரயில் பாதை நிர்வாகத்தைக் கண்டு அதிருப்தி கொண்டிருக்கிறார்கள். ரயில்வே கட்டணங்கள் அதிகமாயிருப்பதால் பொது ஜனங்கள் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள். அதில் வேலை செய்யும் தொழிலாளர் கூலி போதாதென்றும் அதிக நேரம் வேலைசெய்ய வேண்டியிருக்கிறதென்றும் புகார் செய்கிறார்கள். ரயில்வே சொந்தக்காரர்களோ தாங்கள் போட்ட முதலுக்குத் தக்கபடி லாபம் வரவில்லையென்று வருத்தப்படுகிறார்கள். சரியாக நிர்வகிக்கப்படும் எந்தத் தொழிலிலும் அதில் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் திருப்தியுண்டாக வேண்டும். இல்லாவிடில் நிர்வாகத்தில் ஏதோ ஊழலிருக்கவேண்டும்.

நான் ரயில்வே விஷயங்களைப்பற்றி மிகவும் தெரிந்தவனாக பாவித்துக் கொள்ளவில்லை. ஆனால் தற்போது அமெரிக்க ரயில்வே கம்பெனிகள் நிர்வகிக்கப்படும் முறையைக் கண்டால் அதை நிர்வகிப்பவர்களுடைய அறிவுக்கு அதிக மதிப்பு வைக்க முடியாது. உண்மையில் வேலை செய்கிறவர்கள் இந்த ரயில்வேக்களை நிர்வகித்தால் சரியாக நிர்வாகம் நடைபெறுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் ரயில்வேக்களைப் பற்றிய ஞானமுள்ளவர்களை நிர்வகிக்க முதலாளிகள் விடுவதில்லை. அதனால்தான் எல்லா சங்கடமும் ஏற்படுகிறது.

முதலாளிகளுடன் சேர்ந்து வக்கீல்களும் கெடுதல் புரிந்து வருகிறார்கள். முதலாளிகள் வக்கீல் இல்லாமல் ஒரு காரியத்தையும்

செய்ய முடியாது. வக்கீல்களும், முதலாளிகளுமாக ரயில்வே நிர்வாகத்தைப் பாழ்படுத்தி வருகிறார்கள். இந்த இரு வர்க்கத்தாரும் இல்லாமல் எவ்வளவு திறமையாய் ரயில்வே நிர்வாகத்தை நடத்த முடியுமென்பதை நாங்கள் எங்களுடைய சொந்த ரயில்பாதையாகிய டிட்ராய்ட், டொலீடோ ஐர்ன்டன் ரயில்பாதையில் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். குறைந்த செலவில் அதிக ஊழியம் புரிய வேண்டுமென்ற பொதுக் கொள்கையை இங்கும் அனுசரித்து செலவைக் காட்டிலும் வரவு அதிகமாயிருக்கும்படி நாங்கள் செய்து விட்டோம். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் இந்த ரயில்வே ஸ்தாபிக்கப்பட்டது. 1921 ம் ஆண்டு மார்ச்சு மாதம் நாங்கள் அதை வாங்கினோம். முதன் முதலில் அதிலிருந்த நிர்வாக உத்தியோக பதவிகளையெல்லாம் அழித்தோம். அத்துடன் சட்ட இலாகாவையும் ஒழித்தோம். முன்னர் 18 ஆயிரம் டாலர் வக்கீல்களுக்காகச் செலவிடப்பட்ட இடத்தில் இப்பொழுது 200 டாலருக்கு மேல் செலவாகிறதில்லை.

அனாவசியமாயிருந்த ஆட்களையெல்லாம் நீக்கிவிட்டோம். 69 பேர் வேலை செய்த இடத்தில் அதே வேலையை இப்பொழுது 20 பேர் செய்கிறார்கள். இதேமாதிரி இதர வகைகளிலும் சிக்கனஞ் செய்தோம். தவிர வேலையும் சீக்கிரமாக நடக்கிறது. "நியூயார்க்" நகருக்கு ஒரு மோட்டாரை அனுப்ப முன்னர் எட்டு அல்லது ஒன்பது நாள் பிடிக்கும்; இப்பொழுது மூன்றே நாளில் போய்ச் சேர்ந்துவிடுகிறது.

ரயில் பாதைகள் சரியாக நடைபெறாததற்குக் காரணம், அவை தொழில் தெரிந்தவர்களால் நிர்வகிக்கப்படாமல் பணம் பெற்ற முதலாளிகளால் நிர்வகிக்கப்படுவதுதான். ரயில்பாதைகள், சாமான்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போய்ச் சேருவதற்கு ஒரு சாதனமென்று கருதாமல், பணம் சம்பாதிப்பதற்கு ஒரு கருவியாக நினைக்கப்படுகிற வரையில் அவை முன்னேற்றம் அடைய முடியாது.

ரயில்வே முதன்முதல் ஏற்பட்டபோது அது நீடிப்பதற்காக இதர போக்குவரவு சாதனங்களைக் கொலை புரிந்தார்கள். கால்வாய்கள் வழியாக சரக்குகள் போக்குவரத்து நடந்து கொண்டிருந்தது. அதையெல்லாம் ரயில்வே வந்தபின் அழித்து, கால்வாய்களில் புற்பூண்டுகள் முளைக்கும்படி செய்துவிட்டார்கள். இப்பொழுது சிலகாலமாக அவைகளைத் திரும்பமீட்டுச் செப்பனிட பிரயத்தனஞ் செய்து வருகிறார்கள்.

தானியம் விளைகிற - பிரதேசங்களிலேயே அதை மாவாக அரைக்காமல், மற்றொரு பிரதேசத்திற்கு அனுப்பித் திரும்ப அதை மாவாக அரைத்து வரவழைத்துக் கொள்வதால் ரயில்வே கம்பெனிகளுக்கு அனுகூலமா யிருக்கலாம்; ஆனால் அதனால் உணவுப் பொருள்களின் விலை எவ்வளவு அதிகமாகிறது? பொது ஜனங்களுக்கு அது நன்மை யாகுமா? நிலக்கரி போன்ற சாமான்கள் எங்கு கிடைக்கிறதோ ஆங்கிருந்து அவை தேவை யான இடங்களுக்குக் கொண்டுபோக வேண்டியது அவசியம்தான். ஆனால் உணவுப் பொருள்கள் விஷயத்தில் அப்படியல்ல. எங்கே தானியம் விளைகிறதோ அங்கேயே அதை மாவாக அரைத்துவிட வசதிக ளிருக்கவேண்டும். பஞ்சாலைகள் பஞ்சு விளையும் பிரதே சத்துக்கு அருகிலேயே இருக்கவேண்டும். இங்ஙனம் செய்தால் வண்டி வாடகையையும் சேர்த்து சரக்கு வாங்குபவர்கள் விலை கொடுக்க வேண்டியிராது. அனாவசிய மாய் ரயில்வேக்களை பொது ஜனங்கள் எதிர்பார்த்து நிற்கக்கூடாது. ஆங்காங்கு தேவையான சாமான்களை ஆங்காங்கே செய்துகொள்ள வேண்டும். இதைத் தனிப்பட்ட நபர்கள் செய்ய முடியாவிடில் கிராமவாசிகள் கூட்டுற வாகச் சேர்ந்து நடத்தலாம். தற்போது விவசாயிகள், தாங்கள் விளைவிக்கும் சரக்குகளைத் தாங்களே அனுபவிக்க முடியாமல் வியா பாரிகள் கையில் கொடுத்துவிட்டு, திரும்ப அதிக விலைகொடுத்து வாங்கும்படி நேரிடுகிறது. ஆனால் மேற் கூறியபடி தங்களுக்கு வேண்டியவற்றைத் தாங்களே செய்துகொண்டு வாழ்க்கையை நடத்தினால் ரயில்வே செலவுகள் குறைந்து எவ்வளவோ மலிவாக குடித்தனஞ் செய்யலாம். இது மிகவும் அவசியமானது; சாத் தியமுமானது.

## அத்தியாயம் 17.

# உண்மையான கல்வி யாது?

எடிசனின் பரந்த நோக்கம்—அவருடைய ஆதரவு—அவர் பெருமை—ஜான் பர்ரோஸ்—அவர் மோட்டாரிடம் கொண்டிருந்த வெறுப்பு—அது மாறிய விதம்—யுத்தங்களினால் ஏற்படும் தீமை—யுத்தம் எப்படி தொடங்குகிறது?—எங்ஙனம் ஒரு தேசம் பெருமை யடையக்கூடும்?—அன்னிய நாட்டு வியாபாரம்—அந்தந்த நாடு தனக்கு வேண்டியதை செய்து கொள்ளவேண்டும்—சுதேசியம்—உலக அமைதிக்கு மார்க்கம்—உண்மையான கல்வி யாது?—புஸ்தகப் படிப்பு கல்வியாய் விடாது—கல்வியின் பிரதம லட்சியம்

பரந்த நோக்கமும், விசால புத்தியும் தாமஸ் எடிசனுக்கு உள்ளதுபோல் வேறெவருக்கும் இல்லை. பல ஆண்டுகளுக்கு முன்—1887-ம் வருஷத்தில் என்று நினைக்கிறேன்—அவரை நான் ஒரு மின்சார சாஸ்திர அறிஞர்கள் மகாநாட்டில் சந்தித்தேன். அப்பொழுதுதான் நான் எனது மோட்டார் எஞ்சினைப்பற்றி வேலை செய்து கொண்டிருந்தேன். அதைக்குறித்து நான் அவருடன் பேசியபோது அவர் என் யோசனையை வரவேற்று ஆதரித்தார். புதிய யோசனைகள் எதிலும் அவருக்கு மிகுந்த சிரத்தை யுண்டு. அவர் எனக்கு ஊக்கமூட்டி, விடா முயற்சியுடன் உழைக்கும்படி சொன்னார். சாதாரணமாய் மின்சார சக்தியையே இனி உலகம் எதிர்பார்த்து நிற்க வேண்டுமென்று சாமானியர்கள் சொல்லிய போது, அவர் எனக்கு தைரியமளித்து, மின்சார சக்தி ஒன்றையே கொண்டு எல்லாக் காரியமும் செய்துவிட முடியாது என்றும், மோட்டார் எஞ்சினால் எவ்வளவோ வேலைகள் நடக்குமென்றும் கூறினார். அதுதான் பெரியார்களுக்கும் சாமானியர்களுக்கும் உள்ள பேதம்.

எதுவும் அசாத்தியமில்லை என்பது ஸ்ரீ. எடிசனின் கொள்கை; எதுவும் சாத்தியமென்பதே அவர் கருத்து. நம்மால் போதிய ஞான மில்லாததால்தான் ஒன்றை சாதிக்க முடியாம லிருக்கலாமே யன்றி, தகுந்த அறிவு படைத்தபின் எதையும் சாதிப்பது எளிது என்று அவர் நம்புகிறார். எடிசன், இவ்வுலகிலுள்ள சாஸ்திர ஞானிகளில் முதன்மை ஸ்தானம் வகிக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

அவர் தன் புத்தியைப் பிரயோகித்து, சிரமப்பட்ட எந்தக் காரியத்தையும் செய்து முடிக்கும் ஆற்றலுடையவர். எந்த விஷயத்தையும் ஊன்றி அவர் ஆராய்கிறார்.

என்னுடைய நண்பர்களில் ஜான் பர்ரோஸ் மற்றொருவர். அவர் கொஞ்ச நாளைக்கு முன் உலக முன்னேற்றத்திற்குரிய தற்கால நாகரிகங்களை யெல்லாம் வெறுத்துக் கண்டித்தார். அவர் தற்கால தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும் கண்டு அருவருப்புக் கொண்டார். மோட்டாரினால் இயற்கை இன்பங்கள் எல்லாம் அழிந்து போய்விடும் என்று அவர் கண்டித்தார். இதன்மேல் ஒரு மோட்டாரை நான் அவருக்கு அனுப்பி, அதன்மூலம் இயற்கை இன்பத்தை இன்னும் நன்றாக நுகரலாமென்று தானே அவர் அறிந்து கொள்ளுவார் என்று சொல்லி யனுப்பினேன். அதன் பின் அவர் கொண்டிருந்த அபிப்பிராயங்களை மாற ஆரம்பித்தன. அவருடைய நோக்க நிலையிலேயே மாறுதல் உண்டாயிற்று. அந்த மோட்டாரின் உதவியால் இயற்கையை இன்னும் விரிவாக அவர் கண்டு அனுபவித்தார். இதன்மூலம் எங்களிருவருக்கும் நட்பு உண்டாயிற்று. அவர் பெரிய இயற்கை சாஸ்திரி. எழுபது வயதுக்குமேல் அவர் தொழிற்சாலைகளையும், மோட்டார் வண்டிகளையும்பற்றிக் கொண்டிருந்த அபிப்பிராயம் மாறத் தொடங்கிற்று. பக்ஷிகளின் இயற்கை குணங்களை மட்டும் ஆராய்ந்து கொண்டிருந்தால் உலகம் நடைபெறாது என்று அவர் கண்டுகொள்ளத் தொடங்கினார். நிலக்கரியையும், நாகரிகத்தினால் உண்டாகும் சந்தடியையும் கண்டு அவர் வெறுப்புக் கொண்டிருந்த காலமுண்டு. ஆனால் நாளடைவில், அவர் தனக்கு எங்ஙனம் பக்ஷிகளைக் கண்டு ஆனந்தமுண்டாகிறதோ, அதேமாதிரி மற்றவர்களுக்கு வேறு விஷயங்களைக் கண்டு இன்ப முண்டாகுமென்பதை ஏற்றுக் கொண்டார். உலகம் ஏற்பட்ட நாள் தொட்டு பக்ஷிகளின கூடுகள் ஒரேமாதிரி தான் செய்யப்பட்டு வருகிறது; அதனால் மனிதர்களும் குகைகளிலேயே வாழ வேண்டுமென்றுண்டா? சுகாதார முறைகளை யனுசரித்துக் கட்டப்பட்டுள்ள வீடுகளில் அவர்கள் குடியிருக்கலாகாதா? ஜான் பர்ரோஸ் எழுபது வயதுக்குமேல் இவ்வாறு கருதி, தன் அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டார்.

அவர் எமர்சனைப்பற்றி அடிக்கடி பேசுவார். எமர்சனின் பெருமையை எனக்கு அவர் எடுத்து போதித்தார். அவர் நல்ல பழுத்த வயதில் மரணமடைந்தார்.

எப்பொழுதையும் விட இப்பொழுது நான் யுத்தத்தை வெறுத்து கண்டிக்கிறேன் உலகத்தில் எந்தக் காரியமும் யுத்தத்

தால் ஒரு நிலைக்கு வர முடியாதென்பதை பொது ஜனங்கள் கண்டு கொண்டிருப்பார்களென்று நம்புகிறேன். உலகத்தின் விவகாரங்கள் ஒழுங்காக நடைபெற்றதைச் சீர்குலைத்தது மகா யுத்தம்தான். யுத்தத்தினால் சிலர் பணக்காரர்களானார்கள்; சிலர் ஏழைகளானார்கள். ஆனால் யுத்தத்தில் நின்று போர் புரிந்தவர்களும், உண்மையில் சகாயம் புரிந்தவர்களும் உண்மையில் பணக்காரர்களாக வில்லை. யுத்தத்தினால் தேசபக்தர் ஒருவரும் பணக்காரர்களாக மாட்டார்கள். பிறருடைய உயிர்த் தியாகத்தால் பணக்காரராக எந்த தேசபக்தரும் பிரயத்தனப்படமாட்டார்கள். யோக்கியப் பொறுப்புள்ள வியாபாரி எவரும் யுத்தத்தின்மூலம் லாபம் சம்பாதிப்பது நேர்மையென்று கருதமாட்டார்கள்.

யுத்தங்கள் எப்படித் தொடங்குகின்றன என்பதை ஆராய்வோம். முதன்முதலில் எந்த தேசத்துடன் யுத்தம் புரிய வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அந்த தேசத்தின்மீது சந்தேகமேற்படுமாறு பிரசார வேலைகள் தீவிரமாய் நடக்கும். இதற்கென்றே ஒரு கூட்டம் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறது. சில பத்திரிகைகளும்கூட உதவிபுரிகின்றன. இரண்டு தேசங்களுக்கும் பகைமையை மூட்டிவிட்டால் பின்னால் தானே அவர்கள் விரும்பும் யுத்தம் எப்படியாவது நேருகின்றது. மகா யுத்தத்தினால் பணக்காரர்களானவர்கள் அனேகர். இங்ஙனம் பணம் சம்பாதிக்கக் கூசாதவர்களுக்கு யுத்தம் நல்லதுதான்.

இங்ஙனம் பணம் சம்பாதிப்பதால் ஒரு தேசம் பெருமையடையாது. ஒரு தேசத்தின் பெருமை அதன் வியாபாரப் பெருக்கால் வளராது. விவசாயிகளாயிருக்கும் ஜனங்கள் தொழில்களில் இறங்குவதாலும் பெருமையடைந்துவிட முடியாது. ஆனால் நாட்டின வளமையை சரியாக அபிவிருத்தி செய்து, தனத்தைப் பெருக்கி, எல்லோருக்கும் அது நேர்மையாக பகிரும்படி செய்தால், அதன் மூலமாகவே நாட்டின் பெருமை வளரும்.

அன்னிய நாட்டு வியாபாரம் என்பபடுவது ஒரு பெரிய மாயை. அந்தந்த தேசம் தனக்கு வேண்டிய சரக்குகளைத் தானே செய்து கொள்ளக்கூடிய சக்தி படைத்ததாக இருக்க வேண்டுமென்பதே எல்லோருடைய விருப்பமாயிருக்கவேண்டும். அதாவது சுதேசியத்தை வளர்க்க ஒவ்வொரு நாடும் பிரயத்தனப்பட வேண்டும். ஒவ்வொரு தேசமும் அதனால் செய்து கொள்ளக்கூடிய சரக்குகளைச் செய்து கொண்டுவிடின், பின்னர் போட்டியின்றி தேவையாயிருக்கும் சரக்குகளைப் பிறதேசங்களிலிருந்து வரவழைத்துக் கொள்ளலாம். சிற்சில நாடுகளில் சில சரக்குகள் பிரத்தியேகமாய் விளை

யும். அவற்றை ஆங்கிருந்தே தருவித்துக் கொள்ள வேண்டி யிருக்கும்.

அமெரிக்காவின் அன்னிய வியாபார மெல்லாம், அன்னிய நாடுகள் முன்னேற்ற மடையாமல் பின்னடைந்திருப்பதைத் தாங்கி நிற்கிறது. சுய நலத்தைக் கருதி அவை முன்னடையாமல் அதே நிலைமையில் இருக்க வேண்டுமென்று நமது நாட்டினர் விரும்பலாம். ஆனால் நல்லெண்ணங் கொண்டவர்கள் இங்ஙனம் பிற்போக்காயிருக்கும் நாடுகள் அபிவிருத்தியடைந்து பிற தேசங்களை எதிர்பார்க்காத நிலையை எய்த வேண்டுமென்று விரும்புவார்கள். அன்னிய நாடுகளை நாமே அபிவிருத்தி செய்யப் புகுவதாகச் சொல்லிக்கொள்ளுவதெல்லாம் சுத்த ஏமாற்றுகிற வித்தைதான். அது கொள்ளையாகும். அன்னிய நாட்டினரை முன்னேற்ற மடையும்படிச் செய்யாமல் அந்நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது.

ஆபிரிக்கா தேசத்தவர் தங்களுக்குத் தேவையான பருத்தியைத் தாங்களே விளைவித்துக் கொள்ளவும், ருஷிய நாட்டினர் தங்களுக்கு அவசியமான விவசாயக் கருவிகளைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளவும், சீனர்கள் தங்களுக்கு வேண்டியவற்றைத் தாங்களே உற்பத்தி செய்துகொள்ளவும் தொடங்கிவிட்டால் உலக வியாபாரத்தின் நிலை மாறுமென்பது உண்மை. ஆனால், தற்போது வழங்குகிறபடி சில தேசங்கள் உலகத்தில் பெரும்பான்மையோருக்குத் தேவையான சரக்குகளைச் செய்து அனுப்புகிறது என்ற நிலைமையே என்றைக்கும் நீடித்திருக்கும் என்று அறிவுடையோர் எவரேனும் எண்ணுவார்களா? எல்லா ஜனங்களுக்கும் சுய நம்பிக்கையுடன் தங்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே பார்த்துக் கொள்ளக்கூடுமென்ற நிலைமை வரதாக வேண்டுமென்றே எல்லோரும் யோசிக்கவேண்டும்.

நமது நாடாகிய அமெரிக்காவில் அன்னிய வியாபாரத்தையே நாம் நாடாமல் உள்நாட்டை அபிவிருத்தி செய்யும் வகையில் எவ்வளவோ உழைக்கலாம். வியாபாரம் முதன் முதலில் எப்படி தொடங்கிற்று என்பதை யோசிக்கவேண்டும். ஜனங்கள் தங்களுடைய தேவைகளுக்குக் கண்டு மிஞ்சியதை, அந்த சரக்குகள் கிடைக்காத நாடுகளில் கொண்டுபோய் விற்றனர். தானியம் விளையாத பூமிக்கு தானியம் அதிகமாய் விளையும் பிரதேசத்தார் அனுப்புவது வழக்கம். அதேமாதிரி மரமில்லாத இடங்களுக்கு காடடர்ந்த தேசங்களிலிருந்து மரம் வரும். இங்ஙனம் ஒருவருக்கொருவர் சேவை புரிய வேண்டுமென்ற எண்ணத்துடன் வியாபாரம் நடந்துவந்தது; போட்டியே யிருப்பதில்லை. ஒவ்வொரு

தேசத்தாரும் ஒரு தொழிலில் தேர்ச்சி பெற்றிருப்பார்கள். ஒரு தேசம் அரசியல் முறையிலும், மற்றொரு தேசம் குடியேற்ற ஆற்றலிலும், வேறொரு தேசம் கடல் யாத்திரைகளிலும், இன்னொரு தேசம் விவசாயத்திலும், மற்றொன்று சங்கீதத்திலும் கலை ஞானத்திலும், வேறொன்று தொழிலபிவிருத்தியிலும் தேர்ச்சி பெற்றதாயிருக்கலாம். அதேமாதிரி நிலைமை வந்து, கொடுக்கலும் வாங்கலும் ஒரே வகையில் ஒவ்வொரு நாடும் செய்து, லாபத்தைக் கருதாமல் சேவையையே பெரிதாகக் கருதி வேலை செய்கிறவரையில் எல்லாம் தலைகீழாகத் தானிருக்கும். ஒவ்வொரு நாட்டுக்கும் விசேஷமான பொருள் ஒன்று இருக்கும். இயற்கையாக ஏற்பட்ட இந்தப் பிரத்தியேக சரக்கை அதது பிற நாடுகளுக்கு வழங்கி, எல்லாவற்றையும் பற்றிக் கொள்ளவேண்டும் என்ற பேராசை நீங்கினால், தானாக உலக அமைதி நிலைபெற்று விடும். உலக வியாபார மனைத்தையும் தாங்களே அனுபவிக்க வேண்டுமென ஒரு நாட்டார் விரும்பினால் யுத்தம் தான் வளரும்; அதனால் சுபிக்ஷம் விளையாது.

சென்ற மகா யுத்தம் ஆரம்பமானதற்கு யோக்கியப் பொறுப்பான காரணமொன்றுமே இதுவரையில் எனக்குப் புலப்படவில்லை. அந்த யுத்தத்தில் ஜயித்தவர்களும் சரியே, தோற்றவர்களும் சரி இருவர்க்கத்தாரும் வீண் நஷ்டமடைந்தார்கள். அதனால் ஒருவருக்கும் நன்மை விளையவில்லை. அமெரிக்கா யுத்தத்தில் சேர்ந்தபோது இந்த யுத்தத்தினால் இனி உலகத்தில் யுத்தங்களே தோன்றாமல் போய்விடும் என்று நான் நம்பினேன். ஆனால் இப்பொழுது உண்மையை நான் கண்டுகொண்டு விட்டேன். நெருப்பு நெருப்பை அவிக்குமா? இன்னும் அதிகமாய்க் கொழுந்து விட்டெரியத்தானே செய்யும்.

யுத்தத்திற்கு நான் விரோதமாயிருந்தபோதிலும், அமெரிக்கா யுத்தத்தில இறங்கிவிட்ட பிறகு போர்டு கம்பெனி முழுதையும் சர்க்காரின் உபயோகத்திற்காகக் கொடுத்து விட்டோம். சமாதான உடன்படிக்கை கையெழுத்துச் செய்யப்பட்டவுடன் திரும்பவும் எங்களுடைய வேலையை செய்யத் தொடங்கினோம்.

சாதாரணமாய் ஒரு வேலையை செய்து முடிக்கக் கூடியவன் தான் நல்ல சக்திவான; எந்த வேலையையும் சாதிக்கக் கூடியவன் தான் படிப்பாளி. எவ்வளவு சர்வ கலா சாலைப் பட்டங்கள் பெற்றிருப்பினும், யோசனை செய்து வேலை செய்யாதவன் கல்வி பயனற்றது. கல்வியானது முன்னர் ஜனங்கள் எதில் தவறி விட்டார்களென்றும், எதெதில் வெற்றி பெற்றார்களென்பதையும் எடுத்துக் காட்டவேண்டும். நன்றாய் யோசனை செய்யவும், சக்தியை வளர்த்து

தனக்குக் கிடைத்துள்ள கருவிகளைப் பிரயோகிக்கவும் வல்லமையுள்ளவன்தான் நல்ல படிப்பாளி. பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறிய பிறகு தான் உண்மையான கல்வி ஆரம்பமாகிறது. வாழ்க்கையில் அடிபட்டு பல விஷயங்களை அறிந்து கொள்ளுவதால்தான் உண்மையான கல்வி ஏற்படுகிறது; ஏராளமாய்ப் படித்து மூளையை நிரப்பிவிடுதல் உண்மையான படிப்பாகாது. மிகவும் படித்தவராக ஒருவர் இருக்கலாம்; ஆனால் அவர் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல் இருக்கக்கூடும்; அதிகமாய்ப் படியாதவனாக ஒருவன் இருக்கலாம்; ஆனால் அவனால் எவ்வளவோ காரியஞ் செய்யக்கூடியதா யிருக்கலாம். கல்வியின் நோக்கம், மூளையை எப்படிப் பிரயோகிக்க வேண்டுமென்று வழி காட்டுவதா யிருக்கவேண்டும். மனிதர் கற்க வேண்டிய விஷயங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன.

சும்மா பழைய விஷயங்களை யெல்லாம் புஸ்தக மூலமாய்ப் படித்து மனதை நிரப்பி விடுதல் பிரயோஜனமே யில்லை; உலகிற்கு என்ன நன்மை ஒருவரால செய்யக்கூடும் என்பதே கல்வியின் பிரதம லட்சியமா யிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் 18.

# உண்மை ஜன நாயகம்

ஜன நாயக தத்துவத்தை கூச்சல் போடுகிறவர்கள் உண்மையில் விரும்புகிறார்களா? உண்மையான ஜன நாயகம் யாது?—வகுப்பு வேற்றுமைகளும் உணர்ச்சிகளும்—பணக்காரரும், ஏழைகளும்—தொழிலாளர் சங்கங்களும் வேலை நிறுத்தங்களும்—சங்க உத்தியோகஸ்தர்கள்—அவர்களுடைய சூழ்ச்சிகள்—அவர்களால் உண்டாகும் கஷ்டம்—உண்மையான தலைவர் எவர்?—சில தப்பபிப்பிராயங்கள்—வேலை நிறுத்தம் எப்பொழுது செய்யலாம்—முதலாளிகளின் குற்றம்—முதலாளிகள் நேர்மையாயிருப்பின் வேலை நிறுத்தத்திற்கே இடமிராது—சூழ்ச்சிக்காரரால் தூண்டப்படும் வேலை நிறுத்தங்கள்—பணக்காரரால் தூண்டப்படும் வேலை நிறுத்தங்கள்—நிவர்த்திக்கு வேறென்ன வழி?—பேச்சும் பிரசாரமும் பயனளிக்காது—காரியத்தில் உதவி வழங்கவேண்டும்.

"ஜன நாயகம்" என்ற சொல் மற்றெந்தச் சொல்லையும் விட அதிகமாய் இந்தக் காலத்தில் பிரயோகிக்கப்பட்டு வழங்கி வருகிறது. ஆனால் அதைக் குறித்து அதிகமாய்க் கூச்சல் போடுகிறவர்கள்தான் உண்மையில் அதனை விரும்பாதவர்கள் என்று நான் நினைக்கிறேன். ஜன நாயகத்தைப் பற்றிப் பிரமாதமாய்ப் பேசுகிறவர்களிடத்தில் எனக்கு எப்பொழுதும் சந்தேகம்தான். ஏதேனும் ஒரு வகையான கொடுங்கோன்மையை ஸ்தாபிக்க அவர்கள் விரும்புகிறார்களா என்று வியப்புறுகின்றேன். அல்லது தாங்களே செய்துகொள்ளவேண்டிய காரியங்களையெல்லாம் பிறரைக்கொண்டு செய்துகொண்டு விடலாமென்பது அவர்கள் எண்ணமா? அவரவர்கள் சக்திக்குத் தக்கவாறு சரி சமானமான சந்தர்ப்பம் ஒவ்வொருக்கும் அளிக்கக்கூடிய திட்டமே ஜன நாயக தததுவம் படைத்ததாகும் என்பது என் கொள்கை. நாம் மட்டும் நமது சகோதரர்களுக்கு உண்மையான சேவைபுரிய வேண்டுமென்ற நோக்கத்துடன் உழைப்போமாகில், சர்க்கார் இங்ஙனமிருத்தல் வேண்டும், அங்ஙனங் கூடாது என்று செய்யும் திட்டங்களையும், அமைப்புகளையும் பற்றி வீண் காலம் கழித்து விவாதிக்காமல், பிரயோஜனப்

படத் தக்கதாய் ஆகவேண்டிய காரியங்களில் கவனத்தைச் செலுத்தியவர்களாவோம்.

மனித வர்க்கத்தை ஊன்றி ஆராயப்புகின், மனிதர் உண்மையில் ஒருவரை யொருவர் எவ்வளவு குறுகிய புத்தியுடன், மானிட உணர்ச்சியே யில்லாமல் கருதுகிறார்க ளென்பதைக் கண்டு நாம் நடுக்குறுவோம். இங்ஙனம் உணர்ச்சியற்றவர்களாய் ஒரு வகுப் பார்தான் இருப்பதாக வற்புறுத்த ஒருவாறு சிரமப்பட்டு சிலர் வெளி வருகிறார்கள். ஆனால் வகுப்புக்களாய் மனித வர்க்கம் வகுக்கப்பட்டு தனிமையான வகுப்பு உணர்ச்சி ஏற்பட்டுவிடில், ஒவ்வொரு வகுப்பினிடமும் இத்தீய குணம் இருந்தே வருகிறது. தனிமையாக பணக்கார ரென்று ஒரு வர்க்கத்தாரை மட்டும் குறை கூறுவதில் பயனில்லை. மானிட வர்க்கத்தைப் பொதுவாகக் கருதப் போனால் பணக்காரர் தொகை மிகக் குறைவுதான். ஏழைகள் தொகையும் அதேமாதிரி சிறியதுதான். தனிமையாக இவ்விரு வர்க்கத்தாரை மட்டும் வகுப்புக்களாகப் பிரித்து வைத்துப் பேசவேண்டிய தில்லை. பணக்காரர்கள் எவ்வளவோ பேர் ஏழைபாய்ப் போய் விடவில்லையா? ஆனால் அவர்கள் குணத்தில் மாறுதல் ஏற்பட்டதாகக் கண்டிருக்க முடியாது. எவ்வளவோ ஏழைகள் பணக்காரர்களாயு மிருக்கிறார்கள்; அவர்களுடைய குணமும் முந்தி ஏழைகளாயிருந்தபோது இருந்தது போலவேதான் மாறாம லிருந்திருக்கிறது.

இந்த இரு வர்க்கத்துக்கும் இடையில் பெரும்பான்மையான பொது ஜனங்கள் இருக்கிறார்கள். ஒரு சமூகம் முழுதும் கோடீசுவரர்களாக யிருந்தாலும், சமூகத்தின் போக்கில் வித்தியாசம் ஏற்பட்டுவிடாது. அதிலும், ரொட்டி சுட்டு விற்கிறதற்கு ஒரு சிலர் இருந்துதானாகவேண்டும்; இயந்திரங்களை ஓட்ட ஒரு வகுப்பார் இருந்தாக வேண்டும்; ரயில் வண்டி ஓட்ட ஒரு சிலர் இருக்க வேண்டும். இல்லாவிடில் அந்த சமூகமே அழிந்துவிட நேரும். யாராவது வேலை செய்துதானே யாகவேண்டும்? உண்மையில் வேலை செய்கிறவர்களையும், செய்யாம லிருப்பவர்களையும் இரு வகுப்பாய்ப் பிரிக்கலாமே யன்றி வேறு வகுப்புக்களுக்கு இடமில்லை. முதலாளிப் பத்திரிகைகள் தொழிலாளரைக் குறித்தும், தொழிலாளரைச் சேர்ந்த பத்திரிகைகள் முதலாளிகளைப் பற்றியும் தூற்றுவதைக் கண்டால் ஆச்சரியமாய் இருக்கும். இரு தரத்தார் சொல்வதிலும் உண்மை மிகக் குறைவாகவே தானிருக்கிறது. தூற்றல் தான், பொய்தான் மிகுந்திருக்கிறது. இதை எழுதுபவர்கள் தங்கள் தங்கள் வகுப்பாருக்கு இதனால் திருப்தியுண்டாகும் என்று நம்புகிறார்கள். இரு கட்சியிலும் எழுதி வருபவர்கள் பிரசாரஞ் செய்யும நோக்கத்துடன்தான் வேலை செய்கிறார்கள்.

தொழிலாளர் சங்கங்களையும், அவைகள் மூலம் நடக்கும் வேலை நிறுத்தங்களையும் பற்றி கவனிப்போம். சில சங்கங்களில் ஏராளமாய்ப் பணம் இருக்கின்றது. ஆனால் இந்த சங்கங்களில் பணம் பெற்று உத்தியோகம் வகிப்பவர்கள்தான் கலகங்களுக்கெல்லாம் காரணமாயிருப்பவர்கள். அவர்களுக்கு இதைத் தவிர வேறு வேலையிருக்கிறதில்லை. தாங்கள் ஒருவித கௌரவமும், அதிகாரப் பதவியும் பெறுவதற்கே அவர்கள் இவ்வளவு சிரமமும் படுகிறார்கள். எப்பொழுதும் தொழிலாளரைக் கிளப்பிவிட்டு கலகத்திற்குத் தயார் செய்வதே இவர்கள் வேலை. 12 டாலர் கூலி கிடைத்தால் அதை 14 ஆகச் செய்ய வேண்டுமென்றும், 8 மணி நேரம் தினசரி வேலை செய்ய வேண்டுமெனில், அதை 6 மணியாகச் செய்ய வேண்டுமென்றும் கிளர்ச்சி செய்யுமாறு தூண்டி விடுவார்கள். எப்பொழுதும் அக்கிரமங்கள் நீடித்து வர வேண்டுமென்பதும், அதன் மூலம் வேலை நிறுத்தங்கள் போன்ற கிளர்ச்சிகள் தோன்ற வேண்டுமென்பதும் இவர்களுடைய அந்தரங்கமான விருப்பம். இல்லாவிடில் இவர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும்!

உண்மையான தொழிலாளத் தலைவர், தொழிலாளர் சரியானபடி வேலைசெய்து, அதற்குத் தக்கபடி அவர்களுக்குக் கூலி கிடைக்கிறதா வென்று கவலை பாராட்டி உழைக்கிறவர்கள்தான். சும்மா வேலை நிறுத்தங்கள் செய்யும்படித் தூண்டிவிட்டு, அக்கிரமச் செயல்களில் பிரவேசிக்க ஆதரவு அளித்து, கடைசியில் பட்டினியால் தொழிலாளர் வாடி மடியும்படிச் செய்கிறவர்கள் தொழிலாளரின் தலைவராக மாட்டார்கள். அவர்களால் தொழிலாளருக்கு ஆபத்துதான் விளையும்.

நல்ல வேளையாய் ஒருவிதமான மாறுதல் இப்பொழுது ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. இந்தத் தலைவர்கள் கொண்ட சங்கங்கள் அழிந்துபோய், அத்துடன் கண் மூடித்தனமாய் தொழிலாளர் அபிவிருத்தியை லட்சியஞ் செய்யாமலிருந்து வரும் முதலாளிகள் காலமும் முடிவடைந்து விடும்.

நான் தொழிலாளர் சங்கங்களுக்கும், அமைப்புகளுக்கும் விரோதமாயிருப்பதாக நினைக்கவேண்டாம். ஆனால் சில தப்பான அபிப்பிராயங்கள் தொழிலாளர் மூளையிலேறி அவர்கள் வீணாய்க் கெட்டுப் போகக்கூடாதென்பது என் கவலை. தொழிலாளர் தாங்கள் குறைவாக வேலை செய்தால் அதிகமானவர்களுக்கு வேலை கிடைக்குமென்று சிலர் கூறுகிறார்கள். இதைவிட மோசமான கருத்து வேறெதுவுமில்லை. இதனால் சோம்பேறித்தனம் தான் வளரும். அதன்மூலம் சமூகத்தின் மீதுள்ள சுமை அதிகரிக்குமே

யன்றி புதிதாய் ஒருவருக்கும் வேலையகப்படாது. அனுவசியமாய் 9 பேர் செய்யக்கூடிய வேலையை 10 பேரைக்கொண்டு செய்வதால் கடைசியில் அந்த ஒரு ஆளுடைய கூலியையும் பொது ஜனங்கள் பொறுத்துக்கொள்ள நேருகிறது. இந்த வேலையில் அவன் அமரா விடில், வேறேதேனும் ஒரு வேலையில் அவன் ஈடுபட்டுழைத்துத் தான் சம்பாதிப்பதுடன் சமூகத்திற்கும் உதவி செய்யலாம்.

கூலி அசௌகரியமாய்க் கிடைக்கவோ, வேலை நேரத்தைக் குறைக் கவோ வேலை நிறுத்தஞ் செய்வது நேர்மையாகாது. இதனால் தொழிலுக்குத்தான் ஹானி ஏற்படும். இதனால் ஒருபோதும் வேலை நிறுத்தங் கூடாதெனச் சொல்லவரவில்லை. நியாயம் கிடைக் காவிடில், சரியான சௌகரியங்களில்லாவிடில், நேர்மையான ஒப் பந்தஞ் செய்து வேலை நடத்தவேண்டுமாகில், அத்தகைய சமயங் களில் வேலைநிறுத்தஞ் செய்யலாம். இங்ஙனம் வேலை நிறுத்தஞ் செய்யவேண்டி நேரும்போதெல்லாம் முதலாளிகள்மீதுதான் குற்ற மிருக்கும். அவர்கள் அந்தப் பதவி வகிக்க லாயக்கற்றவர்களா யிருப்பார்கள். இவர்களால் லாயக்கற்ற தொழிலாளியைவிட அதிக தீமையுண்டாகும். முதலாளி மட்டும் சரியாக நடந்துகொண்டால் ஒருவித வேலை நிறுத்தமும் ஏற்படவே இடமிருக்கக்கூடாது.

இடையில் சில சூழ்ச்சிக்காரர்களால் தூண்டப்படும் வேலை நிறுத்தங்களுமுண்டு. இதனால் நடுவிலுள்ள அவர்கள்தான் பய னடைவார்கள். இங்ஙனம் நேரும் வேலை நிறுத்தங்களில் இருதரப் பினரும் மனம் ஒத்துப்போய் விடலாமென்று யோசித்தும் சமரசம் ஏற்படாமலிருந்தால் மூன்றாவது மனிதரின் விஷமம் இதில் இருக்க வேண்டுமென்பதை அறிந்து கொள்ளவேண்டும். இதனால் லாப மடைகிறவர்கள் மூன்றாவது மனிதர் தானாகையால் தொழிலாள ரும் முதலாளிகளும் இவ்விஷயத்தில் எச்சரிக்கையா யிருக்க வேண்டும்.

மூன்றாவதாக தொழிலாளருக்குக் கெட்ட பேரைக் கொண்டு வந்து வைக்கவேண்டுமென்று பணக்காரரால் சில வேலைநிறுத்தங் கள் தூண்டப்படுவதுண்டு. இதினின்றும் தொழிலாளர் தங்களைக் காத்துக் கொள்ளவேண்டும்.

நாம் தொழிலாளரை வேலை நிறுத்தஞ் செய்யாமலிருக்கும்படி உபதேசஞ் செய்யலாம். ஆனால் அவர்களுக்குக் குறைகளை நிவர்த் திக்க வேறென்ன வழியைக் கற்பிக்கலாம். வேலை நிறுத்தஞ் செய்யாதிருந்தால் தொழில் அபிவிருத்தி யடைந்துவிடுமா? தொழி லாளர் வேலை நிறுத்தஞ் செய்வது நேர்மையல்லவென்று இருந்து

விட்டால், முதலாளிகள் அவர்களுக்கு சகல செளகரியங்களும் செய்து கொடுக்கும் பொறுப்பு உள்ளவர்களாகிறார்கள். இதைத் தான் நாங்கள் 'போர்டு' தொழிற்சாலைகளில் அனுசரித்து வருகிறோம். சாதாரணமாய்த் தொழிலாளச் சங்கங்கள் வற்புறுத்தக் கூடியதைவிட அதிகமாகவே நாங்கள் கூலி கொடுக்கிறோம். அவர்கள் கோருவதைவிட குறைந்த நேரம் எங்கள் தொழிலாளர் வேலை செய்கிறார்கள். ஒரு சங்கத்தில் அங்கத்தினரா யிருப்பதால் கிடைக்கக்கூடிய செளகரியத்தைவிட தானாகவே நாங்கள் அவர்களுக்கு வழங்கும் செளகரியங்கள் அதிகமாயிருக்கும். பெரும்பான்மையோர் சங்கங்களில் அங்கத்தினராயில்லை என்று நினைக்கிறோம். அதற்கு அவர்களுக்கு அவசியமே கிடையாது. ஆனால் அதைப்பற்றி கூட நாங்கள் விசாரிக்கிறதேயில்லை. சங்கங்கள் கொண்டுள்ள நல்ல லட்சியங்களை நாங்கள் பாராட்டி, கெட்ட லட்சியங்களைக் கண்டிக்கிறோம். சங்கங்களும் எங்கள் தொழிற்சாலைகளின் வேலையில் தலையிடுகிறதில்லை.

இங்கிலாந்தில் மான்செஸ்டரில் நாங்கள் ஸ்தாபித்துள்ள தொழிற்சாலையில் வேலை செய்கிறவர்களெல்லாம் தொழிற் சங்க அங்கத்தினராகச் சேர்ந்திருக்கிறார்கள். ஒரு சமயத்தில் சங்கத்தின் தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு சிலர் எங்களைப் பார்த்துப் பேசவந்தார்கள். நாங்கள் அவர்களுடன் பேச மறுத்தோம். இதனால் எங்கள் தொழிற்சாலையில் வேலை செய்தவர்களை வேலை நிறுத்தஞ் செய்யத் தூண்டினார்கள். ஆனால் தொழிலாளர் மறுத்தனர்; இதனால் அவர்கள் சங்கத்திலிருந்து நீக்கப்பட்டனர். அதன் மேல் தொழிலாளர் சங்கத்தின்மீது வழக்குத் தொடங்கினர். இதன் பிறகு தொழிற் சங்க உத்தியோகஸ்தர்கள் எங்கள் விஷயங்களில் தலையிடுகிறதில்லை.

தொழிலாளருக்கு அதைச் செய்யவேண்டும், இதைச் செய்ய வேண்டு மென்றெல்லாம் பேசிவிடுவதால் நன்மை விளையாது. காரியத்தில் உதவி செய்வதால்தான் தொழிலாளர் திருப்தியடைவார்கள். பிரசங்கங்களும், பிரசுரங்களும், பிரசாரங்களும் பயனளிக்க முடியாது.

சாதாரணமாய் ஒருபெரிய தொழில் மூலம் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு ஜீவனமேற்படுவதால், அந்தத் தொழில் நேராக நடக்க வேண்டுமென்ற சிரத்தை எவருக்கும் இருக்கவேண்டும். அதை பயபக்தியுடன் தெய்வீகமான கட்டளையாகக் கொண்டு குந்தகம் ஏற்படாமல் ஒரு பெரிய பொறுப்பாக வகித்துப் பாதுகாக்க வேண்டியது எல்லாருடைய கடமையுமாகும்.

ஒரு ஸ்தாபனம் ஒழுங்காக நடைபெற வேண்டுமானால் அதில் ஈடுபட்டவர்களெல்லாம் ஒரே லட்சியத்துடன், அது கைகூடுவதற்கான முறைகளைத் தழுவி உழைக்கவேண்டும். ஒருவருக்கொருவர் பாஸ்பரம் நல்லெண்ண மிருந்தால்தான், சேர்ந்து உழைக்கக்கூடுமென்று சிலர் கூறுகிறார்கள். இதன் பொருள் எனக்கு விளங்கவில்லை. ஒருவரை நாம் கண்டு விரும்பாவிடில் அது அவர் குற்றமா? ஏன் நம்மீதே குற்றமிருக்கக் கூடாது? ஒரு தொழில் நடப்பதற்கு நாம் பிறரிடம் கொள்ளும் விருப்பமும் வெறுப்பும் இடையூறாக இருக்கக்கூடாது. அவரவர்கள் பிறருக்குக் கிடைக்க வேண்டிய நியாயத்தை வழங்க வேண்டியதுதான் முக்கியம். அதுதான் உண்மையான ஜன நாயகமாகும். யார் தலைவரா யிருக்கவேண்டுமென்பது முக்கியமில்லை. எல்லோருக்கும் நீதி கிடைக்கிறதா என்பதே பிரதானமான கேள்வி. அங்ஙனம் நீதி கிடைக்கும் ஸ்தாபனமே உண்மையான ஜனநாயக தத்துவத்தைத் தழுவி நடப்பதாகும்.

# அத்தியாயம் 19.

## போர்டு சாதித்தவை.

மனிதரின் சுயநலம்—தொழில்களிலும் பொருள் முறைகளிலும் மாச்சர்யம்—பொறுமையும், பேராசையும்—பணக்காரரா யிருத்தல் கௌரவமில்லை—பணக்காரனுக்கும் ஏழைக்கும் இன்றியமையாத தேவைகள் ஒன்றே—ஆனால் பணத்தினால் விளையும் நன்மைதானென்ன?—பொதுஜன சேவைக்குப் பணமே வித்தாகும்—இருவித முட்டாள்கள்—பணத்தினால் பதவி பெற விரும்பும் கோடீசுவரர்—ஓட்டையாண்டிகளான சீர்திருத்தக்காரர்கள்—பூமியிலிருந்து கிடைக்கக் கூடாததென்ன?—தொழிலின் நோக்கம் லாபம் சம்பாதிப்பதல்ல; சேவை புரிவதுதான்—போர்டு சாதித்தவை.

நான் முன்னரே கூறியுள்ளபடி நம்மைச் சுற்றிலும் பெரியதோர் மாறுதல் ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. மெதுவாக, நாம் அறியாமலே—ஆனால் உறுதியாக—அது நம்மிடை நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. உண்மையில் இங்குமங்கும் காணும் கிளர்ச்சிகளும், சச்சரவுகளும், நாளடைவில் ஏற்பட்டு வரும் ஒரு பெரிய புனருத்தாரணத்தின் அறிகுறிகள் தான். பொது ஜனங்களின் திருஷ்டி நிலையில் மாறுதல் உண்டாகிக் கொண்டு வருகிறது. பண்டைக்காலத்து நிலைதனைக் கருதப்படும் திட்டங்களை யெல்லாம், பிற்காலத்திற் கேற்றவாறு அமைத்து நன்மை படைத்தனவென சொல்லும்படி செய்ய வேண்டியது தொழில்களில் ஈடுபட்டுள்ள நமமுடைய கடமை. அத்தகைய மாறுதல்களை உணர்ந்து அதற்கேற்றவாறு நமது திட்டங்களையும் அமைத்து வருவதுதான் ஒழுங்கு. நாங்கள் அங்ஙனம் செய்து வருகிறோம்.

எது நேர்மையாக யில்லாதிருந்தாலும், அதில் என்ன கெடுதல் என்பதை நன்றாக அறிந்து, அதை அகற்ற வேண்டும். உண்மையில் நமது குறைகளை ஆராயப்புகின் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் இருக்கும் மனத்தாங்கல்களே அவற்றிற்குக் காரணமாய் விளங்கும். நமது தொழில் விஷயங்களிலும், பொருளபிவிருத்தி முறைகளிலும் மனிதருக்குள்ள மாச்சர்யங்களை குறுக்கிடுகின்றன. சுய நலமே

எல்லாவற்றிலும் புகுந்து தடை செய்கின்றது. சுயநலம் யாரேனும் ஒரு வகுப்பாரின் குற்றமாயிருந்தால் அதற்குப் பரிகாரமுண்டு. ஆனால் மனிதரின் நரம்பிலேயே ஊடுருவிப் பாய்ந்து சுயநலமியாக மனித வர்க்கத்தைச் சேர்ந்த ஒவ்வொருவனும் விளங்குகிறான். அத்துடன் பேராசையும், பொறாமையும் சேர்ந்துகொள்கின்றன.

கொஞ்ச நாளைக்கு முன் உபயோகமற்ற சாமான்களை நிரப்பி அவைகளை வாங்குவதற்கும் ஏராளமானவர்களிருந்தார்கள். இப்பொழுது வர வர ஜனங்கள் உண்மையான தேவைகள் என்னவென்பதை உணர்ந்து உபயோகமற்றவற்றை விலக்கி வருகிறார்கள். அதற்கேற்றபடி தொழில்களும் ஜனங்களுக்கு அத்தியாவசியமான சாமான்களைச் செய்வதிலேயே ஈடுபட்டு வருகின்றன. ஜனங்கள் ஏராளமாய் சரக்குகளை வாங்கிச் சேர்த்துப் பெரியவர்களாய் விளங்கும் ஆசை போய்க்கொண்டு வருகிறது. பணக்காரராயிருப்பது ஒரு பெரிய கௌரவமாக இப்பொழுது கருதப்படவில்லை. பணக்காரராக வேண்டுமென்கிற ஆசையே பொதுவாக இப்பொழுது காணப்படவில்லை. பணக்காரரைக் கண்டு ஒருவரும் நடுக்கமுறுகிற காலம் இதுவில்லை. நமக்குப் பிரயோஜனமில்லாமல் சேர்த்துக் குவித்து வைக்கும் பொருளால் கௌரவம் ஏற்படுகிறதில்லை.

தனிப்பட்ட நபர்களுக்குள் ஒருவர் ஏராளமாய் பணம் படைத்திருப்பதால் ஒருவித நன்மையும் அடையப் போகிறதில்லை. பணக்காரனாலும், ஏழையானாலும் உண்பதும் உடுப்பதும் ஒரேவிதமான உணவுதான்; ஒரேவிதமான உடைதான். இருவருக்கும் படுத்துறங்க ஒரு அறைமட்டும்தான் தேவை. மாடமாளிகையில் பணக்காரன் வசித்தாலும் அவ்வளவு இடத்திலும் ஏககாலத்தில் படுத்துப் புரளப்போகிறதில்லை.

ஆனால் பணத்தினால் விளையக்கூடிய நன்மையில்லாமல் போய்விடவில்லை. உண்மையான சேவை ஜன சமூகத்திற்குச் செய்ய வேண்டுமென்ற எண்ணமிருப்பின், எப்படி வித்தைக்கொண்டு பெரிய நிலங்களைச் சாகுபடி செய்து உலகத்திற்கே தானியத்தைக் குடியானவர்கள் அளிக்கிறார்களோ, அங்ஙனம் அந்தப் பணத்தைக் கொண்டு நன்மை செய்யலாம். எனவே உலகிற்கு நன்மை செய்வதற்குப் பணம் வித்தாகும். சூரியனின் ஒளி எல்லோருக்கும் வீசுவதுபோல் அத்தகைய பணத்தினால் எல்லோருக்கும் நன்மையுண்டாகும்.

இவ்வுலகில் இருவித முட்டாள்கள் இருக்கிறார்கள். பணத்தைச் சேர்த்து வைத்துக்கொள்வதால் பெரிய கௌரவமும், பதவி

யும்பெற்று விளங்கலாமென்று நினைக்கும் கோடீசுவரர் ஒரு வர்க்கம். மற்றவர் பணக்காரரிடமிருந்து பணத்தைப் பிடுங்கி ஏழைகளுக்கு வழங்கிவிட்டால் உலகத்தின் கஷ்டங்களை நிவர்த்தியாகிவிடும் என்று எண்ணும் ஓட்டையாண்டிகளான சீர்திருத்தக்காரர்கள்.

இருவரும் தப்பபிப்பிராயங் கொண்டவர்கள்தான். நமது காலத்தில் ஏராளமாய்ப் பணம் திரட்டிய சில கோடீசுவரர்களால் உலகத்தின் தனம் அதிகரித்து விடவில்லை. சூதாடிப் பணம் சம்பாதிப்பவரால் உலகத்தின் பொருள் நிலை அபிவிருத்தி யடைந்து விடப் போகிறதா? உலகத்தில் அவரவர்கள் உற்பத்தி செய்யக் கூடியவளவு, சிரமமின்றி உழைக்கக்கூடியவளவு, வேலை செய்தால் எல்லோரும் இன்புற்று வாழலாம். தேவையே ஒருவருக்குமிராது. வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சரக்குகள் கிடைக்காமல் கஷ்ட மேற்பட்டால் அது சரியானபடி உற்பத்தி ஏற்படாமல் போனதால் தானுகும் அந் நிலை ஏற்படுவது, எங்ஙனம், எவ்வளவு, எதை எப்பொழுது உற்பத்தி செய்ய வேண்டுமென்று சரியான ஞானமில்லாமல் போவதால்தான்.

இந்த பூமியினின்று நமது தேவைகளுக்கான உணவும் இதர பொருள்களும் வேண்டியவை நமக்கு ஏராளமாய்க் கிடைக்கின்றன. பூமி நமக்கு அளிக்காத தெது தானிருக்கிறது?

தொழிலாளரும், உற்பத்தி செய்கிறவர்களும், சரக்குகளை வியாபாரஞ் செய்து வழங்குகிறவர்களும், ஒழுங்காக ஒத்து வேலை செய்தால் இந்த பூமி வழங்கும் சரக்குகள் எல்லோருக்கும் போய்ச் சேரும்படி செய்யலாம்.

மனிதருக்கு சுபாவமாயுள்ள குற்றங் குறைகளிருப்பினும், சுயநலம் முற்றும் அழியாமற் போனாலும், அநீதம் ஒருவருக்கும் பொருளாதாரத் துறையில் ஏற்படாமல் பாதுகாக்குமாறு நமது திட்டங்களை அமைத்துக் கொள்வது கஷ்டமான காரியமில்லை.

தொழில் செய்வதின் நோக்கமானது, இவ்வளவு நாளாய் லாபம் சம்பாதிப்பதுதான் என்று கருதப்பட்டது. அது தவறு. தொழிலின் இலட்சியம் சேவை புரிவதா யிருக்க வேண்டும். தொழில் நடத்துவதில் ஒரு பெருமை ஏற்பட்டு அதை யோக்கியப் பொறுப்புடன் நடத்தவேண்டும்.

போர்டு தொழிற்சாலைகள்—அதாவது நான்—சாதித்தவை என்ன? லாபத்தைவிட சேவையே பிரதானமென்று கொண்டு

இந்தத் தொழிற்சாலைகளை நான் நடத்தி வருகிறேன். அதனால் உலகத்தார் நன்மையடைய வேண்டுமென்பதே என் கருத்து. சிலர் நாங்கள் சாதித்தவைகளை வேறெவரும் சாதிக்க முடியாதென்றும், நாங்கள் வேறெந்தத் தொழில் செய்தாலும் இதுமாதிரி முன்னுக்கு வர முடியாதென்றும், ஏதோ எங்கள் தொழிலில் அதிருஷ்டம் பொங்கி இங்நிலையை அடைந்து விட்டோமென்றும் இவ்வாறெல்லாம் சொல்லுவதுண்டு. ஆனால் நான் மேலே இதுவரையில் விஸ்தரித்து வந்துள்ளவற்றைப் படித்தபின் அந்த எண்ணம் மாறிவிடுமென்று நம்புகிறேன். ஆகாசத்திலிருந்து ஒன்றும் தானாகக் குதித்துவிடாது. எங்களுக்காகத் தனிமையாக ஒருவித அதிருஷ்டமும் வந்துவிடவில்லை. தங்களால் உழைக்கக்கூடிய வளவு உழைக்கும் எவருக்கும் இந்த வெற்றி தானே கிடைக்கும். ஏதோ ஆரம்பத்தில் நாங்கள் விசேஷ வசதிகளுடன் தொடங்கினோம் என்று நினைப்பதும் தவறு. நாங்கள் தொழில் ஆரம்பித்த போது கையில் ஒன்றுமேயில்லை. நாங்கள் சேர்த்திருப்பதெல்லாம் ஒருவித கொள்கையை அனுசரித்து, திடமான நம்பிக்கையுடனும், விடா முயற்சியுடனும் சிரமப்பட்டு உழைத்ததின் பலனாகத்தான் என்பதை அறியவேண்டும். சில நாளைக்குமுன் உலகத்தார் பணக்காரரால்தான் அனுபவிக்கக்கூடும் என்று கருதிய மோட்டாரை எல்லோருக்கும் ஒரு அத்தியாவசியமான சாதனமாக, ஒருவித தந்திரமும், சூழ்ச்சியும் கையாளாமல், நாங்கள் செய்துவிட்டோம். நாங்கள் இந்த மோட்டாரைச் செய்யத்தொடங்கிய நாட்டில் நல்ல ரோடுகள்கூட கிடையாது; மோட்டார் எண்ணையும் அதிகமாய்க் கிடைக்கிறதில்லை. மோட்டாரென்றால் பணக்காரர்களுக்குத் தான் உரித்தானது என்று எண்ணினார்கள்.

ஒரு தொழிலானது எல்லோருடைய நன்மைக்காகவுமில்லாவிடில் அது இருந்து பிரயோஜனமில்லை. நான் சம்பாதிக்கும் பணமெல்லாம் இத்தகைய தொழில் மூலம் திரும்ப ஜனங்களுக்குப் போய்ச் சேர்ந்து நன்மை வழங்காவிடின், அங்ஙனம் நான் பணம் சம்பாதிப்பது தவறாகும். இந்தக் கொள்கையை நான் எனது மோட்டார் தொழிலில் அனுசரித்து நிரூபித்துக் காட்டிவருகிறேன். ரயில்வேக்களிலும், பொது நன்மை வழங்கக்கூடிய ஸ்தாபனங்களிலும் இதே கொள்கையைக் கையாண்டு நிரூபிக்க நான் உத்தேசித்திருக்கிறேன். என்னுடைய அந்தரங்க திருப்திக்காகவும், பணம் சேர்க்க வேண்டுமென்ற ஆசையினாலும் நான் அப்படிச் செய்ய முற்படவில்லை. எல்லாத தொழில்கள் மூலமாயும் ஜன சமூகத்திற்கு சேவை புரிந்து, எல்லாரும் இன்புற்று வாழச் செய்யலாம் என்று விளக்க நான் விரும்புகிறேன். வெறும் புள்ளி விவரங்களினால் ஏழ்மை நீங்கிவிடாது. புத்தியை உபயோகித்துக் கஷ்டப்

பட்டு வேலை செய்யவேண்டும். புதிய யோசனைகள் தோன்றி அவைகளை அனுசரித்து வேலைசெய்ய மூளையைப் பிரயோகிக்க வேண்டும். தற்போது உபரியாக தானியம் அமெரிக்காவில் குவிந்து கிடக்கின்றது. தானியம் உணவிற்காகப் பயன்படுவதுடன் வேறு வகையில் பிரயோகிக்கப்பட முடியாதா? மதுவிலக்கு ஏற்படுமுன் அமெரிக்காவில் சாராயம் காய்ச்சி அதிலிருந்து எடுப்பதுண்டு. ஆனால் அது நேர்மையான வகையில் அதைப் பயன்படுத்துவதாகாது. எனினும், தானியத்திலிருந்து எண்ணெயும், எரிக்கும் சரக்கும் கிடைக்கும். இந்த ஞானத்தைப் பயன்படுத்தி ஒரு தொழில் ஏன் ஆரம்பிக்கக்கூடாது?

உலகில் ஒவ்வொரு முன்னேற்றமும் முதலில் சாதாரணமாய்த் தான் தொடங்குகிறது. அதற்கு யாராவது ஒருவர் வழிகாட்டியாக வேண்டும். படிப்படியாக ஒருவர் சில கொள்கைகளை அனுசரித்து முன்னேற்ற மடைந்தால் தானுக உலகு அதைப் பின்பற்றி முன்னேற்ற மடையும். எல்லாம் சுலபமாக நடந்துவிடும் என்று நினைக்கிறவர்கள் இக்காலத்தில் இருக்கிறார்கள். உண்மையான உழைப்பு சுலபமானதல்ல. பொறுப்பு வளர வளர வேலையும் கஷ்டமாகும். சுகம் அனுபவிக்க வேண்டியதுதான்; ஆனால் கஷ்டப்பட்டு உழைக்காதவர்கள் சுகம் அனுபவிக்க உரிமையற்றவர்கள். வேலை செய்வதற்கு என்னென்ன சாதனங்களைப் பெறக்கூடுமோ அவ்வளவையும் கையாள வேண்டும். இயந்திரங்கள் செய்கிற வேலையை மனிதர் செய்வதென்பது பெருங் கொடுமை. வேலையிலுள்ள கடினத்தை யொழித்து அதை எளிதாகச் செய்யவேண்டியது அத்தியாவசியமாகும். இதற்கு யுக்தியைப் பிரயோகித்து சாதனங்களைக் கண்டு பிடித்து வருகிறார்கள்.

தற்போது உழைக்கவேண்டிய துறைகள் எவ்வளவோ இருக்கின்றன. தொழிலில் இறங்க விரும்பும் வாலிபர்களுக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னிருந்ததைவிட இப்பொழுது வசதிகள் ஏராளமாயிருக்கின்றன. நல்ல திறமை யுள்ளவர்களுக்கு வளர்கின்ற தொழில்களில் இடம் ஏற்பட்டுக்கொண்டே யிருக்கின்றது. தொழிலில் முன்னுக்கு வரவிருப்பும் வாலிபர்கள் அதில் புகுந்து பொறுமையுடனும், திறமையுடன், கஷ்டப்பட்டும் உழைக்க வேண்டும். தொழிலில் மட்டும் திடீரென நமது இலட்சியத்தை யடைந்துவிட முடியாது; நாளடைவில்தான் நமது கோரிக்கை கைகூடும். அதற்குப் பொறுமையைப் பூஷணமாய்க் கொள்ளவேண்டும்.

எவ்வளவோ மாறுதல்கள் இன்னும் உலகத்தில் ஏற்படப் போகின்றன. நாம் இயற்கைக்கு அடிமைகளாய் இல்லாமல் அதைக்

கட்டுப்படுத்தி நம்முடைய ஆக்ஞைக்குக் கொண்டுவரும் காலம் வரப்போகிறது. இப்பொழுது நமக்கு நிலக்கரியும், விறகும் தேவையாயிருக்கின்றன. சீக்கிரத்தில் நிலக்கரிச் சுரங்கங்கள் வற்றிப்போய் விடும்; மரங்கள் அழிந்துபோய் விறகு அகப்படாமல் போய்விடும். அப்பொழுது நம்மைச் சுற்றிலுமுள்ள இயற்கையிலுள்ள சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள, யுக்திகள் செய்ய வேண்டும். இப்பொழுது விறகுக்கும், நிலக்கரிக்கும் பதிலாக மின்சார சக்தியைக் கொண்டு உஷ்ணத்தை சம்பாதித்து வேலைகள் செய்யப்படுகின்றன. இதையும்விட இன்னும் மேலே செல்லக் கூடும். ரசாயன சாஸ்திரம் அபிவிருத்தியடைய அடைய, இன்னும் எவ்வளவோ சாதிக்கலாம். நாம் மட்டும் அவரவர்களுடைய வேலையை, உண்மையான சேவை செய்யும் நோக்கத்துடன் செய்து முடிக்கவேண்டும்.

அசாத்தியமான தென்றொன்றுமில்லை. ......திடமான நம்பிக்கையிருந்தால், நாடிய பொருள் கைகூடும்; கண்டறியாதவைகளைக் கண்டு அநுபவிக்கலாம்.

முற்றிற்று.

“ தமிழ் நாடு ” பிரஸ், சென்னை

# தமிழ் நாடு

(தினப்பதிப்பு)

உள்நாட்டு அசோஸியேடட் பிரஸ், பிரீ பிரஸ் செய்திகளையும், வெளிநாட்டுத் தந்தி, ஆகாசத் தந்திச் செய்திகளையும், தமிழ் நாடெங்கு முள்ள சொந்த நிருபர்கள் செய்திகளையும் கொண்டு தினந்தோறும் வெளி வருகிறது. எளிய தமிழ் நடை; கஷ்டமில்லாமல் படிக்கும் அழகிய அச்சுக்கள்; எடுத்தவுடன் முக்கிய விஷயங்கள் கண்ணில் படும்படியான சிறந்த அமைப்பு.

சந்தா விவரம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| 1-வருஷம் | ரூ. 20—0—0 | ரூ. 28—0—0 |
| 6-மாதம் | ,, 10—0—0 | ,, 14—0—0 |
| 3-மாதம் | ,, 5—0—0 | ,, 7—0—0 |
| 1-மாதம் | ,, 1-12—0 | ,, 2—8—0 |

சென்னைக்கு மாதம் 1-க்கு ,, 1—8—0

மானேஜர், "தமிழ் நாடு"

சென்னை.